இந்த இதழ் மட்டும்
விலை ரூ.6/-

செப்டம்பர் '90

MANGAYAR MALAR

மங்கையர் மலர்





ை ஓ கூ

பாலியெஸ்டர் சேலைகளும்

உடுப்புத்

துணிகளும்


பாம்பே டையிங்

ஸ்தாபிதம் 1879


BD/651/TAM

தீப் பெட்டிகளில் 'பாக்' செய்யப்பட்டுள்ள தீக்குச்சிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்று எப்போதாவது எண்ணியிருக்கிறீர்களா? **CUTS** (கன்ஸ்யூமர் யூனிடி அண்ட் ட்ரஸ்ட் சொசைட்டி) எனும் நுகர்வோர் அமைப்பு, 12 பெரிய பெட்டிகளில் பாக் செய்யப்பட்ட, பல கம்பெனிகளால் தயாரிக்கப்பட்ட தீப் பெட்டிகள் ஒவ்வொன்றிலும் அடுக்கப்பட்டுள்ள தீக்குச்சிகள் எத்தனை என்று எண்ணிப் பார்த்த போது, சராசரியாக ஒவ்வொரு பெட்டியிலும் 35லிருந்து 45 குச்சிகள் மட்டுமே இருந்தன என்று அறியப்பட்டது. (ஒவ்வொரு தீப்பெட்டியின் மேலும் இதில் 50 குச்சிகள் அடங்கியுள்ளன என்று குறிக்கப்பட்டிருந்தது).

1977ம் ஆண்டில் இயற்றப்பட்ட **Standards of Weights and Measures (Packaged Commodities)** சட்டப்படி பாக் செய்யப்படும் பொருளின் எண்ணிக்கை அல்லது எடை பாக்கெட் மேலே குறிப்பிடப்படும் எண்ணிக்கை அல்லது எடையில் எட்டு சதவீதம் குறைவாக இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. சட்டத்திலேயே எட்டு சதவீதம் வரை குறைவாக இருக்கலாம் என்று அனுமதிக்கப்பட்டிருப்பதாலோ என்னவோ நடைமுறையில் இந்த அனுமதிக்கப்பட்ட சதவீதத்துக்கு மூன்று மடங்கு குறைவாகப் பேக் செய்யப்படுகிறது. தீப்பெட்டிகளில் 10லிருந்து 20 சதவீதம் வரை குறைபாடு என்று அறியப்படுகிறது.




தீக்குச்சிகள் பாதுகாப்பான முறையில் தயாரிக்கப் படுகின்றனவா?



எண்ணிக்கை குறைவு மட்டுமல்ல. 35லிருந்து 45 வரையே உள்ள தீக்குச்சிகளிலும் எல்லாத் தீக்குச்சிகளும் வீணாக ஆகாமல் உபயோகிக்கும் அளவுக்குத் தரமானதாக இருப்பதில்லை. பல தீக்குச்சிகள் முனையில் மருந்தே இருப்பதில்லை. சில தீக்குச்சிகள் அங்கங்கே முறிந்திருந்தன. மற்றும் பல உரசியவுடன் முறிந்து விட்டன என்பதும் அறியப்பட்டது.

தீப்பெட்டிகளின் தரம் மிக மோசமானதாக இருக்கிறது. இந்த இலட்சணத்தில் இதை **Safety Matches** என்று குறிக்கிறார்கள் என்று **CUTS** அமைப்பைச் சேர்ந்தவர் அங்கலாய்க்கிறார். தீக்குச்சியின் தரம் கவலையுண்டாக்குவதாக இருக்கிறது. ஏனென்றால் தீக்குச்சியை உரசும் போது, மருந்து முனையில் தீப்பற்றியவுடன் குச்சி இரண்டாக முறிந்து — எரியும் பகுதி தீக்குச்சி கீழே விழுகிறது. அநேகமாக, தீக்குச்சியைப் பற்ற வைப்பவரின் ஆடை மீது விழுகிறது. இந்த மாதிரியாக ஆகும் போது இதில் பாதுகாப்பு எங்கே இருக்கிறது?

தீக்குச்சியைப் பாதுகாப்பு உள்ளதாக ஆக்க வேண்டும் என்ற நோக்கில் இந்தியத் தரக் கட்டுப்பாடு நிலையமும், டேராடூனில் உள்ள வன ஆராய்ச்சி நிலையமும் தீக்குச்சி தயாரிப்பில் 'சிமல்' எனும் மிருதுவான மரம் உபயோகிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறது. தீக்குச்சி தயாரிப்பில் பயன்படுத்தப்படும் குச்சியோ



அல்லது பட்டையோ, முடிச்சு முடிச்சாக இல்லாமல், பிளவுபடாமல், கோணல் மாண லாக இல்லாமல், முறுக்கு இல்லாமல் இருக்க வேண்டும். மேலும், தீக்குச்சி தயாரிப் பில் பயன்படும் மரங்கள் வெட்டப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் தொழிற் சாலைக்கு அனுப்பப்பட்டு, தீக்குச்சிகளாக தயாரிக்கப்பட்டு விட வேண்டும் என்றும் தரக் கட்டுப்பாடு நிலையம் கூறுகிறது. இந்தக் கால கெடுவுக்கு அதிகமாகி விட்டால் அம் மரங்கள் தீக்குச்சித் தயாரிப் புக்கு இலாயக்கற்று விடுகின்றனவாம்.

ஆனால் இந்த நியதியை வெகு சில தயாரிப்பாளர்களே பின்பற்றுகிறார்கள். குறிப்பிடப்பட்ட மிருதுவான மரம் கிடைக் காத காரணத்தாலேயே உடைந்த மரத் துண்டுகளிலிருந்து தீக்குச்சிகளைத் தயாரிக் கிறோம் என்று தயாரிப்பாளர்கள் கூறு கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன், மரத் தைச் சிக்கனப்படுத்துவதற்காக, மெழுகு பூசப்பட்ட கெட்டியான காகிதத்தைத் தீக் குச்சி தயாரிப்பில் பயன்படுத்தினர். பிறகு தேவையான அளவு மெழுகு கிடைக்காத தால் இந்தத் தயாரிப்பு முறை கைவிடப் பட்டது.

"கொடுக்கிற 30 பைசாவுக்குத் தகுந்த மாதிரிதான் தரமும் இருக்கும். 30 பைசா கொடுத்து 50 பைசா தரத்தை எதிர்பார்க் கிறார்கள் நுகர்வோர்கள்" என்கிறார்கள் தயாரிப்பாளர்கள்.

மேலும், சுமார் மூவாயிரத்துக்கும் மேற் பட்ட தயாரிப்பாளர்கள், தீக்குச்சிகள் தயாரிப்பைக் குடிசைத் தொழிலாகவே செய்கிறபடியால், குறிப்பிட்ட தரமுடைய மரத்தைப் பெறுவது கடினம் என்றும் தயாரிப்பாளர்கள் கூறுகிறார்கள். ஐந்து அல்லது ஆறு நிறுவனங்களே தீக்குச்சி தயாரிப்பை பெரிய தொழிலாகக் கொண் டிருக்கின்றன. தீக்குச்சி அன்றாடம் வீட்டில் பயன்படுகிற சாதனம். எனவே இதன் பாது காப்பு அம்சம் பற்றி நாம் அசட்டையாக இருக்க முடியாது என்று நுகர்வோர் அமைப் புகள் கூறுகின்றன. உரசும் போது ஒடியா மலிருக்க வேண்டுமானால் தீக்குச்சிகள் நல்ல தரமான மரத்திலிருந்து செய்யப்பட வேண்டும். தீக்குச்சியின் பாதுகாப்பில் இது மிக முக்கியமானது.

ஆனால், விற்பனைக்கு வந்துள்ள பல தீக்குச்சிகள் திருப்திகரமாகவே இல்லை.

1. பெட்டிகளில் தீக்குச்சிகள் இறுக்க மாக அடைக்கப்பட்டிருப்பதனால் பெட்டி மேலே ஒட்டப்பட்ட சீலை உடைக்கும் போது பெட்டியே முறிந்து, பெட்டியிலிருந்து தீக்குச்சிகள் பல திசைகளிலும் சிதறுகின் றன.

2. முனையில் தடவப்படும் மருந்தின் தரம், அளவு — இவைகள் மிக மோச மாக இருப்பதால் உரசியவுடன் தீப்பற்று வது இல்லை. சற்று எரிந்தாலும் உடனே அணைந்து போய் விடுகிறது.

3. பெட்டியின் பக்கங்களில் சரியாக மருந்து தடவப்படாததால் குச்சி முனையில் மருந்து இருந்தாலும், சரியாகப் பற்றுவ தில்லை. மேலும் சற்றே குளிராக இருந்தா லும் பெட்டி நமுத்துப் போய் விடுகிறது. (எனவே எப்போதும் தீப்பெட்டியை ஒரு பிளாஸ்டிக் டப்பியில் போட்டு வைப்பது நல்லது.)

தீக்குச்சி தயாரிப்பில் சிவப்பு பாஸ்பரஸ், பொட்டாசியம் குளோரேட் போன்ற இர சாயனப் பொருள்கள் பயன்படுத்தப்படுகின் றன. இந்த இரசாயனப் பொருள்கள் எந்த



அன்பார்ந்த பெற்றோர்களே,
உங்கள் குழந்தைப்பற்றிய கவலையா,
அவனுக்கு ஆங்கிலம் நன்கு தெரிகிறது
ஆனால், ஏனோ சரளமாகப் பேச வருவதில்லை–
பேசும்போது தடை, தயக்கம்–
இதோ உத்தரவாதமான–
குறுகிய பாடத்திட்டம்–
அவனுக்குப்பிரியமான
கபில்தேவ் பரிந்துரை
செய்யும் கோர்ஸ்–


ரெப்பிடெக்ஸ் இங்கிலீஷ் ஸ்பீக்கிங் கோர்ஸ்



பெரிய சைஸ்
400 க்கு மேற்பட்ட
பக்கங்கள்
விலை: ரூ. 36 /-
அஞ்சல் கட்டணம் ரூ. 5/-

"பேச்சுமொழி ஆங்கிலம்பயின்றிட
இது உண்மையிலேயே நல்லபுத்தகம்"
-கபில்தேவ்

ரெபிடெக்ஸ் ஸெல்ஃப் லெட்டர் டிராப்டிங் கோர்ஸ்



விலை:
ரூ. 40/-
அஞ்சல்
கட்டணம்:
ரூ. 6/-

கடிதம் வரைதல் சிறுபிள்ளை விலை யாட்டல்ல ஆனால்நாங் கள் இக்கலையை அந்த அள வுக்கு எளிதாக்கியுள்ளோம் உங்களுக்காக. நீங்கள் நண்பருக்கு எழுதினாலும் சரி நிறுவனத்துக்கு எழுதி னாலும் சரி–இந்தக் கோர்ஸ் உங்களுக்கு கை கொடுக்கும்.

மற்ற புத்தகங்கள் தயார்–கடிதங்களை காப்பியடிக்க மட்டும் கற்பிக்கையில், இந்த நூல் விருப்பமான கடிதத்தை சுயமாக வரைய உங்களைத் தயார்படுத்துகிறது.

இதன் சிறப்புத்தன்மை

- ஏராளமான வாக்கியங்கள்–சொற்றொடர்கள்:
- தேவையான வாக்கியங்களை 'டிக்' செய்து கொள்ளுங்கள்.
- அவற்றை உடனடியாக தொகுத்து எழுதுங்கள்.

AVAILABLE AT leading bookshops, A.H. Wheeler's and Higginbothams Railway Book stalls throughout India or if not available ask by V.P.P. from:—

PUSTAK MAHAL Khari Baoli, Delhi-110006.

Show Room: 10-B, Netaji Subhash Marg, New Delhi-110002. Ph.: 3268292—93

VAN PM 5 90

விகிதத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்பதையும் தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் நிர்ணயம் செய்திருக்கிறது. தீக்குச்சிகள், பெட்டியின் பக்கங்களில் உரசப்படாமலேயே தீப்பற்றிக் கொள்ளாமலிருக்கவும், குளிர்க் காலங்களில் பெட்டி நமுத்து விடாமல் உரசியவுடன் பற்றிக் கொள்ளும் படியும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்று பரீட்சை செய்து பார்க்க பல முறைகளையும் நிர்ணயம் செய்துள்ளது.

தீக்குச்சி தயாரிப்பில் பயன்படுத்தப்படும் மரக்குச்சிகள் பிசிறு இல்லாமல் வழுவழுப்பாக இருக்க வேண்டும். ஆங்காங்கே சிலும்பிக் கொண்டு இருக்கக் கூடாது. தீக்குச்சியின் நீளத்தில் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு பங்கு நீளமாவது எரியக்கூடிய அளவுக்கு பாரஃபின் மெழுகில் தோய்த்து எடுக்கப்பட வேண்டும். தீக்குச்சி குறைந்தபட்சம் 32 மி. மீட்டர் நீளம் இருக்க வேண்டும். தீக்குச்சி உரசப்படும் பெட்டியின் பக்கங்கள் 1—3 மி. மீட்டர் அகலம் இருக்க வேண்டும். என்றெல்லாம் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலும் இவை எதுவும் பின்பற்றப்படவில்லை. தீப்பெட்டி மேலே ஐ.எஸ்.ஐ. முத்திரை பொறிக்கப்பட வேண்டும் என்பது சட்டப்பூர்வமாக ஆக்கப்படவில்லை என்பதால் தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதிரி தீக்குச்சிகள் தயாரிக்கிறார்கள்.

எனவே தீப்பெட்டி வாங்கும் போது, விற்பனையிலுள்ள எல்லா தயாரிப்புகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, நல்ல தரமான தீப்பெட்டியை வாங்க வேண்டும். தீப்பெட்டியின் பாதுகாப்பு அம்சம் பற்றி மிகக் கவனமாக இருக்க வேண்டும். ஏதோ இது 30 பைசா, 50 பைசா பொருள்தானே என்று அலட்சியமாக இருப்பது அபாயகரமானது. தீக்குச்சியை உரசும் போது சற்றுத் தூரத்தில் வைத்துக் கொண்டு உரசுவது மிகப் பாதுகாப்பானது. மேலும் சமையலறையில் வேலை செய்யும் போது நைலான், நைலக்ஸ் போன்ற ஆடைகளைத் தவிர்த்துக் கூடுமான வரை பருத்தி ஆடைகளை அணிவது பாதுகாப்பானது.


— ராஜி.

உளுத்தம் பருப்பு, காய்ந்த மிளகாய் இரண்டையும் எண்ணெயில் வறுத்துக் கொண்டு, அத்துடன் ஆய்ந்த முருங்கைக் கீரையைச் சேர்த்து வதக்கிக் கொண்டு, உப்பு, புளி, பெருங்காயம் ஆகியவற்றை அளவுடன் சேர்த்துப் பொடியாக அரைக்கவும். முருங்கைக் கீரை பொடி ரெடி. சாப்பாட்டுடன் கலந்து உண்டால் மிகவும் சுவையாக இருக்கும். உடல் ஆரோக்கியத்திற்கும் உகந்தது.

— ஜெயா பாலசுப்ரமணியன்.



தோழர்கள் தருவார்கள் சிறப்புஇடம் - உங்களுக்கே !
சாதாரண சோப்புகள் உடல் வாடையை தடுக்காது. அது உங்களுக்கு தெரியும்.
புதிய ஷீல்டின் இன்டர் நேஷனல் டியோடரன்ட் மட்டுமே தீவிரமாக உடல் வாடையை தடுக்கிறது. தன்னம்பிக்கை புத்துணர்வு தருகிறது... மணிக்கு மணி!
புதிய
Shield
இன்டர்நேஷனல் டியோடரன்ட் உள்ளது.
தன்னம்பிக்கையின் புத்துணர்ச்சி !
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
LINTAS SH G 36 2416 TM



காலையில் விழிப்பு வந்தவுடனேயே, 'கடவுளே! இன்றைக்காவது கடிதம் வர வேண்டும்' என்று வேண்டிக் கொள்ளத் தான் தோன்றிற்று. நேற்றோடு கடிதம் வந்து பதினான்கு நாட்கள் ஆகிவிட்டன. நாலு பேரிடமிருந்தும் கடிதம் வரவில்லை. ஒன்றிற்கு நான்காக குழந்தைகள் இருந்தும் ஒன்று கூட அருகில் இல்லையே என்று நினைக்கும் போது விரக்தியாக இருந்தது.

முதல் பெண் லட்சுமியை பரோடாவிலும், இரண்டாவது பெண் சரஸ்வதியை டெல்லியிலும் கல்யாணம் பண்ணிக் கொடுத்தாயிற்று. முதல் பையன் குமார் மிலிட்டரியில் ஆபீசராய்ச் சேர்ந்து, இப்போது பாட்னாவில் இருக்கின்றான். இரண்டாவது பையன் சாரதி பெங்களூரில் காலேஜ் ஹாஸ்டலில் தங்கிப் படித்துக் கொண்டு இருக்கிறான்.

நாலுபேரும் வருடத்துக்கு ஒரு முறையோ, இரண்டு முறையோ வந்து விட்டுப் போவார்கள். அவ்வளவுதான்; இவ்வளவு பெரிய வீட்டில் நானும் அவரும் மட்டும் காலம் தள்ளிக் கொண்டு இருக்கிறோம். காலையில் ஒருமுறை வேலைக்காரி கண்ணம்மா வந்து வேலைகளை முடித்துவிட்டுப் போய் விட்டால், இவர் ஆபீஸிலிருந்து திரும்பும் வரை எனக்குத் தனிமைதான்.

எத்தனை முறைதான் பேப்பரைப் புரட்டிப் புரட்டிப் படிப்பது... எத்தனை முறைதான் 'ஜய ஜய தேவி; துர்கா தேவி' பாட்டுக் கேட்பது. வர வர எல்லாமே பிடிக்காமல் போய்விட்டது.

நாலு குழந்தைகளும் வீட்டில் ஒன்றாய் இருந்த பொழுது நடந்த நாடகங்கள் எல்லாம் இன்னும் பசுமையாக மனத்தில் உள்ளது. லட்சுமி ஒரு குட்டிப் பிரம்புச் சேரில் உட்கார்ந்து கொண்டு மற்ற மூவருக்கும் கணக்குப் பாடம் சொல்லித் தந்தது, சாரதி குமாரின் பேனாவை எடுத்து ரகளை செய்தது, குமார் எஸ். எஸ். எல். ஸி. யில் முதல் மார்க் வாங்க, ஊருக்கெல்லாம் சாக்லேட் கொடுத்தது, சரஸ்வதி டைப் ரைட்டிங் லோயர் எக்ஸாமில் செகண்ட் கிளாஸ்தான் கிடைத்தது என்பதற்காக அழுது ஆர்பாட்டம் செய்தது, இரண்டு பசங்களும் அப்பாவோடு ஸ்கூட்டரில் ஸ்கூலுக்குப் போனது, தீபாவளி போது பட்டாசுக்கு அடித்துக் கொண்டது, நாலு பேரும் ஒன்று சேர்ந்து அப்பாவைக் கிண்டல் செய்தது, கூடத்தில் எல்லோருமாய் வட்டமாய் உட்கார்ந்து கொண்டு ஊர்க்கதை பேசி சாப்பிட்டது — எல்லாம் ஞாபகம் உள்ளது. எல்லாம் மனத்தில் ஆழமாய்ப் பதிந்து, சிதையாமல், அழியாமல் உள்ளது.

எல்லாவற்றையும் இப்போது நினைக்க, நினைக்கக் கண்ணில் கண்ணீர் வந்தது. அந்த நாட்கள் எல்லாம் மீண்டும் திரும்பி வராதா என்று ஏக்கமாய் உள்ளது. நாலு பேரும் மீண்டும் குழந்தைகளாகி 'அம்மா'



வென்று என்னிடம் ஓடி வரமாட்டார்களா
என்று உள்ளது. நாலு பேருக்கும் மறுபடி
கையில் சாதம் பிசைந்து போடமாட்டோமா
என்று ஆவலாக உள்ளது.

ஆனால் நான் மட்டும்தானே இப்படி
யோசித்துக் கொண்டு இருக்கிறேன். அவர்
கள் நாலு பேரும் பெற்றவளைப் பற்றி
நினைப்பதாய்த் தெரியவில்லையே. இல்லை
யென்றால் ஏன் அவர்களால் எனக்குக்
கடிதம் போட முடியவில்லை. நாலு பேரில்
ஒருவரால் கூட எழுத முடியவில்லையா.

விரக்தியோடு வேலைகளைச் செய்ய
ஆரம்பித்தேன். வெந்நீர் அடுப்புப் பற்ற
வைத்து, வாசலில் கோலம் போட்டு, குளித்து,
விளக்கேற்றி, அவர் எழுந்ததும் காப்பி
போட்டுக் கொடுத்து, டிபன் செய்து,
அவரை ஆபீஸுக்கு அனுப்பும் வரை
வேலை சரியாக இருந்தது.

கண்ணம்மா வந்ததும் தேய்ப்பதற்கான
பாத்திரங்களை எடுத்துப் போட்டேன்.
பிறகு, நாளைய இட்லிக்கான மாவிற்கு,
அரிசியைக் கிரைண்டரில் போட்டு ஆன்
செய்தேன். பிறகு, கடியாரத்தைப் பார்த்
தால் போஸ்ட்மேன் வருகின்ற நேரம் ஆகி
யிருந்தது.

பேப்பரைக் கையில் எடுத்து மனம் அதில்
பதியாமல் புரட்டிக் கொண்டிருந்தேன். இன்
றைக்கு என்று பார்த்து போஸ்ட் மேன் வர
தாமதமாகிக் கொண்டு இருந்தது. வாசலுக்
கும், உள்ளுக்குமாய் நடந்து, நடந்து கால்
வலிக்க ஆரம்பித்தது. இட்லிக்கு மாவு
வேண்டிய அளவு அரைப்பட்டு விட்டதால்,
கிரைண்டரை ஆஃப் செய்தேன்.

மீண்டும் ஒருமுறை வாசலுக்குப் போய்
வந்தேன். இன்னும் போஸ்ட் மேனைக்
காணவில்லை. உள்ளே வந்து, கிரைண்ட
ரிலிருந்து மாவை வழித்து எடுக்க ஆரம்பித்
தேன். பாதி வழித்துக் கொண்டு இருக்கை
யில் போஸ்ட் மேன் வந்து கடிதத்தை விட்
டெறிந்து விட்டு போவது தெரிந்தது.

எனவே, கடிதம் வந்துவிட்டது. சந்தோஷ
மாய் இருந்தது. மாவுக் கையோடு என்ன
செய்வது என்று புரியாமல் நின்றேன். பிறகு
பொறுமையில்லாமல், வீட்டைப் பெருக்கிக்
கொண்டு இருந்த கண்ணம்மாவிடம்,
''கண்ணம்மா! அப்புறம் பெருக்கலாம்
லெட்டர் வந்திருக்குது பாரு. அத மொதல்ல
எடுத்துட்டு வா'' என்று சொல்லிவிட்டு,
கையைக் கழுவ பின்பக்கம் சென்றேன்.

கையைக் கழுவுகையில் 'கண்ணம்மா
விடம், ''எத்தனை லெட்டர் வந்திருக்குது?''
என்று கேட்டேன். ''ஒண்ணுதாம்மா வந்திருக்
குது'' கண்ணம்மா சொல்லி விட்டு கடிதத்
தை மேஜை மீது வைத்துவிட்டுப் போனாள்.

ஒரு நிமிடம் ஒன்றுதான் வந்துள்ளதா
என்று தோன்றிற்று. ஆனால், ஒன்றாவது
வந்ததே என்று மனத்தைத் தேற்றிக் கொண்
டேன். யாரிடமிருந்து வந்திருக்கும். அந்தக்

கடிதம். லட்சுமி, சரஸ்வதி, குமார், சாரதி என ஒவ்வொருவர் முகமாக மனத்தில் வந்து போயிற்று.

நாலு பேரில் யார் போட்டிருப்பார்கள் அந்தக் கடிதத்தை. திடீரென்று மனத்தில், 'யார் அந்தக் கடிதத்தைப் போட்டிருப்பார் களோ அவங்களுக்குத்தான் என் மீது பாசம் அதிகம்' என்று தோன்றியது. ஏன் அப்படித் தோன்றியது என்று புரியவில்லை. ஆனால் அது நிச்சயம் சரியாக இருக்கும் என உள்ளு ணர்வு கூறிற்று.

யாராக இருக்கும் அது? லட்சுமியா, சரஸ் வதியா, குமாரா, சாரதியா, எனக்கு ஒரு மாதிரி படபடப்பாக இருந்தது. என்னை நானே நிதானப் படுத்திக் கொண்டேன்.

கை ஈரத்தை முந்தானையில் துடைத்துக் கொண்டு வரும் போது, ஒரு வேளை அது எல். ஐ. ஸி. யிலிருந்தோ, எலெக்ட்ரிசிடி போர்டிலிருந்தோ வந்த கடிதமாய் இருக்கப் போகிறது என்ற பயம் வந்தது.

ஆனால் மேஜையின் மேலே நீல நிற இன்லாண்ட் லெட்டர் சிரித்தது. எனவே, இது நான் எதிர் பார்த்த கடிதம் தான். மறு படியும் சந்தோஷமானேன். கடவுளுக்கு நன்றி சொன்னேன். கடைசியாய், பதி னான்கு நாட்களாய் இருந்த கவலை மறைந்து போயிற்று. குறைந்தது, என்னுடைய ஒரு குழந்தையாவது என்னை ஞாபகம் வைத் துக் கொண்டு எனக்குக் கடிதம் போட்டிருப் பது திருப்தியைத் தந்தது.

ஆனால், யார் அந்தக் குழந்தை என்கிற ஆவல் அதிகமாயிற்று. பட படக்கும் இதயத் தோடு கடிதத்தை எடுத்து பின் பக்கத்தைப் பார்த்தேன். அனுப்புவோர் முகவரி எதுவும் எழுதப் படவில்லை. முகவரியில் இருந்த கையெழுத்தும் யாருடையது என்று புரிய வில்லை.

எனக்குப் பதட்டம் இன்னும் அதிகமா யிற்று. ஒரே புதிராக இருந்தது. முகவரியில் இருந்த கையெழுத்தை நான் இதுவரை பார்த்ததேயில்லை. பதட்டத்துடனும், குழப் பத்துடனும் கடிதத்தைப் பிரித்தேன்.

'உன்னுடைய கடிதம் வந்து ஒன்றரை மாத மாகிறது. அதற்குப் பின் நீ எழுதவேயில்லை. தினமும் உன்னிடமிருந்து கடிதத்தை எதிர் பார்த்து ஏமாந்து போகிறேன். உனக்கு என்னை ஞாபகம் இருக்கிறதோ, இல்லையோ. அதனால்தான் வேறு வழியில் லாமல் தபால்காரரின் உதவியோடு உனக்கு இந்தக் கடிதத்தை எழுதிப் போடுகிறேன். சீக்கிரம் பதில் போடு' என்று தபால் காரரின் உதவியோடு எழுதியிருந்தாள் கிராமத்தில் இருக்கிற எழுதப் படிக்கத் தெரியாத வய தான என் அம்மா.

சமீபத்தில் வி.வி.எஸ் நல்லெண் ணெயின் சென்னை விநியோகிப்பாளர் களின் கூட்டத்தினை அம்மன் ஏஜென்சிஸ் கூட்டியது. விற்பனையில் முதலிடம் வகித்த வர்களுக்குப் பரிசுகளை அளித்து மகிழ்ந்தது.



ஆடி வெள்ளிக் கிழமை —
பதினெட்டாம் பெருக்கு —
வரலட்சுமி விரதம்.

மூன்றும் ஒன்றாகச் சேர்ந்து வந்த அந்த நாளில் விசேஷத்திற்குக் கேட்கணுமா? அரக்குப் புடைவையும், சிவந்த பெரிய பெரிய ரோஜாப் பூக்களின் மாலையும், தங்கக் கிரீடமும் ஜொலிக்க ஆனந்தமயமாக 'அம்மை' காட்சியளித்துக் கொண்டிருந்தாள். அந்த. அவளின், அன்னையின் கடைக்கண் பார்வைக்கு ஏங்கி நிற்கும் பக்தர்களின் கூட்டம். 'கணகண'வென்ற மணியோடு தீபம் காட்டிய போது, கண்களை சொருகிக் கொண்டு போனது. 'அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி'யின் சௌந்தர்ய லஹரி!

பெங்களூர் அருகேயுள்ள காஞ்சனஹள்ளியில் வீற்றிருக்கும் ஞானாக்ஷி ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரியின் திருக்கோலம்தான் இது! இவள் பெயரால் அந்த இடமே இராஜ இராஜேஸ்வரி நகர் என்று அழைக்கப்படுகிறது. கன்னட நாட்டில் முழுக்க தமிழ் நாட்டுப் பாணியில் ஒரு கோயில்.

தெய்வ அருட் குழந்தையாக பிறந்த திருச்சி சுவாமிகள் ஞானதாகத்தோடு இமய மலைச் சென்ற போது அங்கிருந்த இவருடைய குரு சிவபுரி சுவாமிகள் காஞ்சன ஹள்ளியின் ஸ்தல சிறப்பைக் கூறினாராம்.

காஞ்சனஹள்ளி 'காஞ்சனகிரி' என்ற பெயரோடு இருந்திருக்க வேண்டும். அத்திரி மகரிஷியின் ஆஸ்ரமம் இருந்த தவச்சாலை இது. அனுசுயா தேவி மும்மூர்த்திகளைக் குழந்தைகளாக்கித் தொட்டிலில் போட்டுத் தாலாட்டிய திவ்ய க்ஷேத்ரம் இது. மும்மூர்த்திகள் குழந்தைகளானவுடன் உலக இயக்கம் எப்படி நடக்கும்? பதறிப் போன பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி மூவரும் அனுசுயாவை வந்து வேண்டினார்களாம். அந்தக் கற்புக் கரசியோ,

''இது நான் வணங்கும் மகா அன்னையின் விளையாடல். என்னிடம் முறையிடுவதை விட அவளிடம் போய் முறையிடுங்கள்'' என்றாளாம்.

மூவரும் தன் கணவன்மார்கள் திரும்ப வேண்டி தொழுது நின்ற போது அன்னை மகாசக்தி எழுந்தருளி, குழந்தைகளை மும்மூர்த்திகளாக்கினாளாம். மக்களை இரட்சிக்கும் இராஜாக்களுக்கெல்லாம் இராஜாவான அன்னை இராஜ ராஜேஸ்வரி ஆனாள்!

இத்தனைக்கும் மேலாக அற்புதமான சிறப்பு ஒன்று இங்கு உண்டு. இந்தியாவெங்கும் சக்தி ஸ்தலங்கள் ஐம்பத்தியொன்று உண்டு. சக்தி தன் உடலை வெட்டித் துண்டாக்கி அங்கங்களை விட்டெறிந்தாள். அப்படி விழுந்த இடங்களே சக்தி ஸ்தலங்கள் ஆயின என்று சொல்வர். அப்படி காஞ்சனஹள்ளியின் தேவியின் கர்ண பாகம் (காது) விழுந்ததாம். எனவே இதுவும் ஒரு திவ்ய க்ஷேத்ரமானது.

அதே போல இந்தப் புனித பூமிக்கு இன்னொரு விசேஷமும் உண்டு.

இராமனும், சீதா தேவியும் வனவாசத்திற்கு வந்த போது இங்கு தங்கியிருந்திருக்கிறார்கள். அப்போது ஒரு அசுரன் காக வடிவில் வந்து அன்னையைத் தொந்தரவு செய்த போது, அஞ்சனவண்ணன் ஒரு புல்லைப் பிடுங்கி அஸ்திரமாக்கி எறிந்திருக்கிறான். பயந்து அலறி ஓடிய அசுரனை மூன்று உலகத்திலும் பின்தொடர்ந்தது அந்த அஸ்திரம்! இராமபாணத்திலிருந்து அவனை யார் காப்பாற்ற முடியும்? முடிவாக இராமனிடமே அடைக்கலம் புகுந்தான்! கடைசியில், விட்ட அஸ்திரத்திற்கு ஒரு கண்ணை மட்டும் பலியாகக் கொடுத்தான். இன்றும் குறிப்பிட்ட அந்த ஒரு மலையில் மட்டும் காகமே போகாதாம்! பக்கத்து இடங்களில் எல்லாம் காகங்கள் உண்டு!

இப்படி எல்லா மகிமையும் இந்தத் திவ்ய பூமியில் இருந்ததால்தான் இங்கு கைலாஸ ஆஸ்ரமத்தை நிறுவி தேவியை ஸ்தாபிக்க வேண்டும் என்று கட்டளையிட்டு இருக்கிறார் குரு! சீடரும் அதைச் சிரமேற் கொண்டு காஞ்சனஹள்ளிக்கு 1960ல் வந்து ஆஸ்ரமப் பணியை ஆரம்பித்து இருக்கிறார்.

கண்ணால் கடைத்தேற்றி...

இங்கே ஆஸ்ரமத்தை அமைத்த திருச்சி சுவாமிகள் ஏன் ஞானாக்ஷி இராஜ இராஜேஸ்வரியை ஸ்தாபிதம் செய்ய வேண்டும்? காமாட்சி, மீனாக்ஷி, விசாலாக்ஷி இல்லையோ? அது என்ன ஞானாக்ஷி?

அதற்கோர் மகிமை உண்டு. அனைத்து தேவதைகளுக்கும், சிவன், விஷ்ணு, பிரம்மா மூவருக்கும் மேலாகி அண்ட சராசரங்களுக்கும் அன்னையானவள் இந்த ஆதிபராசக்தி! அதையே அனுசுயாவின் கதையும் நமக்குக் கூறுகிறது. அவளே இராஜ இராஜேஸ்வரி ஆகிறாள்.

இவள் ஞானாக்ஷி ஆனதும் அற்புதமானதே!



Jnanakshi
Sri Raja Rajeshwari Ambal



• இருக்கி ஸ்வாமிகள்

ஆமை இருக்கிறதே, அது முட்டையிட்டுப் போட்டு விட்டுப் போய் விடுகிறது. பின்னர் முட்டை பக்குவமடைந்து குஞ்சு வெளி வருகிறது. அதற்கு உணவு? எங்கோ இருக்கும் ஆமை 'ஐயோ நம் குட்டிக்குப் பசிக்குமே' என நினைத்தாலே இங்கு குஞ்சுகளின் வயிறு ரொம்பி விடுமாம். இது விஞ்ஞானமும் ஒத்துக் கொண்ட விந்தை!

மீன் இருக்கிறதே, அது தாயாகித் தன் குஞ்சுகளின் புடைசூழ நீரில் நீந்திக் கொண்டிருக்கும்., குட்டி மீன்களெல்லாம் இரண்டு பக்கமும் தாயோடு ஒட்டிக் கொண்டு பின்னாடியே ஓடி வந்து கொண்டே இருக்கும். தாய் மீன் தன் கண்களை இப்படி அப்படித் திருப்பிப் பார்க்குமாம்! அதன் பார்வை பட்ட இடத்திலுள்ள மீன்களின் வயிறெல்லாம் நிறைந்து விடும். இதுவும் ஆச்சரியமே!

அப்படி அன்னை தன் கடைக்கண் பார்வை பட்டாலே தம் மக்களின் துயரெல்லாம் தீர்த்து விட ஏதுவாகிறாள். அதனால் தானே உருகி உருகிப் பாடிய அபிராமி பட்டரும்,

'தனம் தரும், கல்வி தரும், ஒருநாளும்
தளர்வறியா மனம் தரும், தெய்வ வடிவும்
தரும்...
அபிராமி கடைக் கண்களே!'

என்றார்.

மடைப்பள்ளி வாசம் செய்தவன் கவி காளமேகம் ஆனதும், அடி மரத்தில் அமர்ந்து நுனி மரம் வெட்டிய மடையன் கவிகாளிதாஸன் ஆனதும் அவளின் கடைக் கண் மகிமைதானே!


இதைப் பெறவல்லவா அம்பிகையின் முன் நிற்க வேண்டும். அடம் பிடிக்கும் குழந்தையாக அருளுக்கு ஏங்க வேண்டும்.

இவள் என்ன தருவாள்? ஞானம் தருவாள்! அதுவும் கடைக்கண்ணின் பார்வையிலே. ஏனென்றால் இகலோக இன்பங்களையும் கடந்து முக்திக்கு வித்தாக, இராஜேஸ்வரியாக இருப்பதால் இவள் கடைக்கண்ணில் ஞானத்தை அளிக்கிறாள். அதுவே பேரின்பம் அன்றோ! அதற்காகத் தான் இங்கே ஞானாக்ஷி இராஜ இராஜேஸ்வரி குடிகொண்டாள்.

இவள் மேல் வைத்த பக்தியின் உயர்வை மிக அழகாகக் கூறினார் கிரிஜா இராமச் சந்திரன். இவர் வழக்கமாக இங்கே வந்து அம்பிகையின் பல மகிமைகளை வாழ்க்கையில் உணர்ந்தவர்.

"என்னால கோவில்லே முழு மனதோட 'கான்சன்ட்ரேட்' பண்ண முடியலை: த்யானமாவது, ஒண்ணாவது இந்த விஞ்ஞான யுகத்திலே என்றெல்லாம் சொல்வார்கள். ஆனால் நம் அன்றாட வாழ்க்கையிலே பாருங்க. நமக்கு மிக மிகப் பிடித்தவரோட பேசுகிறோம். அதே சமயம் சுற்றுப் புறத்திலும் பார்க்கிறோம். நமக்கு மிக வேண்டியவர்களெல்லாம் வருவார்கள். ஆனால் நம் கண் பார்ப்பதில்லை. நமக்குப் பிடித்தமான புத்தகம் படிக்கிறோம். காதுக்கருகே பேசுகிறார்கள். ஒலி எழுகிறது. அர்த்தத்தை மூளை எடுத்துக் கொள்வதில்லை. இப்படிச் செய்யும் காரியத்தில் ஒன்றும் போது கண், காது, மூக்கு திறந்திருந்தாலும் பிரயோஜனமில்லை!

அதே போல மனம் மிகத் தீவிரமாக ஒன்றைச் சிந்தித்துக் கொண்டிருக்கும் போது சாப்பிட்டாலும், வெற்றிலைப் பாக்குப் போட்டாலும் கிரமமாகத்தான் செய்வோம். ஆனால் என்ன சாப்பிட்டோம் என்று நினைவு இருப்பதில்லையே தவிர, பாயாசத்



கல்யாண அழைப்பிதழ்களை போஸ்ட் செய்யும் போதும், ஒரே நாள், ஒரே போஸ்ட் பாக்ஸில் போடாமல் கொஞ்சங் கொஞ்சமாக வெவ்வேறு நாளில், வேறு வேறு இடங்களில் போஸ்ட் பண்ணினால் ஓரளவிற்குத் தவறாமல் போய்ச் சேருகிறது.

— பானு கரேன்.

மகத்தான தசரா/துர்கா பூஜை விற்பனை!

மஞ்சுஷா

(மேற்கு வங்காள அரசு எம்போரியம்)



35% வரை
தள்ளுபடி
தருகிறது.

பெங்கால் கைத்தறி
காட்டன் & சில்க்
புடவைகள்
மற்றும் உல்லன்
ஜமுக்காளங்களுக்கு

25, செப். '90
வரை மட்டுமே
இந்த சலுகை

புதிய ஸ்டாக்குகள்
வந்துள்ளன.

MANJUSHA
(West Bengal Govt. Emporium)
Raheja Complex (Basement)
Opp. Anna Statue
834 Mount Road, Madras 600 002.

25.9.90 வரை ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு.

Adept

தையும், மோரையும் ஒன்றாக்கிச் சாப்பிடுவதில்லை.

இதையே கோயிலில் அன்னையின் முன் நின்று பக்தி செய்து பாருங்கள். காது திறந்திருந்தாலும் பக்கத்து மாமியின் வம்பு பேச்சு கேக்காது. கண்கள் அன்னையைப் பார்க்குமே தவிர அடுத்தவரின் பட்டுப் புடைவையைப் பார்க்காது!

சரி, இப்படி பக்தி செலுத்தி ஞானத்தை வாங்குவதால் என்ன பிரயோஜனம் என்று கேட்கிறீர்களா?

நமக்கு ஒரு பிரச்னை வருகிறது என்று வைத்துக் கொள்வோம். பிரச்னை என்றாலே என்ன? நம்மால் செய்ய முடியாதது. நமது சக்திக்கு மீறியது என நினைப்பதுதான் இல்லையா?

ஒரு காரை எடுத்துக் கொள்வோம். அதில் பாட்டரி டவுன் ஆகி விட்டதால் அதால் கிளம்ப முடியவில்லை. ஓட முடியவில்லை. உடனே என்ன செய்கிறோம்? பாட்டரிக்கு சார்ஜ் பண்ணுகிறோம். அதில் சக்தி நிரம்பியவுடன் ஓட ஆரம்பிக்கிறது.

அதே போலத்தான் இங்கே சக்திமயமாக நிற்கிறாள் அன்னை. இங்கே வந்து கருத்தொன்றி நிற்கும் போது அவரவர்க்குத் தேவையான சக்தியை 'சார்ஜ்' செய்து கொள்ள முடியும். இவள் எத்தனை வோல்ட். தொட்டாலே ஷாக் அடிக்காதோ! அதனால்தான் 'கடைக்கண் பார்வை' போதும் என்பது. இந்தச் சக்தியைத் தொழும் போது நம் பிரச்னைகளைத் தாண்டுதற்கான சக்தியை நாம் பெறலாம்.

நமக்கு வரும் பிரச்னைகளை நாம்தான் தீர்க்க வேண்டும். அதுதான் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு வழி. சாதிக்க முடியாதவையெல்லாம் சாதிக்கப்படும் போது வெற்றியாளராகிறோம். அதற்கு இந்த ஞானாக்ஷி நெஞ்சில் உரமேற்றுகிறாள்'' என்றார் நெகிழ்ந்து.

எத்தனையோ சம்பவங்கள் இந்தக் கோயிலில் நடந்து இருக்கின்றன. ஊருக்கெல்லாம் மருத்துவம் பார்த்த டாக்டர் தனக்குப் பிள்ளை வரம் வேண்டி இவளை வலம் வந்தாள்! மகா அன்னை கேட்ட வரம் கொடுத்தாள்.

அறுபதாம் ஆண்டு திருப்பணித் தொடங்கிய நாளில் இருந்து இன்று வரை யாரிடமும் நிதியுதவி கேட்டுச் சென்றதில்லையாம் சுவாமிகள். தானாகவே வந்து நிதி குவிவது இவளின் சக்திக்குச் சான்று.

முப்பதாண்டுகளாகச் சிற்பக் கலைஞர்களின் உளிச் சத்தம் இங்கு ஓயவே இல்லை. தமிழக பாணியில் கோயில் கட்டி முடித்த பிறகு, யாக சாலையும், மகாமேரு பீடமும் ஆரம்பித்து இருக்கிறார்கள். வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன.

நவராத்திரி விழா இங்கு வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. ஒன்பது



குழந்தைகளுக்கு வெற்றிலை, பாக்குக்குப் பதில் ஒரு வாழைப் பழம் கொடுக்கலாம். விரும்பிச் சாப்பிடும். 'வேஸ்ட்' ஆகாது.

— பார்வதி.

நாளும் சண்டி ஹோமமும் விசேஷ பூஜைகளும் நடைபெறுகின்றன. அன்னை அவளுக்கே உரிய சரத் காலத்தில் களி நடம் புரிகிறாள்.

அதே போல பொங்கல் சமயத்தில் கணுப் பொங்கலன்று இங்கு அம்மனுக்குச் 'சாகம்பரி அலங்காரம்' செய்யப்படுகிறது. காய்கறிகளாலேயே செய்யப்படும் அலங்காரம் சாகம்பரி அலங்காரம் எனப்படும்.

'பூக்களுக்குத்தான் தேவியின் திருமேனியைத் தீண்டும் பாக்கியமா? எங்களுக்குக் கிடையாதா?' என முறையிட்ட காய்கறிகளுக்கும் அன்னை அருள்பாலித்துத் தன்னை காய்கறிகளால் அலங்கரித்துக் கொண்டாள் என்று சொல்லலாம்.

ஆனால் பொங்கல் நன்னாளில் புது அரிசியும், வெல்லமும், காய்கறிகளும் வந்து குவியும். அதற்கு அடையாளமாகவே கணுப் பொங்கலன்று காய்கறிகளால் அலங்கரிக்கப்படுகிறாள் என்று எடுத்துக் கொள்ளலாம்.

சிரத்தையும், பக்தியும் பின்னிப் பிணைந்து தெய்வீகமாகி நிற்கின்ற அழகை இந்தக் கோயிலிலே காண முடிகிறது. சுத்தமான சுற்றுப்புறம். அம்மனுக்குப் புடைவையைக் கொசுவிக் கட்டியிருக்கும் அழகே அழகு. அதற்கு மேல் பூ அலங்காரத்திலும் சிரத்தை. பூஜைக்கு வரும் பூவையெல்லாம் தூக்கி அவள் மேல் போடாமல் அலங்கார வல்லியாக அவள் அமர்ந்திருக்க, காலடியில் மலர்ச் சரங்கள் தஞ்சமடைகின்றன.


லக்ஷ்மி, சரஸ்வதி இருபுறமும் நிற்க ஞானாக்ஷி உற்சவ மூர்த்தியாக மூலஸ்தானத்தின் பின்புறம் குடிகொண்டாள்.

நாளெல்லாம் பார்த்தாலும் சலிக்காத அழகு! அழகின் வெள்ளம்! நெஞ்சிலும் அந்த பக்தி அமுதத்தைச் சுமந்து திரும்ப மனமில்லாமல் திரும்புகிறோம்.

— மஞ்சுளா ரமேஷ்.



வெளி மாநிலத்தில்... வெளி நாட்டில்...




நவராத்திரி அனுபவங்கள்

திருமதி சரோஜா பராசரன்:

வழக்கமாகக் கொலு வைக்கும் நான் டில்லியில் இருக்க நேர்ந்த காலங்களிலும் தொடர்ந்து வைத்தேன். (நிறுத்தலாமா வழக்கத்தை?) பொம்மைகள் அதிகம் கிடையாது. பெரிய பெரிய படிகள் போட்டு வைப்பதில்லை. தசாவதாரம், ராமர் சீதை, லக்ஷ்மி, சரஸ்வதி போன்ற முக்கியமான பொம்மைகள் தான். மண்பொம்மைகளும் கிடையாது. ஊருக்குத் தகுந்தபடி நவீனமான பொம்மை





கள் தான். நான் தென்னிந்தியர் வட இந்தியர் என்ற பேதமில்லாமல் எல்லா தோழிகளையுமே அழைப்பேன். வட இந்தியரில் சிலர் தான் வருவார்கள். அநேகம் பேர் வருவதில்லை. பத்து நாட்களும் வருபவர்களுக்கு வெற்றிலை பாக்கு கொடுத்து, வீட்டில் பூஜையும் செய்வதுடன், அவர்களைப் போல தினமும் கோவிலுக்கும் போவேன்.

வட இந்தியர்கள் நவதுர்கா பூஜையினை ஒன்பது நாட்களும் விரதமிருந்து தினமும் கோவிலுக்குச் செல்வார்கள். பத்தடி உயரமுள்ள கார்த்தியாயினி அம்மன் எழுந்தருளியுள்ள கோவில் மிகவும் விசேஷம். அக்கோவில் மாதத்தில் (ஒரே நாள் (பவுர்ணமி) தான் திறக்கப்படும் — நல்ல சேவையும் கிடைக்கும். ஏழைப் பணக்காரர் என்ற பேதமே (கோவில்களில்) பார்க்கப்படுவதேயில்லை. எல்லோருக்கும் ஒரேமாதிரியான 'ட்ரீட்மெண்ட்' தான். ஆசாரம் வேண்டுமானால் நம் தென்னிந்தியாவில் அதிகமிருக்கலாம், பக்தி என்னும் போது வட இந்தியாவில்தான் அதிகம். அவர்கள் மனசுத்தத்துடன் எளிமையாகப் பூஜை செய்கிறார்கள்.

திருமதி ரங்கம் பாலாஜி (ராகி)

பம்பாயில் தேவி பூஜையும், ராம் லீலாவும் அமர்க்களமாகக் கொண்டாடப்படும். ஆனால் நான் இருந்த இடம் 'கபோலி' இது பம்பாய்க்கும், பூனாவுக்கும் இடையில் அமைந்துள்ள இடம். இங்கு நம் தமிழ் நாட்டவருடன், பெங்காலியரும், மராட்டியரும் கலந்து வாழ்கின்றனர். நவராத்திரி எங்கள் அனைவருக்குமே ஒரு பொதுவான பண்டிகை. மொழி, இனம், வயது மறந்து, போட்டி பொறாமையின்றி அனைத்து வேற்றுமைகளையும் ஒதுக்கிவிட்டு சிறப்பாக, ஒரு திருவிழா போலக் கொண்டாடுவோம்.

எங்கள் கை வேலைகளைக் காண்பித்து மற்றவர்களை அசத்த (மற்றவர்கள் செய்வதைக் கண்டு நாம் அசர!) இது உகந்த நேரம். மணி, ஒயர், ஓலை — இப்படிப் பல விதங்களான கைவினைப் பொருட்கள், வண்ணமயமான ரங்கோலி கோலங்கள், நெய் மணக்கும் பலவித நைவேத்தியப் பலகாரங்கள். அப்பா! எண்ணிலடங்கா. எல்லோரையும் கூப்பிட்டு — கூப்பிட்ட இடங்களுக்குப் போய்! பட்டுப்புடைவைகளின் சரசரப்பு; நகைகளின் மின்னல் — இந்த ஒன்பது நாட்களுமே எங்கள் 'கபோலி' கல்யாண கோலத்தில்தான் இருக்கும்.

. பெங்காலியர் மேளதாளத்துடன், சங்க நாதத்துடன் பூஜை செய்ய; மராட்டியர் தேவி பூஜையும், சுமங்கலி பூஜையும் செய்ய பூஜைக்கு மகிழ்ந்து அம்பிகையே எழுந்து வந்துவிட்டாளோ என வியக்கும் வண்ணம் சர்வ அலங்கார பூஷிதைகளாக நடமாடும் பெண்கள். அனைவரும் சேர்ந்து துர்கா பூஜை செய்வோம். கும்மி, கோலாட்டம், பாட்டு, நடனங்களும் உண்டு. எத்தனை முறை கொண்டாடினாலும் அலுக்காது. நவராத்திரி முடிந்தவுடனேயே அடுத்த நவராத்திரி கொண்டாடும் விதம் பற்றி திட்டம் போட ஆரம்பித்து விடுவோம்.

தனியாகப் பூஜை செய்வதில் ஒரு நிம்மதி இருக்கலாம். ஆனால் பல நதிகள் கலந்த கடலாக அனைவரும் கூடிப் பூஜை செய்வதில் ஒரு தனி நிறைவு — அதை சொல்லிப் புரியவைக்க முடியாது.

திருமதி ரஞ்சனி ஐயங்கார் கிளீவ் லேண்ட் (அமெரிக்கா)

என்னிடம் எல்லாவிதமான பொம்மைகளும் உண்டு. அமெரிக்கப் பிரஜையானாலும் நான் நம் வழக்கப்படி கொலு வைக்கத் தவறுவதேயில்லை. ஒன்பது நாட்களும் ஒரு பெரிய 'ஷெல்பில்' தான் கொலு வைத்து மின் விளக்குகளால் அலங்காரம் செய்வேன். தினமும், காலையும் மாலையும் ஆரத்தி காட்டுவது வழக்கம். இங்கு சில சமயம்தான் கற்பூரம் கிடைக்கும். இங்கு


RADEUS/PE/L/8-90-B-TAM
எந்நேரமும் லிம்கா நேரம்
விருந்தினர் வரும் நேரம்
லிம்காவின் இனிப்பும்
உப்பும் கலந்த இணையற்ற
சுவை விருந்தினர்
மனதை கொள்ளை கொள்ளும்.
தாகம் தணிக்கும் நேரம்
லிம்காவில் அடங்கியுள்ள
ஐஸோடானிக் உப்பு
உங்கள் தாகத்தை
தணிக்கிறது.
கொட்டமடிக்கும் நேரம்
உல்லாசமாய் கொட்டமடிக்கும்
நேரங்களில் லிம்கா.
வாழ்விற்கு மேலும்
சுவை கூட்டுகிறது.
பயணம் செய்யும் நேரம்
லிம்கா, கிருமிநீக்கம்
செய்யப்பட்ட பானமாகையால்
பயணிகளுக்கு முற்றிலும்
பாதுகாப்பானது.
Limca®
CONTAINS ADDED FLAVOUR. CONTAINS NO FRUIT JUICE/PULP. NO BVO USED.
® THE REGISTERED TRADEMARK OF PARLE (EXPORTS) LTD., BOMBAY




வீடுகள் எல்லாமே மரத்தால் ஆனவைதான். அதனால் நாங்கள் கற்பூரமே ஏற்றுவதில்லை. சிறிய நெய் விளக்கு ஏற்றுவோம். அதால் தான் ஆரத்தியே. இந்தச் சின்ன விளக்கும் தானே அணையும் வரை வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே போகமாட்டோம். தீ விபத்து பயம்தான் காரணம்.

நைவேத்தியம் நிறைய பழங்கள், இனிப்பு வகைகளும் வைப்பது உண்டு. ஏதாவது ஒரு இனிப்பு, (முறுக்கு, தேன்குழல், காராசேவ் போன்ற ஏதாவது) ஒரு காரம் இரண்டையும்

நவராத்திரிக்கு வரும் குழந்தைகளுக்கு, கடையில் சாக்லேட், மிட்டாய் அல்லது கடலை உருண்டை வாங்கிக் கொடுக்கலாம். கண்டலை இறைத்து விடும். பெரியவர்களுக்குச் சுண்டல் கொடுக்கலாம்.


— பார்வதி.



ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு வருவோர் எல்லோருக்கும் கொடுப்பேன். சில சமயம் சிறிய கண்ணடி, சீப்பு, போன்ற ஏதாவது கொடுப்பதும் உண்டு. இங்கு வெற்றிலையே கிடையாது. பாக்கும் மட்டுமே கிடைக்கும்

நான் இங்கே அநேகக் குழந்தைகளுக்கு நடனம் கற்றுக் கொடுக்கிறேன். விஜயதசமியன்று ரொம்ப விசேஷமாக சலங்கை பூஜை செய்வது உண்டு — எளிமையான முறையில் தான். குருதட்சிணையாக அவர்களாக தட்டில் வைத்துக் கொடுப்பதுதான். நானாக எதுவும் கேட்கமாட்டேன். சில சமயம் வெறும் பழம் மட்டும் கூடத் தட்டில் இருக்கும். புடைவை, பணம் வைத்துக் கொடுப்பதும் உண்டு. சில சமயம் கைக்குட்டை போன்றவைகளும் தட்டில் இடம் பெறும். ஓர் அமெரிக்க மாணவி ஒருமுறை ஒரு ஜோடி கையுறைகளை கொடுத்தாள். ஆனால் இங்கு குரு பக்தியும், மரியாதையும் நிரம்ப அதிகம்.

பக்கத்திலிருக்கும் நம் நாட்டவர்களை மட்டும்தான் கொலுவுக்கு அழைப்பேன். அமெரிக்கர்களை அதிகம் அழைப்பதில்லை — ரொம்பவும் நெருங்கியவர்களைத் தவிர. இங்கேயிருக்கும் சிலர் கோவிலிருந்து சாஸ்திரிகளை அழைத்துப் பூஜை செய்வோரும் உண்டு. கிளீவ்லேண்ட் சிவ — விஷ்ணு கோவிலில் ஒன்பது நாட்களும் மிகவும் விசேஷமாகப் பூஜை நடக்கும். கோவிலிலும் கொலு உண்டு. நிறைய கூட்டம் நிரம்பி வழியும். பாட்டு, நடனம், எல்லாமே உண்டு. விஜயதசமியன்று வீட்டுக்கு வரும் அமெரிக்கர்கள் கொலுப்பற்றியும், சலங்கை பூஜை


Leo Birthday Rhymes...4
Puff Puff Engine
What have you brought?
Birthday wishes
For the sweet little tot!
Leo makes birthdays happy.
Safe, snug and colourful,
Leo toys extend the fun
from one birthday to the next
In fact, any day is good enoug
to gift your child a Leo.
For every rhyme and reason.
Pre-School
LEO
TOYS
The LEO Pre-School range is specially priced between Rs.45 and Rs 160. All inclusive.


இல்லத் தலைவியின் முகத்திலே
வரும் மலர்ச்சி...
சமையலறைக்கு ஸன்பெட்
தரும் கவர்ச்சி.
sunpet
பன்முகப் பயன்கொண்ட ஜாடிகள்.
• ஃபுட் கிரேட்
• மணம் அற்றவை
• உடையாதவை
• காற்றுப் புகாதவை
ஸன்ரைஸ் கன்டெய்னர்ஸ் பிரைவேட் லிமிடெட்
பம்பாய்

பற்றியும் மிகவும் ஆர்வத்துடன் விசாரிப்பதுடன், ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனிப்பார்கள். எந்த இடத்திலிருந்தாலும் நம் பண்பாட்டையும், பழக்கவழக்கங்களையும் மறக்க முடியுமா?

சந்திப்பு: **வைதேகி தேசிகன்.**

மஸ்கட் போகிறாயா, வரும் போது பெட்டி நிறைய பிஸ்கட் கொண்டு வா (தங்கம் தான்!) என்று கூறப்படும் ஓமானில் **(Oman)** நவராத்திரி கோலாகலமாய் நடக்கிறது! நம் பண்டிகைகளிலேயே மிகவும் அதிகமான நாட்கள் கொண்டாடப்படுவது நவராத்திரி. கல்கத்தாவில் துர்கா பூஜையாக, மதராஸில் கொலுவாக, பம்பாயில் நவராத்திரியாகக் கொண்டாடப்படும் இந்த நாட்கள் மஸ்கட் எனப்படும் அரபு நாட்டின் வண்ணத்தையே மாற்றி விடுகிறது.

பெட்டியில் கடவுள் படமா? — ஐயோ கூடவே கூடாது, கைப்பையில் விபூதிப் பொட்டலமா?— கடவுளே தூர வீசிப்போடு, நெற்றியில் திருநீறா? — முதல் காரியமாக முகத்தை அலம்பு, இப்படி எல்லாம் கூறப்படும் அரபு நாடுகளில்தான் இந்தக் கொண்டாட்டம். இந்நாடுகளைப் பற்றி, இங்கே உள்ள இந்தியர்களின் சுதந்திரத்தைப் பற்றி யாரும் எழுத முன் வராததால்தான் இந்த உண்மை இல்லாத பேச்சுக்கள்.

இந்த ஒன்பது நாட்களும் மஸ்கட் ஒரு சிறிய மைலாப்பூராகவோ, அல்லது மாம்பலமாகவோ (மைனஸ் கொசு!) ஆகிவிடுகிறது. ரூவி என்னப்படும் முக்கிய கடை வீதியில் ஒரே பட்டுப் புடைவை மயம். இந்த ஊரிலோ சொர்ணத்திற்குப் பஞ்சமே இல்லை. திருட்டு பயம் என்றால் என்னவென்று கேட்க வேண்டும். அதனால் கேட்பானேன்.... பட்டுப் புடைவை சரசரக்க, தங்க ஆபரணங்கள் ஜிலு ஜிலுக்க மாலை நேரம் வந்து விட்டால் தெருவெங்கும் மின்னல் தான்.

ஒரே குறை— இந்த மின்னல்கள் எல்லாம் நடு வயது மின்னல்கள்தான். ஸ்வீட் டீன் வயதுக்காரர்கள் இங்கே பார்ப்பது அரிது. ஆகையால் நம் ஊர் போல் பாவாடை தாவணியில், வளைத்து வைத்த மல்லிகை சரம் காதில் ஜிமிக்கி, காலில் கொலுசு 'வர வீணா' இல்லை 'லம்போதர' என்று பாட்டு பாட ஆள் இல்லை. இங்கு பூக்கள் கிடைப்பது அரிதாகையால் விதம் விதமாக சென்ட் மணம்தான் நாசியைக் கொள்ளை கொள்ளும்.

இதில் இன்னுமொரு அதிசய விஷயம். இந்த நவராத்திரியை முன்னிட்டு இந்தியாவிலிருந்து சாமான்கள் கடத்தி வரப் படுகிறது. இங்கு எவர்சில்வர் சாமான்கள், கைவினைப் பொருட்களின் விலை மிகவும் அதிகமாக இருப்பதால், வருடத்திற்கு ஒரு



நவராத்திரிக்கு அழைக்க, அல்லது உங்கள் வீட்டுக்கு மஞ்சள், குங்குமத்துக்கு வருவார்கள். டி.வி. இருக்கும் அறையில் கொலு இருக்குமானால், டி.வி. யைப் போடாதீர்கள். அல்லது டி.வி.யை மாற்றி விடுங்கள்.

— பார்வதி.

முறை இந்தியா சென்று வரும் போது எவர் சில்வர் தட்டுக்கள், பேசின்கள், சந்தன பொம்மைகள், கூடைகள்... (பட்டியல் நீண்டு கொண்டே போகும்.) வாங்கி வரப் படுகின்றன. அதாவது.. இந்த வைபோகத்திற்கான ஏற்பாடுகள் நம் ஊர் போல் ஒரு மாதம், இரண்டு மாதம் முன் ஆரம்பிக்கப் படுவதில்லை. ஒரு வருடம் முன்பாகவே ஆரம்பிக்கப் படுகின்றன.

பண்டிகை நாட்களின் முன் வாரமே போன் மூலம் அழைப்புகள் அனுப்பப் படுகின்றன. அழகிய தமிழில் ''கம்பன் காவியத்தைக் காண வாரீர் ஓவிய வடிவில்'' என்று அச்சடித்த அழைப்பிதழும் உண்டு. நம் நாட்டில் கொலு அழைப்பிற்கும் இங்கே உள்ள அழைப்பிற்கும் ஒரு வித்யாசம் உண்டு. இங்கே அழைப்பு பெண்களுக்கு மட்டும் அல்ல. பெண்கள் இங்கே தனியாக போக முடியாததால் கணவர், குழந்தை என்று எல்லோருக்குமாக அழைப்பு. ஆக வீட்டிலேயே ஒரு கெட்-டு-கெதர்.

இன்னுமொரு வித்யாசம். நம் நாட்டு கொலுவுக்கென்றே ஏற்படுத்தப்பட்ட பொம்மைகள் — சல்யூட் அடிக்கும் போலீஸ், தொந்தி பெருத்த கடைக்காரர், புல்லாங்குழல் கண்ணன், தவழும் குழந்தை, தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள் — இவைகளைப் பார்க்க முடியாது. இதற்குப் பதில் பாட்டரி போட்டால் 'வாவ்' என்று கத்தும் நாய், ஆள் உயர வாக்கி டாக்கி பொம்மை. கண்ணை உருட்டும் கறுப்புக் கரடி, டிங் டாங் டிங் என்று பாடிக் கொண்டே சுற்றும் பெண் என்று மினி டிஸ்னிலேண்ட் சாமான்கள்.

இதில் குறிப்பிடத்தக்கது திருமதி மாலதி சீனிவாசன் அவர்களது 'ராமாயணம்' கொலு அமைப்பு. அட்டையில் ராமாயணக் காவியத்தின் முக்கிய பகுதிகளை வரைந்து



பொறுமையாக வெட்டி எடுத்து வர்ணம் இட்டு, பின்னால் உயிரோட்டத்திற்காக அழகிய மரம், கல், பாறை இவற்றை வரைந்து, தேன் தமிழில் இதற்குக் கீழ் முத்தான கம்பன் காப்பிய விளக்கம். ஒரு கணம் இது மஸ்கட் என்பது மறந்து போய் விடுகிறது. பக்கத்தில் உள்ள தர்காவிலிருந்து எழும் தொழுகைப் பாடல் ஒலி கதவையும் மீறி காதில் விழும் போதுதான் இருக்கும் இடம் பற்றி நினைவு எழுகிறது.

இங்கே கொலு காணப்போவதும் இரவில்தான். அலுவலகங்கள் ஏழு மணி வரை இருப்பதால் இந்த நடு இரவு கொலுக் கள். நம் ஊர் போல் கண்டல், அல்லது போண்டா, அல்லது காராசேவ், தவிர ஸ்வீட் (முக்கால்வாசி பாதாம் கேக்தான். இங்கே பாதாம் தண்ணி பட்ட பாடு.)

இன்னுமொரு தமாஷான சமாசாரம். அரேபிய நாடுகளில் வெற்றிலை தடை செய்யப்பட்டுள்ள பொருள். பாக்குக் கூட வெகு சில கடைகளில் தான் கிடைக்கும். மஸ்கட் அருகில் இருக்கும் 'சலாலா' என்ற இடத்தில் வெற்றிலை பயிர் செய்யப்படு கிறது. ஆனாலும் இவை எல்லாம் ஏற்று மதிக்காகத்தான். இதையும் மீறி சில கடை களில் நவராத்திரி சமயத்தில் நாம் போனால் ''என்ன, அது வேண்டுமா'' என்று கேட்கப் படுவோம். வேறு ஏதும் கற்பனை பண்ண வேண்டாம்! இந்த 'அது' வெறும் வெற்றிலை. இவ்வளவு தடைகளையும் மீறி வெகு சில இடங்களில் கிடைப்பதால் இதன் விலை குதிரைக் கொம்பு. இரண்டு அழகிய, பாதி நறுக்கப்பட்ட வெற்றிலையின் விலை 8 ரூபாய். காரம், மணம் எல்லாம் நம் கும்ப கோணம் வெற்றிலையைப் போல.

ஆகவே இங்கு வெற்றிலை பாக்கு மஞ்சள் கிடையாது. ப்ளாஸ்டிக் கவர்களில் சீப்பு, கண்ணாடி, ப்ளவுஸ் துணி, தேங்காய் அல்லது ஆப்பிள், மற்றும் எவர்சில்வர் பேஸின் இல்லை வேறு ஏதாவது பொருள் கொடுக்கப்படுகிறது.

இங்கே உள்ள கிருஷ்ணன் கோவில், சிவன் கோவிலிலும் நவராத்திரிக்கான ஸ்பெஷல் பூஜை உண்டு. கிருஷ்ணன் கோவிலில் பாட்டு பஜனை என் போட இடமின்றி கூட்டம். சிவன் கோவிலில் நம் ஊர் போல் பாலாபிஷேகம். வடைமாலை கேசரி நைவேத்யம் எல்லாம் உண்டு. இதைத் தவிர மஸ்கட்டில் தமிழ்ச் சங்கமும் உண்டு. திரு. நரசிம்மன் என்பவரின் தலைமையில் நடைபெறும் இச்சங்கம் இங்கே உள்ள தமிழர்களின் கூட்டு முயற்சி. நவராத்திரியை முன்னிட்டு இச்சங்கத்திலும் பாட்டு கச்சேரிகள், தமிழ் நாடகங்கள் என்று நிகழ்ச் சிகள் உண்டு.

இவை எல்லாவற்றிலும் கடைசியாக ஒரு வேதனை. இங்கே உள்ள ''இன்டியன் ஸ்கூலில்'' சரஸ்வதி பூஜைக்கு விடுமுறை கிடையாது. குழந்தைகள் காலை ஏழு மணிக்கே ஓடவேண்டும். விஜயதசமி அன்றும் புதிதாக டான்ஸ் அல்லது பாட்டிற் குச் சேர வேண்டுமானால் இரவு எட்டு மணிக்கு மேல்தான். இது ஒரு சிறு குறை தான். நல்ல காரியத்திற்கு எல்லா நாளும் நல்ல நாளே. ஆகவே எங்களுக்கு இங்கே எல்லா வேளையும் நல்ல வேளையே.

— லதா ரகுநாதன்.



சுவை நிறைந்த கேசரி நிமிடத்தில் தயாரிக்கலாம்.

மில்க்மெய்ட் கொண்டு தயாராகும் இந்த சுவை நிறைந்த கேசரியை உங்கள் குடும்பத்தினர் வெகுவாக விரும்புவார்கள். இவற்றை எளிதாகத் தயாரிப்பதில் உங்களுக்கு ஒரே ஆனந்தம்தான்.

கேசரி

4–5 பேருக்கு
சமைக்க ஆகும் நேரம்: 15 நிமிடங்கள்

தேவை

மில்க்மெய்ட்: ½ டின், ரவா: 1 கப்
நெய்: 150 கிராம் (¾ கப்)
தண்ணீர்: 2 கப், கேசரி பவுடர்: ¼ டீஸ்பூன்
முந்திரிப் பருப்பு: 8-10 (விரும்பினால்)
திராட்சை: 20 கிராம் (1½ டேபிள்ஸ்பூன்) (விரும்பினால்)

செய்முறை

1. வாணலியில் நெய்யை காய்ச்சவும்.
2. முந்திரிப் பருப்பையும், திராட்சையையும் பொன்னிறமாகும் வரை நெய்யில் வறுத்து தனியே எடுத்து வைக்கவும்.
3. நெய்யில் ரவாவை சேர்த்து பொன்னிறமாகும் வரை வறுக்கவும்.
4. இதோடு கேசரி பவுடர் கரைக்கப்பட்ட 2 கப் தண்ணீரை சேர்க்கவும். தொடர்ந்து கிளறி விடவும்.
5. தண்ணீர் உறிஞ்சப்பட்டவுடன் சூட்டை குறைத்து மில்க்மெய்டை சேர்க்கவும். நெய் துளிகள் வாணலியின் ஓரங்களில் படியும் வரை தொடர்ந்து கிளறிவிடவும்.
6. நெய் தடவிய தட்டில் ஊற்றவும். விரும்பினால் முந்திரிப் பருப்பையும் திராட்சையையும் தூவவும்.
7. சதுர வில்லைகளாகப் போடவும்.
8. சூடாகவோ, குளிர வைத்தோ பரிமாறவும்.

விருந்தை பல செய்திட மில்க்மெய்ட்

இலவசம்
மில்க்மெய்ட் ரெஸிப்பி புத்தகம்
அதனைப் பெற போஸ்ட் பேக் 22,
புது தில்லி-110019
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.



TSA-D/MM/2490/TM

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு

காப்பியுடன் வழக்கத்திற்கு மாறாக போண்டாவும் வரவே, என்ன விசேஷம் என்பது போல மனைவியைப் பார்த்தான் முரளி. தினம் டிபன் பண்ண மாட்டாள் ரமா. பசிக்கிறது என்றால், "இரண்டு பிஸ்கட் எடுத்துக்கங்க. சீக்கிரம் சாப்பிட லாம்" என்று தட்டிக் கழிப்பாள். களைத்து ஓய்ந்து ஆபீஸிலிருந்து வருபவனுக்குச் சுடச்சுடக் காப்பியுடன் டிபன் சாப்பிட்ட வாறு அக்கடாவென்று காலை நீட்டிக் கொண்டு பேப்பர் படிப்பதில் இருக்கும் இன்பம். அதை அவளுக்குச் சொல்லிப் புரிய வைக்க முடியாது. கொஞ்சம் கடிந்து சொன்னால்... "நாள் முழுக்கச் சமையல் ரூம்ல அடைஞ்சு கிடக்க என்னால முடியாது. அப்படிப் பசிச்சா, வரச்சே ஏதாவது வாங்கி வர்றது எனக்கும் சேர்த்து..." என்று ஓங்கிச் சொல்லுவாள்.

இன்றைக்கென்ன அதிசயமாக டிபன்?

"அப்பா வந்திருக்கார்..." என்றாள் ரமா, அழகாகச் சிரித்தபடி. அப்பா என்பது அவளுடைய அப்பா.

போண்டாவைத் தின்பதற்குள்...

"அடடா, மாப்பிள்ளை, எப்ப வந்தீங்க ஆபீஸிலிருந்து..." என்று எதிரில் வந்து உட்கார்ந்தார் மாமனார். வழக்கமான குசல விசாரிப்புகள் நடந்தன. ஏதோ தத்துவ தர்க்கத்தைக் கேட்கும் பாவனையில் லயித்த வாறு ரமா நின்று கேட்டுக் கொண்டிருந்தாள் முகமெல்லாம் ஒரு பூரிப்பு.

மணி ஏழடிக்கவே...

"அப்பா ராத்திரிக்கு என்ன சமைக்கட்டும்?"

"என்ன வேணா பண்ணேன். நீ வெறும் சாதம் வடிச்சாக் கூட அப்படி மணக்கறது. அப்படியே உங்கம்மா கைமணம்" என்று சிலாகித்தார்.

"இல்லேப்பா. உங்களுக்குப் பிடிச்சதா பண்றேன்," ரமா சமைக்கப் போய் விட்டாள்.

டி. வி. யைப் போட்டுவிட்டு எதிரில் உட்கார்ந்த மனுஷர் சாப்பிடத்தான் எழுந்தார்.

சாப்பாடு பிரமாதம். கத்திரிக்காய் ரச வாங்கி, அரைத்துவிட்ட ரசம், பீன்ஸ் கறி, பச்சடி... அப்பளம்... மாமனார் ஒரு பிடி பிடித்தார். சாப்பிட்டபின் பேரனுடன் சீட்டு விளையாடினார். பிறகு பெண்ணுடன் அரட்டை. மாதம் ஒரு முறை வருவதும், வக்கணையாகச் சாப்பிடுவதும், நாட்டுப் பெண் பற்றிக் குற்றப் பத்திரிகை வாசிப்பதும் வாடிக்கையானது. அதில் நாம் ஏன் தலையிட வேண்டும் என்று முரளி படுக்கப் போய் விட்டான். புத்தகம் படித்துக் கொண்டிருந்ததால் தூக்கம் வரவில்லை. ரமா படுக்க வரும் போது மணி பத்தரை.

"அப்பாவைப் பார்த்தாப் பாவமாயிருக்கு."

"ஏன், என்னாச்சு?"

"அம்மாவுக்கப்புறம் அவரை யாரும் கவனிக்கிறதில்லே."

"உன் மன்னிதான் பத்திரமாப் பார்த்துக்கிறாளே?"

"ஆமாம். எல்லாம் சுயநலம். அப்பா பாவம், நாக்கு செத்துப் போய்க் கிடக்கிறார். வயசான காலத்தில் வாய்க்கு ருசியாச் சாப்பாடில்லை."

"ஏன் மன்னி சமைக்கிறதில்லையா?"

"சமைச்சா ஆச்சா? பாக்கி வேலையெல்லாம் யார் செய்யறது? எங்கப்பா மாதிரி ஒரு மாமனார் கிடைக்க மன்னி கொடுத்து வைச்சிருக்கணும். ரவி ஸ்கூல்லேருந்து வந்த பின் அப்பாதான் சாதம் போடறார். மத்தியானம் பால் வாங்கிக் காய்ச்சி வைக்கிறார்."

"இதென்ன பெரிய வேலையா?"


"உங்களுக்கென்ன சொல்றதுக்கு? அப்பாக்கு ஒரு ஸ்பூனை எடுத்து அந்தண்டை போட்டுப் பழக்கமில்லே. வயசான காலத்தில் ரெஸ்ட் வேணாமா? அப்பா சொல்

வருகை

பானுகுமார்

வதையெல்லாம் கேட்டா எனக்குக் கண்ணிலே ரத்தமே வர்றது.'' என்று விசும்பி அழுதான்.

முரளிக்குத் தன் அப்பாவின் நினைவு வந்தது. அம்மா இருந்தவரை அவரும் ஒரு வேலை செய்ததில்லை. எதிர்பாராமல், காலேஜ் படிக்கும் இரண்டு பிள்ளைகளையும் அவர் பொறுப்பில் விட்டுவிட்டு அவள் இறந்தபின், வாழ்க்கை நூல் அறுந்துவிடாமல்கெட்டியாகப்பிடித்துக்கொண்டு,அக்கம் பக்கத்தினர் உதவியுடன் வீட்டு வேலை



களைக் கற்றுக் கொண்டு செய்யத் தொடங்கினார். பிள்ளைகளுக்குச் சமைத்துப் போட்டு, படிக்க வைத்து, வேலைக்கு ஏற்பாடு செய்து, திருமணமும் செய்து வைத்தார்.

ஆரம்பத்தில் பிள்ளைகளுடன் இருக்கத் தான் அப்பாவும் ஆசைப்பட்டார். இருவரும் வீடு வாங்கப் பண உதவி செய்து, தன்னை அவர்களுடன் ஐக்கியப்படுத்திக் கொள்ளப் பார்த்தார். ஆனால் என்னவோ ஒட்டவேயில்லை. அனாவசியமாக, ஒரு வார்த்தை பேசி அறியாத ஆதர்சவாதி அப்பா. சுடுசொல் பொறுக்க முடியவில்லை. அதையும்விடக் காரணமில்லாத அலட்சியத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. பிள்ளைகளின் மண வாழ்க்கையில் தன்னால் கசப்பு ஏற்பட வேண்டாம், இழுத்து இழுத்து உறவு முறைகளும் ஒரேயடியாக முறிந்து போக வேண்டாமென்று ஒதுங்கி வாழ முடிவு செய்தார்.

எழுபது வயதிலும் தானே சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு, பொழுது போகவில்லை என்று பார்ட் டைம் வேலை பார்த்துக் கொண்டு, 'வாக்' போவதிலும், காசெட் கேட்பதிலும் வாழ்க்கையின் அர்த்தத்தைத் தேடும் அவருக்காகப் பரிதாபப்பட வேண்டாம். கூடுமான வரையில் தன் கையையே நம்பிப் பிழைக்கும் அவரை நினைத்துப் பெருமைப்படவும் வேண்டாம். "கிழத்துக்கு உடம்பில கொழுப்பு அதிகம். சக்தியிருக்கு. செஞ்சுக்கட்டும்" என்று விட்டேற்றியாகப் பேசிவிட்டுப் போகட்டும். குறைந்தபட்சம் பொய்ப் பிரசாரமாவது செய்யாமலிருக்கலாம்.

ரமாவும், முரளியின் தம்பி மனைவி சீதாவும், ஊர்ப் பார்வையில் தங்கள் பெயரைக் காப்பாற்றிக் கொள்ள நாக்கில் நரம்பில்லாமல் பேசுவார்கள்.

"எங்க மாமனார் ஒரு முசுடு. அவருக்கு மனுஷாளே வேண்டாம். பிள்ளைகள் தாங்கக் காத்திருக்கிறச்சே, முறுக்கிண்டு எங்கேயோ போய் உட்கார்ந்திருக்கார்."

என்ன நியாயமில்லாத பேச்சு. அதைவிட நியாயமில்லாதது முரளியும், அவன் தம்பியும் அதை மறுத்துப் பேச முடியாதது தான். வீட்டின் அழுக்கை வெளியில் அலசுவதில் யாருக்கு என்ன லாபம்?

அப்பாவை நினைத்து மனத்திற்குள் மருகுவதைத் தவிர முரளியால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

"என்னங்க, நான் பாட்டுக்குப் பேசிண்டே போறேன். நீங்க சும்மாயிருக்கீங்க. அப்பாவை ஒரு வாரம் இங்கேயே இருங்கன்னு சொன்னேன். நீங்களும் ஒரு வார்த்தை சொல்லுங்க. அவரைப் பார்த்தால் பாவமா இருக்கு."

"ஆமாம், பாவம்தான் அப்பா" என்று கண்ணை மூடிக் கொண்டான் முரளி. இமையோரத்தில் ஒரு துளிக் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

பப்பாளிப் பழத்தை மட்டுமே பயன்படுத்தி வரும் நாம் அதன் காயைச் சமைப்பதில்லை. பப்பாளிக்காயை குறுக்காக வெட்டி, விதைகளை நீக்கிய பிறகு தேங்காய்த் துருவியில் துருவலாகத் துருவிக் கடுகு, உளுந்து வெடிக்கவிட்டு மிளகாய் ஒன்று காரத்திற்குச் சேர்த்து துருவல்களைக் கொட்டி வதக்கி உப்புத் தண்ணீர் தெளித்து மூடி, வெந்தவுடன் தேங்காய்த் துருவல் சேர்த்துப் பொரியல் செய்யலாம். சாதத்திற்கு நன்றாக இருக்கும். சௌசௌ (பெங்களூர்க் கத்திரிக்காய்) சமைப்பது போல் தோல் நீக்கிச் சிறு துண்டுகளாக்கி அதோடு கடலைப் பருப்பு சேர்த்துக் கூட்டுப் பண்ணலாம். பப்பாளிக் கூட்டு என்றே சொன்னாலும் நம்ப மாட்டார்கள். சாம்பாரிலும் இதைப் போட்டுச் செய்யலாம். இரத்த விருத்திக்குப் பப்பாளிப் பழம் எவ்வளவு நல்லது! அதைப் போலவே காயும் சிறந்தது.

— விஜி.





ஸுமீத் SP-16 க்கு கடுமையான வேலைகளைச் செய்யும் தண்டனை அளியுங்கள்— அன்றாடம் ½ கிலோ மாவைப் பிசைந்திடவும், கடினமான 16 இதர வேலைகளைச் செய்திடவும்.

ஸுமீத் SP-16 மட்டுமே அன்றாடம் ½ கிலோ மாவு பிசையும் சக்தி படைத்ததாகும். இரண்டே நிமிடங்களில் மாவை சீராக மென்மையாக்குகிறது — நாளுக்கு நாள்.

ஸுமீத் SP-16, நீங்கள் கொடுக்கும் எந்தக் கடுமையான வேலையையும் செய்யும் வண்ணம் கட்டுறுதியாக உருவாக்கப்பட்டது. இதிலே சக்திவாய்ந்த 17 அற்புத செயல்கள் உங்கள் அன்றாட சமையல் வேலைகளைச் செய்யும் வண்ணம் கட்டுறுதியோடு வடிவமைக்கப்பட்டது. இதைப்போல், வேறு எந்த பிராஸஸரும் செயல்பட முடியாது.

ஸுமீத் SP-16, கட்டுறுதியான ஸுமீத் மோட்டாரைக் கொண்டதாகும். பளுமிகுந்த வேலையிலும் அரை மணி நேரத்திற்குமேல் தொடர்ந்து ஓடக்கூடியது — தடையின்றி. ஒரே மாதிரி சிறப்பான பலனை தொடர்ந்து அளிக்கிறது — ஒவ்வொரு முறையும்.

அதுமட்டுமா! பளுவான வேலைகளுக்கேற்ப தானாகவே சரி செய்து கொள்கிறது. ஸுமீத் SP-16, தவறாக அதிக பளுவான வேலை கொடுக்கப்பட்டாலும், அது சீரான வேகத்தை பராமரிக்கிறது. முற்றிலும் பாதுகாப்புடன் அது இயங்கும்போது, மூடி திறந்து கொண்டால், அதே நொடியில் மோட்டார் தானாக நிறுத்திக்கொள்ளும்.

உண்மையிலேயே அன்றாட உபயோகத்திற்காக உருவாக்கப்பட்ட ஃபுட் ப்ராஸஸர் இது. கட்டுறுதி மிக்கது, உங்கள் வேலையாள் இதை கரடு முரடாக கையாண்டாலும் கூட, அதைத் தாங்கக் கூடியது.

ஆகவே, ஸுமீத் SP-16க்கு அன்றாடம் கடுமையான வேலை செய்யும் தண்டனை அளியுங்கள். இதில், நீங்கள் எத்தகைய வேலையையும் சுமத்தலாம் — எதையும் விட.

உங்கள் விருப்பத் தேர்வு: காரட், ஆப்பிள், அன்னாசி போன்ற பழங்களைப் பிழிவதற்கான V-19 சென்ட்ரிஃப்யூகல் ஜூஸர் கிடைக்கிறது.

ஸுமீத்®


இலவசமாக நேரில் நிரூபித்துக் காட்டுவதை காணுங்கள்

SP-16 எலக்ட்ரானிக்

கடுமையான சமையல் வேலைகளைச் செய்திட கட்டுறுதியுடன் உருவாக்கப்பட்டது.

O&M/6819 TAM

கோலத்திலோ,
எம்பிராய்டரியிலேயோ
பயன்படுத்தலாமே!



நவராத்திரிக்குக்

கூ
ல
டி
சை
ள்
க
ள்



— கே. மாலதி குசேலன்.


லைம்
ஸின்த்தால்
Godrej
CINTHOL
THE LIME FRESH DEODORANT SOAP
LIME
அனைத்திலும் புத்துணர்ச்சிமிக்க லைம் சோப்
அனைத்திலும் உன்னதமான லைம் சோப்
துர்நாற்றம் அகற்றும் ஒரே லைம் சோப்

வீட்டில் கொலு வைப்பவர்கள் அனைவர் வீட்டிலும் அநேகமாக தசாவதார பொம்மைகள் இருக்கும். அவற்றை வரிசைக் கிரமமாக — மச்சாவதாரத்திலிருந்து கல்கி அவதாரம் வரை — ஒரு படியில் வைப்பது வழக்கம். இந்த தசாவதாரத்தின் வரிசையைப் பார்த்தால் ஒரு பளிச்சிடும் உண்மை தெரிய வருகிறது.

முதலில் கடலில் வீழ்ந்த நான்கு வேதங்களைக் காப்பதற்காக எடுத்த மச்சாவதாரம். அதாவது மீன் — நீரில் வாழும் உயிரினம்.

அடுத்து திருப்பாற்கடலை தேவ, அசுரர்கள் மேரு மலையைக் கொண்டு கடையும் போது அம் மலையைத் தாங்குவதற்காகத் திருமால் எடுத்த கூர்மாவதாரம். அதாவது ஆமை— நிலத்திலும், நீரிலும் வசிக்கக்கூடிய ஒரு உயிரினம்.

மூன்றாவதாக விஸ்வரூபம் எடுத்த சிவபெருமானின் அடி காண பூமியைத் தோண்டுவதற்குத் தேவைப்பட்ட வராக அவதாரம். அதாவது பன்றி — சேற்றில் வசிக்கும் மிருகம்.

அடுத்தது தன் பக்தன் பிரகலாதனின் நம்பிக்கை பொய்க்காதிருக்க தூணிலிருந்து வெளிப்பட்ட நரசிம்ம அவதாரம். பாதி மிருகம் — பாதி மனிதன் என்ற கூட்டு உருவம் இது.

ஐந்தாவதாக மகாபலியின் கர்வம் அடக்க, மூவடி அளக்க எடுத்த வாமன அவதாரம். மனிதன்தான்; ஆனால் முழு வளர்ச்சி இல்லாத சிறு உருவம்.

தந்தையின் ஆணையை ஏற்று தாயின் சிரம் அறுத்த பரசுராமன் அவதாரம் அடுத்தது. பிற்காலத்தில் எண்ணற்ற அரசர்களின் சிரம் கொய்தவர். ரௌத்ரம் என்னும் மிருக குணம் அதிகம் கொண்ட மனிதன்.

ராமன், பலராமன் இருவரும் மனிதராகப் பிறந்து மனிதராகவே வாழ்ந்து காட்டியவர்கள்.

மனித நிலையிலிருந்து மேம்பட்டு இவ்வுலகிலேயே தன் தெய்வீக சக்தியைக் காட்டிய அவதாரம் கிருஷ்ணாவதாரம். இதற்கு ஆதாரம் வாயைத் திறந்து யசோதைக்கு உலகைக் காட்டியது. மற்றும் போர்க்களத்தில் எடுத்த விஸ்வரூபம்; அளித்த கீதோபதேசம் ஆகியவை.

இறுதியாக, நிலை மறந்தவரும், நெறி இழந்தவரும் உண்மை உணர, தீமைகளை அழிக்க, தன் முழு சக்தியையும் வெளிப்படுத்தி காட்டாற்று வெள்ளமெனக் கடுகி வருவது கல்கி அவதாரம்.

இப்படி நீர்வாழ் பிராணியாய், நிலம் வாழ் மிருகமாய், உயர்ந்து விட்ட மனிதனாய், உச்சத்தை எட்டிய தெய்வமாய் வரிசையில் வரும் அவதாரங்கள் ஒரு புறம் டார்வினின் பரிணாம வளர்ச்சியை நினைவுபடுத்துகிறது என்றால் மறுபுறம் 'புல்லாகி, புழுவாகி, பூச்சியாகி...' எனச் சொல்லப்படும் இந்து மதம் குறிப்பிடும் ஏழு பிறவிகளையும் ஞாபகப்படுத்துகிறது இல்லையா?


மேற்கூறிய வகையில்தான் தசாவதார பொம்மைகளை நாம் வைக்கிறோம். அதுபோல் பல்வேறு பொம்மைகளை எந்தெந்த படிகளில் எப்படி வைப்பது என்ற நியதி இருக்கிறதா? விசாரித்துப் பார்த்ததில் இதற்கான ஆகம விதிகளோ, சாஸ்திரங்களோ இருப்பதாகத் தெரியவில்லை.

ஆனாலும் நம்மையறியாமலேயே படிகளில் பொம்மைகளை வைக்கும் போது சில விதிகளைப் பின்பற்றுகின்றோம். யாராவது கடைக்காரர் பொம்மையை மேல் படியில் வைப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? அல்லது தெய்வ பொம்மைகளில் சிலவற்றையாவது மேல் படியில் வைக்காதிருப்பதை கவனித்திருப்பீர்களா?

கோயில் படிகளுக்குப் பின்னணி இருக்கக்கூடும். அறுபது வருடங்களைக் குறிக்கும் வகையில் சுவாமிமலையில் அறுபது படிக்கட்டுகளும், வருடத்தின் நாட்களைக் குறிக்கும் வகையில் திருத்தணியில் 365 படிகளும்

நவராத்திரியும் தசாவதாரமும்





அமைக்கப்பட்டன என்பர். வீட்டில் அமைக்கப்படும் கொலுப் படிகள் இவ்வளவு எண்ணிக்கையில்தான் இருக்க வேண்டுமென்று எந்த நூலும் அறுதியிட்டுச் சொல்லக் காணோம். ஆனாலும் பொதுவாக ஒற்றைப் படை எண்கள் மங்கலத்தைக் குறிப்பவை என்று கருதப்படுவதால் 3, 5, 7 எண்ணிக்கைகளில் கொலுப்படிகளை அமைப்பது வழக்கம்.

நவராத்திரி நாயகிகளான துர்கை, லட்சுமி, சரஸ்வதி ஆகியோரது பொம்மைகளை மேல் படியில் வைப்பது மரபு.

உயிரற்ற பொருட்களை சித்திரிக்கும் (பிளாஸ்டிக் பொம்மைகள் மற்றும் மெழுகினால் செய்யப்படும் பழ வகைகள், வீட்டு வடிவங்கள் போன்ற) பொம்மைகளை கீழ்த் தட்டில் வைக்கலாம்.

பறவைகள், மிருகங்கள்;

மனிதர்கள் (விவசாயி, பாம்பாட்டி போன்ற வெவ்வேறு தொழில் செய்பவர்கள், வெவ்வேறு பகுதியைச் சேர்ந்த மக்கள்);

தெய்வ அருள் பெற்ற தொண்டர்கள் (சங்கர், ராமானுஜர், மத்வர், நாயன்மார், ஆழ்வார்);

தெய்வீக அவதாரங்கள் (ராமர், சீதை, கண்ணன், ராதை);

தெய்வங்கள்;

ஆக பொம்மைகளை அந்த வரிசையில் கீழ்ப்படியிலிருந்து மேல் படியில் அடுக்கினால் அதில் ஒரு பொருள் (லாஜிக்) இருக்கும். அதாவது கீழ்ப்படிய வேண்டிய நிலையிலுள்ளவர்களை கீழ்ப்படிகளிலும், மேற்குறிப்பிட்டவர்களை நல்வழிப்படுத்தும் சக்திகளை மேல் படிகளிலும் வைக்கலாம்.

மேலே குறிப்பிட்டவை ஒரு கண்ணோட்டத்தின் விளைவே தவிர இறுதியான தீர்ப்பு அல்ல. பொம்மைகளின் அளவைப் பொறுத்தும், படிகளின் தாங்கும் சக்தியைப் பொறுத்தும் அது ஓரளவு மாறுபடலாம்.

பொம்மைகளை வைக்கும் போது நாம் நடைமுறை வழக்கங்களைச் செயல்படுத்தலாம். உதாரணமாக, கணவன், மனைவி பொம்மைகளை வைக்கும் போது கணவன் பொம்மைக்கு வலப்புறம் மனைவி பொம்மையை வைக்கலாம். (மனைவிக்கு இடம் கொடுக்காதே என்று கிண்டலாகச் சொல்வார்கள்).

எந்தப் படிகளில் எந்த பொம்மைகளை வைக்கிறோம் என்பதை விட மிக முக்கியமான விஷயம் ஒன்று உண்டு. நவராத்திரி என்பது முப்பெரும் தேவியரின் முக்கியமான விழா. அந்த நாட்களில் இந்த மூன்று சக்தி வடிவங்களையும் மனப் பூர்வமாகத் தொழுவது முக்கியம். மங்கையருக்கிடையே நல்லுறவுப் பாலத்தை ஏற்படுத்தும் இவ்விழாவில் சமுதாய நோக்கு, மகளிரிடையே மறைந்துள்ள இசை, நடனம், சமையல், கோலம், அலங்காரம் ஆகிய பல்வேறு கலைத் திறமைகளை வெளிப்படுத்தும் தன்மை ஆகியவற்றுக்கு வழிவகுக்கும் இந்நாட்களில் பக்தியையும் கலப்பது நலம்.

படிகளின் தாத்பரியங்களைப் புரிந்து கொள்ள முயற்சிப்பது நல்லது என்றால், பக்தியை மனத்தில் தேக்கி படிப்படியாய் மனதினை மேல்படிக்கு தெய்வ நிலைக்கு கொண்டு வருதல் அதனிலும் நல்லது. இது தான் நவராத்திரியின் நோக்கமும் கூட!

— ஜி. எஸ். எஸ்.



அதே பல்லவி

கேயெஸ்

மணி எட்டு. ஸ்கூலுக்கு நேரமாச்சு. சீப்பு எடுத்துண்டு தலைவாரிக்க வா. டெய்லி இதே பாட்டு பாடணுமா'' சமையலறையில் இருந்து என் அம்மாவின் குரல். இந்த அம்மாவுக்கு பெரிய்ய 'இது'ன்னு நினைப்பு. எதுவும் நேரப்படி நடக்கணும். ஐந்து நிமிடம் முன்னே பின்னே ஆனா-அரை மணி நேரம் கத்தல்.

''மசமசன்னு நிக்காதே. சின்னக் குழந்தைங்கன்னா சுறுசுறுப்பா இருக்காதோ? நாங்க எல்லாம் குழந்தையாய் இருக்கும் போது பம்பரமா சுத்துவோம். உங்களுக்கு கண்ணைத் திறக்கவே ஏழு மணி ஆகிறது.''

ஒவ்வொன்றுக்கும் புராணக் கதை உதாரணத்தை ஆரம்பித்தாகி விடும். ஆனாலும் இந்த அம்மா மாதிரி ஊருக்கு முன்னாடி ரெடியாகி நிக்க யாரால் முடியும்? சாயந்திரம் ஏழு மணிக்கு ரெயில் என்றால் காலை பத்து மணிக்கெல்லாம் வீட்டைப் பூட்டு என்பார்.

பூட்டிய வீட்டை எல்லோரையும் விட்டு இழுத்துப் பார்க்கச் சொல்லும் முன் ஜாக்கிரதை. தன்னைப் போலவே எல்லோரும் கெட்டிக்காரியாக இருக்க வேண்டும் என்ற அறிவுரை வேறு.

"இந்தக் கணக்கு தப்பா இருக்கே. வா நான் சொல்லித் தருகிறேன்" ஏதோ தப்பான அந்தக் கணக்கை மட்டும் சொல்லிக் கொடுத்தால் போறாதோ. மொத்த வாய்ப்பாடுகளையும் கேட்டு மற்ற கணக்குகளையெல்லாம் சரிபார்த்து, மூக்குக் கண்ணாடி மூலமாக என்னை முறைத்து, அப்பப்போ தலையில் குட்டி அரை நாள் பிராணனை வாங்கி விடுவார். என் நல்ல



காலம் அவருக்கு சயன்ஸ் அவ்வளவாக பிடித்தமில்லை. வார விடுமுறை குழந்தைகளுக்கு ஆவலாயிருக்கும். ஆனால் எனக்கோ வெள்ளிக் கிழமையே உதற ஆரம்பிக்கும். எண்ணெய் தேய்த்துக் குளி.

இரண்டு பக்கம் கையெழுத்து எழுது. பாட்டு கிளாஸ் போ என்று அடுத்தடுத்து கட்டளைகள்.

அம்மாவின் சமையல் லீவு நாட்களில் தான் பறக்கும். மொறுமொறுவென்ற உருளைக் கிழங்கு ரோஸ்டும், மூக்கைத் துளைக்கும் முருங்கை வெங்காய சாம்பாரும்.... அம்மா கைக்கு மோதிரம்தான் செய்து போடணும். சாக்லேட், பன் பட்டர் ஜாம் போன்றவை அன்றைய படிப்பின் திறமையைப் பொறுத்து எனக்கு அளிக்கப்படும் வெகுமதிகள்.

மாலை இரண்டு மணி நேர சுதந்திரம் எனக்கு உண்டு. எப்படிப்பட்ட சுதந்திரம்! குழந்தைகளுக்கான புத்தகங்களைப் படிக்கலாம். அதிலும் எல்லாவற்றையும் நான் படித்தேனா, அதிலுள்ள பொது அறிவு வினாக்களுக்கு விடை சொல்லத் தெரிகின்றதா என்ற சோதனைகளுக்குட்பட்ட சுதந்திரம். மற்ற புத்தகங்களில் ஜோக்ஸ் மட்டுமே படிக்கலாம். மிலிடரி ரூல்.

"என் கிளாஸ் அநுத்தமா நிறைய கதைப் புத்தகம் படிக்கிறாள். அவள் அம்மா உன்னை மாதிரி சும்மா மிரட்டுவதில்லை" மெதுவாக முனகினேன் நான்.

"அநுத்தமா போல் நீயும் கணக்கில் பர்ஸ்ட் வா பிறகு பார்க்கலாம்."

எல்லாமே என் படிப்புகளையும், மார்க்குகளையும் சுற்றிச் சுற்றி வந்தன. "இன்னிக்கு புதன் கிழமையாச்சே. ஜாமெண்டரி நோட்டுக் எடுத்துக் கொண்டு போ. சயன்ஸ் நோட்டில் படம் வரையச் சொன்னாயே. வரைந்து விட்டேன். டீச்சரிடம் கொடு" எப்படித் தான் அம்மாவுக்கு இதெல்லாம் ஞாபகம் இருக்கோ. ஆக மொத்தம் பள்ளியும் உலகமும் எனக்கு எளிதாகவே இருந்தன.

பள்ளி சென்று மறக்காமல் நோட்டைக் கொடுத்தேன். மதிய இடைவேளை. சயன்ஸ் டீச்சர் என்னை அழைத்தார்கள். அம்மா தான் படம் வரைஞ்சாச்சே. டீச்சர் ஏன் கூப்பிடுகிறார்கள்? சென்றேன். என் நோட்டை பிரித்துக் காண்பித்தார் டீச்சர்.

ராட்சஷ அளவாக வரையப்பட்டிருந்த ஒரு குண்டு பிப்பெட்! "என்ன இது ஒரு தண்ணீர்த் தொட்டி போல் வரைந்திருக்கிறாய்" பக்கத்தில் இருந்தவர்கள் சிரிக்க எனக்கு அழுகை வந்தது.

"அவ கிடக்கிறா. எல்லோர் முன்னாடியும் அவ உன்னைத் திட்டினாளா, தெளிவாக இருக்கட்டுமே என்று சற்று பெரிதாகப் போட்டேன். இவளுக்கென்ன வந்ததாம்."

என் அழுகை கண்டு பொறுக்காத அம்மாவின் ஆறுதல் மொழிகள். இதன் பிறகு ஒவ்வொரு படமும் பேப்பரில் வரைந்து என்னிடம் ஓ.கே. வாங்கிய பிறகே நோட்டில் வரையப்பட்டது. எவ்வளவு முயன்றும் எனக்கு ஒரு கோழி முட்டை வரையக் கூட ஒழுங்காய் வருவதில்லை.

''அம்மா இனிமே காலேஜுக்கு இந்த எல். ஐ. ஸி. காரியரில் சாப்பாடு அனுப்பாதே.''

''ஏன்?''

''எல்லோரும் என்னை 'இருபத்தஞ்சு ரூபாய் ஸ்பெஷல் சாப்பாடு'ன்னு கூப்பிடறாங்க!''

''வாளிப்பா இருந்தா இதுங்க கண்ணை உறுத்தறதாக்கும். வயசு குழந்தைங்க நல்லா சாப்பிட வேண்டாமோ.''

அன்று மாலையே ஸ்கிப்பிங் கயிறுடன் என் அம்மா. ''குண்டாயிருக்கேன்னு கண்டவா பேச்சைக் கேட்டுச் சாப்பிடாம இருக்காதே. தினம் இருநூறு தடவை ஸ்கிப்பிங் குதி. சரியாகி விடும்.''

அம்மா நீ அந்தக் காலமா இந்தக் காலமா புரிஞ்சுக்கவே முடியலையே.

''காலேஜில் பாட்டுப் போட்டி. நானும் சேர்ந்திருக்கேன்'' எனத் தப்பித் தவறி ஒரு நாள் சொல்லி விட்டேன்.

''வா. நான் நல்லா சொல்லித் தரேன். அந்தக் காலத்துப் பாட்டுப் போல் வருமா? காற்றினிலே வரும் கீதம். எம். எஸ். பாட்டு பாடு. சினிமாப் பாட்டாகவும் இருக்கும்.''

பத்து நாட்கள் காலையும் மாலையும் எனக்கு அசுர சாதனை. ''மூக்காலே பாடாதே. குரல் என்ன இப்படி நடுங்குகிறது? அழுத்தமா இருக்க வேண்டாமோ.'' அம்மாக்கு மனத்தில் எம். எஸ். விஸ்வநாதன் என்று நினைப்பு. கையை மேலும் கீழும் உசத்தி நீட்டி என்னைப் படுத்தி விட்டார்.

போட்டி நடக்கும் பொழுது கதவின் மூலையில் நின்று எனக்குத் தெரியாமல் நின்று கவனிக்கும் அம்மா.

''தலைமுடி இப்படி வேரோடு கழல்கிறதே. தொம் தொம்மென்று வெய்யிலில் குதிக்கிறாயா!'' 'நங்'கென்று என் மண்டையில் ஒரு குட்டு விழுந்தது. அரை லிட்டர் தேங்காய் எண்ணெயைத் தலை, முகம் எல்லாம் அப்பி தடவி தழைய இழுத்து வாரி ஒரு இரட்டைப் பின்னல் போட்டாகி விட்டது. புயலே அடித்தாலும் ஒரு முடி கூட அசைய முடியாது. கழுத்தில் எண்ணெய்ப் பிசுபிசுத்தது.

எங்கம்மாவை யாரும் ரொம்ப கர்நாடகமாக நினைத்து விடாதீர்கள். அந்தக் காலத்து எம். ஏ. ஆக்கும். கல்யாணம் பண்ணிக் கொண்டும் மேலே படித்த பாரதியாரின் புதுமைப் பெண். பெயிண்டிங், பாட்டு, விளையாட்டு இப்படி எல்லாம் தெரிந்த சகலகலாவல்லி. இதனால் ஏற்படும் கஷ்டங்களை நானே அனுபவிக்க வேண்டும். பேப்பரில் விளம்பரப்படுத்தப்படும் எல்லா வகுப்புகளிலும் சென்று சேர்ந்து விடுவார். மேக்—அப் வகுப்பு சென்று வந்து தன் திறமையைக் காட்ட எனக்கு மேக்—அப் போட்டு ஃபோட்டோ எடுத்தார். கதகளி ஆடுபவள் போல் ஃபோட்டோவில் இருந்ததால் என்னை எனக்கே அடையாளம் தெரியவில்லை. இதனால் அந்த ஃபோட்டோக்காரருக்கும் அவருடைய ஓட்டை(?!) காமிராவுக்கும் ஒரு வாரம் அர்ச்சனை.

கடைசி வருட பரீட்சை. அப்பா பக்க, அம்மா பக்க குல தெய்வங்களுக்கு மஞ்சள் துணியில் காசு முடிந்தாயிற்று. பக்கத்துக் கோயில் பிள்ளையார் அதிகமாக கவனிக்கப்பட்டார். முதல் நாள் பரீட்சை ரொம்ப சுலபம். அம்மா பக்கத்து வீட்டு அம்மாவி



நெய் முறுக்கு:

இடியாப்பத்திற்கு மாவு பிசைந்தேன். பக்குவக் கோளாறா, அரிசி கோளாறா என நான் அறியேன்! இடியாப்பம், படியிலிருந்து கீழே இறங்கினால்தானே வரும். பிசைந்த அத்தனை மாவையும் என்ன செய்ய? உளுத்தம் பொடியோ, கடலைப் பொடியோ கையில் இல்லை. 100 கிராம் வெண்ணெயை அள்ளி மாவில் போட்டுப் பிசைந்தேன். சட்டியில் எண்ணெய் வைத்து, சிறிய, சிறிய முள் முறுக்காக பிழிந்து எடுத்தேன். அற்புதமான நெய் முறுக்கு, வாயில் போட்டால் கரைந்தது. சாப்பிட்டவர்கள் அனைவரும் எப்படிச் செய்தாய் எனக் கேட்டனர். மாவும் நஷ்டமாகாமல், புதிய முறை முறுக்கும் ரெடி!

— கமலா.



“ஒவ்வொரு ஸ்பூனிலும் ஒப்பற்ற சக்தி”

உங்களது கடுமையான உழைப்புக்கும், மூளையின் வேலைக்கும் செறிவான ஊட்டமும் வலிமையுமே அடிப்படை. வெறும் நெல்லிக்காய் லேகியங்களும், சாதாரண டானிக்குகளும் இவற்றை நிறைவாகத் தரமுடியாது.

ஒப்பற்ற சக்தியைத் தினந்தோறும் உங்களுக்கு அளிக்கக் கூடிய அரிய மூலிகை டானிக் கிரௌன் காய கல்பம். இது பல்லாண்டு ஆராய்ச்சிக்குப் பின், சித்த வைத்திய முறையில் தயாரிக்கப்படும் சிறந்த மூலிகை டானிக்.

கிரௌன் காயகல்பம் ரெகுலர்:
கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்ப மூலிகைகளான வல்லாரை, தூதுவளை, கரிசலாங்கண்ணி, பொற்சீந்தில், கடுக்காய், தான்றிக்காய், அஸ்வகந்தா, நெல்லிக்கனி ஆகியவற்றுடன் சுத்தமான தேன் மற்றும் முறையாகப் பாடம் செய்யப்பட்ட செந்தூரம், துத்தநாக பஸ்பங்களும் சேர்த்து இயற்கை முறையில் விசேஷமாகத் தயாரிக்கப் படுகிறது.

இது இரத்தத்தைச் சுத்தமாக்கி, உணவு எளிதில் ஜீரணம் ஆகவும், ஊட்டச் சத்துக்கள் இரத்தத்தில் சேரவும் உதவுகிறது. குடலைச் சுத்தம் செய்து வாயுக்கோளாறுகளை நிவர்த்தி செய்கிறது.

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நிறைய சக்தியும் ஊட்டமும் அளிக்க இரும்புச்சத்து நிறைந்தது.

கிரௌன் காயகல்பம் ஸ்பெஷல்:
கல்ப மூலிகைகள், தேன் ஆகியவற்றுடன் விசேஷ முறையில் பாடம் செய்யப்பட்ட தங்க பஸ்பம், வெள்ளி பஸ்பம், செந்தூரம், துத்த நாகம் உட்பட நவலோக பஸ்பங்கள் யாவும் சேர்க்கப்பட்டுள்ளன.

இதில் பல இயற்கை வைட்டமின்களும், தாது உப்புகளும் நிறைந்திருப்பதால் அதிகப்படியான வலிமையும் சுறுசுறுப்பும் எப்போதும் உங்களிடம் நிறைந்திருக்கும்.

ரெகுலர்	ஸ்பெஷல்
இரும்புச்சத்து நிறைந்தது	தங்க பஸ்பம் அடங்கியது
160 கி: ரூ. 18	150 கி: ரூ. 35
500 கி: ரூ. 54	500 கி: ரூ. 105
(வரிகள் உட்பட)	(வரிகள் உட்பட)



தயாரிப்பாளர்:
கிரௌன் ஹெர்பல் ப்ராடக்ட்ஸ், சென்னை-2.

CROWN

கிரௌன் காயகல்பம்

ஓயாமல் உழைத்திட ஒப்பற்ற சக்தி.

Insight 739

◦ பம்பாய் விற்பனையாளர்: லக்ஷ்மி ஸ்டோர்ஸ், தாராவி மெயின் ரோடு, தாராவி, பம்பாய் — 17.
◦ பெங்களூர் விற்பனையாளர்: ஜெயின் பிரதர்ஸ், 146, O. K. ரோடு, கும்பார்பேட், பெங்களூர் — 2.

எல்லா மருந்துக் கடைகளிலும் மற்றும் ஜெனரல் ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

டம் பேசிக் கொண்டிருந்தாள். 'என் பொண்ணு குழந்தையில் இருந்தே படுசுட்டி. பரீட்சையெல்லாம் ஊதித் தள்ளிடுவா' மூன்றாம் நாள் கேள்வித்தாள் சற்றுக் கடினம். கேள்வித்தாள் தயாரித்தவர் மூன்று மாதம் வரையிலும் என் அம்மா 'வாயில்' அகப்பட்டு கடிபட்டார்.

படிப்பு முடிந்து உள்ளூரிலேயே கல்யாணம். நல்ல ஒரு சிநேகிதியைப் பிரியும் உணர்வு. என் சமையலில் குறை சொல்ல, கோலம் புள்ளி வைத்து கொடுக்க, நினைத்த போதெல்லாம் வம்புக்கிழுக்க ஒரு நல்ல துணை இல்லாதது போல் ஓர் தவிப்பு.

'உனக்கு பிடிக்குமேன்னு இட்லி பொடி செய்தேன். கடலை உருண்டை செய்தேன்' என்று இன்னமும் என்னைக் குழந்தையாக நினைத்து ஓடி வரும் அம்மா, ஓர் நாள் விருந்தாளிகளுக்குப் பூரி செய்யும் போது வந்தார். "அம்மாடி... இவ்வளவு எண்ணெய் வைத்து பூரி பண்ணினா குடும்பம் எப்படி கட்டுப்படி ஆகும். அடுப்பை இப்படி திகுதிகுவென்று எரிய விடுவார்களோ. சிறுகக் கட்டி பெருக வாழணும். இந்த மாதிரி வேலை செய்தால் என் மாமியார் கையை ஒடித்து விறகடுப்பில் வைத்து விடுவார். ஏதோ உன் மாமியார் சாது."

"அதற்குப் பதிலாக நீ இருக்கிறாயே" மனத்தில் நினைத்தேன் நான்.


'லேசாக ஜுரம் வந்திருந்த என் கடைக் குட்டியை தூக்கிக் கொண்டார். "குழந்தையை நல்லா வளர்க்க உங்களுக்குப் பொறுப்பேயில்லை. எனக்கும் விடு வெறிச் சோன்னு இருக்கு. இவளை நான் வச்சிக்கறேன். அப்பப்போ வந்து பார்த்துப் போ."

அதன் பிறகு எல்லாமே தலைகீழாக மாறியது. பேத்தி வீணா அதி மேதாவியாகவும் மகளாகிய நான் சமர்த்துக் குறைவாகவும் தோன்ற ஆரம்பித்து விட்டது. இட்லி பொடி, கடலை உருண்டை வருகையும் சற்று குறைந்து விட்டது.

பாட்டிக்குப் பேத்திக்குப் பேப்பர் கப்பல் செய்வதிலும், ரெயில் விடுவதிலும், வருவோர் போவோரிடம் பேத்தியின் நர்ஸரி ரைம்ஸ் சொல்லும் திறமையைப் பற்றிப் பீற்றி அவர்களைப் போர் அடிப்பதிலும் செலவாயிற்று. ஆனால் காலப்போக்கில் சில மாறுதல்கள். வழிய வழிய தலையில் எண்ணெய் தடவுவதில்லை. புஸுபுஸு வென்று தலைமுடி இருப்பது மார்டனாம். சனி, ஞாயிறு டீ.வி. முன்னாலேயே தவம் செய்யும் என் பெண்ணை மிரட்ட முடியவில்லை. மாறாக "கண்ணா, இந்தப் பாடம் முடித்து சினிமா பார்க்கலாம்மா' என்ற கெஞ்சல், கொஞ்சல். மற்றபடி அதே பழைய பல்லவி ஆரம்பமாகி விட்டது.

"மணி எட்டு. சீப்பு கொண்டா. டெய்லி சொல்லணுமா."

INTRODUCING



பலவகைப்
பயன்
கொண்ட
ஒற்றை
அணி
பேக்

SNUGGY

உபயோகித்து ஒதுக்கத்தக்க **உயர்த்தி** டயாபர்

தனியாகவும் கிடைப்பவை: 5 அணி, 10 அணி, 20 அணி பேக்குகள்.



வசந்தா:



பவானி



ஜெயந்தி

தங்களால் மறக்க முடியாத இரவுகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்கள் ஒன்பது பெண்மணிகள்.

திருமதி சந்திரா:

"சில வருடங்களுக்கு முன் என் நாத்தனாருக்குக் கல்யாணம் நிச்சயமானது. ஒரே சொத்தான வீட்டை விற்றுத்தான் கல்யாணத்தை நடத்த வேண்டிய நிலைமை. ஆனால் அவசரம் என்ற போது வீடு சரியான விலைக்கு விலை போகவில்லை. கல்யாணம் நல்லபடி நடந்து முடிய வேண்டுமே என்று அனைவரும் கவலைப்பட்டுக் கொண்டிருந்த போது வேறு ஒரு அதிர்ச்சி. எங்கள் கணவரின் கம்பெனி நஷ்டத்தில் ஓடியதால் அதில் நிறைய ஆட்குறைப்பு செய்யப் போவதாய் தகவல் வந்தது. 'இன்றுதான் யார் யாரை வேலையிலிருந்து நீக்குகிறார்கள் என்று தெரியும்' என்று சொல்லிவிட்டு ஒரு நாள் இவர் கம்பெனிக்குப் போனார். நெஞ்சம் பதைபதைக்க மாலையில் காத்திருந்தேன். இரவு ஒன்பது மணிக்கு வந்தார். முகம் வாடியிருந்தது. வாயைத் திறந்து எதையும் கேட்க எனக்குத் திராணி இல்லை. ஒன்றும் பேசாமலேயே சாப்பிட்டு விட்டுத் தூங்கியும் விட்டார். 'இவரை வேலையை விட்டு எடுத்து விட்டார்களோ? அதனால்தான் இந்த மௌனமோ? தூங்குகிறாரா, மயக்கமா?' என்று ஆயிரம் கேள்விகள் மனதைப் பிறாண்ட அன்று இரவு தூக்கமே வரவில்லை. மறுநாள் காலை 'நல்ல வேளையாக என்னை வேலையிலிருந்து நீக்கவில்லை. அப்படியிருந்தால் நான் நேற்றே உன்னிடம் சொல்லியிருக்க மாட்டேனா?'' என்றார் என் கணவர் ரொம்ப சாதாரணமாக! ஆனால் இரவெல்லாம் நான் பட்டபாடு. அன்றைய இரவை என்னால் மறக்கவே முடியாது.''

திருமதி வசந்தா:

"சென்ற ஜூன் மாதம் எனது சொந்த ஊராகிய நெல்லைக்குச் செல்ல நெல்லை எக்ஸ்பிரஸில் இரண்டாம் வகுப்பில் பயணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது என் இருக்கைக்குப் பக்கத்தில் ஒரு நிறைமாத கர்ப்பிணியும் பிரசவத்திற்காகத் தனியாகத் தனது பிறந்த வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தாள். இரவு சுமார் 11 மணியளவில் அவளுக்குத் திடீரென்று பிரசவ வலி ஆரம்பித்து விட்டது. நானும் வேறு ஒரு பெண்மணியும், அந்தக் கம்பார்ட்மெண்டில் இருந்த மற்ற பிரயாணிகளை வேறு பெட்டிக்கு அனுப்பி விட்டு அந்தப் பெண்ணின் அருகில் இருந்தோம். சுமார் நான்கு மணியளவில் அந்தப் பெண்ணுக்கு ரயிலிலேயே சுகப் பிரசவம் ஆகி ஆண் குழந்தை பிறந்தது. அதற்குள் வலியிலும், பயத்திலும் அந்தப் பெண் கதறிய வார்த்தைகளை எழுத்தில்

நினைவை விட்டு நீங்காத




கீதா



மைதிலி



பிச்சம்மா



சந்திரா



சரஸ்வதி



ஜாய்ஸ்: மேரி மார்க்கரெட்

வடிக்க முடியாது. ரயிலில் குழந்தை பிறக்கும் சம்பவம் நான் கேள்விப்பட்ட ஒன்றுதான் என்றாலும், நம்மெதிரிலேயே அது நடக்கும் போது அதன் தாக்கமே வேறுதான். தினமும் தூங்கப் போவதற்கு முன் அந்த ரயில் அனுபவம் என் நினைவில் தவறாமல் வந்து விட்டுப் போகும்.''

திருமதி பவானி:

''சுவாமி மலைக்கு ஒரு திருமணத்திற்காகச் சென்றிருந்த எங்கள் குடும்பம் பாண்டிச்சேரிக்குச் சென்றது. அங்கே மழை கொட்டு கொட்டென்று கொட்டியது. அதைப் பொருட்படுத்தாது அசட்டுத்தனமாகக் காரில் சென்னைக்குக் கிளம்பி விட்டோம். வழியெல்லாம் வெள்ளம், நடு வழியில் கார் நின்று விட்டது. சுற்று முற்றும் யாருமில்லை. காருக்குள் நின்ற நிலையிலேயே எங்கள் இடுப்பு வரை தண்ணீர் வந்து விட்டது. மழை மேலும் மேலும் வலுத்துக் கொண்டிருந்தது. என் பெண்ணும், பிள்ளையும் அழ ஆரம்பிக்க, என் கணவரோ செயலிழந்து போனார். அப்போது இரவு 11.30 மணியிருக்கும். ஒரு வாலிபன் வந்து காரை ரிப்பேர் செய்து கொடுத்து விட்டுக் கிளம்பினான். அவன் பெயரைக் கேட்டேன். 'கோவிந்தன்' என்றான். என் மனக் கண்ணில் திருப்பதிதான் தோன்றியது.''

நவ'ராத்திரி'கள்

திருமதி சரஸ்வதி:

''அன்று திடீரென்று பல்லவன் ஊழியர்கள் ஸ்டிரைக் செய்தனர். பாலவாக்கத்தில் வேலை செய்யும் என் நாத்தனார் எப்படி வீட்டுக்கு வரப் போகிறாளென்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தோம். அவளது கம்பெனி டெலிஃபோன் அவுட் ஆஃப் ஆர்டர். ஒன்பது மணி வரை காத்திருந்த என் கணவர் தன் நண்பர் ஒருவரிடம் கெஞ்சி அவரது காரை எடுத்துக் கொண்டு பாலவாக்கத்துக்குப் போனார். இரவு 11.30 மணிக்கு என் நாத்தனார் தன் கம்பெனி ஜீப்பில் வந்து இறங்கினாள். ''பஸ் இல்லாததால் கம்பெனியிலேயே தங்கலாமென்று நாங்கள் ஏழு பெண்கள் முடிவு செய்தோம். அப்புறம் கம்பெனியே நாங்கள் வீடு செல்ல ஜீப்பைக் கொடுத்தது. கிளம்பும்போது அண்ணாவைப் பார்த்தேன். பின்னாலேயே வந்து கொண்டிருக்கிறார்'' என்றாள். இரவு ஒரு மணியாகியும் என் கணவரைக் காணோம். வழியில் சில கலாட்டாக்கள் வேறு நடப்பதாக நாத்தனார் சொல்ல எனக்கு வயிற்றைக் கலக்கியது. மூன்று மணிக்குக் கணவர் வந்தார். கார் வழியில் பங்க்சர் ஆகி விட்டதாம். அது சரியான தூங்கா ராத்திரி.''

திருமதி பிச்சம்மா:

''ஆபீஸ் வேலை பற்றியோ, ஆபீசுக்கு வந்து போவதிலுள்ள சிரமங்களைப் பற்றியோ இதுவரை ஒருமுறை கூட அலுத்துக் கொண்டதில்லை. வீட்டுப் பொருளாதார சூழ்நிலையால் வேலைக்குப் போவது இன்றியமையாதது என்று ஆகி விட்ட பிறகு, எல்லா லோன்களையும் வாங்கியாகி விட்டது என்ற பிறகு உழைப்பதற்கு மட்டும் அலுத்துக் கொள்வது என்ன நியாயம்? என்று கருதுபவள் நான். இரண்டு ஆண்டுகளுக்கு முன் தபால் துறையின் மாநில அளவிலான விருது எனக்குக் கிடைத்தது. 4.2.1988 அன்று டெல்லி சென்று தபால் துறை செயலர் கையினால் அந்தப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டேன். அன்று இரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. தொலைக்காட்சி, வானொலி, செய்தித் தாள்களில் என் பெயர் குறிப்பிடப்பட்டதால் ஏற்பட்ட மகிழ்ச்சி கலந்த கூச்சம், உண்மையான உழைப்புக்கு அங்கீகாரம் உண்டு என்பதனால் ஏற்பட்ட நிறைவு, குடத்திலிட்ட விளக்காய் இன்னும் சில சிறந்த ஊழியர்கள் எந்தப் பெருமையும் பெறாமல் இருக்கிறார்கள் என்ற சங்கடம் எல்லாமாகச் சேர்ந்து என்னை ஒரு உணர்ச்சிக் குவியலாக்கி விட்டது.''

திருமதி ஜெயந்தி:

''எனது நெருங்கிய உறவினர் தங்களது இரண்டு பையன்களுக்குத் திருப்பதியில் பூணூல் போட்டனர். வயதில் முதிர்ந்த என் பாட்டிக்குத் துணையாக நான் வீட்டில் தங்கியிருந்தேன். அன்று இரவு பத்து மணிக்கு ஒரு டெலிபோன் வந்தது. ''திருப்பதியில் உங்க சித்தப்பா ரொம்ப சுகவீனமாக இருந்தாராமே? உனக்கு ஏதாவது தகவல் வந்ததா?'' என்று தெரிந்த ஒருவர் போனில் கேட்கவும் எனக்கு பயமாகிப் போய் விட்டது. விவரம் கேட்ட போது சித்தப்பாவுக்குத் திருப்பதியில் ஹார்ட் அட்டாக்கில் உயிர் போய் விட்டதாகவும், அவரது உடலை அவரது வீடு உள்ள பெங்களூருக்கு எடுத்துப் போயிருக்கிறார்களா? அல்லது சென்னைக்கு எடுத்து வந்திருக்கிறார்களா, என்பதைத் தெரிந்து கொள்ளத்தான் நான் முதலில் பூடகமாகக் கேட்டதாகவும் சொல்லி போனை வைத்து விட்டார். இறந்து போன சித்தியின் கணவர் எங்கள் வீட்டிலேயே நிறைய வருடங்கள் வளர்ந்தவர். ஓவென்று அழ வேண்டும் போலிருந்தது. ஆனால் என்னையே பார்த்துக் கொண்டிருந்த பாட்டி ''போனிலே என்ன சேதி?'' என்று கேட்ட போது, தன் மாப்பிள்ளையின் இறப்பைக் கேள்விப்பட்டால் பாட்டிக்கு என்ன ஆகுமோ? மயக்கம் போட்டால் நான் நள்ளிரவில் தனியாளாக என்ன செய்வது? என்ற கேள்விகள் தோன்ற ''ஒன்றுமில்லை'' என்று சுருக்கமாகப் பதில் சொல்ல, அதை நம்பாத பாட்டி அன்று இரவு முழுவதும் என்னை விதவிதமான கேள்விகள் கேட்க, நான் மிகுந்த துக்கத்துடனும், மனப் போராட்டத்துடனும் அவற்றைச் சமாளிக்க நேர்ந்த அந்த இரவை என் வாழ்நாளில் மறக்கவே முடியாது.''

திருமதி கீதா:

''பதினெட்டு வருடங்களுக்கு முன் மத்திய அரசு நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த என் தந்தைக்கு உத்தியோக உயர்வு காரணமாக ஸ்ரீநகருக்கு மாற்றல் கிடைத்தது. சென்னையை விட்டு வேறெங்கும் போயிராத நான் என் பி.யு.சி. படிப்பைப் பாதியில் விட்டு விட்டு பெற்றோருடன் காஷ்மீருக்குக் கிளம்பினேன். இயற்கை எழிலை ரசித்துக் கொண்டே இரவு பத்து மணிக்கு ஸ்ரீநகர் பஸ் நிலையத்தை அடைந்தோம். அங்கிருந்த போர்ட்டர்களில் ஒருவர் எங்களது நான்கு டிரங்க் பெட்டிகளை ஒன்றன் மேல் ஒன்றாக டப்பாவை அடுக்குவது போல் தன் முதுகின் மேல் வைத்துக் கொண்டு அவற்றைப் பெரிய

கயிற்றில் கட்டிக் கொண்டு அநாயாசமாக எங்களுடன் நடந்தார். முதுகையே ட்ராலி யாக்கி வீடு வரை அந்த சுமையைக் கொண்டு வந்தவரின் உருவம்— அவரது ஏழ்மை நிலை, மற்றும் பளு தூக்கும் வலிமை ஆகியவை அன்று இரவு முழுவதும் என் நினைவை ஆக்கிரமித்தது. அன்று வரை உடலுழைப் பையே செய்திராமல் சோம்பல் பட்டுக் கிடந்த என் வாழ்க்கையில் ஒரு பெரும் மாற் றத்தை ஏற்படுத்தி விட்டார் அந்தப் போர்ட் டர்.''

திருமதி ஜாய்ஸ்மேரி மார்கரெட்:

''என் கணவர் கல்வஸ்ரீராம்பூர் என்னும் ஆந்திர கிராமத்தில் இருந்தார். ஒரு நாள் மாலை அவரைப் பார்க்க குழந்தைகளுடன் கிளம்பினேன். போத்கபள்ளி ரயில் நிலை யத்துக்கு 10 மணிக்கு வந்து (ரயில் லேட்டாக வந்தது) ஒரு கட்டை வண்டியை வாடகை பேசிக் கொண்டு கிளம்பினோம். கொஞ்ச தூரம் போனதும் திடீரென்று வண்டி தலை குப்புற சாய்ந்தது. பிறகுதான் புரிந்தது வண்டி ஒரு ஆற்றில் இறங்கி விட்டது என்று. ஆற்றில் தண்ணீர் இல்லை. வண்டிக்காரன் தலையில் காயம் என்று உட்கார்ந்து விட் டான். ''மாடுகளுக்கு இது பழகிய பாதை தான். இங்கே பேய் நடமாட்டம் இருக்குது. அதைப் பார்த்து மாடு பயந்து போயிருக்கும். அதுதான் குடை சாய்ந்துடுச்சு'' என்று வேறு அவன் சொல்ல என் மூச்சே நின்றது போலாகி விட்டது. இரவு சுமார் 12 மணிக்கு வண்டியைச் சரிசெய்து கிளம்பினார். திடீ ரென்று வண்டிக்கு இருபுறமும் தென்னை மர உயரத்தில் நெருப்புத் தூண்கள் போல் ஏதோ வண்டியுடன் தொடர்ந்து வந்தது. பகுத்தறிவுக்கு ஒவ்வாத இந்த பயங்கர சம்பவம் பலமுறை என் நினைவில் வந்து என்னைச் சில்லிடச் செய்ததுண்டு.''

திருமதி மைதிலி:

''எனக்கு அப்போது திருமணமாகி மூன்று வருடமாகியிருந்தது. அப்போது என் கணவருக்குத் திடீரென ஜுரம் வந்தது. டாக்டர் மஞ்சள் காமாலையா என்று டெஸ்ட் எடுத்துக் கொண்டு வரச் சொன் னார். லாப் டெஸ்டில் மஞ்சள் காமாலை இல்லையென்று கூறி விடவே, மலேரியா வாக இருக்கலாமென்று டாக்டர் அதற்குச் சிகிச்சை செய்தார். மேலும் ஒரு வாரத்தில் என் கணவரின் உடல் மெலிந்து, மஞ்சள் நிறமாகி, சாப்பாடு பிடிக்காமல் சோர்ந்து போனார். சந்தேகம் வந்து விஜயா மருத்துவ மனைக்குப் போனோம். மஞ்சள் காமாலை வந்து பத்து நாளாகியும் அதற்கு சிகிச்சை அளிக்காததுடன், ஆண்டிபயாடிக்ஸும் கொடுத்ததில் நோய் முற்றி விட்டது என்று சொல்லி, என் கணவருக்கு ட்ரிப்ஸ் ஏற்றி இரவு அசையாமல் படுத்திருங்கள் என்று கூறிச் சென்றார் டாக்டர். ஆனால் அதற்கு மாறாக இவர் வயிற்று வலி தாங்காமல் துடித்து உடலை மிகவும் அசைத்தார். படுக்கை வேறு பாதி கீழே வந்து விட்டது. வார்ட்பாயைக் கூப்பிட்டு சரிசெய்தேன். மீண்டும் மீண்டும் அதே நிலை. டாக்டரிடம் போய் வலியை நீக்க ஏதாவது ஊசி போடும் படிக் கூறினேன். அவர் மறுத்து விட்டார். அப்போது ஒரு வார்ட்பாய் நிலைமை புரியாமல் இதே நிலையில் இருந்த இரண்டு பேர் இறந்து விட்டார்கள் என்று கூறினான். ஒரு நர்ஸ் வேறு வந்து ''உனக்கு எப்போது திருமணம் நடந்தது? வேலைக்குப் போகி றாயா?'' என்றெல்லாம் கேட்டாள். அந்த இரவு நான் அடைந்த வேதனையை யாரும் அனுபவிக்க வேண்டாம். (இரண்டு மாத சிகிச்சைக்குப் பிறகு என் கணவர் குணமடைந்து வீடு திரும்பி விட்டார்).

— ஜி. எஸ். எஸ்.



அழகிய பூந்தொட்டிகள்

சமையல் எண்ணெய் பிளாஸ்டிக் பாட் டில்களில் வாங்கும் பொழுது ஒரு கிலோ பாட்டில்களை மேல் பாகத்தைச் சுமார் ஐந்து அங்குல அளவுக்கு வெட்டி எடுத்து விட்டால் கீழே அழகிய ஜாடி வடிவில் கிடைக்கும். இதன் அடியில் கோணி ஊசியை விளக்கில் சூடு செய்து 2, 3 துவாரங்கள் செய்து ஜாடியில் மண்ணை முக்கால் பாகம் போட்டு அழகிய 'இன்டோர் செடி'கள் வளர்த்தால் வீடு பார்க்க அழகாக இருக்கும்.

— பிரேமா.

நவராத்திரி — தீபாவளி பண்டிகைகளுக்கு விசேஷ ஆர்டர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.



தகதக தங்கப் பட்டுடன்
தழுவுது தங்கப் பட்டுடல்

புதிய
ரெக்ஸோன

தூய தேங்காயெண்ணெய் செறிந்தது.

மென்பட்டு மேனி காக்க எளிய குறிப்புகள்



டாக்டர் பாரதி மாரு

கே: எண்ணெய்ப்பசையுள்ள என் முகத்தை அடிக்கடி கழுவ வேண்டி உள்ளது. சோப்புகள் அலர்ஜி ஏற்படுத்துவதால், அதை உபயோகிக்க விரும்ப வில்லை. வேறெப்படித்தான், என் முகத்தைக் கழுவுவது?

ப: சோப்புக்குப் பதில் இயற்கையாகவே தேய்த்துக் கழுவலாம். புல்லரிசிக்கூழ், துளசி, "witch-hazel" எனப்படும் ஒரு வகை வட அமெரிக்கச் செடி (இது கிடைக்கா விட்டால் பன்னீரைப் பயன்படுத்தவும்) மற்றும் உப்புப்படிகம் – இவற்றைக் கலந்து பயன்படுத்தலாம். இதமான முறையில் முகத்தில் வட்ட வடிவில் இதைத் தடவி 5 நிமிடங்கள் கழித்து நிறைய தண்ணீரில் முகம் கழுவுங்கள்.

கே: என் முகத்தில் சிவப்பு புள்ளிகள் உள்ளது. இதனால் நான், மிகவும் வித்யாசமாகக் காட்சி அளிக்கிறேன். இதிலிருந்து மீள நான் என்ன செய்வது?

ப: பொதுவாக நுண்புழை நாளங்கள் அடைத்துக் கொண்டால், சிவப்புப் புள்ளிகள் முகத்தில் தோன்றும். "Lettuce" எனப்படும் ஒரு வகைக் கீரையின் பாலை பூசினால் முகத்தில் உள்ள சிவப்புப் புள்ளிகள் மாறுவதுடன், மென்மையாகவும் செய்திடலாம். இதைத் தயாரிக்க 4 "Lettuce" இலைகளை ஓடும் நீரில் கவனமாக கழுவவும். பிறகு, அவற்றை "Saucepan" மீது வைத்து சூடுபடுத்தவும். (ஆனால், இலைகளை எரித்து விடக் கூடாது) கொதிக்கும் நீரின் மேல் இந்த இலைகளை மூடி வைத்தாலும் போதும். அதாவது இறுக்கமாக மூடி, அரை மணி நேரத்திற்கு இளஞ்சூடு படுத்தவும். குளிர வைத்த பின் ஒரு மிக்ஸியில் போட்டு கலக்கவும். அத்துடன் 8-10 வேப்பிலையையும், துளசி இலையையும் சேர்த்து அழுந்த நசுக்கி அந்த சாறையும் சேர்க்கவும். இக் கலவையை, ரெஃப்ரிஜிரேட்டரில் வைத்தால், சிவப்புப் புள்ளி தோன்றும் போதெல்லாம் இதைப் பயன் படுத்தலாம்.

கே: என் முகத்தில் பழுப்புப் புள்ளிகள் ஏற்பட்டதால், என் அழகே குறைந்து விட்டது. நான் என்ன செய்ய வேண்டும்?

ப: சூரியக் கதிர்கள் அதிகமாக தாக்குவதால், இது போல பழுப்புப் புள்ளிகள் ஏற்படுவது நமது வெப்பமான நாட்டில் சகஜமான பிரச்சினைதான். கீழ்க்கண்ட சிகிச்சையை செய்து வந்தால் அவற்றை லேசுபடுத்தி பிறகு அவற்றை ஒழித்தும் விடலாம்:

ஒரு தேக்கரண்டி முள்ளங்கிச்சாறை, "யோகர்ட்"டுடன் சேர்த்து கலக்கவும். பிறகு பழுப்புப் புள்ளிகள் மீது பூசவும். அது காய்ந்த பின், வெதுவெதுப்பான நீரில் முகம் கழுவவும். இங்கிலாந்தில் உள்ள ராஜ குடும்ப அழகு நிபுணர்கள், மூன்று பங்கு எலுமிச்சை சாறில் ஒரு பங்கு "ரம்"மை கலந்து பயன்படுத்தினார்களாம்!

கே: என் உதடுகள் வருடம் முழுவதும் வறண்டும், வெடிப்பு ஏற்பட்டும் உள்ளது. எவ்வளவோ க்ரீம் தடவியும் பயனில்லை. எனக்கு உதவுங்கள்.

ப: லெவண்டர் எண்ணெய் (அல்லது 4–5 மல்லிப் பூச்சாறு) பாதாம் எண்ணெய் மற்றும் தேன்–இவை மூன்றையும் கலந்து உங்கள் உதடுகளில் தடவவும். பட்டு போன்ற உதடுகளை மீண்டும் பெற தினமும் பயன்படுத்துவது நலம்.

கே: என் வயது 25. எனக்கு இப்போது பருக்கள் வளர்கிறது. மேனி இளமையாக இருந்தாலும், முகத்தில் பருக்களால் தழும்புள்ளது. இதை எப்படி மிருதுபடுத்துவது?

ப: உங்கள் வீட்டில் இந்த சிகிச்சையை செய்தால், தழும்புகள் மறைந்து பழைமை மிளிரும் புத்துணர்வுமிக்க சருமம் பெறலாம். ஆனால், அதற்கு மிகவும் தாமதமாகும். ஏனெனில், இந்த மாற்றம் மெதுவாகத்தான் நடக்கும். எனவே, பொறுமை அவசியம். ஒரு துண்டு பப்பாளி பழத்தை முகத்தில் தேய்க்கவும். 15 நிமிடங்கள் கழித்து முகம் கழுவவும். தினசரி ஒரு முறை இப்படி செய்யவும். பப்பாளியில் உள்ள புரதச்சத்தான பெப்சின், சரும மேற்பரப்பில் உள்ள தழும்பை மெதுவாக அகற்றுகிறது. இது தீங்கற்றது. சக்தி மிக்கதென்றாலும் பூரண குணமாக 2,3 வருடங்கள் ஆகலாம்.

வாசகர்களே!

உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி: Rexona-Tips on Skin Care P.O. Box No. 758, Bombay-400 001

பொன்னனை மென் பட்டு
மேனி மெருகுக்கே.



இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

தூய தேங்காயெண்ணெய் செறிந்தது.

மாஜிக் ராதிகா

கலையே என் வாழ்க்கையின் திசை மாற்றினாய்!

பெங்களூரில் ஒரு மோட்டார் சைக்கிளில் ஏறிக் கொண்டு அந்தப் பெண்மணி ஐந்து கிலோ மீட்டர் செல்கிறார். மதுரையில் அதே பெண்மணி சுமார் பத்து கிலோ மீட்டர் தூரத்தை மோட்டார் சைக்கிளில் ஏறிக் கடக்கிறார். திறந்த வாய் மூடாமல் கவனிக்கிறார்கள் பார்வையாளர்கள்.

பெண்கள் மோட்டார் சைக்கிள் ஓட்டுவது மிகவும் சகஜமாகி விடவில்லையென்றாலும் அப்படி எல்லோரும் ஆச்சரியப்படுமளவிற்கு அது எட்டாத அதிசயமும் இல்லையே என்று கேட்கிறீர்களா?

'அந்தப் பெண்மணி தன் கண்களை ஒரு துணியால் இறுகக் கட்டிக் கொண்டு மோட்டார் சைக்கிள் ஓட்டினார்' என்பதைச் சொன்னால் உங்கள் புருவங்களும் மேலேறுகின்றன அல்லவா?

"இந்த வித்தையை நான் சென்னையில் கூட செய்யத் தயார். அதுவும் நெரிசல் மிகுந்த அண்ணா சாலையில். ஆனால் இங்கு அதற்குப் போலீஸ் அனுமதி கிடைக்கவில்லை" என்றபடி சிரிக்கிறார் ராதிகா.

இதுபோன்று கண்களைக் கட்டிக் கொண்டு வண்டி ஓட்டும் பெண்மணி உலகிலேயே இவர் ஒருவர்தானாம். கின்னஸில் தன் பெயர் வருவதற்காக எழுதிப் போட்டிருக்கிறார் ராதிகா.

"நான் பள்ளியில் எட்டாவது படிக்கும் போதே எனக்கு மாஜிக்கில் நாட்டம் விழுந்தது. அப்பா, அம்மா இருவருக்குமே நான் மந்திரம் கற்றுக் கொள்வதில் இஷ்டமில்லை. இதனால் வீட்டில் ஏதாவது பிரச்னை வரும் என்று பயந்தார்கள்.

மந்திரத்தில் ப்ளாக் மாஜிக், ஒயிட் மாஜிக் என்று இரண்டு வகைகள் உண்டு. அதில் ப்ளாக் மாஜிக்கில் தேர்ச்சி பெற சுடுகாட்டுக்கு நள்ளிரவில் சென்று ஏதாவது தலைச்சன் பிள்ளையைப் பலிகொடுத்து விட்டு மந்திரங்கள் கற்றுக் கொள்ள வேண்டுமென்பார்கள். ஆனால் நான் செய்வது ஒயிட் மாஜிக் மட்டுமே. இதில் மக்களை மகிழ்விக்கும் நோக்கம் உண்டே தவிர யாருக்கும் எந்த வித பாதகம் செய்யும் விஷயமும் இஞ்சித்தும் கிடையாது.

மாஜிக்கில் ராதிகாவின் குரு யார்? "என் பதினாறாவது வயதில் 'அர்த்த ராத்திரி' என்ற தெலுங்குப் படத்தில் நடித்துக் கொண்



டிருந்தேன். அந்தப் படத்தில் எனக்கு அப்பாவாக நடித்தது தெலுங்குப் படங்களின் பிரபல காமெடியனான ரமணா ரெட்டி. அவர் மாஜிக் பேராசிரியரும் கூட. செட்டிலேயே சில சிறிய மாஜிக்குகளை செய்து காட்டுவார்; நான் அவரைத்தான் என்னுடைய மாஜிக் குரு என்று சொல்வேன்.''

''தொலைக்காட்சியில் ஏழு வருடங்களுக்கு முன் இளந்தென்றல் பகுதியில் முதலில் என் மாஜிக் நிகழ்ச்சி நடைபெற்றது. பிறகு நான் கொஞ்சம் கொஞ்சமாக மாஜிக் துறையில் பிரபலமானேன். நம் நாட்டின் பல பகுதிகள் தவிர மலேசியா, ஃபிரான்ஸ், மொரீஷியஸ் ஆகிய வெளிநாடுகளிலும் நிகழ்ச்சிகள் நடத்தினேன். சிவந்த மண் ராதிகா, சின்னஞ்சிறு உலகம் ராதிகா என்றெல்லாம் குறிப்பிடப் பட்டு வந்த நான் மாஜிக் ராதிகா என்று நிரந்தரமாக அழைக்கப் பட்டு வருகிறேன்'' என்னும் இவரது வீட்டுக் கதவில் கூட 'மாஜிக் ராதிகா' என்னும் பெயர்ப் பலகை தான் தொங்குகிறது.

உலகிலேயே சிறந்தது இந்திய மாஜிக் தான் என்பதில் உறுதியான கருத்து கொண்ட ராதிகா அதற்கு ஆதாரமாக, ஜப்பானில் நடந்த மந்திரவாதிகள் மாநாட்டுக்குப் போயிருந்த போது தான் கண்ட சம்பவத்தை நினைவு கூர்ந்தார்.

''ஜார்ஜ் வான் ஜப்பானில் பிரபல மந்திரவாதி. அவர் பார்ட்டி ஒன்றில் மது அருந்திக் கொண்டிருந்தார். அப்போது ஹோட்டல் சிப்பந்தி வந்து அவருக்கு ஒரு அவசர தொலைபேசிச் செய்தி வந்திருப்பதாகக் கூற, அவர் தன் கையில் இருந்த மதுக் கிண்ணத்தை அப்படியே அந்தரத்தில் நிறுத்தி விட்டு தொலைபேசி அழைப்பைக் கவனிக்கச் சென்று விட்டார். அந்தப் பார்ட்டியில் கலந்து கொண்ட மற்ற எல்லா மந்திரவாதிகளும் இந்த வித்தையைப் பார்த்து ஆச்சரியப்பட, நம் நாட்டின் பிரபல மந்திரவாதியான ஜெய்சங்கர் தன் கையில் இருந்த கிண்ணத்தில் இருந்த மதுவுடன் அந்தக் கிண்ணத்தையும் அருந்தி மற்றவர்களை ஸ்தம்பிக்க வைத்தார்.''

இந்திய மாஜிக்கிற்கு இவ்வளவு சிறப்புகள் இருந்தாலும் அதற்குச் சரியான கௌரவம் இந்தியாவில் அளிக்கப்படவில்லை என்ற வருத்தம் ராதிகாவுக்கு இருக்கிறது. ''நாடகங்களுக்குத் தகுந்த ஊதியமளிக்கும் சபாக்காரர்கள் ஒரு நல்ல மாஜிக் நிகழ்ச்சிக்கு இரண்டாயிரம் ரூபாய் தரத் தயங்குகிறார்கள். நான் இந்த மாஜிக் நிகழ்ச்சிகளுக்கான கருவிகளை வாங்க மட்டும் 60,000 ரூபாய் செலவழித்திருக்கிறேன். குறைந்த பட்சம் அரசு விழாக்களிலாவது எங்களைப் போன்ற கலைஞர்களுக்கு நிகழ்ச்சிகள் 'அளித்து ஊக்குவிக்கக் கூடாதா?

அமெரிக்காவில் டேவிட் காப்பர்ஃபீல்ட் என்ற பிரபல மந்திரவாதி 'சுதந்திர தேவி சிலையை என் மந்திரத்தினால் மறைய வைத்து விட்டு அதை மீண்டும் கொண்டு வருகிறேன்' என்று சவால் விட்டு அதை நிறைவேற்றியும் காட்டினார். அதற்கு அந்த நாட்டு அரசு அனுமதி அளித்தது. நம் நாட்டில் ஒரு சிலையை அப்படிச் செய்கிறேனென்றால் அது பெரிய அரசியலாகிவிடும்; அனுமதியும் கிடைக்காது.''

மாஜிக் செய்வது எப்படி? என்பது போன்ற பல புத்தகங்கள் வந்து விட்டனவே, அதனால் மாஜிக் நிகழ்ச்சிகளுக்கு மவுசு குறைந்து விட்டதா?

''சமையற்கலை புத்தகங்களைப் படித்து விட்டு சமைக்கும் எல்லோருடைய சமையலும் ஒரே மாதிரியாகவா இருக்கும்? கைமணம் என்று ஒன்று இருக்கிறது அல்லவா? அதுமட்டுமல்ல, ஒரு சிறந்த மந்திரக் கலைஞருக்கு நல்ல பேச்சுத் திறமையும் வேண்டும். நிகழ்ச்சியின் போது நான் பொதுவாக ஆங்கிலத்திலும், நடுநடுவில் தமிழிலும் சரளமாகப் பேசுவதுண்டு'' என்று சொல்லும் ராதிகா இன்னொரு விஷயத்தையும் புன்னகையுடன் குறிப்பிடுகிறார். நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு முன் இவரோடு சாதாரணமாக உரை



நவராத்திரிக்கு, இப்போதெல்லாம், ஒரு சிறிய எவர்சில்வர் கிண்ணம் அல்லது தட்டு இப்படிக் கொடுக்கிறார்கள். எப்படியும் 2, 3 ரூபாய் ஆகும். அதற்குப் பதில், சிறு பெண்களுக்கு ஒரு மீட்டர் ரிப்பன் அல்லது ஸ்லைடு, பெரியவர்களுக்குச் சாந்து பாட்டில் போன்று உபயோகமானவற்றைக் கொடுக்கலாம். குட்டிக் குட்டிப் பாத்திரங்களால் உபயோகமே இருப்பதில்லை.

— ஆர். பார்வதி








வாருங்கள், பெண்களான நமக்குள் இந்த இரகசியத்தைப் பகிர்ந்து கொள்வோம். சுரண்டு தலையும், அடிப்பிடித்தலையும், தீங்கு விளைவிக்கும் கொழுப்பையும் கொலஸ்ட்ராலையும் ஏற்படுத்தும் எண்ணெயை உபயோகிப்பதையும் நிறுத்துங்கள். என்னைப் போல, சுவையான, மொறுமொறு தோசையை நிர்லெப்பில் வார்த்து, அனுபவிப்பீர் நிர்லெப் சௌகரியத்தை.

அதே அளவு வெண்ணெய் காய்ச்சினால் நிர்லெப்பில் அதிக அளவு நெய்யைப் பெறுவீர். சுரண்டு ஒட்டும் தொல்லை இல்லை.

அதோடு நிர்லெப்பில் அன்றாட சமையலும் மிக்க எளிதாய் அமையும். தீய்ந்து போகாததால் உணவில் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் வீணாவதில்லை, கழுவுவதும் எளிது. இருபது ஆண்டுகளுக்கு மேலாக சமையலறைத் தோழியாய் விளங்குவது.

அதனால்தான் எங்கள் குடும்பம் நிர்லெப் குடும்பம். உங்கள் குடும்பம்?
இல்லையெனில், வாங்கிடத் தீர்மானியுங்கள்.



NIRLEP

சௌகரியமான சமையல் சாதனம்.



யாடிக் கொண்டிருக்கும் பார்வையாளர்கள், பல்பை சாப்பிடுவது, பெட்டியில் வைத்து அறுக்கப் பட்ட உதவியாளர் பார்வையாளரிடையேயிருந்து வரச் செய்வது போன்ற வித்தைகளை இவர் செய்து காண்பித்த பிறகு இவரிடமிருந்து சற்று எட்டவே நிற்கிறார்களாம்.

மாஜிக் கலையை இவர் பெரிதும் மதிக்கிறார். ''நான் தொலைக்காட்சித் தொடர்களில் நடித்திருக்கிறேன். சுயநலம் என்ற தமிழ்ப் படமொன்றை இயக்குகிறேன். ஆனால் என் தனிவாழ்வில் நான் சந்தித்த சோகங்களுக்கு மருந்தாக இருந்தது மாஜிக் தான்'' என்ற ராதிகா தன் கடந்த கால வாழ்க்கைப் பிரச்னைகளை நம்மிடம் பகிர்ந்து கொள்ளத் தயங்கவில்லை.

''சந்திரசேகரன் என்ற டொரிஸ்டைக் காதல் திருமணம் செய்து கொண்டேன். ஒரு பிள்ளைக்கும் தாயானேன். நான் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவள். அவர் ஹிந்து. காதலுக்குக் கண்ணில்லை என்பது சரிதான். எங்களுடைய பரஸ்பரக் குறைகளை நாங்கள் அப்போது அறிந்து கொள்ளவில்லை. குழந்தைக்கு ஞானஸ்னானம் செய்ய முயற்சித்த போது அதை அவரது பெற்றோர் கூடாது என்று தடுத்து விட்டனர்.' நாளாக ஆக எங்களிடையே பிளவுகள் அதிகமாயின. 1980 இல் விவாகரத்து வழக்கு தொடரப் பட்டு, 1983 இல் விவாகரத்து அளிக்கப் பட்டது. குழந்தை அவரிடம் வளர வேண்டுமென்று தீர்ப்பானது. இந்தக் காலகட்டத்தில் என் வேதனைகளைப் பார்க்க இயலாமல் என் அப்பா இறந்து விட்டார். அந்த நிலையில் எந்தப் பெண்ணாக இருந்தாலும் ஒடிந்து போயிருப்பாள். மாஜிக் கலையும், கர்த்தரிடம் கொண்டிருந்த நம்பிக்கையும் மட்டும் இல்லாவிட்டால் நானும் நொறுங்கிப் போயிருப்பேன். கண்ணைக் கட்டி விட்டாற் போல இருந்த எனக்கு — இப்போது கண்ணைக் கட்டிக் கொண்டு வண்டியில் செல்ல உதவுவது போலவே — மாஜிக் கலை உதவியது. அதில் முழு கவனத்தையும் செலுத்தினேன்.

ஒவ்வொரு பிளேடாக வாயில் விழுங்கி பின் அவற்றை பிளேடு மாலையாக ஒவ்வொன்றாக வெளியே எடுப்பது போன்ற ஐட்டங்களைச் செய்ய தந்திரமும், புத்தி சாதுரியமும், பயிற்சியும் — இவற்றை விட கர்த்தரின் அருளும் தேவை. கரணம் தப்பினால் மரணம் என்பது மாதிரியான இது போன்ற ஐட்டங்கள் மாஜிக் நிகழ்ச்சிகளில் நிறைய உண்டு.

மாஜிக் தவிர வின்செண்ட் பால் இயக்கும் நாடகத்திலும் இப்போது பெரும் ஈடுபாடு காட்டுகிறார் ராதிகா. நாகர்கோயிலில் அடுத்தடுத்து அமைக்கப் பட்டுள்ள பத்து அரங்குகளில் நடைபெறப் போகும் இந்த கிறித்தவ மதத்தை விளக்கும் நாடகத்தில் பல புது உத்திகள் பயன்படுத்தப் படப் படுகின்றனவாம். யோப் என்ற பக்தரின் மனைவியாகவும், ஏசுவின் தாய் மேரியாகவும் பாத்திரமேற்றிருக்கிறார் ராதிகா.

— அருண் சரண்யா.

சக்தி கப்பிலே,

சாக்லேட் சுவையிலே

ஆமாம், புதிய விவா சாக்லேட் சுவையும், ஆரோக்யமும் நிறைந்தது. ஏனென்றால், 8 முக்கிய விட்டமின்கள் செறிந்த ஒரே ஒரு ஆரோக்ய பானமான விவாவில், இப்போது சாக்லேட்டும் இருக்கிறது. இந்த 8 முக்கிய விட்டமின்கள் உங்களுக்கு எப்படி ஆரோக்யமளிக்கின்றன என்பதைப்பாருங்கள். விட்டமின் A கண்பார்வையை மேம்படுத்துகிறது. விட்டமின் B_1 பசியைத்தூண்டுகிறது. விட்டமின் B_2 ஜீரணசக்தி முறையை சீராக்குகிறது. விட்டமின் B_{12} ரத்தம் விருத்தி செய்கிறது. விட்டமின் C பற்களுக்கும், எலும்புகளுக்கும் வலுவூட்டுகிறது. விட்டமின் D உடல் வளர்ச்சிக்கு உதவுகிறது. ஃபோலிக் அமிலம் தசை வளர்ச்சிக்கு உதவுகிறது. நியாஸின் சீரான வளர்ச்சிக்கு உதவுகிறது. இதுமட்டுமல்ல, எளிதில் ஜீரணமாகும் பால், புரோடீன், கார்போஹைட்ரேட்கள் மற்றும் மினரல்கள் அடங்கிய விவா சாக்லேட், உங்களுக்கு முழுமையான ஒரு ஆரோக்ய பானமாகும். எனவே, உங்கள் குடும்பத்தினருக்கு இன்றே விவா சாக்லேட் கொடுக்கத்தொடங்கவும். உங்களுக்கு அது சக்தி அளிக்கிறது.



"பால் உள்ளது" – தண்ணீர் சேர்த்தாலே போதும்.



8 முக்கிய விட்டமின்கள் கூடுதல் சக்தி அளிக்கின்றன

everest/d90/JIL/184 Tam

''எடிட்டர் உன்னைக் கூப்பிடறார்'' என்று ராமலிங்கம் சொல்லிச் சென்ற போது நான் கலெக்டர் மீனாவைப் பேட்டி காணக் கிளம்பிக் கொண்டிருந்தேன். பேனா, டைரி, டேப் ரிகார்டர், கேமரா என்று செக் பண்ணி தோள் பையினுள் தயார் செய்து கொண்டு திருப்திப் பட்டேன். தென ஐ கேன் கோ என்று மனதினுள் சொல்லிக் கொண்டேன். எடிட்டர் கூப்பிட்டு அனுப்பியிருப்பதால் ஒரு வார்த்தை அவரைப் பார்த்து விட்டுச் செல்லலாம் என்று அவர் அறையினுள் நுழைந்தேன்.

''என்ன நடராஜன் ரெடியாயிட்டயா?'' என்று கேட்டார் நிமிர்ந்து கண்ணாடியைச் சரி செய்து கொண்டபடியே. ''உட்காரேன்'' என்றார்.

எதிரே உட்கார்ந்தேன்.

''ஒரு நிமிடம்'' என்றபடியே எதோ மேட்டரைப் படித்துக் கொண்டிருந்தார். நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். இவருடைய அறிவே தனி. அனுபவ முதுமை. சப் எடிட்டர்களை ரிப்போர்ட்டர்களை வேலை வாங்கும் அழகே அழகு. அவர்கள் மனம் புண்படாமல் தன் கருத்தைப் பதிய வைப்பதில் மன்னர். எல்லோரும் திங்கட்கிழமை என்று சொல்வதை செவ்வாய்க்கு முந்தின நாள் என்று சொல்ல வேண்டும் என்று நினைப்பவர். எவருக்குமே தோன்றாத பல ஐடியாக்கள் இவருக்குத் தோன்றும். எங்கள் பத்திரிகையின் புரட்சிகரமான பல கட்டுரைகளின் பின்னே இவருடைய 'டச்' ரகசியமாக இல்லாமல்

தூண்டில்

பெ.நாயகி



இருந்ததில்லை.

படித்துக் கொண் டிருந்த மேட்டரை மூடி வைத்து விட்டு ''கேள்வியெல்லாம் தயாரா வச்சிருக்கியா?'' என்று கேட்டார்.

''ஓர் அவுட் லைனா வச்சிருக்கேன் சார். அவங்க சொல்ற பதில்கள்ல இருந்தே பின்னிப் பின்னி நிறைய கேட்டிருவேன் சார்'' என்றேன் நம்பிக்கையுடன்.

''குட்'' என்றார். ''நான் கொஞ்சம் பார்க்கலாமா கேள்விகளை?''

''ஷ்யூர் சார்'' என்றபடி டைரியை வெளியே எடுத்துப் பிரித்து நீட்டினேன். வாங்கி அதில் பார்வையை ஓட்டினார். வாய் விட்டே வாசித்தார்.

''ம்.... நீங்க பதவி ஏற்று பத்து நாள் ஆகுது... இத்தனை நாளில் இந்த மாவட்டத்தைப் பற்றி என்ன தெரிஞ்சுகிட்டீங்க.... ம்.... உங்களுடைய முதல் மற்றும் முக்கிய அட்டென்ஷன் எங்கே இருக்கணும்னு தீர்மானம் பண்ணியிருக்கீங்க?... இந்த மாவட்டத்தைக் குறிப்பாகத் தலைநகரை மட்டுமாவது சீர்திருத்த என்ன பிளான்கள் வச்சிருக்கீங்க.... இந்த ஊர் மக்களை சந்திச்சீங்களா என்ன சொல்றாங்க... ம்.....'' என்று வாசித்தவர் நிமிர்ந்து ''என்னப்பா நடராஜா கேள்வி எல்லாமே இந்த ரகம் தானா?'' என்று கேட்டார்.


''கடைசியில் ஒன்று கேட்கப் போகிறேன் சார் ஆறு மாசத்துக்குள் அவங்க என்னென்ன செய்யப் போறாங்க என்கிற பிளானை கேட்டு விட்டு சொல்வேன். ஆறுமாசம் கழிஞ்சு அடுத்த பேட்டிக்கு வர்றேன். இப்போ சொன்னதில் எவ்வளவு செய்ய முடிஞ்சதுன்னு நீங்களே ஒரு அலசு அலசி கொடுங்கன்னு சொல்லப் போறேன். இதுக்கு நல்ல எஃபக்ட் இருக்கும் சார். இது ஒரு சவால் மாதிரி நிச்சயமா நிறைய எடுத்துப் பண்ணுவாங்க. ஆறுமாதம் கழித்த பேட்டியில் சாதனை லிஸ்ட் தரணும்ங்கறதுக்காகவே நிறைய செய்வாங்க. படிச்சவங்க சார். பெரியவங்க, நம்மை மாதிரி பத்திரிகைகள் பேட்டிங்கற பேர்ல கொடுக்கற ஊக்கம்தான். ஊட்டச் சத்து மாதிரி.''


என்னையே கொஞ்ச நேரம் வெறித்துப் பார்த்து விட்டு உதட்டைப் பிதுக்கினார் எடிட்டர்.

''நடராஜா! நீ சொல்றதெல்லாம் சரிதான். ஆனா ஒரு விஷயம் யோசிச்சயா? இப்படி ஒரு பேட்டி வயலும் வாழ்வும் மாதிரி வாங்கிப் போட்டால் யார் படிப்பா? முதல் இரண்டு கேள்விகளைப் பார்த்ததுமே அப்படியே அந்த எட்டு பக்கத்தையும் தள்ளி விட்டுட்டுப் போயிருவான். நம்ம பத்திரிகையின் ஆங்கிளே தனின்னு காட்டணும். கலெக்டர் பேட்டின்னா, எவ்வளவு க்ளாமரான ஒரு விஷயம்! உதாரணமா நீ கலெக்டரை பேட்டி காணப் போகிறாய் என்றால் இப்படி திங்க் பண்ணணும். அவங்களைப் பற்றி நமக்குத் தெரிஞ்ச விஷயங்களில் சுவாரஸ்யமான விஷயங்கள் என்னென்ன? கலெக்டர் ஒரு பொம்பளை. இது நம்பர் ஒண்ணு. காதல் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க. இது நம்பர் இரண்டு. ஏற்கெனவே சப்கலெக்டரா இன்னொரு பெண் கலெக்டர் கிட்டே ஒர்க் பண்ணியிருக்காங்க. இந்த மூணு விஷயங்களை மட்டும் வச்சுகிட்டு எவ்வளவு கேள்வி கேட்க முடியும் தெரியுமா?'' என்று நிறுத்தினார்.

அட! எனக்கு வியப்பாய் இருந்தது. இது தான் எடிட்டர். இந்த மாதிரி எனக்கு நினைக்க வரவில்லையே!

''நீங்க ஒரு பெண்ணா இருந்து கொண்டு ஐஏஎஸ் பாஸ் பண்ணியதைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?'' என்று ஆரம்பித்தார்




Royal INDIA
STEEL AND WOODEN FURNITURE
ROYAL DELUXE SPECIAL WOODEN COT
75" x 48"
75" x 60"
ROYAL DELUXE SPECIAL WOODEN COT
75" x 48"
75" x 60"
ROYAL WOODEN COT
75" x 48"
75" x 72"
ROYAL DRESSING TABLE
ROYAL DINING SET
6' x 4' WITH 6 CHAIRS
5' x 3' WITH 4 CHAIRS
ROYAL MERRIT SOFA SET WITH 2 SIDE CHAIRS
ROYAL CUP-BOARD WITH MIRROR
78" x 48" x 20"
ROYAL REVOLVING CHAIR WITH CUSHION SEAT & BACK
ROYAL EXECUTIVE TABLE WITH DECOLAM TOP
54" x 30" x 30"
60" x 36" x 30"
72" x 36" x 30"
SILVER JUBILEE YEAR 1990
Distributors
ROYAL AGENCIES
209-210, JAIL ROAD,
COIMBATORE - 641 018 PHONE : 32847

எடிட்டர்.

புன்னகைத்தபடி குறித்துக் கொள்ள ஆரம்பித்தேன்.

''பெண்களும் பொறுப்பான பெரிய பதவிகளில் அமர்ந்து கொண்டு ஆண்களுக்குச் சமமாகச் சாதனைகள்செய்ய முடியும் என்று நம்புகிறீர்களா? உங்களுக்குக் கீழே உள்ள ஆண் அதிகாரிகள் உங்களை வித்தியாசமாக பார்க்கிறார்களா?''

''பெண் புத்தி பின் புத்தி என்கிறார்களே அதைப் பற்றி உங்கள் கமெண்ட் என்ன?'' என்றேன் நான்.

எடிட்டர் புன்னகைத்தார். ''வெரிகுட்'' என்றார். தொடர்ந்தார். ''உங்கள் திருமணம் காதல் திருமணம் தானே! உங்கள் இருவருக்கும் காதல் மலர்ந்தது எப்படி?''

''நீங்கள் சப்கலெக்டராக இருந்த போது உங்கள் மேலதிகாரியாக இருந்த நீனா குப்தா என்கிறபெண் கலெக்டர்பொறாமையினால் உங்களை சப்ரஸ் பண்ணி வைத்திருந்தார் என்பது உண்மையா?'' என்றேன்.

எடிட்டர் நிமிர்ந்து ''அப்படியா? உனக்கெப்படி தெரியும்?'' என்று கேட்டார்.

சிரித்தேன். ''சும்மா உட்டுப் பார்ப்போம்னு தான். யாருக்குத் தெரியும்!'' என்றேன்.

''ஹா ஹா...'' என்று சிரித்தார். ''நீ தேறிடுவே. குட். இப்படித்தான் இருக்கணும். இதோபார், பொம்பளைங்க கிட்ட சம உரிமை, பின்புத்தின்னு வார்த்தைகளை விட்டோம்னு வை. பொங்கிப் பொங்கி வரும் பதில்கள். அவ்வளவையும் நோட் பண்ணிக்கோ. எப்படியும் ஆம்பளைங்களைத் திட்டியோ கேவலப் படுத்தியோ எதாவது சொல்லியே தீருவாங்க. அட்டைல இவங்க போட்டோ போட்டு இவங்க திட்டினதை கொட்டேஷன்ல போட்டு கலெக்டர் பேட்டின்னு போட்டா பாரு. நாலுபேர் படிச்சிட்டு எதிர்ப்பு எழுதுவான். அதையும் போடணும்திருப்பி மறுப்பு வரும்.இப்படியே நாலஞ்சுவாரம் அட்டகாசமா போயிட்டிருக்கும். என்ன சொல்றே?'' என்று கேட்டார்.

''கரெக்ட் சார். பின்னிடறேன் பின்னி'' என்று அவரிடம் விடை பெற்று வெளியே வந்தேன்.

கலெக்டர் ஆபீஸ் சுறுசுறுப்பான இயக்கத்தில் இருந்தது. என் விசிட்டிங் கார்டை வாங்கிப் பார்த்த அந்தப் ப்யூன் ''உட்காருங்க சார். அம்மா ஒருத்தங்களோட பேசிட்டிருக்காங்க. நீங்க வருவீங்கன்னு சொல்லியிருந்தாங்க. தாமதத்துக்கு மன்னிக்கச் சொன்னாங்க'' என்று பணிவாக நாற்காலி காட்டினான். கொஞ்சம் வித்தியாசமாக உணர்ந்தேன்.

குறுக்கும் நெடுக்குமாய் பைலும் கையுமாய் ஆணும் பெண்ணுமாய் அலைந்து கொண்டிருந்தவர்களைப் பார்த்துக் கொண்டிருந்ததில் பதினைந்து நிமிடம் ஓடியதே தெரியவில்லை.

கலெக்டரின் அறைக்கதவு திறந்தது. இருபத்தைந்து வயதில் ஒரு பெண்ணும் அவள் தந்தை போன்ற ஒருவரும் வெளிப்பட்டு நடந்தார்கள். ப்யூன் உள்ளே போய் வந்து ''அம்மா உங்களைக் கூப்பிடறாங்க'' என்று என்னை உள்ளே அனுப்பினான்.

''குட்மார்னிங் மேடம்'' என்றபடி நுழைந்தேன்.

''வாங்க'' என்று வரவேற்றார். ''ரொம்ப நேரம் வெயிட் பண்ண வச்சுட்டேன்.''

''நோ ப்ராப்ளம்'' என்றேன் சகஜமாக.

அழகாக கம்பீரமாக சிரித்தார். முப்பது வயதுக்கு மேல் மதிக்கமுடியாத தோற்றம். தினம் உடற்பயிற்சி செய்பவராக இருக்க வேண்டும். இதைப் பற்றிக் கூட இரண்டு கேள்வி கேட்க வேண்டும். முகத்துக்கு அந்த நேர்வகிடும் குங்குமமும் தந்த கம்பீரம் கை யெடுத்துக் கும்பிட வைக்கும்.

''என்ன சாப்பிடறீங்க'' என்று கேட்டபடியே காலிங் பெல்லை அழுத்தினார். ப்யூன் உள்ளே வர ''இரண்டு லெமன்'' என்றார்.

அவன் போனதும். ''தாமதமானதற்குக் காரணம் இதுதான். நான் பெண் என்பதால் தினமும் நிறைய பெண்கள் என்னைப் பார்த்துத் தங்கள் பிரச்னைகளைப் பகிர்ந்து கொள்ள வருகிறார்கள். அப்படி ஒரு பெண் தன் தந்தையுடன் வந்திருந்தாள்.''

''பார்த்தேன்'' என்றேன். என் ரிப்போர்ட்டர் புத்தி இவரிடம் பாதிக்கப் பட்ட பெண்களின் பரிதாபக்கதைகள் என்கிற தொடர் வாங்கிப் போட்டால் என்ன என்று எண்ணியது.

''என்ன பிரச்னையாம்?'' என்று சாதாரணமாக முதல் கேள்வியை வீசினேன்.

மீனா சிரித்தார். ''நீங்களும் தெரிந்து கொள்ளக் கூடியது தான் என்றால் உங்களை வெளியே காத்திருக்கவே வைத்திருக்க மாட்டேனே. நேரே உள்ளே அழைத்திருப்பேனே"

''சாரி'' என்றேன்.

மிக்ஸியில் இட்லி, தோசை மாவு அரைப்பவர்களுக்கு இதோ ஒரு அருமையான யோசனை. அரிசி, உளுந்து = 3 : 1 என்ற விகிதத்தில் போட்டும் இட்லி பாறையாக இருக்கிறதே என்று வருந்தாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்? அரிசி மாவையும், உளுந்து மாவையும் அரைத்துத் தனித்தனிப் பாத்திரத்தில் வழித்து, அரை மணி அவகாசத்திற்குக் குளிர்ந்த நீரில் வைத்து, சூடு ஆறிய பின் உப்பு போட்டு. இரண்டையும் ஒரு பாத்திரத்தில் கொட்டிக் கலந்து வைத்தால் மறுநாள் இட்லி, மல்லிகைப்பூக் கணக்கில் சாஃப்டாக இருக்கும்.

— திருமதி தேவனாதன்.

''பரவாயில்லை. பேட்டி என்று உங்க எடிட்டர் டைம் கேட்டார். ரொம்ப ஆச்சர்யமா இருந்தது. உங்க பத்திரிகைக்கு பத்து வருஷ வாசகி நான்.''

''சந்தோஷமா இருக்கு மேடம்.''

சிரித்தார். பேட்டிக்கான முஸ்திபுகளை தயார் செய்தேன். போட்டோக்கள் எடுத்துக் கொண்டேன். டேப் ரிகார்டரை செட் செய்தேன். டைரியைப் பிரித்துக் கொண்டு எடிட்டரும் நானுமாய் தயார் செய்த கேள்விகளை ஒருமுறை நோட்டம் விட்டுக் கொண்டேன். சுவாதீனமாக ஆரம்பிக்கப் போனேன்.

''ஒரு நிமிடம். நீங்க என்ன விஷயமா பேட்டி என்பதற்கு ஓர் அவுட் லைன் பண்ணிட்டு வந்திருப்பீங்க இல்லியா? ஷல் ஐ கோ த்ரூ த கொஸ்சன்ஸ் பிஃபோர் பிகினிங் டு ரிப்ளை, இஃப் யூ டோண்ட் 'மைண்ட்'' என்றார் மென்மையாக.

''ஒய்நாட்?'' என்றபடி டைரியை நீட்டினேன்.

வாங்கி புன்னகை மாறாத முகத்துடன் படித்துப் பார்த்தார். இரண்டு முறை எல்லா கேள்விகளையும் படித்து விட்டு நிமிர்ந்தார்.

''நல்ல கேள்விகள்'' என்று பாராட்டினார்.

புன்னகை செய்தேன்.

''நீங்க மீனா என்கிற கலெக்டரைப் பேட்டி காண வந்திருக்கீங்களா அல்லது மீனா என்கிற பெண்ணைப் பேட்டி காண வந்திருக்கீங்களா?''

ஒருகணம் திடுக்கிட்டாலும் சமாளித்து ''மீனா என்கிற பெண் கலெக்டரை'' என்றேன்.

சிரித்தார். ''கலெக்டர் பெண்ணை'' என்று திருத்தினார்.

''என்ன வித்தியாசம் இருக்கிறது?'' என்று கேட்டேன்.

''இருக்கிறது மிஸ்டர் ரிப்போர்ட்டர். இங்கே இந்த இடத்தில் உட்கார்ந்து கொண்டு நான் அரசாங்கத்தின் திட்டங்கள் என் செயல் முறைகள் எண்ணங்கள் யோசனைகள் பற்றிச் சொல்லலாம். அது கலெக்டர் என்ற முறையில். என்னுடைய பர்ஸனல் வாழ்க்கை பற்றிக் கேட்க உங்களுக்குத் தேவை என்ன? நான் ஓர் அதிகாரி. என்னுடைய தனி வாழ்க்கை எனக்கு மட்டுமே சொந்தமானது. நான் அரசியல்வாதி அல்ல. பொது வாழ்க்கைக்கு வரவில்லை நான். புரிகிறதா?''

''மேடம்.....''

''நான் சொல்லி முடித்துக் கொள்கிறேன். உங்கள் கேள்விகள் எல்லாமே விஷமமானவை. ஒவ்வொரு கேள்விக்கும் பின்னால் கொஞ்சம் ஏளனம் இருக்கிறது. பெண் சுதந்திரத்தைப் பற்றி நிஜமாகவே கவலைப் படுபவனின் கேள்விகள் இப்படி இருக்காது. அந்த விஷயத்தையே கேலிக்கூத்தாக நினைப்பவனின் கேள்விகள் இவை. இவற்றுக்கு நான் பதில் கொடுத்தால் பெண் இனத்தையே கேவலப்படுத்தியவளாகி விடுவேன்.

என்னுடைய பேட்சில் ஆறுபேர் புது கலெக்டர்கள். நான் மட்டும் பெண். மற்ற ஐந்து பேரிடமும் யாரும் பேட்டி என்று போகவில்லை. என்னிடம் மட்டும் ஏன்? உங்களுக்கெல்லாம் ஆச்சர்யம். அட ஒரு பொம்பளை இவ்வளவுதூரம்வந்துட்டாளா. அதையும்தான் பார்ப்போமே என்று பேட்டி. வெறும் வாய்க்கு ஏதாவது அவல் கிடைக்காதா என்று கிளம்பி விட்டீர்கள். இல்லையா?'' என்று சிரித்தார்.

அவர் முகத்தில் கோபமோ எரிச்சலோ துளிக்கூட இல்லாதது எனக்கு வியப்பை அளித்தது.


''மிஸ்டர் ரிப்போர்ட்டர்! முதலில் இந்த பேட்டி மாதிரி விஷயங்களையே தவிர்க்க நினைத்தேன். அப்புறம் நினைத்தேன்: எப்படியும் என் திட்டங்கள் பற்றி ஏதாவது கேட்பீர்கள். அதன் மூலம் மக்களுக்கு சில விஷயங்களை விளக்கிச் சொல்ல ஒரு வாய்ப்பு கிடைக்கும், அது என் திட்டங்களின் செயல்பாட்டை எளிதாக்கும் என்று. நான் இந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவர். இந்த மாவட்டத்தின் நலனுக்கும், முன்னேற்றத்துக்கு என்றுதான் என் சிந்தனைகளும் செயல்பாடுகளும் இருக்கும். அதைப் பற்றிய அக்கறையே இல்லாத உங்களுடன் பேசிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு விநாடியும் என் கடமையிலிருந்து நான் தவறிக் கொண்டிருக்கும் விநாடியாகும்'' என்று நிறுத்தினார்.

நான் உறைந்து போய் உட்கார லெமன் ஜூஸ் வந்தது.

''ப்ளீஸ் டேக் இட். சாரி மிஸ்டர் ரிப்போர்ட்டர் இன்று இந்த லெமனைத் தவிர வேறு பேட்டி அது இது என்று ஏதும் தர இயலாததற்கு வருந்துகிறேன்'' என்றார் கம்பீரமாகச் சிரித்தபடி.

முதல் நாள் அரைத்த புதினா துவையல் மீந்து விட்டதே என்று கவலைப்படாதீர்கள். ஃப்ரிட்ஜில் வைத்துவிட்டு மறுநாள் குக்கரில் சாதம் வைக்கும் போது, அதன் மேல் பீட்ரூட், காரட், உருளைக் கிழங்கு முதலிய காய்களை நறுக்கி வைக்கவும். எண்ணெயைச் சிறிது சூடேற்றிப் புதினா துவையலை வதக்கி காய்கறி, சாதங்களைக் கலந்து கொத்துமல்லி தூவி விருந்துக்குப் பரிமாறினால் சுவையான விஜிடபிள் பிரியாணி கிடைக்கும். தயாரிப்பதும் சுலபம்.

— கே. ஜானகி.


கவிஞரின்
நெஞ்சக் கற்பனை
காகித மீது;
டிசைன் கலைஞரின்
செசவுக கற்பனை
நிகரிலா நேர்த்திப்
பருத்தித்
துணிமீது.
பருத்தி
பேண்ட்டீஸ்
மாதர் ஜட்டி
படைப்பு:விஐபி
VIP
feelings
Avenues HH 867 8

மேல் மாவிற்குத் தேவையான சாமான்கள்:

மைதா — 1 கப்.
கோதுமை மாவு — 1 கப்.
கேசரி பவுடர் — 1 சிட்டிகை.
உப்பு — 1 சிட்டிகை.
எண்ணெய் — 2 டேபிள் ஸ்பூன்.

மேல் மாவு தயார் செய்யும் முறை:

மைதாவையும், கோதுமை மாவையும் நன்கு சலித்துக் கொண்டு, அத்துடன் கேசரிப் பவுடர், உபபு, பாதி எண்ணெய் கலந்து, ரொட்டி மாவை விட கொஞ்சம் தளரப் பிசைந்து மேலே மீதி எண்ணெயை ஊற்றி ஒரு மணி நேரம் மூடி ஊற விடவும். போளி தயாரிக்கும் சமயத்தில் மாவை இழுத்துப் பிசைந்து வைத்துக் கொள்ளவும்.

நவரத்தினப் போளிகள்



இனி பூரணம் செய்யும் விதங்களைப் பார்க்கலாமா?

1. கடலை பருப்புப் போளி:

தேவையான பொருட்கள்:

கடலைப் பருப்பு — 2 கப்.
வெல்லம் பொடி செய்து நன்றாக அடைத்தது — 2 கப்.
தேங்காய் — 1.
ஏலக்காய் — 4.
நெய் — 1 டீஸ்பூன்

கடலைப் பருப்பை எண்ணெய் விடாமல் சிவக்க வறுத்து வெந்நீரில் நான்கு மணி நேரம் ஊறவைக்கவும். பிறகு தண்ணீரை வடித்து விட்டு, தேங்காய், ஏலக்காய் சேர்த்து, தண்ணீர் கொஞ்சமாக விட்டு, பந்து போல் நைஸாக அரைக்கவும். அத்துடன் வெல்லம், நெய் சேர்த்து அடி கனமான பாத்திரத்தில் போட்டு அடுப்பில் வைத்துக் கிளறவும். பாத்திரத்தில் ஒட்டாமல் சுருண்டு வரும் பொழுது இறக்கி வைத்து ஆற விடவும். இப் பூரணத்தை எலுமிச்சை யளவு உருட்டிக் கொண்டு போளி தயாரிக்கவும்.

2. கதம்ப போளி:

தேவையான பொருட்கள்:

கடலைப் பருப்பு — 1 கப்.
துவரம் பருப்பு — 1 கப்.
வெல்லம் (அடைத்து அளந்து) — 2½ கப்.
தேங்காய் (மீடியம் சைஸ்) — 1 காய்.
ஏலக்காய் — 4.

செய்முறை:

இரண்டு பருப்பையும் ஒரு மணி நேரம் ஊறவைத்து நறுக்குப் பதமாக வேகவிட்டு தண்ணீரை வடித்து விடவும். (வடித்த நீரை ரசம் வைத்தால் நன்றாக இருக்கும்) அடிகனமான பாத்திரத்தை அடுப்பில் வைத்து, தேங்காய், வெல்லம் இரண்டையும் போட்டு ஐந்து நிமிடம் கிளறி, அத்துடன் வெந்த பருப்பையும் சேர்த்து இரண்டு நிமிடம் கிளறி ஏலக்காய் சேர்த்து பூரணமாக அரைக்கவும். பிறகு பூரணத்தை எலுமிச்சை அளவு உருட்டிக் கொண்டு மேற்கூறியபடி போளி தயாரிக்கவும்.

3. அசோகா போளி:

கடலைப் பருப்பு — 1 கப்.
பயத்தம் பருப்பு — 1 கப்.

தேங்காய் (நடுத்தரம்) — 1.
வெல்லம் (அடைத்து அளந்தது) — 2½ கப்.
ஏலக்காய் — 4.

செய்முறை:

பருப்புக்களை அரை வேக்காடு வேக விட்டு வடிய விடவும். அடி கனமான பாத்திரத்தை அடுப்பில் வைத்து, துருவிய தேங்காய், வெல்லம் இரண்டையும் சேர்த்து 5 நிமிடம் கிளறி அத்துடன் வெந்த பருப்பையும் சேர்த்து 2 நிமிடம் கிளறி ஏலக்காய் சேர்த்து பூரணமாக அரைக்கவும். பிறகு பூரணத்தை எலுமிச்சை அளவு உருட்டிக் கொண்டு, மேற்கூறியபடி போளி தயாரிக்கவும்.

விழுதைப் போட்டு ஏலப்பொடி சேர்த்து பாத்திரத்தில் ஒட்டாமல் சுருண்டு வரும் வரை வதக்கி, அடுப்பை விட்டு இறக்கி பொட்டுக் கடலை மாவு சேர்த்து ஆற விடவும். பிறகு எலுமிச்சை அளவு உருண்டைகளாக உருட்டிக் கொண்டு, மேற்கூறிய படி போளி தயாரிக்கவும்.

5. பலாக்கொட்டை போளி:

தேவையான பொருட்கள்:

பலாக் கொட்டை (தோல் உரித்து லேசாக நசுக்கியது) — 2 கப்.
தேங்காய் (நடுத்தரமானது) — 1.
வெல்லம் (அடைத்து அளந்தது) — 2 கப்.
ஏலக்காய் — 4.



4. தேங்காய்ப் போளி:

தேவையான பொருட்கள்:

தேங்காய்த் துருவல் (லேசாக அடைத்து அளந்தது) — 3 கப்.
வெல்லம் — 1¼ கப்.
பொட்டுக்கடலை மாவு (கோபுரமாக) — 1 மேசை கரண்டி.
நெய் — 1 மேசை கரண்டி.
ஏலக்காய் — 4.

செய்முறை:

மிக்ஸியில் டிரை பிளேட் போட்டு, தேங்காய்த் துருவலையும், வெல்லத்தையும் போட்டு, தண்ணீர் விடாமல் நன்றாக அரைக்கவும். அடி கனமான பாத்திரத்தை அடுப்பில் வைத்து, நெய் விட்டு, அரைத்த

செய்முறை:

நசுக்கிய பலாக் கொட்டையை ஒரு மணி நேரம் தண்ணீரில் ஊறவைக்கவும். தண்ணீருடன் குக்கரில் இரண்டு விசில் சப்தம் வரும் வரை வேகவிட்டு, நீரை வடித்து விடவும். தேங்காய்த் துருவலுடன் வெல்லத்தையும் சேர்த்து வதக்கி, வெந்த பலாக் கொட்டையையும் சேர்த்து வதக்கி, ஏலக்காய் சேர்த்து, நன்றாக விழுது போல் அரைக்கவும். பிறகு மேற்கூறியபடி போளி தட்டவும்.

6. ரவா போளி:

தேவையான பொருட்கள்:

ரவை — 2 கப்.
தேங்காய் (நடுத்தரம்) — 1.
வெல்லம் (அடைத்து — 2½ கப்.

நெய் — 1 டீஸ்பூன்.
ஏலக்காய் — 4.
தண்ணீர் — 5 கப்.

செய்முறை:

முதலில் ஐந்து கப் தண்ணீரை நன்கு கொதிக்க விட்டு இறக்கி மூடி வைக்கவும். ஒரு ஸ்பூன் நெய் விட்டு, ரவையை லேசாக மணம் வரும் வரை வறுத்து, கீழே இறக்கி வெந்நீரை விடவும். (அடுப்பில் வைத்து வெந்நீர் ஊற்றினால் கையில் ஆவி அடித்து விடும்). பிறகு அடுப்பில் வைத்துக் கிளறவும். ரவை நன்கு வெந்த பிறகு தேங்காய் மெல்லிசாக துருவி வெந்த ரவையில் போட்டு, வெல்லத்தையும் சேர்த்துக் கிளறவும். பாத்திரத்தில் ஒட்டாமல் சுருண்டு வரும் போது, அடுப்பை விட்டு இறக்கி ஏலப்பொடி சேர்த்து, ஆற விட்டு மேற்கூறியபடி போளி தயார் செய்யவும்.

7. கடலைப்பருப்புசர்க்கரைபோளி:

தேவையான பொருட்கள்:

கடலைப் பருப்பு — 2 கப்.
சர்க்கரை — 2½ கப்.
ஏலக்காய் — 4.
நெய் — 1 டீஸ்பூன்.

செய்முறை:

கடலைப் பருப்பை லேசாக வறுத்து, கொதிக்கும் வெந்நீரில் ஒரு மணி நேரம் ஊற வைக்கவும். பிறகு தண்ணீரை வடித்து விட்டு மை போல் நைஸாக அரைக்கவும். அத்துடன் சர்க்கரை சேர்த்து, நெய் விட்டு, அடிகனமான பாத்திரத்தில் போட்டு, அடுப்பில் வைத்துச் சுருளக் கிளறி ஏலப் பொடி சேர்த்து இறக்கவும். ஆறிய பிறகு எலுமிச்சை அளவு உருண்டையாக உருட்டி மேற்கூறியபடி போளி தயாரிக்கவும்.

8. துவரம் பருப்பு சர்க்கரை போளி:

தேவையான பொருட்கள்:

துவரம் பருப்பு — 2 கப்.
சர்க்கரை — 2 கப்.
ஏலக்காய் — 4.
ஜாதிக்காய் — துளி.
நெய் — 1 டீஸ்பூன்.

செய்முறை:

துவரம் பருப்பை ஒரு மணி நேரம் தண்ணீரில் நன்கு களைந்து ஊறவைக்கவும். பிறகு தண்ணீரை வடித்து விட்டு, பருப்பைக் குக்கரில் ஒரு கை தண்ணீர் தெளித்து நன்கு குழைய கெட்டியாக வேகவிடவும். வெந்த பருப்பை நன்கு மசித்து அடிகனமான பாத்திரத்தில் சர்க்கரை, நெய்யுடன் சேர்த்துக் கிளறவும். பாத்திரத்தில் ஒட்டாமல் வரும் பொழுது ஏலக்காய்ப் பொடி ஜாதிக்காய்

நவராத்திரிக்குத் தொங்கும் தோரணம்!



பாமாயில் கவர்கள் குறைந்தது ஆறை எடுத்துக் கொள்ளவும். பெரிய சிவப்பு மணிகள் (பிளாஸ்டிக் (அ) கண்ணாடி மணிகள்) முதலில் பம்பாயில் கவர்களில் கொஞ்சம் கிரஸின் ஊற்றி நன்றாகத் துடைத்தால் அதன் மேல் உள்ள எழுத்துக்கள் சுத்தமாக மறைந்துவிடும். இதைச் சோப்பு நீரில் கழுவிச் சுத்தம் செய்து நன்கு துடைக்கவும்.

அந்தப் பிளாஸ்டிக் காகிதத்தில் கீழே கொடுத்த அளவின் படி டைமண்ட்கள் வெட்டிக் கொள்ளவும். ஊசியில் தடித்த நூலைக் கோர்த்து ... டைமண்ட்களைக் குறுக்கே மடித்துக் கோர்த்துக் கொண்டே வர வேண்டும். பதினைந்து டைமண்ட்கள் கோத்தபின் ஒரு சிவப்பு மணி என்று கோத்தால் அழகிய சாமந்திப்பூ போன்ற மாலை நமக்குக் கிடைக்கும். இதை மாலையாகவும் உபயோகிக்கலாம். வாசற்படியில் தொங்கும் சரங்களாகவும் உபயோகிக்கலாம்.

— பிரேமா.

சேர்த்துப் போட்டுக் கிளறி இறக்கி ஆற விடவும். பிறகு எலுமிச்சை அளவு உருண்டை உருட்டி மேற்கூறியபடி போளி தயார் செய்யவும்.

9. பாண்ட்டா போளி:

தேவையான பொருட்கள்:

மைதா — 2 கப்,
சோடா — 1 சிட்டிகை,
ரீபைண்ட் ஆயில் — 300 கிராம்.

பாலுக்குத் தேவையான பொருட்கள்:

பால் — 5 கப்,
சர்க்கரை — 1 ½ கப்,
பாதாம் பருப்பு — 10,
முந்திரிப் பருப்பு — 10,
குங்குமப் பூ — கொஞ்சம்,
பச்சை கற்பூரம் — சின்ன கட்டி,
ஏலக்காய் — 4.

செய்முறை:

மைதா மாவை சலித்து சோடா சேர்த்து, பூரி மாவு போல் பிசைந்து பத்து நிமிடம் ஊறவைக்கவும். சர்க்கரையை மிக்ஸியில் பொடி செய்து கொள்ளவும். பாதாம் பருப்பை ஊறவைத்து தோலை உரித்து அத்துடன் முந்திரிப் பருப்பையும் சேர்த்து நைஸாக அரைக்கவும். பாலை நன்கு கொதிக்க வைத்து அத்துடன் அரைத்த விழுதையும் போட்டு 5 நிமிடம் கொதிக்க விடவும். பிறகு இறக்கி சர்க்கரைப் பொடி சேர்த்து, குங்குமப்பூ, ஏலப்பொடி, பச்சை கற்பூரம் சேர்த்து வைக்கவும். பிசைந்து வைத்துள்ள மைதா மாவை நெல்லிக்காய் அளவு உருட்டி வறட்டு மைதா மாவில் புரட்டி சின்ன அப்பளமாக இடவும். அதை இரண்டாக மடித்து லேசாக அப்பளக் குழவியால் இருமுறை இட்டு, எண்ணெயில் பொரித்து, சூடான பாலில், சூடாகப் போடவும். ஊறியவுடன் ஒரு தட்டில் அடுக்கவும். இது புது மாதிரியாக தின்பதற்கு மிகவும் ருசியாக இருக்கும்.

தேவையானால் கசகசா ருசி பிடித்தவர்கள் ஒரு ஸ்பூன் கசகசாவை ஊறவைத்து முந்திரி பாதாமுடன் சேர்த்து அரைத்துப் பாலில் கலக்கலாம்.

பின் குறிப்பு:

1. போன்விடா, நியூட்ரமூல், ரீபில் கவரில் வரும் சரிகை பேப்பரை போளி தட்ட உபயோகித்தால் இலையைப் போலவே நன்றாக கருங்காமல் வரும்.

2. பூரணமாவு தளர இருந்தால் 2 ஸ்பூன் பொட்டுக்கடலை மாவு சேர்த்துக் கொண்டு செய்யலாம்.

— என். பத்மாவதி.

"நவராத்திரிக்குச் சுண்டல் செய்யணுமாம். என்னை எங்க அம்மா வீட்டுக்குப் போய்க் கத்துண்டு வரச் சொல்லிட்டா என் மனைவி."

— சாரதி.





"என்னப்பா இந்த ரெண்டு பொம்மையும் முடிவா என்ன விலை சொல்றே? ஆனை விலை, குதிரை விலை சொல்றியே?"

"இது ஆனை, குதிரைதானேம்மா!"

— ஆர். பி. சாரதி.





இதோ அறிமுகம்
சிங்கார்
ஸ்டிக்கர்
குங்குமம்
Shingar
STICKER
KUMKUM
Shingar
STICKER
KUMKUM
எந்த ஆடையிலும்
எழில் சிறக்கும்
பிரதிபலிப்பு
சிங்கார்
ஸ்டிக்கர் குங்குமம்

காலத்துக்கு ஏற்றாற் போல...



"**பா**த்திர வியாபாரம் என்பதை தங்க வியாபாரம் போல (விலையால் அல்ல!) பார்க்கும்போதே 'நீட்'டாகவும், அழகிய சுற்றுப்புறச் சூழ்நிலையிலும் செய்ய வேண்டும் என்பது என்னுடைய நீண்ட நாள் ஆசை. சாதாரணமாகப் பாத்திரக் கடைகளில் எத்தனைப் பாத்திரங்களை அடுக்க முடியுமோ, தொங்க விட முடியுமோ அத்தனையையும் செய்து விடுவார்கள் அப்படி இல்லாமல் அழகாக, பல்வேறு மாடல்களை அலமாரிகளில் வைத்து, ஏர் கண்டிஷன் பின்னணியில் வியாபாரம் செய்ய வேண்டும் என முடிவு செய்தேன்..." என்கிறார் இராமகிருஷ்ணா நாயுடு பிரைவேட் லிமிடெட்டின் உரிமையாளர் புருஷோத்தமன்.



• இதென்ன வெளிநாட்டுப் பஜாரா?

இவர்களுடைய தந்தை, சகோதரர்கள் கிரானைட் தொழிலில் ஈடுபட்டிருக்க, புருஷோத்தமனுக்குப் பாத்திர வியாபாரத்தில் ஈடுபாடு வந்திருக்கிறது.

பாத்திரங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது பல சுவாரஸ்யமான விஷயங்களைச் சொன்னார் அவர்.

"நம் தென்னாட்டில்தான் வகை வகையான பாத்திரங்கள் தேவைப்படுகிறது. பாத்திர அமைப்பைப் பார்த்தே இது வட நாட்டவர் பாத்திரம், இது தெற்கத்தியர் விரும்பும் பாத்திரம் எனக் கூறி விடலாம்.

வட நாட்டவர்க்குக் கோதுமை மாவைப் போட்டு வைக்கப் பெரிய பெரிய டப்பாக்கள் தேவையாக இருக்கும். மற்றபடி சப்பாத்திகளின் சைட் — டிஷ்ஷிற்குத்தான் பாத்திரங்கள் தேவை. தவிர தட்டுக்கள். நமக்கு அப்படியில்லை. சாதம், குழம்பு, ரசம், அவியல், மோர், கூட்டு என எத்தனை அயிட்டங்கள்.. விசேஷ தினம் வந்து விட்டால் கேட்க வேண்டியதில்லை. விதவிதமாகச் செய்து தள்ளி விடுகிறோம். எனவே சாதாரண வீடுகளிலேயே ஏராளமான பாத்திரங்கள் தேவையாகத்தான் இருக்கிறது.

வட இந்தியரின் டம்ளர்கள் நீளமாக, பெரிதாக விளிம்பில்லாமல் இருக்கும். கிண்ணங்களைக் கூட அப்படித்தான் விரும்புகிறார்கள். அவர்களுடைய



'லோட்டா'வில் இருந்து நம்முடைய டம்ளர்கள் வித்தியாசப்படுகின்றது.

இங்கே இரண்டு வகையினையும் வாங்கி வைத்து இருக்கிறோம்...'' எனக் காண்பிக்கிறார்.

''அதே போல வெளிநாட்டவர்களும் நம்முடைய பாத்திரங்களை விரும்பி வாங்குகிறார்கள். சென்ற வாரம் இரண்டு வெளிநாட்டவர்கள் வந்து கடையைப் பார்த்து விட்டு ஆச்சர்யப்பட்டார்கள். அலமாரியில் 'டிஸ்பிளே' செய்து இருப்பதால் அவர்களுக்குப் பார்க்க சுலபமாக இருந்தது. இந்த கூஜா மாடல் இரண்டு டஜன் வாங்கிக் கொண்டு போனார்கள்...'' என்கிறார்.

''இப்போது 'மாடர்னாக' பாத்திரங்கள் வருகின்றன. கண்ணாடிக் குடுவைகள் போன்றவற்றை நேரடியாக அடுப்பில் வைக்கலாம் என்பது போல உள்ளது. இது எந்த அளவிற்கு மக்களிடையே வரவேற்பு இருக்கிறது?''


''ஒருவருக்கு பிரசண்டேஷன் செய்ய வாங்கிக் கொண்டு போகிறார்களே தவிர, அவர்களுடைய 'பர்சனல்யூஸ்'ஸுக்கு வாங்குவதில்லை. பரிசு பெற்றுக் கொண்டவர்களும் மீண்டும் அதை யாருக்கேனும் கொடுத்து விடுகிறார்கள். சாதாரண நடுத்தர குடும்பங்களிலே மட்டுமில்லாமல், வசதியான குடும்பங்களில் கூட இது போன்ற பாத்திரங்களைப் பயன்படுத்துவதில்லை. எவர்சில்வர் பாத்திரங்களுக்கு இருக்கும் மதிப்பு எப்போதும் குறைவதில்லை. அதிலேயும் இப்போது காப்பர் பாட்டம் உள்ளவை நன்றாகப் போகிறது. அதே போல விதவிதமாக ஃப்ளாஸ்குகளை நிறைய பேர் வாங்குகிறார்கள்.

முன்பெல்லாம் வீட்டை விட்டு வெளியே போவது என்பது அதிகமாக இருந்ததில்லை. இப்போதெல்லாம், 'வீக்எண்ட்', 'அவுட்டிங்' எனப் போவதால் 'ஹாட் பேக்', ஃப்ளாஸ்க் எனப் பலவகை அயிட்டங்களை வாங்குகிறார்கள். 'ஹாட் பேக்' வேலைக்குப் போகும் பெண்களுக்கு ஒரு வரப்பிரசாதம். சமைத்து 'ஹாட் பேக்'கில் வைத்து விட்டு வேலைக்குப் போய் விட்டால், அப்புறம் சாப்பிடுபவர்களும் சூடாகச் சாப்பிடலாமே! இப்படி எல்லா தொழில்களுமே நவீனமாகி மாறி வருவது போல பாத்திரங்களும் மாறி வருகின்றன.


அதனால்தான் அதை நேர்த்தியாகச் செய்ய வேண்டும் என்ற ஆவலில் இப்படி ஒரு அழகிய கடையை ஏற்படுத்தினோம்...'' என்கிறார் புருஷோத்தமன்.

பெண்களின் மனோபாவத்தை நன்றாகப் புரிந்து வைத்துக் கொண்டிருக்கும் இவர், கடையின் முன்புறத்தைக் கூட மாற்றி இருக்கிறார். சென்னை ஈவினிங் பஜார் என்றாலே 'கசகச'வென உள்ள இடம் என்பதை மாற்றி, நடைபாதைகளில் எல்லாம் 'டைல்ஸ்' பதித்து, பக்கத்திலிருக்கும் பொதுக் கழிப்பறையைத் தனது சொந்தச் செலவில் புதுப்பித்துப் பராமரித்தும் வருகிறார். நடைபாதை, பொதுக் கழிப்பறை இவற்றைச் சரிசெய்யவே பல லட்சங்களைச் செலவு செய்து இருக்கிறார்!

— பவித்ரா.







முதல் பரிசு:

பச்சைப் பயறு பழக் குடுவை

தேவையான பொருட்கள்:

பச்சைப் பயறு — 150 கிராம்.
பைனாப்பிள் — 1 (சிறியது).
பலாச்சுளை — 10.
மாம்பழம் — 1 (சிறியது)
நேந்திரம் பழம் — 1 (பெரியது).
கிஸ்மிஸ் — 20.
சம்பா கோதுமை — ¼ கிலோ.
பச்சரிசி — ¼ கிலோ.
பாம்பே ரவை — 100 கிராம்.
வெல்லம் — ¾ கிலோ.
வேர்க் கடலை — 3 டேபிள் ஸ்பூன்.
தேங்காய்த் துருவல் — ½ கப்.
நெய் — 100 கிராம்.
ஏலப்பொடி — ¼ டீஸ்பூன்.

செய்முறை:

கோதுமை, அரிசி இரண்டையும் பொன்னிறமாய் வறுத்து மிஷினில் ரவையைப் போல் அரைத்துச் சலிக்கவும். இதனுடன் பாம்பே ரவையையும் சிவக்க வறுத்துக் கலக்கவும். பச்சைப் பயறை லேசாய் வறுத்துப் பின் குக்கரில் வேகவிட்டு நீரை வடிகட்டவும். பைனாப்பிள், மாம்பழம் இரண்டையும் தோல் சீவி, பின் துருவிக் கொள்ளவும். அடி கனத்த பாத்திரத்தில் கால் கிலோ வெல்லத்தைப் போட்டு சிறிது நீர் ஊற்றி அடுப்பிலேற்றவும். நன்கு கெட்டியான பாகு பதம் வந்ததும் வெந்த பயறு, பழத்துருவல், தேங்காய் சேர்த்து அடிவொட்டாமல் நெய் விட்டுக் கிளறி, பின் நன்கு ஆற விடவும்.

பலாச் சுளைகளை சிறு துண்டுகளாக்கிக் கொள்ளவும். மற்றோர் கனமான பாத்திரத்தில் நறுக்கிய பலாச்சுளைகளை, ஒரு ஸ்பூன் நெய் விட்டு நன்கு வதக்கவும். இதில் ½ கிலோ வெல்லத்தைப் போட்டு ஒன்றரை லிட்டர் தண்ணீர் விட்டு நன்கு கொதிக்க விடவும். ஏலப் பொடியைச் சேர்த்து, மாவைக் கலவையைக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டு, கட்டியின்றி நன்கு கிளறி, கையில் ஒட்டாத பதம் வரும் வரை நெய் ஊற்றிக் கிளறவும். இந்த மாவை, வாயகலம் குறைவான ஒரு சிறு கிண்ணத்தில் உட்புறம் நெய் தடவி கனமாய் கிண்ணம் போலவே பரத்தவும். இந்த மாவு பரத்திய கிண்ணத்தில், ஆறிய பயறு பழக் கலவையை ஒரு கரண்டி போட்டு, கிண்ணத்தின் வாயை மறுபடி மாவைப் பரத்தி மூடவும். இப்போது கிண்ணத்தைக் கவிழ்த்தால் அப்படியே மூடிய கிண்ணம் போன்ற அமைப்பில் விழும். இதன் மேல் ஒன்றிரண்டாய் உடைத்த வேர்க்கடலையைப் பரத்தி, நேந்தி-

ரம் பழத்தை வட்டமாய் நறுக்கி வைத்து அதன் மீது கிஸ்மிஸ் பழத்தை அழுத்தி அழகு படுத்தவும்.

இப்படியே எல்லா மாவையும் பூரணம் உள் வைத்துக் கிண்ணங்கள் செய்து இட்லி குக்கரில் 10 நிமிடம் வேக விடவும். புரதம் மிகுந்த, கமகமக்கும் இந்தப் பழக் குடுவை, காலை மாலை வேளைகளுக்கு ஏற்ற சரிவிகித உணவு.

— திருமதி. நித்யா சுந்தரம்.
மதுரை — 2

இரண்டாம் பரிசு:

டொமேடோ ஸ்டஃப்டு டிலைட்

தேவையான பொருட்கள்:

பெரிய தக்காளி — ½ கிலோ,
முளை கட்டிய பயறு — 1 கப்,
உருளைக் கிழங்கு (பெரியது) — 2,
வெங்காயம் (பெரியது) — 2,
குடை மிளகாய் — 1,
மிளகாய்த் தூள் — 1 ஸ்பூன்,
உப்பு — தேவையான அளவு,
மசாலா பொடி — 1 டீஸ்பூன்,
எண்ணெய், நெய் — சிறிது.

செய்முறை:

முளைகட்டிய பயறையும், உருளைக் கிழங்கையும் குக்கரில் தனித் தனியாக வைத்து வேகவைத்துக் கொள்ளவும். வெங்காயத்தையும், குடை மிளகாயையும் பொடிப் பொடியாக நறுக்கி வாணலியில் சிறிது எண்ணெய் விட்டுச் சுருள வதக்கிக் கொள்ளவும். தக்காளிப் பழங்களை அலம்பி தலைப் பகுதியில் சிறிது நறுக்கி உள்ளே உள்ள சாறைத் தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும். உருளைக் கிழங்கை மசித்து, பச்சைப் பயறு வதக்கிய வெங்காயம், குடை மிளகாய், உப்பு, மிளகாய்த் தூள் போட்டு பிசிறிக் கொள்ளவும். இவற்றுடன் மசாலாப் பொடியைச் சிறிது நெய்யில் வறுத்து சேர்த்துக் கொள்ளவும். மேலே செய்த கலவையைத் தக்காளி பழத்தினுள் ஸ்டஃப் செய்து நறுக்கிய மேல் பாகத்தை வைத்து மூடி விடவும். எடுத்து வைத்த தக்காளி சாற்றுடன் அரை தம்ளர் தண்ணீர் சேர்த்து விதைகளை வடித்து எடுத்து விட்டு ப்ரஷர் பேனில் ஊற்றி அதில் ஸ்டஃப் செய்த தக்காளிப் பழங்களை வைத்து ஐந்து நிமிடம் அடுப்பில் வைத்து இறக்கவும். இதுவே டொமேடோ ஸ்டஃப்டு டிலைட். சத்துமிக்க இந்த டிலைட் சூடாக இட்லி, தோசை, சப்பாத்தி இவற்றிற்குத் தொட்டுக் கொள்ள நன்றாக இருக்கும்.

— எஸ். விஜயலட்சுமி, சேலம் — 3.


* காந்திமதி

ஒரு தம்ளர் புழுங்கலரிசியையும், ஒரு தம்ளர் பச்சரிசியும் கலந்து ஊறவைத்து மசிய அரைத்து அத்துடன் ஒரு டேபிள் ஸ்பூன் ஜவ்வரிசியையும் தேவையான உப்பையும் கலந்து வைத்து விடுங்கள். காலையில் சிட்டிகை சமையல் சோடாவை மாவில் கலந்து சூப்பர் ஆப்பம் தயாரியுங்கள்.

— உமா புஷ்பராஜ்.


* ஜெயந்தி

மூன்றாம் பரிசு:

பேரீச்சம்பழ டாஃபி

தேவையான பொருட்கள்:

கொட்டையில்லாத பேரீச்சம் பழப் பாக்கெட் — 2,
மில்க் மெய்ட் டின் — 1,
பால் — 1 கப்,
சர்க்கரை — $1\frac{1}{2}$ கப்,
ஏலக்காய் — 4,
முந்திரிப் பருப்பு — 10 (அ) 15,
நெய் — 1 ஸ்பூன்.

செய்முறை:

பேரீச்சம் பழத்தை ஒருகப் பாலில் நன்றாக வேக விடவும். பழம் வெந்து பால் சுண்டிய பிறகு மத்தினால் நன்றாகக் கடைந்து வைக்கவும். அடி கனமான ஒரு பாத்திரத்தில் மில்க் மெய்ட் முழுவதையும் ஊற்றி, சர்க்கரை, ஏலக்காய் சேர்த்துக் கிளறவும்.

மில்க்மெய்ட் சுருண்டு வரும் பொழுது கடைந்து வைத்துள்ள பழத்தையும் சேர்த்து நன்றாகக் கிளறி இறக்கவும். ஒரு அகலமான தட்டில் ஒரு ஸ்பூன் நெய்யினைத் தடவி பழக் கலவையைக் கொட்டி பரப்பவும். அதன் மேல் முந்திரிப் பருப்பை வறுத்து இரண்டாக உடைத்துப் பதித்து வைக்கவும்.

பழக் கலவை ஆறிய பின் சிறு சிறு துண்டுகளாகப் போடவும்.

— காந்திமதி வேணுகோபாலன்,
துறையூர்.

இப்படியும் போளி செய்யலாம்

போளி செய்யும் போது கடலைப் பருப்பிற்குப் பதிலாகப் பயத்தம் பருப்பை நெற்றுப் பதத்தில் வேக வைத்துக் கொண்டு ஜலத்தை வடிய விடவும். பின்பு ஆறியதும் மிக்ஸியில் போட்டு நன்கு மாவாக நைஸாக அரைக்கவும். அத்துடன் சிறிது தேங்காயையும் போட்டு மிக்ஸியில் ஜலம் விடாமல் அரைத்து அடுத்து வெல்லத்தைக் கரைய விட்டு கெட்டியானதும் அரைத்ததைக் கொட்டி சிறிது நெய் விட்டுப் பதினைந்து நிமிடம் நன்கு கிளறவும். ஆறியதும் எப்போதும் போளி செய்வது போல் செய்யவும். மிகவும் ருசியாகவும் இரண்டு நாட்கள் இருந்தாலும் கெடாமலும் இருக்கும்.

— கோதை.



ஆறுதல் பரிசு:

க்விக் ஸ்பான்ஞ்ச் கப்ஸ்

தேவையான பொருட்கள்:

மைதா மாவு — $\frac{3}{4}$ கப்,
சோயா பவுடர் — $\frac{1}{4}$ கப்,
பேக்கிங் பவுடர் — 1 டீஸ்பூன்,
கனிந்த ஆப்பிள் — 1,
மாம்பழக் கூழ் — $\frac{1}{2}$ கப்,
முட்டைகள் — 3,
வெண்ணெய் — $\frac{1}{2}$ கப்,
பொடி செய்த சர்க்கரை — $\frac{3}{4}$ கப்,
ரோஸ் வாட்டர் — $\frac{1}{4}$ கப்,
ஏலக்காய்ப் பொடி— $\frac{1}{4}$ டீஸ்பூன்,
வறுத்துப் பொடித்த முந்திரி — 15 (நறநற வென்று பொடித்தால் போதும்.)

பேப்பர் கப்புகள் — புதுப் புது அழகான டிசைனில் வாங்கிக் கொள்ளலாம்.

இல்லாதவர்கள் சிறு கிண்ணங்களில் சமாளித்துக் கொள்ளலாம்.

செய்முறை:

ஆப்பிளைத் தோல் நீக்கி சிறு துண்டுகளாக்கி 2 நிமிடம் ஆவியில் வேக விட்டு மிக்ஸியில் அரைத்து வழித்து அதோடு மாம்பழக் கூழ் $\frac{1}{2}$ கப் சேர்த்துக் கொள்ளவும். சலித்த மைதா, சோயா, பேக்கிங் பவுடர்களை ஒரு அகலமான பேசினில் போடவும். முட்டையை, வெண்ணெய், பொடித்த சர்க்கரையுடன் சேர்த்து மர ஸ்பூனால் நன்கு அடித்துக் கலக்கவும். எவ்வளவு நுரைக்கக் கலக்குகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு மிருதுவாக இருக்கும். இதில் ரோஸ் வாட்டர், ஏலப் பொடி, பழக் கூழ்கள், மாவுகள் எல்லாவற்றையும் சேர்த்து மறுமுறை கூட ஒரு தரம் சேர்த்து நன்கு கலக்கவும். இந்த மிக்ஸரைப் பேப்பர் கப்களில் சுமார் $\frac{3}{4}$ பாகம் வருமளவுக்கு நிதானமாக ஊற்றி விட்டு மேலாக வறுத்த முந்திரிப் பொடியை சீராகத் தூவி விட்டு ஓவனில் பேக் செய்யவும்.

நன்கு வெந்துள்ளதா என்று அறிய சிறு எவர்சில்வர் கம்பியைச் சொருகிப் பார்த்து

ஒட்டாமல் வந்தவுடன் எடுத்து ஆற விடவும். ரோஸ் வாட்டர் மணத்தோடு அருமையாக இருக்கும். குழந்தைகளின் பர்த்டே பார்ட்டிகளுக்குச் செய்யலாம்.

— கமலா, பெங்களூர் — 54.

ஆறுதல் பரிசு:

மாதுளைப் பழ சூப்

தேவையான பொருட்கள்:

நன்றாக பழுத்த கொட்டை இல்லாத மாதுளை முத்துக்கள் (சீட்லெஸ்) — 2 கப்.
நன்றாகப் பழுத்த பெரிய தக்காளி — 2.
பெல்லாரி வெங்காயம் — 1 (பொடியாக நறுக்கியது)
ப்ரெட் துண்டுகள் — 1 கப்.
சீஸ் — 1 டேபிள் ஸ்பூன்.
மிளகுப் பொடி — 1 டீஸ்பூன்.
மைதா — 1 டேபிள் ஸ்பூன்.
நெய் — 3 டேபிள் ஸ்பூன்.
சர்க்கரை — 1 டீஸ்பூன்.
உப்பு — தேவைக்கேற்ப.

செய்முறை:

மாதுளை முத்துக்களை மிதமான வெந்நீரில் 15 நிமிடம் ஊறவைக்கவும். ½ லிட்டர் தண்ணீரை நன்றாகக் கொதிக்க வைத்து, அதில் தக்காளியைப் போட்டு மூடி வைக்கவும். நன்றாக சூடு ஆறிய பிறகு தக்காளித் தோலை உரித்து விட்டு, வெந்த நீருடன் மிக்ஸியில் ஜூஸ் எடுக்கும் ஜாரில் போடவும். அத்துடன் ஊறவைத்த மாதுளைகளை ஊறிய நீருடன் போட்டு, ஜூஸ் எடுத்து வடிகட்டி வைத்துக் கொள்ளவும். இதில் மைதாவை சிறிது நீர் சேர்த்து அடுப்பில் வைத்து கூழ் போல் செய்து கலக்கவும். உப்பு, மிளகுப் பொடி, சர்க்கரை சேர்க்கவும். வாணலியில் நெய் விட்டு, வெங்காயம், ப்ரெட் துண்டுகளை தனித் தனியாக வறுத்துக் கொள்ளவும். சாப்பிடுவதற்கு முன்னால் இந்த சூப்பை லேசாக சுட வைத்து, சூப் கப்புகளில் ஊற்றி அதன் மேல் சிறிது வெங்காயம், ப்ரெட் துண்டுகள், சீஸ் போட்டுச் சாப்பிடவும். பசி இல்லாதவர்கள் இந்த சூப் சாப்பிட்டு அரை மணி நேரம் கழித்து சாப்பிட்டால் நன்றாகப் பசி எடுத்துச் சாப்பிடுவார்கள். விருந்தினர்களுக்குச் சாப்பாடு சாப்பிடுவதற்கு முன்னால் இந்தச் சூப்பை கொடுக்கலாம். இந்த சூப்பில் மாதுளை ரசம் கலந்திருப்பதால் வயிற்று உபாதைகள் வராமல் தடுக்கும்.

— ஜெயந்தி ராஜாராம்,
பெங்களூர் — 55.

இம்மாத இல்லத்தரசி போட்டி

பொருள்: கிழங்கு   கடைசி தேதி: 15-9-'90

சமையல் கூப்பன்

.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச் சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்


மென்மையான, அழகான மற்றும் செழிப்பான கூந்தலிற்கு இயற்கையான ஸ்வஸ்திக் சீக்காய் பராமரிப்பு.
SWASTIK
SHIKAKAI
BEAUTY SOAP FOR THE HAIR
செழிப்பான கூந்தலிற்கு இயற்கையான வழி. ஆதிகாலம் தொட்டு எல்லா காலங்களிலும் உபயோகித்து வரப்படுகின்றது.
ஸ்வஸ்திக் தயாரிப்பு
CONTOUR ADS-SSL-10490 TAM

இந்த மாதம் எப்படி?

செப்டம்பர் '90



மேஷ ராசி:

அசுவினி, பரணி, கிருத்திகை 1 — ஆம் பாதம்.

சனீஸ்வரன் சகல தொல்லைகளையும் தர இருக்கிறான். சூரியனால் சுகமில்லை. அங்காரகனோ அவமானத்தைத் தர இருக்கிறான். புதனும் புத்திரர் வழியில் மன நிம்மதியைக் கெடுப்பார். குருவும் கஷ்டங்களைத் தரப் பார்க்கிறார். இராகுவும் கேதுவும் கூட இஷ்டத்திற்கு ஆட்டிப் படைப்பார்கள். சுக்கிரன் ஒருவனே மாதத்தின் முன் பகுதியில் இவற்றைச் சமாளிக்கும் திறமையை உருவாக்குகிறார், என்றாலும் பிற்பகுதியில் அவரே நீச்சமடைந்து நிற்கிறார்..

எனவே அரசுப் பணியில் உள்ளவர்களும், வங்கிகளில் பணிபுரிபவர்களும் சற்று எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். திருமணப் பேச்சுத் துவங்கி, பாதியில் நின்று விடலாம். கலைஞர்கள் மட்டும் சற்று மன நிம்மதியுடன் இருக்கலாம். மற்றபடி மனதை வாட்டும் மாதமே. 4, 5, 6 தேதிகளில் உற்சாகமிருக்கும்.

ரிஷப ராசி:

கிருத்திகை 2, 3, 4 — ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 — ஆம் பாதங்கள்.

மாதத்தின் முதல் வாரத்தின் கடைசியிலும், இரண்டாவது வாரத்தின் ஆரம்பத்திலும், மகிழ்ச்சியும், மன நிறைவும் இருக்கும். சுபகாரியங்களில் பங்கேற்பது, அல்லது நடத்துவது என ஏதாவது ஒரு விதத்தில் மகிழ்ச்சி உண்டு. தாய் மாமன் வழியில் ஏதாவது வருமானமோ, பரிசோ கிடைக்கும். அது பணமாகவும் இருக்கலாம். அல்லது ஆடை ஆபரணமாகவும் இருக்கலாம். சிலருக்கு உடலில் வலியும், மனத்தில் விரக்தியும் மாதத்தின் மத்தியில் ஏற்பட்டு விலகும். நண்பர்களாலும், உறவினர்களாலும், நன்மை ஏற்படலாம். பள்ளியில் படிப்பவர்களுக்குச் சற்றுக் கடினமாக உழைக்க வேண்டிய கால கட்டம். மற்றபடி சற்று சுமாரான மாதமே.

மிதுன ராசி:

மிருகசீரிஷம் 3, 4 — ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 — ஆம் பாதங்கள்.

தைரியமாக நின்று ஒரு சாதனை புரிய இருக்கிறீர்கள். அது விளையாட்டிலும் இருக்கலாம். அல்லது வீட்டு விஷயங்களில் கூட இருக்கலாம். அதே சமயம் அலுவலகத்தில் பணிபுரிபவருக்கு மேலதிகாரியின் எச்சரிக்கை தரும் அளவிற்குத் தவறுகள் நேரிடலாம். ஏமாறவும் வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக ஜன நெரிசல் மிகுந்த இடங்களில் திடீரென ஏமாற வேண்டியிருக்கும். அலுவல் காரணமாகவோ, அல்லது வேறு காரணத்திற்காகவோ எதிர்பாராத பிரயாணம் ஒன்று மன விருப்பம் இன்றி செய்ய

வேண்டியிருக்கும். குரு பகவானின் கடாட்சம் இருப்பதால் அனைத்தும் நன்மையிலேயே முடியலாம். மாதத்தின் பிற்பகுதி நன்கு மன நிம்மதியைக் கொடுக்கலாம்.

கடக ராசி:

புனர்பூசம் 4 — ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.

இன்பமும், துன்பமும் கலந்தே காணப்படும் மாதம். எப்போதும் நல் துறையினரும் ஒப்பனைக் கலைஞர்களும், திரைப்பட நடிக நடிகைகளும், லாபத்தைப் பெறுகின்ற நிலை. யாத்திரை ஒன்று மேற்கொள்வீர்கள். வாகனாதியோகங்கள் உண்டு. வீடு, மனை, வாகனம், அல்லது வீட்டுக்குத் தேவையான மின்சாதனங்கள் ஏதேனும் ஒன்று வாங்க வேண்டியிருக்கும். எனினும் வயிறு, தோல், கண், இவை பாதிக்கப்படலாம். டயரியா, எக்ஸிமா போன்ற நோய்கள் வரலாம். உடனுக்குடன் குணமும் ஆகும்.

சிம்ம ராசி:

மகம், பூரம், உத்திரம் 1 — ஆம் பாதம்.

இந்த மாதத்தில் அலுவலகத்தில் பணி புரிபவர்களும் சரி, சமூக சேவகிகளும் சரி அளந்து, இடமறிந்து, ஆளறிந்து பேச வேண்டும். கோள் சொல்பவர்களும் காட்டிக் கொடுப்பவர்களும் உங்களுக்கு எதிர்பாராத, தேவையற்ற சங்கடங்களைத் தரத் தருணம் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். செய்யும் தொழிலில் இலாபம் வந்தாலும் கூடவே இரட்டிப்புச் செலவையும் ஏற்படுத்தும். மொத்தத்தில் சற்று எதிலும், எப்போதும், எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய மாதம்.

கன்னி ராசி:

உத்திரம், 2, 3, 4 — ஆம் பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1, 2 — ஆம் பாதங்கள்.

ஏகாதசி பிரகஸ்பதியாக குரு உச்சத்தில் இருப்பதால், உள்ளபடியே ஏராளமான நன்மையைச் செய்ய வேண்டும். எனினும், மாதத்தின் பிற்பகுதியில் குடும்பத்தில் தாம்பத்திய உறவில் சற்று குழப்பமான சூழ்நிலை உருவாகலாம். இந்த நிலை அடுத்து 15 நாட்களுக்கு நீடிக்கும். இந்த வேற்றுமை உணர்வு சுற்றத்தாரின் சம்பந்தமான ஒரு நிகழ்ச்சியினால் ஏற்படலாம். எனவே கூடிய மட்டும் கேளிக்கைகள் மற்றும் விருந்துகளில் கலந்து கொள்ளாமல் இருப்பது நலம். மற்றபடி பணி புரியும் பெண்கள், படிக்கும் மாணவிகள் மற்றும் நடிப்புத் துறையில் இருப்பவர்கள் அனைவருக்கும் சற்று எதிர் நீச்சல் போட வேண்டிய சூழ்நிலையில்தான் அனுபவித்துக் கழிக்க வேண்டிய மாதம்.



உலர்ந்த பட்டாணியை வேக வைத்துத் தாளிக்கும் பொழுது கொத்துமல்லி இலை, பச்சை மிளகாய், சிறிது தேங்காய்த் துருவல், உப்பு, சிறிது புளி இவற்றை அரைத்துப் பட்டாணியுடன் கலந்தால் ருசியாக இருக்கும். வெங்காயத்தைப் பொடியாக நறுக்கிப் பச்சையாகக் கலந்து கொள்ளலாம்.

— விஜயா.

துலா ராசி:

சித்திரை 3, 4 — ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 — ஆம் பாதங்கள்.

மாதத்தின் முற்பகுதியைச் சகலவிதத்திலும், சந்தோஷமான சூழ்நிலையில் அனுபவிக்கலாம். ஆனால் பிற்பகுதி அப்படிச் சொல்ல முடியாத நிலை. குடும்பச் சூழ்நிலையில் குழப்பங்கள் தோன்றும். அது மகனைப் பற்றியோ, அல்லது மனைவியைப் பற்றியோ கூட இருக்கலாம். உடல் நலமும் சற்றுக் குறையும். குறிப்பாக ஆஸ்துமா அரிப்பியா, டையபடீஸ், வியாதி உள்ளவர்கள், தனக்குச் சரிப்பட்டுவரும் மாத்திரைகளைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். மனை சம்பந்தமான விவகாரம் ஒன்று ஏற்படும் வாய்ப்பு உள்ளது. இதனால் அதிக செலவும் ஏற்படும். நல்லதொரு மாதமாகக் கூற முடியாது. கொடுக்கல் வாங்கலில் கூட சண்டை சச்சரவிற்கு இடம் உண்டாகி, வேண்டியவர்களை வேற்றுமை பாராட்டும் நிலை நீடித்துக் காணப்படுகிறது.

விருச்சிக ராசி:

விசாகம் 4 — ஆம் பாதம், அனுஷம், கேட்டை 1, 2, 3 — ஆம் பாதங்கள்.

மாதத்தின் பிற்பகுதி ஓரளவிற்குத் திருப்தியைத் தரும் வண்ணம் இருக்கும். மாதம் பூராவும் குருவின் அருட்பார்வையும், இராசிநாதனாகிய அங்காரகன் பார்வையும் பெறு



நினைவிருக்கட்டும், வைட்டமின்
மற்றும் மினரல் பற்றாக்குறையால் உங்கள்
குழந்தை அவதிப்படாமலிருக்க,
ஊட்டச்சத்துமிக்க சமநிலை உணவு தேவை.
"ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்."
உங்களுக்குத் தெரியுமா, சமச்சீராக உள்ள வைட்டமின்களும், மினரல்களும் ஊட்டச்சத்துகளை உறிஞ்ச உதவுகின்றன என்பது? போஷாக்குப் பற்றாக்குறையினால் குழந்தை அவதிப்படாமலிருக்க இது வகை செய்கிறது.
உங்கள் டாக்டரைக் கேளுங்கள். இந்த வைட்டமின்களையும் மினரல்களையும், போஷாக்குச் சத்துகள் சமச்சீராக உள்ள உணவின் மூலம் பெறுவதுதான் சிறந்த வழி என்பார். அந்த உணவில், புரோட்டீன்கள், கார்போஹைட்ரேட்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்சியம் சத்துகளும் சரியான விகிதத்தில் இருக்கவேண்டும். ஒவ்வொரு வேளை உணவிலும், ஒவ்வொரு நாளும்!
வழக்கமான உணவுகள் மூலம் இந்த எல்லா சத்துக்களையும் தருவது பெரும்பாலான தாய்மார்களுக்கு எளிதல்ல.
இதற்குத் தீர்வு?
செரிலாக். குழந்தைகளுக்கு நான்கு மாதம் முதல் வெறும் பால் உணவு மட்டும் போதாது. ஆகவே அப்போது முதல் தரக்கூடியது, ஊட்டச்சத்துக்களைச் சமச்சீராகக் கொண்ட திட உணவான செரிலாக்.
செரிலாக் ஏ, டி, சி, பி காம்ப்ளெக்ஸ் மற்றும் ஈ வைட்டமின்களால் செறிவூட்டப்பட்டிருக்கிறது. மேலும், இதில் புரோட்டீன், கார்போஹைட்ரேட்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்சியம் சத்துக்களும் உள்ளன-அனைத்தும் சரியான விகிதத்தில், குழந்தைகள் மிகவும் விரும்பும் சுவையுடன்!
ஆகவே போஷாக்குச் சத்துகளைச் சமச்சீராகக் கொண்ட செரிலாக் அனுகூலத்தை உங்கள் குழந்தைக்கு அளிக்கத் துவங்குங்கள். குழந்தைக்கு 6 மாதம் ஆனதும் விட்-ஆப்பிள், விட்-ஆரஞ்சு, மற்றும் விட்-வெஜிடபிள் ஆகியவற்றின் கூடுதல் அனுகூலங்களை அளியுங்கள்.
பேக்கின் மீதுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுக.
இலவசம்: செரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: செரிலாக், தபால் பெட்டி எண்-21, புது தில்லி-110029.
நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு
Nestlé Cerelac
Wheat
Nestlé Cerelac
Wheat
உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக்.
Mudra D-NES 0019 TAM

வதால், கடன், கோர்ட், மற்றும் எதிர்பார்க் கின்ற விவகாரங்களில் அனைத்திலும். கணிசமான வெற்றி கிடைக்கும். நடிகர் களுக்குத் திடீரென புதுப் புது ஒப்பந்தங்கள் ஏற்படும். எரிபொருள், காஸ்டிக் சோடா, மற்றும், இது சம்பந்தமான பொருள்களில் உற்பத்தியாளர்கள் கூடுதலாக இலாபத் தைப் பெறுவார்கள். பணிபுரிபவர்களுக்கு இதுவரை இருந்த எதிர்ப்புகள் குறையும்.

தனுசு ராசி:

மூலம், பூராடம், உத்திராடம் 1 — ஆம் பாதம்.

சற்றுச் சிரமமான மாதம். பொருளாதா ரத் துறையில் எதிர்பாராத சிரமங்கள் வரும். அலுவல்களில் பணிபுரிபவர்கள் சற்று சோதனைக்கும், மன வேதனைக்கும் ஆளாக நேரிடும். எந்தவிதத்திலும், ஏற்றமிகு மாதமாகக் கூற வழியில்லை. தொழிலில் மந்த நிலை, வேலை நிறுத்தம், மார்கெட் டில் திடீர் சரிவு என ஏதாவது ஒருவிதத்தில் தொழில் அதிபர்களும், தொழிலாளர்களும் அவதிப்படுவார்கள்.

மகர ராசி:

உத்திராடம் 2, 3, 4 — ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 — ஆம் பாதங் கள்.

குருவின் அருளாசி ஒன்றைத் தவிர வேறு எந்தவிதத்திலும், இந்த ராசிக்காரர்களுக்கு நன்மை அதிகமில்லை. மகத்தான மாறுதல் கள் ஒன்றும் நிகழ நியாயமில்லை. 7½ சனியின் சோதனையும் உண்டு. அதற்கேற்ப அலுவல்களில் பெண்களும் சரி, வீட்டு நிர் வாகம் செய்யும் ஆண்களுக்கும் சரி. சற்று அவதியும், வேதனையும் படத்தக்க நிலை யில் பொருளாதாரம் சரிந்து காணப்படும். இந்த நிலை இரண்டொரு மாதத்திற்கு நீடிக் கும்.

கும்ப ராசி:

அவிட்டம் 3, 4 — ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 — ஆம் பாதங்கள்.

சதய நட்சத்திரத்தில் பிறந்த ராஜ ராஜ னின் யோகம் இவர்களுக்குத் தற்போது ஏற் படும். எதிர்பாராத விதத்தில் ஒரு பெரும் தொகை கிடைக்கும். அது தொழில் ரீதியில் வரலாம். அல்லது கலைத் துறையில், லாட்டரி என ஏதேனும் ஒரு வழியில் வரலாம். மற்றபடி வெளியூர் பிரயாணம் ஏற்படலாம்.

மீன ராசி:

பூரட்டாதி 4 — ஆம் பாதம், உத்திரட் டாதி, ரேவதி.

இவர்களுக்கு நல்ல யோக காலம் ஆரம் பம். எதிர்பார்த்துக் காத்திருந்த இலட்சியம் கைகூடி, மகிழ்ச்சியில் திளைப்பீர்கள். இது சுப நிகழ்ச்சிகள் மூலம் வரலாம். அல்லது பதவி உயர்வு, மாற்றம் திரைப்படத் துறை யில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்துக் கொண்டிருந்த பிரபல நடிகர்களுடன் நடிக்க ஒப்பந்தம் ஏற்படலாம். கண்டிப்பாக பாங்க் பாலன்ஸ் உயரும். எனினும், வயிற்றை மட்டும் நன்கு கட்டுப்படுத்தி வையுங்கள்.

குரு தருகின்ற யோகத்தைப் பெறு கின்ற பாக்கியவதி யார்?


"அம்ச தூளிகா மஞ்சத்தில் அமர்ந் திருக்க, அப்போது அக்னி குமாரி கால்களை வருடிவிட, இந்திரகுமாரி இன்னிசை பாட, வருணகுமாரி பன்னீர் தெளிக்க வாயுகுமாரி சாமரம் வீச" வேண்டுமென ஒருவன் ஆசைப்படுகிறான் என்றால் அவனைப் பற்றி நாம் என்ன நினைப்போம்! ஆனால் உள்ளபடியே ஒருவன் அவ்வாறு ஆசைப் பட்டு, அந்த ஆசையை வாழ்க்கையில் நிறை வேற்றியும், காட்டியிருக்கிறானாம். அவனது கதையை 50 ஆண்டுகளுக்கு முன்பு ஜகதலப் பிரதாபன் எனும் படமாக்கி பணமும் ஆக்கிக் கொண்டார்கள் அந்தக் காலத்துச் சினிமா ஜாம்பவான்கள். இப்படி ஹம்ச தூளிகா மஞ்சத்தில் அமர்ந்து, அப்படிப் பட்டதொரு சுவர்க்க வாழ்க்கையை அனுப விக்க கொடுத்தவர்களுக்கு அடிக்கும்

சிலர், நவராத்திரிக்கு ஒன்பது குழந்தை களுக்கு ரவிக்கைத் துணி கொடுப்பார் கள். அதைவிட, ஓர் ஏழைக் குழந்தைக்கு, ஒரு செட் ஸ்கூல் யூனிஃபார்ம் தைத்துக் கொடுத்தால் உபயோகமும், புண்ணி யமும் சேருமே.

— பார்வதி.



அன்று கேலி செய்தவர்கள் இன்று



இந்த வயசுல நீ இங்கிலீஷ் கத்துக்கப் போறியா என்று எனது தோழிகளும் உறவினர்களும் என்னை கேலி செய்த போது இங்கிலீஷ் கற்றுக் கொள்வது மிகவும் கடினமாக இருக்குமோ என்று நினைத்தேன்.

வேலைக்குப் போய் விட்டு வந்து, வீட்டு வேலையையும் குழந்தைகளையும் கவனிப்பதற்குத்தான் நேரம் சரியாக இருக்கிறது இந்நிலையில் இங்கிலீஷ் கற்றுக் கொள்வது எப்படி என்று சிந்தித்து வந்தேன்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் இங்கிலீஷ் கற்றுக் கொள்ளலாம் என்ற விவேகானந்தா கல்வி நிலையத்தின் விளம்பரம்பார்த்தேன்.

ட்ரை பண்ணிப்பார்க்கலாம் என்று தபால்முறை பயிற்சியில் சேர்ந்தேன். ஓர் ஆசிரியர் எதிரில் இருந்து பாடங்களைச் சொல்லி கொடுப்பதைப் போல பயிற்சி முறை மிகவும் எளிய முறையில் அமைக்கப் பட்டிருப்பதால் தபால் முறைப் பயிற்சி என்ற எண்ணமே தோன்றவில்லை.

அலுவலக விஷயமாக மேலதிகாரிகளிடம் ஆங்கிலத்தில் தயக்கமின்றி என்னால் இப்பொழுது சரளமாகப் பேசமுடிகிறது. மேலும் பாடசம்பந்தமாக குழந்தைகள் கேட்கும் சந்தேகங்களுக்கு விளக்கமளிக்க முடிகிறது.

இந்த வயசுல இங்கிலீஷ் படிக்கப் போறியான்னு கேலி செய்தவர்கள் என்னிடம் ஏற்பட்டுள்ள மாற்றத்தைக் கண்டு அதிசயப்படுவதுடன் தாங்களும் இப்பயிற்சியில் சேர்ந்து பயன்பெற விரும்புகிறார்கள்.

விவேகானந்தா கல்வி நிலையத்தின் பணி மென்மேலும் தொடர வேண்டும் என்பதே என் விருப்பம்

Mrs. ரேகா, சென்னை-40.

நீங்களும் வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் ஆங்கிலம் எழுத,பேச பயிற்சி பெறலாம். நேர்முகப்பயிற்சியும் உண்டு. இப்பயிற்சி பற்றி மேலும் விபரமறிய கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

விவேகானந்தா கல்வி நிலையம்


தபால் பெட்டி எண்: 4986, 9.மேட்லி ரோடு, தி.நகர், சென்னை-17.

யோகமே ஹம்ச யோகம். மகாபுருஷ யோகங்களில் ஒன்றான ஹம்ச யோகத்தை அளிக்கும் உரிமை குருபகவான் ஒருவருக்கே உண்டு. ஒருவரது ஜாதகத்தில் குரு உச்சமோ, அல்லது ஆட்சியோ பெற்று லக்கின கோணங்களில் அமர்ந்து நல்ல கிரகங்களால் பார்வையும் பெற்றிருக்க வேண்டும். பெண்களது இடது கையில் குரு மேட்டில் (j) நல்லதொரு கிரக சந்தியும் அத்துடன் (s) தாமரை, போன்ற அடையாளக் குறிகளும் இருந்தால் அம்ச யோகம் ஏற்படும். அத்துடன் ஆயுள் ரேகை நன்கு வளைந்து சுக்கிரமேட்டின் எல்லையில் (x — y) அமைய வேண்டும். அதே சமயம் சந்திர மேட்டில் ஒன்றோ அல்லது பல ரேகைகளோ தோன்றி (m n) குரு மேட்டை நோக்கி நிற்க வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்கு ஹம்ச யோகம் உண்டாகும். அதன் பலனும் அவர்களை வந்தடையும்.

ஹம்சயோகம் பெற்ற பெண்கள் நன்கு படித்தும், அழகான கணவனையும், செல்வச் செழிப்புள்ள வாழ்க்கையும் பெறுவார்கள். அவர்களுக்கு எண்ணியது நடக்கும். தொட்டது துலங்கும். சர்வாபரணங்களையும் பூண்டு, சர்வ மங்களத்துடன் நெற்றியில் அகன்ற குங்குமத்துடனும், காதிலும் கழுத்திலும், மூக்கிலும், வைரம் மின்ன சிரித்த முகத்துடனும் இருக்கும் சௌபாக்கியவதிகளைப் பல இடங்களில் குறிப்பாகக் கோயில்களில், சங்கீதக் கச்சேரிகளில், நடன அரங்கங்களில் நாம் பார்க்க முடிகிறது. அவர்கள் இப்படிப்பட்ட நிலையில் இருப்பதற்கு அவர்கள் பெற்றுள்ள ஹம்ச யோகம்தான் காரணம். திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அம்மையார் போன்ற சிறந்த இசை மேதைகளாகவும், தருமசீலர்களாகவும் விளங்கும் எத்தனையோ பெண்மணிகள் அத்தகைய ஹம்ச யோகத்தைப் பெற்றவர்களே ஆவார்கள். அவர்கள், அவ்வாறு அப்பழுக்கற்ற வாழ்க்கையைப் பெற அவர்களுக்குக் குரு பகவானின் மூலமாக அதிதேவதையான சாக்ஷாத் தட்சிணாமூர்த்தியின் பரிபூர்ணமான அருள் கிட்டியதே காரணமாகும். எனவே பெண்கள் தங்கள் இடது கைகளில் மேலே காணப்பட்ட ரேகைக் குறிகளைக் கண்டால் தங்களுக்கு அந்த யோகம் ஒரு காலத்தில் வரும் என அறியலாம். அதற்கேற்ப இதுவரை இருந்த முன் கோபம், எதையும் குற்ற நோக்கத்துடன் காண்பது, யாரையும் அலட்சியப்படுத்துவது போன்ற செய்கைகளை விடுத்து குருபகவானையும், சிவன்கோவில் கர்பக் கிரகத்திற்குத் தெற்கில் கல் ஆலமரத்தடியில் அமர்ந்து யோக முத்திரையைக் காட்டும் தட்சிணாமூர்த்தியையும், தவறாமல் ஆராதிக்க வேண்டும். அப்படி யார் ஒருவர் அத் தெய்வத்தை நாவாரப்பாடி நயந்துருகிப் போற்றுகிறார்களோ அவர்களுக்கு உற்ற துணையாக நின்று உரிய காலத்தில் தர வேண்டியதைத் தந்து தரணி புகழும்படி அவர்களை ஆளாக்குவார் குருபகவான். அதற்கு உறுதுணையாக நிற்பார் தட்சிணாமூர்த்தித் தெய்வம். ஆகவே குருபகவான் தருகின்ற பாக்கியத்தைப் பெறுகின்ற யோகமே ஹம்ச யோகம். உங்களுக்கும் அது கிடைக்கட்டுமே!

— ஜெயலட்சுமி கிருஷ்ணன்.





இப்பொழுது வரும் குக்கர் 'கேஸ்கட்'கள் தரமானவையாக இல்லாதிருப்பதால் வாங்கிய சில நாட்களிலேயே குக்கரில் ஸ்டீம் வெளியாவதும், நீர்த் தாரைகளாகக் கொட்டுவதும் ஏற்பட்டுச் சாதம் வேகப் பெரும் திண்டாட்டமாகி விடுகிறது. தண்ணீரில் கேஸ்கட் வளையத்தைப் போட்டு வைத்திருந்தாலும் கூடச் சமயத்தில் காலை வாரி விட்டுவிடும். வீட்டில் ஃப்ரிட்ஜ் வைத்திருப்பவர்கள் ஃப்ரீஸரின் கீழ் இருக்கும் "சில் பிளேட்டில்" கேஸ்கட் வளை ரப்பரைப் போட்டு வைத்திருந்து தேவையான சமயங்களில் எடுத்து உபயோகித்தால் துரிதமாகச் சமைக்கலாம்.

— சந்திரா.

ஜப்பானில் பொம்மைக் கொலு

நம் பாரதத்தின் பண்பாடும், கலாசாரமும் மிகவும் புராதனமானது. ''இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய்'' என்று பாரதி பாடியதற்கு ஏற்ப இக்கலாசாரத்தின் தோற்றமும் வளர்ச்சியும் காலத்திற்கு அப்பாற்பட்டது. இதன் சாயல் உலகெங்கிலும் காணக்கிடைக்கிறது. இப்படி உலகில் பல பகுதிகளில் காணப்படும் பல்வேறு பழக்க வழக்கங்களில் நம் கலாசார வழக்கம் கலந்திருக்கிறது. அதற்கு மற்றொரு உதாரணம் ஜபபானில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் பொம்மைக் கொலு விழா!

ஆம், நாம் நவராத்திரிப் பண்டிகையை பொம்மைகள் வைத்துக் கொண்டாடுவதைப் போலவே ஜப்பானியர்களும் ஒவ்வொரு வருடமும் மார்ச் மாதம் 3 ஆம் தேதி ஹினா மட்ஸூரி (பொம்மைப் பண்டிகை) என்று கொண்டாடுகிறார்கள். இதே நாளை பெண் குழந்தைகள் பண்டிகை என்றும் அழைக்கிறார்கள். ஆக, நம் நவராத்திரி எப்படி பெண் குழந்தைகளுக்கு மிகவும் பிடித்த, முக்கியமான பண்டிகையோ அதே போல் பொம்மைப் பண்டிகையும் ஜப்பானியக் குழந்தைகளுக்குப் பிடித்த பண்டிகை.

இந்தப் பண்டிகை துவங்கியதே மிகவும் சுவாரசியமான விஷயம். சுமார் ஆறாம் நூற்றாண்டு வாக்கில் இந்தியாவின் பொம்மை செய்யும் கலை ஜப்பானில் பரவத் தொடங்கியது. அதன்பிறகு பொம்மை செய்வது ஒரு பிரபலமான தொழிலாக மாறியது. உண்மையில் முதலில் உருவான பொம்மை தர்மா பொம்மைதான். இந்திய அரசர் ஒருவரின் மகனான போதி தர்மா என்பவர் சைனாவில் சுமார் ஒன்பது வருடங்கள் ஆடாமல் அசையாமல் அமர்ந்து தவம் செய்தார். அதன் பலனாய்'ஜென்புத்தமதம்'' தோன்றினாலும் போதி தர்மாவிற்குக் கை கால்களைப் பயன்படுத்துவதே மறந்து விட்டதாம். எனவே தர்மா பொம்மைக்குக் கைகால் இருக்காது. சிவப்புத்துணியில் பொதியப்பட்ட இது நம்மூர் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை போல் இருக்கும். கண்கள் உள்ள பகுதி வெள்ளைக்காகிதத்தால்மூடப்பட்டிருக்கும். குடும்பத்தில் நினைத்த காரியம் கைகூடினால் காகிதத்தைக் கிழித்து விட்டு கண் வரைவார்க்ள.

இந்த பொம்மையைக் குழந்தைக்கு முதல் பொம்மையாகப் பரிசளிப்பார்கள்.



* கொகேஷி பொம்மை

* பண்டிகையன்று அலங்காரத்துடன்





• தர்மா பொம்மை

அதிர்ஷ்ட பொம்மையாகக் கருதப்படும் இதைப் புத்தாண்டு தினத்தன்று ஒருவருக்கு ஒருவர் பரிசளித்துக் கொள்வார்கள். இப்படி வீட்டில் நிறைய தர்மா பொம்மைகள் சேரத் துவங்கின. தர்மா பொம்மையைப் போலவே பிரபலமான மற்றொன்று கொகேஷி பொம்மை. ஒரு சமயம் ஜப்பானில் பியூடல் சண்டை ஏற்பட்டது. அதனால் பாதிக்கப்பட்ட ஏழை விவசாயக் குழந்தைகளை சந்தோஷப்படுத்த அந்நாட்டு இளவரசி இந்தப் பொம்மையைச் செய்தாளாம். ஒரே மரத்துண்டிலிருந்து செய்யப்படும் இதன் தலை மட்டும் எல்லாப் பக்கமும் சுழலும். கைகால்கள் இல்லாத இந்த பொம்மை நேராக நிற்கும். இதன் அழகும் வனப்பும் காண்பவர் சிந்தையைக் கவரும் வண்ணம் இருப்பதால் ஜப்பானில் பல தொழிற்சாலைகள் இந்த பொம்மையைத் தயாரிப்பதற்காகவே துவங்கப்பட்டன.

இந்நிலையில் பொம்மைகளின் ஆதிக்கம் அதிகமாகிவிட்ட படியால் இதற்கென்று ஒரு பண்டிகை கொண்டாட வேண்டும் என்று தோன்றியது. எனவே பெண் குழந்தைகள் பண்டிகையை பொம்மைப் பண்டிகையாக நாடு முழுவதும் கொண்டாடத் துவங்கினார்கள். பண்டிகை கொண்டாடும் முறை அசல் நம் நாட்டு நவராத்திரி மாதிரியேதான் இருக்கும்.

பொம்மைகள் தலைமுறை தலைமுறையாக சேகரிக்கப்பட்டு வருவதால் மிகப் பத்திரமாகப் பெட்டியில் பேக் செய்து வைத்திருப்பார்கள். மார்ச் மாதம் 3 ஆம் தேதி பொம்மைகளை வெளியே எடுத்து, வீட்டின் அழகான அறையில் படிகட்டி வைப்பார்கள். 3, 5, 7 என்று ஒற்றைப்படையில் படிகட்டி, பிரகாசமான சிவப்பு விரிப்பை விரித்து பொம்மைகளை வைப்பார்கள். எப்படி மரப்பாச்சி பொம்மையில் துவங்கிய நம்ம ஊர் கொலு கிரிக்கெட் செட் வரை முன்னேறியுள்ளதே. அதே போல பல பொம்மைகள் பிரபலம். அவற்றுள் முக்கியமானது தாரி ஸாமா என்று வழங்கப்படும் அரச அவை செட் பொம்மைகள். சக்கரவர்த்தியும், அவர் மனைவியும் நடுவில் அரியணையில் அமர பக்கங்களில் அமைச்சர்கள், அரசகுலப் பெண்கள், அரசவை இசைக்கலைஞர் என்று பலரும் இருப்பார்கள். பொம்மைகள் பட்டு, ஜரிகை வேலைப்பாடுடன் கூடிய ஆடம்பரமான உடைகளை அணிந்திருக்கும். (இதைப்பார்க்கும் போது நம்மூர் கொலுவில் கூட ஹஸ்தினாபுரம் அரசவைக் காட்சியை வைத்தால் என்ன என்று தோன்றுகிறது. எவ்வளவு கேரக்டர்களைக் காட்டலாம்!)

இதற்கு அடுத்தபடி பிரபலமான செட் "ஏழு கடவுள்கள்" பொம்மைகள். இவை நாம் வைக்கும் தசாவதாரம் பொம்மைகளைப் போன்றவை. வீரம், ஆயுள், அறிவு, ஆரோக்கியம், தொழில், செல்வம் என்று ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஆண் கடவுள். ஆனால் எப்படி சரஸ்வதி கல்வி, கலைகளுக்குத் தெய்வமோ அதேபோல பென்டென் என்னும் பெண் கடவுள் கல்வி, கலைகளுக்குத் தெய்வம். ஆக தெய்வ வழிபாட்டில் கூட இந்திய முறை சில வகைகளில் பின்பற்றப்படுவது ஆச்சரியப்படத்தக்க செய்தியாகும்.

இப்பண்டிகை அவரவர் வீட்டில் கொண்டாடப் படுகிறது. மற்ற பண்டிகைகள் அந்தந்தப் பகுதியில் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு ஊர்வலமாகவோ பொது இடத்தில் வேடிக்கை விளையாட்டாகவோ கொண்டாடப்படுகின்றன. இந்தப்பண்டிகை அன்று வீட்டிலுள்ள பெண் குழந்தைகள் அவர்களது தேசிய உடையான கிமோனாவை அணிந்து அழகாக அலங்கரித்துக் கொண்டு கொண்டாடுவார்கள். வீட்டையும் அலங்கரிப்பதுண்டு. நம்மைப் போல் பூஜை, நைவேத்தியம் என்று இல்லாவிட்டால் கூட ஒரு நாளில் கொண்டாடப்படும் இந்தப் பண்டிகை மக்கள் மனத்தில் மகிழ்வையும், உற்சாகத்தையும் ஏற்படுத்துகிறது. அடுத்த வருடம் எப்போது வரும் என்று குழந்தைகள் ஆர்வத்துடன் எதிர்பார்ப்பார்கள்.

ஜப்பானைப் பற்றிய வியக்கத்தக்க செய்திகளை நாம் கேள்விப்பட்டாலும் நம் பாரதத்தின் புராதனப் பழக்கங்கள் அங்கும் வேர் விட்டு வளர்ந்துள்ளது என்பதை அறியும் போது இருநாடுகளும் மனத்தாலும் நெருங்கி வந்துவிடுகின்றன. அடுத்த முறை கொலு வைக்கும் போது ஜப்பான் நாட்டுக் குழந்தைகளுக்கும் கூட ஒரு அழைப்பு அனுப்பினால் என்ன?

— லக்ஷ்மி சங்கர்.

தலை முதல் கால் வரை...

கண்ணே கண்ணு

அழகு + ஊட்டச் சத்து + மருத்துவத் தொடர்...

அதிக அன்பினால் குழந்தையைக் கொஞ்சும் போது வரும் முதல் வார்த்தை என்ன? 'என் கண்ணு' என்பது தானே! என் கண் போல் பத்திரமாகப் பாதுகாப்பேன்' என்று தானே உறுதி மொழி அளிக்கிறோம்? பெரிய மாணவர்களுக்குக் கூட பாடங்களை விளக்க கண்களால் பார்க்கக் கூடிய படங்களுடன் கூடிய பயிற்சி அதிக பயனளிப்பதாக ஆராய்ச்சி கூறுகின்றது. இந்தக் கண்ணை எப்படிப் பாதுகாக்கலாம்? எப்படி அழகு படுத்தலாம்?

மருத்துவராக...

கண்ணில் தோன்றும் சாதாரண உபாதைகளுக்கான நிவர்த்திகளைப் பார்ப்போம். சளி பிடிப்பதால் கண் இடுங்குதல், நீர் வழிதல், கிருமிகள், வைரஸ் இவைகளால் ஏற்படும் கண் நோய்கள், பெண்கள் தரக் குறைவான அல்லது மற்றவரது கண் அழகு சாதனங்களை உபயோகிப்பதால் ஏற்படும் அலர்ஜி, ஒளிக் குறைவான இடத்தில் படிப்பதால் ஏற்படும் கண் சோர்வு. முறையற்ற வகையில் வளைந்து கொண்டும், படுத்துக் கொண்டும் படிப்பதால் ஏற்படும் பாதிப்பு தூக்கமின்மை. அதிக நேரம் படித்தல் போன்றவற்றால் கண் சிவத்தல், தூசி, மகரந்தத்தூள் இவை கண்ணில் படுவதனால் ஏற்படும் அரிப்பு, கசிவு, இவைகளை நாம் அன்றாட வாழ்க்கையில் அடிக்கடி காண்கிறோம். ஆனால் சரி செய்து கொள்ள முயற்சிகள் அதிகம் எடுப்பதில்லை. இக்குறைகள் பெரிய கஷ்டங்களில் கொண்டு போய் விடக்கூடும். இவற்றை ஆரம்பத்திலேயே கவனிப்பது நல்லது.

சில யோசனைகள்

போதுமான வெளிச்சமுள்ள அறையில், புத்தகம் கண்ணில் இருந்து ஒரு அடி தூரமாவது தள்ளி வைத்து, கண்ணுக்கு நேராக புத்தகத்தைப் பிடிக்காமல் முகத்திற்குச் சற்று கீழே 45° அளவில் தாழ்த்திப் பிடித்து படிக்க வேண்டும். தொடர்ந்து அதிக நேரம் படிப்பது எந்த வயதினருக்கும் சோர்வை அளிக்கும். ஆதலால் அரை மணி நேரத்திற்கொரு முறை கண்களுக்குச் சற்று ஓய்வு அளிக்கவும். அதிக நேரம் உற்றுப் பார்க்காமல் கண்களை அடிக்கடி மூடித்திறக்கவும்.

இரவு நேரங்களில் படிக்கும் பொழுது தோளுக்குப் பின்புறம் சற்று மேலே உள்ள விளக்கின் கீழ் அமர்ந்து படித்தல் நலம். பழக்கம் காரணமாக பலர், எதையும் கண்களைக் குறுக்கிக் கொண்டு பார்ப்பார்கள். இப் பழக்கத்தை அவசியம் தவிர்க்கவும். சோர்வுற்ற கண்களில் வெள்ளரித்துண்டு வட்டமாக அரிந்து பத்து நிமிடம் வரை வைத்திருப்பது, பஞ்சில் சுத்தமான பன்னீரை நனைத்து வைப்பது போன்றவை கண்ணுக்கு புத்துணர்ச்சி அளிப்பதுடன் கண்களைச் சுற்றிய கருப்பு மறைய உதவும். சுகாதாரக் குறைவின் காரணமாக கண்ணின் முடிகால்களிலும், இரப்பையின் உள்ளிலும் சிறு கட்டிகள் தோன்றும். மருத்துவரின் உதவியால் சரி செய்ய வேண்டும். சிகிச்சைப் பெறாவிடில் இவை அடிக்கடி தொடரும். அடிக்கடி அவ்வாறு தோன்றுமானால சர்க்கரை நோய் உள்ளதா என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். பொதுவில் கண்களைச் சுத்தமான குளிர்ந்த நீரில் கழுவுவது நல்லது. கசிவின் காரணமாக கண் ஒட்டிக் கொள்ளும் போது வெது வெதுப்பான நீர் பலன் அளிக்கும்.

சிலருக்கு கடினமான வேலை செய்யும் பொழுது, அல்லது அதிர்ந்து தும்மும் பொழுது அல்லது வேகமாக வாந்தி எடுக்கும் பொழுது கண்ணின் வெள்ளைப் பகுதியில் இரத்தக் கசிவு ஏற்படக் கூடும். இவர்கள் இதற்காகப் பதற வேண்டாம். அருகில் இருக்கும் மருத்துவரின் ஆலோசனையைப் பெறவும். கிருமிகளின் காரணமாகக் கண்களுக்குச் சொட்டு மருந்தை உபயோகிக்கும் போது பின்பு அதை அடைப்பானைக் கொண்டு மறக்காமல் மூடி வைக்க வேண்டும். சொட்டு மருந்துகளை உபயோகிக்கும் முன் கைகள் சுத்தமாக இருத்தல் அவசியம்.

சிலருக்கு எப்போது எக் காரணங்களுக்காக கண் மருத்துவரை அணுக வேண்டும் என்று தெரிவதில்லை.

தூரப் பார்வை

கலங்கலான பார்வை, தூரத்தில் உள்ள பொருட்கள் சரிவர தெரியாதிருத்தல் அடிக்கடி கண்ணாடி மாற்றினாலும் பார்வை கலங்கலாக இருத்தல், திடீரென ஏற்படும் சிவந்த வலியுள்ள கண், கூடவே வாந்தி எடுத்தல், கண்ணில் நீர் வழிதல், கசிவு போன்றவை கண்டிப்பாகக் கண் மருத்துவரின் சிகிச்சைப் பெற வேண்டியவை.

குழந்தைகளுக்கு மூன்றிலிருந்து நான்கு வயதிற்குள் பள்ளி செல்லும் பருவத்தில் கண்ணைப் பரிசோதனை செய்ய வேண்டும். தூரப் பார்வை என்பது நடுத்தர வயதிற்கு மேற்பட்டுத்தான் தோன்றுகிறது. ஏனெனில் இள வயதில் வலிவுள்ள கண் தசைகளில் கோளாறு தெரிவதில்லை. தசைகள் சற்று தளரும் போதே தூரப் பார்வை கோளாறு தெரிகின்றது. நல்ல கண் பார்வை பெற்றவர்கள் கூட திடீரென சற்றுப் பார்வை தெரியாமல் அல்லது ஒரு குறிப்பிட்ட நிலையில் பார்வை தெளிவு இல்லாமல் இருப்பார்கள். அல்லது ஓர் நீர் வீழ்ச்சியினூடே பார்ப்பது போல் அவர்களுக்கு மங்கலான பார்வை ஏற்படக்கூடும். இவை நோயாலும் ரெடினா என்ற கண்திரை நழுவுவதாலும், வயது கூடுதலின் காரணமாகவும் தோன்றும்.

கிட்டப் பார்வை

அருகிலுள்ள பொருட்கள் தெளிவாகவும், தள்ளி இருப்பவை மங்கலாக அல்லது தெரியாமல் இருக்கும் இக் குறைபாடு சிறு குழந்தைகளிடையே பரம்பரைக் காரணமாகவும் ஏற்பட்டுவிடக் கூடிய கோளாறு. நல்ல கண் பார்வை உடையவர்கள் கூட ஒன்றரை வருடத்திற்கொருமுறை கண் பரிசோதனை செய்து கொள்ளலாம். சர்க்கரை வியாதி உடையவர்களும், வயது கூடியவர்களும் அடிக்கடி கண்களைச் சோதித்துக் கொள்ள வேண்டும். இரவு நேரத்தில் கார் ஓட்ட முடியாமை, நிற வேற்றுமை தெளிவாகத் தெரியாமை இவற்றை அலட்சியம் செய்தல் கூடாது.

விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தினால் மாறு கண் உடையவர்கள் வேதனைப் படத் தேவையில்லை. கண் ஆஸ்பத்திரிகளில் இதைக் குணப் படுத்துவதற்கான பயிற்சிகளும், அறுவை சிகிச்சைகளும் அளிக்கப் படுகின்றன.

கவலைப்பட வேண்டிய நோய்

கவலைப் பட வேண்டியதாகக் காட்சி அளிப்பது மாலைக் கண் நோய்தான். போதுமான அளவு வைட்டமின் 'ஏ' சத்து இல்லாததால் ஏற்படும் நோய். ஆரம்பத்திலேயே இதற்கான சிகிச்சை பெறாவிடில் பின் விளைவுகள் அதிகமாக ஏற்படும்.

ஊட்டச் சத்து வல்லுனராக...

கவனக் குறைவினாலேயே நாம் கண்களில் பாதிப்பை ஏற்படுத்திக் கொண்டு அவதிப் படுகிறோம். அன்றாட உணவில் பச்சைக் காய்கறிகள், கீரைவகைகள், பால்,





பனியில் நனைந்த மலர் போல் குளுமை நிறைந்த புதுமை!
கிரௌன் ஹெர்பல் ஷாம்பூ, சித்த வைத்திய முறைப்படி மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படுவது. எல்லா வகைக் கூந்தலுக்கும் ஏற்றது. கூந்தலைச் சுத்தம் செய்வதோடு பாதுகாப்பும் அளிக்கிறது.
கூந்தலின் வேர்க்கால்களில் உள்ள ஊட்டச் சத்துகளையும் ஈரப் பசையையும் காத்து கூந்தலுக்கு வலுவூட்டுகிறது.
கூந்தலைச் சீராகப் பதப்படுத்தி இயற்கையான நிறத்தையும் பொலிவையும் மீட்டுத் தருகிறது.
ஒவ்வொரு முறையும் குளிர்ச்சியும் புத்துணர்ச்சியும் மலரச் செய்கிறது.
CROWN
கிரௌன்
ஹெர்பல் ஷாம்பூ
CROWN
HERBAL SHAMPOO
CROWN
Insight- CHP -1042



புருவத்தை வில்போல் தீட்டலாம்.



அதிக அடர்த்தி புருவம் அழகில்லை.



ஐலைனர் கண்களைப் பெரிது படுத்திக் காட்டும்.



ஐஷேடோ கண்களைக் கவர்ச்சியாகக் காட்டும்.

முட்டை முக்கியமாக முருங்கைக் கீரை, காரட் இவை சேர்க்க விட்டமின் 'ஏ' சத்துக் குறைவினால் ஏற்படும் மாலைக் கண் நோய், கண்ணில் விழும் புள்ளிகள், பார்வை கோளாறு இவற்றைத் தவிர்க்கலாம். பாதாம் கருவளையம் உள்ளவர்கள் காரட் ஜூஸ் குடிக்கலாம். தினசரி எட்டு டம்ளர் தண்ணீர் அருந்த வேண்டும். வைட்டமின் ஈ குமாய் மாத்திரையையும் சாப்பிடலாம்.

கண்ணில் அடிபடுதல், அலர்ஜி இவைகளை கண் மருத்துவரின் உதவியுடன் காலம் தாழ்த்தாத சிகிச்சை அளிக்கலாம். நன்கு படிக்கும் குழந்தைகளின் மதிப் பெண் திடீரென குறைந்தாலோ, தலைவலி என்று அடிக்கடி கூறினாலோ கண்களைப் பரிசோதனை செய்யுங்கள். முறையாக அமர்ந்து படிக்கும் வழக்கத்தை உருவாக்குங்கள். இரு கைகளையும் சற்று குழித்துக் கொண்டு கண்களின் மேல் லேசாக அழுத்தாமல் மூடி கண்களுக்கு ஓய்வளியுங்கள்.

பச்சை நிறம் கண்ணுக்குக் குளிர்ச்சி. சிறிது மாறுகண் உடைய குழந்தைகளுக்கு நடனம் சொல்லிக் கொடுத்தல் கண்ணுக்குச் சிறந்த பயிற்சியாக அமையும்.

அடிக்கடி சினிமாப் படம் பார்த்தல் நல்லதல்ல. சூரிய நமஸ்காரம் கண்களுக்கு மிகவும் நல்லது. கர்ப்ப காலத்தில் முதல் மூன்று மாதக் காலத்தில் 'ஜெர்மன் மீஸல்ஸ்' என்ற அம்மை நோய்க்கு ஆளாகக் கூடாது. சத்துள்ள உணவு கர்ப்ப காலத்தில் மிக அவசியம். தூசி மிகுந்த ஆபத்தான இடங்களில் வேலை செய்பவர் பாதுகாப்பு கண்ணாடி அணிதல் வேண்டும். கண்களை அழுத்தித் தேய்க்கக் கூடாது. விழி லென்ஸ் அணிபவர் முதலில் பழக்கமின்மை காரணமாக சற்று அவதிப்படலாம். லென்ஸ் அணிவதால் எரிச்சல், சரியான பார்வை இல்லாவிடின் கழற்றிப் பரிசோதனை செய்ய வேண்டும். தூங்கும் பொழுதும், நீந்தும் பொழுதும் லென்ஸை கழற்றி விட வேண்டும். சுகாதார முறையில் லென்ஸ் உபயோகப் படுத்தப் பட வேண்டும். தலை முடியை டிரையர் மூலமாக உலர வைக்கும் பொழுதும், முடிக்கு 'ஸ்ப்ரே' உபயோகிக்கும் பொழுதும் கண்களை மூடிக் கொள்வது நல்லது.

ஆரம்ப காலங்களில் இருந்தே குழந்தைகளின் கண் நலனில் அக்கறை செலுத்துதல் தேவை. காரட், முருங்கைக்காய் இவற்றை நன்கு வேகவைத்து மசித்து சாதத்தில் கலந்து கொடுத்துப் பழக்கவும். கீரை வகைகளை உணவில் ஒரு பிடியாவது சேர்த்து வரவும். மீன், பால், முட்டை போன்றவை கண்களுக்கு வலுவூட்டுவன. கண்களில் இளங்காலை வெயில் மிதமாகப் படுதல் நல்லது. கண்களில் எண்ணெய் விடுவது போன்றவற்றை அடியோடு தவிர்க்கவும். கைக் குழந்தைகளின் விரல் நகங்களை அளவாக வெட்டி விடவும். கைக்குழந்தையின் கண்கள் அளவுக்குமீறிய பெரிதாகத்தோன்றினால் உடனடி மருத்துவரிடம் கொண்டு செல்லவும். கைக் குழந்தைகளை அடிக்கடி நிற்க வைத்து வேடிக்கைப் பார்த்தல் கூடாது.

சினிமா டிராமா பார்க்கும் பொழுது சற்று தலையைத் தூக்கினாற் போல் வசதி



"எந்த வீட்டுக்குப் போனாலும் பாட்டுப் பாடாமல் எனக்கு வெற்றிலை பாக்குக் கொடுக்க மாட்டா..."

"எனக்கு அப்படி இல்லை. போய் உட்கார்ந்த உடனே வெற்றிலைப் பாக்கு கொடுத்திடுவா."

— சாரதி.

யாக முதுகு நல்ல வசதியுடன் சாய்ந்து பார்ப்பது கண்களுக்கு நல்லது. கண்ணாடி அணிபவர்கள் போடும் பொழுதும் கழற்றும் பொழுதும் இரு கைகளையும் உபயோகிக்க வேண்டும். இதில் ஸ்டைலோ, அவசரமோ தேவையற்றது. கீறல் விழுந்த, கறை படிந்த கண்ணாடி பார்வையைக் கெடுக்கும்.

அழகுக்கலை நிபுணராக...

அழகான கண்ணை பெண்கள் ஆராதனை செய்ய வேண்டும். வில் போன்ற புருவம், மிக அழகுதான். எல்லோருக்கும் அப்படி அமைவதில்லையே! இருப்பதைச் சரி செய்து கொள்ளலாம். அதிக மெலிதான புருவம் நமக்கு ஒத்து வருவதில்லை. முகத்தை குண்டாகக் காட்டும். மிக அடர்த்தியான புருவமும் இப்போதைய பாஷன் அன்று. சீரான அளவு பெற புருவத்தின் மேலும் கீழும் உள்ள தேவையற்ற முடிகளை ட்வீஸர் கொண்டு பொறுமையுடனும், திறமையுடனும் நாமே செய்து கொள்ளலாம். ஐப்ரோ பென்சில் கொண்டு நீளத்தைக் கூட்டவும், எடுப்பாக தோற்றமளிக்கவும் செய்யலாம். நம் முகத்திற்கு எப்படிப்பட்ட புருவம், என்ன மாதிரியாகக் கண்ணை அழகு படுத்திக் கொணடால் நன்றாக இருக்கும் என ஒரு அழகு நிபுணரைக் கலந்தாலோசிக்கலாம்.

ஒரு சொட்டு விளக்கெண்ணையைப் புருவத்திலும், கண் இமையிலும் தடவ முடி அடர்த்தியாகவும், கருமையுடனும், பளபளப்பாகவும் இருக்கும். புருவம் கூடும் இடத்தில் முடிகளை நீக்குவது முகம் பளிச்சென தோற்றமளிக்கச் செய்யும்.

ஐலைனர் கண்களைச் சற்று பெரிது படுத்திக் காட்ட வல்லது. கோடு போல் திறமையாக போட்டுக் கொள்ள சற்று அனுபவம் தேவை. மெல்லிய பிரஷினால் கண் மேல் தடவலாம்.

மஸ்காரா இமைகளை அடர்த்தியாகவும் நீளமாகவும் தோன்றச் செய்யும். ஐஷேடோ — கண்களை கவர்ச்சியாகக் காட்டக் கூடியது. புடைவை நிறத்திற்கேற்றார் போல் இரு நிறம் கலந்து கணணின் மேல் தடவலாம். சிறந்த சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட மை கண்களுக்கு நல்லதே.


பொதுவாக முக அழகிற்குக் கண்களின் தோற்றம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆனால் அதிக அளவு கண் ஒப்பனை சாதாரணமாக நன்றாக இருக்காது. போட்டோ பிடிக்கும் பொழுதோ இரவு, மாலை நேரங்களில் செல்லும் கல்யாணம் பார்ட்டி போன்றவற்றிற்கோதான் எடுப்பாகத் தெரியும். பகல் பொழுதில், காரியாலயம் செல்லும் பொழுது புருவத்தைத் திருத்தி, கண் மை இடுதலே பொதுமானது. மஸ்காரா போன்றவற்றையும் அடிக்கடி பயன் படுத்த வேண்டாம். புருவத்தை ஒரு



பொழுதும் பிளேடால் சரிசெய்ய வேண்டாம். ஒப்பன்ன நிலையங்களில் செய்யும் த்ரெட்டிங் முறை சிறந்தது. இரவு படுக்கப் போகும் முன்பு வெது வெதுப்பான நீரில் சோப்பு கொண்டு முகத்தைக் கழுவி பிறகு, குளிர்ந்த நீரினால் கழுவினாலே போதும். முகம் பளிச்சென்று தெரியும்.

வைட்டமின் 'ஈ' ஆயில் கொண்டு கண்ணைச் சுற்றி லேசாக தடவவும். எண்ணெயும் உபயோகிக்கலாம். பெறுதற்கரிய கண்ணைப் பெற்றுள்ளோம். பேணி காப்போம்.

— டாக்டர் கமலி.



பொம்மைகள் குறைவாயிருந்தால், வீட்டிலுள்ள சுவாமி படங்களையும் (புதியது) நடுநடுவே வைக்கலாம்.

— பார்வதி.



இது சாதாரணம், பாருங்களேன். நான் சாக்லேட்களை கபளீகரம் செய்வது போல, வழக்கமாக ஸிபாகா ஃப்ளோரைட் உபயோகித்து என்னுடைய பற்களைத் தேய்க்கிறேன்.

ஸிபாகாவினுடைய செறிப்பான நுரை சுத்தப்படுத்தி எல்லா சாக்லேட் துணுக்குகளை நீக்குகிறது. அதனுடைய பிரத்யேகமான ஃபார்முலா பற்கள் கெட்டுப் போகாமல் பாதுகாக்கிறது.

ஆகையால் ஸிபாகா ஃப்ளோரைடுக்கு நன்றி. என் முப்பத்திரண்டு பற்களும் பளிச்சிடும் வெண்மையுடன் வாழ்நாள் முழுவதும் உறுதியாக இருக்கும். சாக்லேட் எல்லாம் இருந்தும் கூட.

பற்களுக்கு பலம். என்றென்றும் தரும். Cibaca Fluoride

ULKA-13196 TAM

அடையாளங்கள்

ரிஷபன்

ஸர்வ மங்கள மாங்கல்யே
சிவே ஸர்வார்த்த ஸாதகே
சரண்யே த்ரயம்பகே ஹ தேவி
நாராயணி நமோஸ்துதே....'

அம்மாவின் குரல்தான்.... எத்தனை வருடங்களுக்குப் பிறகு கேட்கிறேன்..

படுக்கையை விட்டு எழுந்திருக்க மனசில்லை. நேற்றிரவு ரயிலில் வந்தது. அம்மா சமைத்து வைத்திருந்தாள்.

''எதுக்கும்மா.. நாங்கதான் வேணாம்னு எழுதியிருந்தோமே...''

சிரித்தாள். வேறு வழியில்லை. வற்புறுத்த வேண்டிய அவசியமே இல்லை. ஏதோ ஒரு குற்ற உணர்வு தோன்றிவிடும். பேருக்காவது சாப்பிட்டேன் என்று இலையில் அமர்ந்து எழுந்தாக வேண்டும்.

கிரிஜாவைப் பார்த்தேன். கை கழுவப் போனாள். பாபுவும், தீபாவும் ஏற்கெனவே சாப்பிட உட்கார்ந்து விட்டார்கள்.

நானும் பேசாமல் அமர்ந்தேன். சாப்பிட்டு.... தூக்கம் வராமல் புரண்டு.... ஏதேதோ நினைவுகளில் மனசு உழன்று... கடைசியில் எப்போது தூங்கிப் போனேன்..

இப்போது... அம்மாவின் ஸ்லோகம் மட்டும் என்னை எழுப்பாமல் விட்டிருந்தால்.... இன்னும் எவ்வளவு நேரம் படுத்திருப்பேனோ...

கிரிஜா குளித்திருந்தாள். தலையைச் சுற்றிய டர்க்கி டவலும், முகத்தில் மெலிதாய் அப்பிய மஞ்சள் கவடும், குங்குமப் பொட்டும் சூழ் நிலையுடன் அவள் ஒன்றி விட்டதை உணர்த்தின.

''பாபு... எங்கே...''

''காவேரிக்குக் குளிக்கப் போனான். தீபாவும் போயிருக்கா....''

''யாரோட போயிருக்கா...'' என்றேன் கொஞ்சம் பதற்றமான குரலில்.

''வாசு போயிருக்கான்டா...'' என்றாள் அம்மா.

''... வாரிசுகள் மேல அவ்வளவு உயிர்..'' என்றாள் கிரிஜா கேலியாக. ''பயப்படாதீங்க.... காவேரில தண்ணி வத்திப் போய்... பல வருஷம் ஆச்சு... உங்க தம்பி கூட கேலி பண்ணார். கழுத்து வரைக்கும் ஆழமாம். தலை கீழ நின்னா....''

ரயிலில் வரும் போதே பார்த்தேன்.. அவ்வளவு இருட்டிலும்... சின்னதாய் ஒரு நீர்க்கோடு... கரை புரண்டு ஓடிய காவிரி... இப்போது சரித்திர அடையாளம்மட்டுமாய்..

''அம்மா... உனக்கு ஞாபகம் இருக்கா... ஒரு தடவை காவேரி... கொள்ளிடம்... ரெண்டுமே வெள்ளம் வந்து... கோவில்ல ரெண்டு தண்ணியுமே... சேர்ந்து ஹய்யா... எவ்வளவு கஷ்டப்பட்டு.. மண் மூட்டை எல்லாம் போட்டு... அணை போட்டு தடுத்தாங்க...''

''இந்த வெளி சுவத்துல தெரியற கோடு.. வெள்ளம் வந்த அடையாளமாமே... வீடே முழுகிப் போச்சாமே...'' என்றாள் கிரிஜா.

''பயத்துல என்ன பண்றதுன்னு தெரியாமே அல்லாடி.. மாடிக்கு ஓடி... முக்கியமான சாமான்களை மட்டும் எடுத்து வைச்சிண்டு ரெண்டு நாள் இருந்தோம்... இதுல எங்க கூட வெளி மனுஷா வேற...'' என்றேன்.

''கோடி வீட்டு ரமேஷ் குடும்பம்...'' என்றாள் அம்மா.

கை பாட்டுக்கு வேலை செய்து கொண்டு இருந்தது. ஒரு புறம் அடுப்பில் ரசம் கொதிக்க... மறுபுறம் பாலில் சாதம் வெந்து கொண்டிருந்தது. அம்மாவின் ஸ்பெஷலான அக்கார வடிசல்.

''கிரிஜா... நீ என்ன பண்றே... இங்கே... பேசாமே வெளியே வந்திரு... ஒரு நாளாவது ருசியா சாப்பிடறேன். உன்னோட த்ரீ-இன்-ஒன் சமையல்லேர்ந்து தப்பிச்சுக்கலாம்....''

''அவளை ஏன்டா வம்புக்கு இழுக்கறே...''

கிரிஜா சிணுங்கினாள்.

''நீங்களே சொல்லுங்கம்மா. எதைச் செஞ்சாலும் அதுல ஒரு குறை சொல்லிகிட்டு.... அப்புறம் எப்படி மனசு வரும்.''

''அது என்னடா... த்ரீ-இன்-ஒன்... சமையல்...'' என்றாள் அம்மா.

''மேல ரசம்... நடுவுல சாம்பார்... கீழே

கூட்டு. ஒரு அடுக்குல கொதிக்க விட்டு இறக்கிடுவா...''

''அம்மா சமையல் என்னைக்கும் கிடைக்காது. என் கையையும் நீங்க நம்பித்தான் ஆகணும். மறந்துடாதீங்க... என்றாள் கிரிஜா பாதி கேலியும், பாதி சீரியஸுமாய்.

''பாவம்... பெண்டாட்டிய வேலை வாங்கிடப் போறான்னு... நாசூக்கா கூப்பிடறான். நீ ஏன் அவனை கரிக்கிறே...'' என்றாள் அம்மா.

''இது என்ன... எனக்கு வக்காலத்தா... இல்லே.. புள்ளைக்கு சப்போர்ட்டா... ஒண்ணும் புரியலியே...''

''சரி.. சரி... மாமியாரும் மருமகளும் என்னவோ பண்ணுங்க... நான் குளிக்கப் போறேன்.''

நகர்ந்து பாத்ரூமில் நுழைந்த போது... நாற்பது வாட்ஸ் பல்பு மெலிதாய் மினுக்கு கிறது. கரி அப்பிய சுவர்கள். ஒரு புறம் நிரந்தரமாய்க் கிடக்கும் விறகுக் கட்டைகள். தேங்காய் மட்டை, கரி மூட்டை... அப்பாவுக்கு எப்போதும் வெந்நீர்தான். பச்சைத் தண்ணீரில் குளித்தால் போதும். உடனே மூச்சிரைக்க ஆரம்பித்துவிடும்.

சபரி மலைக்குப் போன போது மட்டும்... அந்த ஒரு மண்டலமும் கிணற்று நீர் ஸ்நானம்தான்.

''எப்படிப்பா உன்னால முடிஞ்சுது...''



''அதுதாண்டா... பக்தி...'' என்பார்.

மாலையைக் கழற்றியதும் மறுபடி வெந்நீர். அதுவரை மனசிலிருந்த தைரியம் போய் விட்ட மாதிரி.

லேசாக வழுக்கியது அம்மாவின் குரலும் கேட்டது.

''பார்த்துடா... வழுக்கும்...''

உள்ளுக்குள் ஏனோ சிலிர்த்தது. இது எப்படி சாத்தியம்... என்ன வேலை செய்தாலும்... என் மேலும் ஒரு கவனம் வைத்து.. ஒரு எச்சரிக்கை கொடுத்து....

பம்பாயில் மொசைக் தளமிட்ட விடும்... ஷவர் பொருத்திய பாத்ரூம்.... வெந்நீருக்கும் தண்ணீருக்கும் தனித்தனி குழாய்களும் ஏனோ மனத்தில் நிழலாடின.

''வாயேம்மா... அங்கேயே எல்லோரும் சேர்ந்து இருக்கலாம்.....''

''இல்லைடா... எனக்கு... இதுதான் வசதி....''

''என் மனசுல எப்பவும் ஏதாவது உறுத்தல் இருந்துகிட்டே இருக்கணுமா...''

''என்ன உளர்றே... அம்மா அப்பாவை கூட வைச்சிண்டாதானா... அதான் பணம் அனுப்பறியே.. மாசா மாசம்....''

''இல்லம்மா... அது சடா ஆகாது...''

''பைத்தியம்மாதிரிபேசாதே...எங்களுக்கு இதுதான் நிம்மதி... உனக்கு அது வேணும் ரெண்டையும் குழப்பிக்காதே....''


பாத்ரூம் கதவை யாரோ தட்டினார்கள்.

''... எவ்வளவு நேரம்.... குளிக்க... எழுந்ததே லேட்டு... காவேரிலேர்ந்து பசங்க வந்தாச்சு.... மணி பத்தாச்சு... சாப்பிட வேணாமா....'';

கிரிஜாதான். குரலின் உச்சமும், அழுத்தமும் என்னை எப்போதும் போல விரட்டின.

ஈரமான காப்பி ஃபில்டரில் காப்பிப் பொடியைப் போட்டால் அடைத்துக் கொள்ளும். எனவே, ஃபில்டரைச் சூடு காட்டிப் பிறகு பொடியைப் போட்டு வெந்நீர் ஊற்றினால் டிகாக்ஷன் நன்றாகவும் சீராகவும் இறங்கும்.

— சுமதி.



''என்னது... அப்பா... நெத்திக்கு விபூதி எல்லாம் இட்டுகிட்டு...'' பாபு சிரித்தான்.

''ஊருக்குத் தகுந்த வேஷம்....''

''நீங்களும் உட்கார வேண்டியதுதானே... நடுவுல வைச்சிண்டு... எல்லோரும் எடுத்துப் போட்டுக்கலாமே....''

''இது என்ன... உங்க ஊருன்னு நினைச்சிங்களா....''

''வேணாம் நாங்க அப்புறம் சாப்பிடறோம்... நீங்க முதல்லே சாப்பிடுங்க...'' என்றாள் அம்மா.

அப்பாவை பாபுவும், தீபாவும் ஏதோ தொண தொணவென்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். எனக்குத்தான் பேச ஆளில்லை. வாசுவும் நானும் ஏனோ சின்ன வயதிலிருந்தே ஒட்டவில்லை. இரண்டு பேரும் ஏதோ தனித்தனி உலகம் போல.

மௌனமாகச் சாப்பிடும் போதுதான் சட்டென்று உறைத்தது.

''அம்மா... பழைய டேஸ்ட் அப்படியே இருக்கே... ஏய்... கிரிஜா... பார்த்துக்க... இதுதான் சாம்பார்... நீ வைக்கிறது இல்லே....'' என்று சீண்டினேன்.

''போதும்டா... அவளை ஒரேடியா மட்டம் தட்டாதே...''

''தெஜும்மாவே அம்மா... நல்ல சாப்பாடு சாப்பிட மனசு ஏங்கிப் போச்சு....''

வாசு திடீரெனப் பேசினான்.

''பழைய டேஸ்ட்.... இப்ப இல்லை..''

''ஏன், நல்லாத்தான் இருக்கு....'' என்றேன். என்னம்மா... நீ என்ன சொல்றே...''

''உனக்கு சப்பாத்தியா சாப்பிட்டு... அலுத்துப்போச்சு. அதனால...என் சமையல் ருசிக்கிறது. ஆனா... பழைய டேஸ்ட் இப்ப இல்லைதான்...'' என்றாள் அம்மா மெதுவாக.

ஒரு நிமிஷம் சுருக்கென்றது. ஏனோ எதுவும் பேசாமல் சாப்பிட்டேன். கை கழுவும் போது கூட மனசுக்கும் உறுத்தல் மிஞ்சியிருந்தது.

அப்பா வாசலுக்குப் போய்விட்டார். தீபாவும் பாபுவும் மாடியில் வாசுவுடன் கேரம் போர்டு விளையாடப் போய் விட்டார்கள். சமையல் அறையில் அம்மாவும், கிரிஜாவும் சாப்பிட அமர்ந்திருந்தனர்.

''நான் போடட்டுமா...'' என்றேன்.

''வேணாம்... அப்புறம் எரிஞ்சு விழுவீங்க... உங்க அவசரத்துக்கு எங்களால சாப்பிட முடியாது... பாதி பரிமாறும் போதே பொறுமை போயிடும்...'' என்றாள் கிரிஜா.

''... நாங்க ரெண்டு பேர்தானேடா. நாங்களே போட்டுக்கிறோமே...'' என்றாள் அம்மா.

ஒரே கேள்விக்கு இரண்டு விதமான பதில்கள். பழைய தலைமுறை சற்று நாசூக்காய் மனம் புண்படாத விதமாய்ப் பதில் சொன்னால்... இந்தத் தலைமுறை... பட்டென்று


புதிய
மோத்தி ஸாண்டல் சோப்பு
NEW
TATA'S
MOTI
LUXURY BATH SOAP
SANDAL
உங்களுக்காக . . .
உங்கள் மேனி
எழிலுக்காக
மோத்தியில் நிறைந்
திருக்கு-சந்தன குணம்
மோத்தியில் மணக்குது
சந்தனம்... சந்தனம்.
மேனி
எழிலின்
பிரதிபலிப்பு
டாடா தயாரிப்பு
CLARION/B/T/47/203 TML

முகத்தில் அறைவது போல் பதில்...

"எப்படி சாம்பார் வைக்கிறதுன்னு கத்துக்கோ... அம்மாகிட்டே..." என்றேன்.

"... எல்லாம் என் சமையலே போதும்... உங்களை மாதிரி ஆளுக்கு...."

அம்மா பேசாமலிருந்தாள்.

"என்னம்மா... நீயே சொல்லிக்கிறே... உன்சமையல்லேபழையடேஸ்ட்இல்லேன்னு இந்த வாசனை... இந்த ருசி... எல்லாம் உன்னோட அடையாளம்மா... அது வேற யாருக்கு வரும்..."

"இல்லைடா... எனக்கே தெரியுது... பழைய டேஸ்ட் இல்லைன்னு..."

"வயசாச்சு...எப்பவும்அதேபர்பெக்ஷன் இருக்க முடியுமா..." என்றேன் சமாதானமாய்.

"அதில்லே... எல்லாம் உ ங் க ளா ல தான்..." என்றாள் கிரிஜா.

"என்னது...."

"...ம். என்ன பண்ணாலும் சின்ன வயசுல... குறை சொல்லிண்டே இருப்பாராம் உங்கப்பா... அதே குணம்தான் உங்ககிட்டேயும்... அம்மாவுக்கும் மனசு விட்டுப் போச்சு... ரசனை இல்லாத மனுஷங்களோட பழகிப் பழகி... எதையோ... பண்ணிப் போட்டாப் போதுங்கிற மாதிரி..... மாத்திண்டுட்டா...."

"... நெ... நெஜம்மாவாம்மா...."

அம்மா ஒன்றும் சொல்லவில்லை. பிறகு மெல்லச் சிரித்தாள்.

வாஸ்தவம்தான். எத்தனை முறை தட்டை விட்டு அடித்திருக்கிறார் அப்பா. ஏன்.... எனக்கே எத்தனை முறை கோபம் வந்திருக்கிறது... என்னவெல்லாம் சொல்லி இருக்கிறேன்....

அம்மாவும் மனுஷிதானே... ஆபிசில் என் சர்வீசை மதிக்கவில்லை... வேலை செய்யப் பிடிக்கவில்லை... என்று சொல்லிக் கொள்ளும் போது... வீட்டிலும் அதே மாதிரி தானே மனைவியும் எதிர்ப்பார்ப்பாள்... அதை மட்டும் ஏன் உணராமல் போகிறேன்.

"அதான்... அம்மா சொல்றா... அடிக்கடி என்னைக் குறை சொல்ல வேண்டாம்னு புரிஞ்சுதா...."

கிரிஜாவால் இன்று சொல்ல முடிகிறது.. அம்மாவால்... அந்த கால மனுஷியால்... அன்று முடியவில்லை.

அடையாளங்கள்... இவை சொல்கின்ற அர்த்தங்கள்... புரிந்து கொள்ளத் தவறினால்... என்ன நஷ்டம்... எனக்குத்தான்.

"... காவேரில மறுபடி அதே மாதிரி தண்ணி வருமா..." என்றபடி தீபா உள்ளே வந்தாள்.

பின்னாலேயே பாபுவும், வாசுவும்.

வரலாம். வராமலும் போகலாம். ஆனால் என் மனசுக்குள் வந்த வெள்ளம் நிரந்தரமாய் இருக்கும்.

கிரிஜாவை அன்புடன் பார்த்தேன்.



தேங்காய், தனியா, பெருங்காயம், உப்பு, புளி, கறிவேப்பிலை, கடுகு ஆகிய வற்றை நல்லெண்ணெயில் விட்டு வதக்கி யெடுக்கவும். வதக்கியதைத் தூளாக்கி இட்லி, தோசை, தயிர்ச் சோறு, ஆகியவை களுக்குத் தொட்டுக் கொண்டு சாப்பிட் டால் மிக மிகச் சுவையாக இருக்கும். இந்தப் பொடிக்குத் 'தவணைப் பொடி' என்று பெயர்.

— சுமதி.

ஐடியா சொல்கிறார் அப்பாசாமி!

ஃபிளாட்டுகளுக்கு மவுசு இப்போது! ஜான் இடத்தில் என்னத்தைக் கொலு வைப்பது என அலுத்துக் கொள்கிறார்கள். இவர்களுக்கு ஒரு அருமையான ஐடியா கூறுகிறார், அப்பாசாமி ரியல் எஸ்டேட் அதிபர் அப்பாசாமி —

"அடுக்கு மாடிக் கட்டடத்திற்கு நிச்சயமாகக் கீழேயோ, பக்கவாட்டிலோ கார் ஷெட்டிற்கு இடம் இருக்கும். அதைச் சுத்தப்படுத்தி அவரவர் வீட்டில் இருக்கும் பொம்மைகளை எடுத்து வந்து ஒன்றாகக் கொலு வைக்கலாம். ஒவ்வொருவர் வீட்டிலும் பத்து பொம்மைகள் இருந்தால் கூட ஆறு வீடு சேரும் போது என்ன ஆச்சு? அருமையான கொலு வைக்கலாம்.

ஒவ்வொரு நாள் ஒவ்வொருத்தர் பொறுப்பு. அன்றைக்கு அவரவர்க்கு வேண்டியவர்களைக் கூப்பிடலாமே? ஒற்றுமை, சிக்கனம், வேலைப் பளு குறைவு எல்லாம் இதில் வந்து சேரும்!"



அனுபவ பாடம்:

தொலைத்தல்

''டொக்'' என்று தாள் திறக்க, 'கீ...ய்...ங...' என்று கூறி வாசல் கதவு என்னை வரவேற்றது. கதவுத் தாளில் கை வைத்தவுடனேயே நான் வந்திருப்பது எப்படித்தான் தெரியுமோ, சிட்டுக் குருவியாகப் பறந்து வந்து என் கால்களைக் கட்டிக் கொள்வாள் சுபா.

அன்று வரவில்லை.

ரயிலை விட்டு இறங்கியதும், அவள் என்னை எப்படி எதிர்கொள்வாள் என்ற தினசரி சிந்தனையில் ஆவலுடன் விட்டிற்குள் நுழைந்த எனக்கு, அவளைக் காணாததே அதிர்ச்சியாக இருந்தது.

யோசனையுடன் படியேறி, வராந்தா கட்டிலில் அமர்ந்து ஷூ, ஸாக்ஸை கழற்றிப் போட்டு, ஹாலுக்குள் நுழைந்து ப்ரீஃப் கேஸை ஷோகேஸ் அருகே வைத்து விட்டு, பெட்ரூமுக்குப் போய், பேண்ட், சட்டை களைந்து, வேட்டிக்கு மாறி, பின்பக்கமாக பாத்ரூமுக்குப் போய்த் திரும்பி வந்து, முகம், கை, கால் அலம்பி, துண்டை எடுத்துக் கொண்டு ஒரு கோப்பை 'டீ'க்காக கிச்சனுக்குள் நுழைந்தால் —

உள்ளே சுபா. அலமாரி அருகே, குழப்பமாக நின்றிருந்தாள்: அந்த ஒன்பது வயதின் வளர்ச்சி சாதாரணமாகவே இருந்தது என்றாலும், அது முழுக்க ஏதோ ஓர் இழப்பை உணர்த்தியபடி இருந்தது. மனைவியின் மவுனத்தை டபராவும் தம்ளரும் டீ ஆற்றியபடி கலைத்தன. அவள் முகத்திலும் இறுக்கம்.

சுபா ஓரக் கண்ணால் என்னைப் பார்த்தாள். வீங்கியிருந்தது முகம். ஏதேனும் ஒரு வார்த்தை நான் சொன்னாலும் போதும், குபுக்கென்று தண்ணீராய்க் கொட்டித் தீர்த்து விடுவாள் போலிருந்தது.

டீ தம்ளரை என்னிடம் கொடுத்த மனைவியைப் பார்த்து சைகையாலேயே கேட்டேன்: ''என்ன சமாசாரம்?''

அவளால் கட்டுப்படுத்த முடியாமல் சற்று கோபமாகவே வார்த்தைகளால் வெடித்தாள். ''பென்ஸிலைத் தொலைச்சுட்டு வந்து நிக்கறா.''

அட சே! பொசுக்கென்று போய் விட்டது எனக்கு. என்னவோ ஸ்கூல் பையையே முழுசாகத் தொலைத்து விட்டாற் போல அல்லவா மனைவி புகார் செய்கிறாள்! இந்தப் பெண்ணும் அதற்கேற்றாற் போல் அழுது வெடிக்கத் தயாராக இருக்கிறது!

பென்ஸிலைத் தொலைத்த விவரத்தை சுபா தன் அம்மாவிடம் தெரிவித்திருக்கிறாள். உடனே என் மனைவி அவளை ஏகமாகத் திட்டி பயமுறுத்தியிருக்கிறாள். 'அப்பா வந்தவுடன் பென்ஸிலை சீவுகிறாற் போல உன்னைச் சீவி விடுவார், சீவி' என்று சுபாவின் மனசுக்குள் பய இருட்டைத் திணித்திருக்கிறாள்.

நான் சுபாவைப் பார்த்தேன். அந்தக் கண்களில் 'ஸாரி அப்பா' இல்லை. மாறாக, 'என்னைத் திட்டப் போகிறாய், என்ன திட்டுவாய்? எப்படித் திட்டுவாய்? ஒரு வேளை அடிக்கவும் செய்வாயோ? ஓ.கே. நான் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறேன்' என்றது.

மனைவி குறிப்பிட்டது போலவோ அல்லது சுபாவின் எதிர்பார்ப்புப்படியோ அவளைத் திட்டினாலோ அடித்தாலோ அந்தக் குழந்தை மனது — ஏற்கெனவே பயந்து நொந்திருக்கிற மனது — மேலும் என்ன பாடுபடும் என்று யோசித்துப் பார்த்தேன். சின்ன வயதில் நான் பலப்பம் தொலைத்த போது என் அப்பா என் கைக்குக் கொடுத்த தண்டனை இன்னமும் வலிக்கிறது. கூடாது. அதுபோன்ற தண்டனை கொடுக்கக் கூடாது. இளந்தளிர் ஒரு மூலையில் கூட பட்டுப் போகக் கூடாது. அந்தச் சம்பவம் நிகழக் கூடாது என்று தீர்மானித்துக் கொண்டேன்.



குழந்தையை மிருதுவாகவே கையாள வேண்டும் என்ற என் உள் மன நோக்கம் அவள் மீது அபரிமிதமாகப் பாசத்தைப் பொங்கச் செய்தது. அவள் கண்களில் தயாராகக் காத்திருந்த கண்ணீர் கன்னம் வழியே வரக் கூடாது என்று நினைத்துக் கொண்டேன்.

அதுதான் தப்பாகப் போய் விட்டது.

''ஸோ வாட்? பென்ஸில்தானே? போனாப் போறது. வேறே வாங்கிக் கொடுத்தா ஆச்சு. ஏன் இதை இவ்வளவு பயங்கரமாகக் கம்ப்ளெயின்ட் பண்றே?'' என்று மனைவியைப் பார்த்து எரிச்சலுட னேயே கேட்டேன்.

அதுதான் எவ்வளவு பெரிய தவறு! பென்ஸில் தொலைவதும், வாங்கிக் கொடுப்பதும் ரொம்பவும் சாதாரண விஷயம்தான் என்றுதான் நான் சொல்ல நினைத்திருக்கிறேன். ஆனால் அந்தக் குரலில் நான் வெளிப்படுத்திய தொனி, உணர்ச்சிகள், நான் நினைத்ததை அப் படியே வெளிப்படுத்தியதா? அதோடு குழந்தையின் மனம் வேதனைப்பட்டிருப் பதைப் பொறுக்க முடியாமல், அது கோப மாக மனைவி மீதல்லவா திரும்பி விட்டது!

நான் மனைவி மீது கோபப்பட்டது சுபா வுக்கு ஆறுதலாக இருந்திருக்கும் போலிருக் கிறது. அவளுக்கு ஆதரவாக ஒலித்த என் தொனி, தன் தாயைப் பழிவாங்கி விட்ட தாகவே கருதி விட்டாள் போலிருக்கிறது.

சாமி கும்பிடும் நேரத்தில் தேங்காயை உடைக்கும் பொழுது சில சமயம் மூடி சிறியதாகவும் பெரியதாகவும் உடைந்து விடும். அல்லது கோணல் மாணலாக உடைந்துவிடும். இதனைத் தவிர்க்க நினைப்பவர்கள் தேங்காயைச் சிறிது நேரம் தண்ணீரில் ஊற வைத்து நடுவில் தட்டி உடைத்தால் சமமாக உடை யும்.

— சுமதி.





அதனால்தானோ என்னவோ, பீறிட்டு வர வேண்டிய கண்ணீர், கண்ணுக்குள்ளேயே வடிந்து விட்டது. பளிச்சிட்ட கண்கள், 'மாட்டிக்கிட்டியா?' என்று தன் அம்மா வைப் பார்தது எக்காளமிட்டன.

அதோடு நின்று விடாமல், நான் அப் போதே போய் ஒரு பென்ஸிலை வாங்கிக் கொடுத்து விட்டேன். அது சுபாவின் வீம்பை அதிகப்படுத்தி விட்டது.

அதற்குப் பிறகு, தன் நோட்டுப் புத்த கத்தை, அடுத்தடுத்து பென்ஸிலை, ஸ்கேலை, ரப்பரை, ஷார்ப்பனரை அவள் அடுக்கடுக்காகத் தொலைப்பதற்கும் அதற் காக அவள் வருத்தமே படாமல் இருப்பதற் கும் வழிவகுத்தன.

என் மனைவியும் என்னிடம் சுபா தொலைத்ததாகச் செய்யும் முறையீடு தனக் குத்தான் அவமானத்தைத் தரும் என்று நினைத்ததால் என்னிடம் முறையிட விரும் பாமலேயே இருந்தாள். இது என் கவனத் திற்கு வராமலேயே இருந்து உப்பி, ஒருநாள் வெடித்தது.

ஒரு சமயம் பென்ஸில் பாக்ஸைத் தொலைத்து விட்டு, அதை ரொம்பச் சாதாரணமாக சுபா என்னிடம் சொன்ன போதுதான் நான் திடுக்கிட்டேன்: ''அப்பா, இன்னிக்கு பென்சில் பாக்ஸ் தொலைஞ்சு போச்சு; வேறே வாங்கிக் குடுப்பா.''

ஆழமாக சிந்தித்த போது அவளுடைய அலட்சியத்தை நானே வளர்த்ததை உணர்ந் தேன். சிறு குழந்தைகள் பொருட்களை கவனப் பிசகாகத் தொலைப்பது சகஜம் தான். ஆனால் அதற்கான தண்டனை தனக்கு உண்டு என்று அவள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் போது, 'கவலைப்படாதே. போனாப் போகுது. வேறே வாங்கிக்கலாம்'



இரவிலும் இப்போது
உங்களுக்கு கவலையில்லை
புதிய ஸ்டேஃப்ரீ டபுள்*
பெல்ட் இல்லாத நாப்கின்
இரவு முழுதும் பாதுகாத்திட.
இதுதான் இன்றைய சரியான வழி. இரவு முழுதும் பாதுகாத்திட — புதிய ஸ்டேஃப்ரீ டபுள்-இரட்டிப்பு பாதுகாப்பிற்காக; ரெகுலர் நாப்கினை விட அதிக நீளமாகவும் விரிவாகவும், தடிப்பாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.
புதிய ஸ்டேஃப்ரீ டபுள் — இது, உறிஞ்சும் இழைகள் நீளவாட்டத்தில் சமமாக இருக்குமாறு விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது; ஆகவே திரவம் நாப்கினின் நீளவாக்கில் உறிஞ்சிவைத்துக் கொள்ளப்படுகிறது. இதனால் நீங்கள் உறங்கும்போது, திரும்பிப் படுத்தாலும் பக்கங்களில் கறை ஏற்படும் வாய்ப்பே இல்லை.
புதிய ஸ்டேஃப்ரீ டபுளில் உள்ள ட்ரைஃபில் கவர், உங்களை இரவு முழுதும் சுத்தமாகவும் உலர்ந்ததாகவும் வைத்துக் கொள்கிறது. ஆகவே கவலையின்றி உறங்குங்கள்.
5 உள்ள பேக்குகளில் கிடைக்கிறது.
Stayfree
Double
ஸ்டேஃப்ரீ டபுள்
* ட்ரேட் மார்க்
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்

என்று நான் கூறியது

1. தன் அப்பாவிடம், தான் எத்தனை முறை தொலைத்தாலும் மறுபடி வாங்கிக் கொடுக்கும் சக்தி இருக்கிறது;
2. பென்ஸில் மாதிரியான பொருட்களைத் தொலைப்பது ரொம்பவும் அற்பமான சமாசாரம் என்று அப்பா புரிந்து கொண்டிருக்கிறார்;
3. இதுபோன்ற 'தொலைத்தல்'கள் எவ்வளவுதான் அம்மாவால் முறையிடப்பட்டாலும் அப்பாவின் காதுகளில் விழாது.

என்றெல்லாம் அவன் யோசித்திருக்க வேண்டும்..

என் தவறை நான் புரிந்து கொண்ட உடனேயே மேற்குறிப்பிட்ட வழிகளில் சுபாவின் மனம் அலைக்கழிந்து கொண்டிருக்கும் என்று நான் யூகித்தேன். ஆனாலும் ஒரு சந்தேகம் இந்தச் சின்னக் குழந்தையின் மனசுக்குள் இப்படி ஓர் எண்ண ஓட்டம் இருக்க முடியுமா? அதற்கான மன, மூளை வளர்ச்சி அதற்கு இருக்கிறதா?

ஒருவேளை வகுப்பில் பக்கத்து சீட் பெண்ணோ, பையனோ அவனை மிரட்டி, அப் பொருட்களைப் பறித்துக் கொள்கிறார்களோ? அல்லது அவன் ஏமாந்திருக்கும் சமயத்தில் அபகரித்துக் கொள்கிறார்களோ?

இந்தச் சந்தேகத்தையும் நிவர்த்தி செய்து கொள்ள பள்ளிக்குச் சென்றேன். அவனுடைய வகுப்புக் குழந்தைகள் தான் எவ்வளவு வெகுளியாக சூதுவாது அறியாதவர்களாக, அன்று பூத்த மலர்களாக, கல்மிஷம் இல்லாதவர்களாக இருந்தார்கள். அவர்களைப் பற்றித் தவறாக நினைப்பதே பாவம் என்று உணர்ந்தேன். ஆனாலும் அந்தக் குழந்தைகளிடம் பேசி, ஆராய்ந்து பார்த்ததில் அவர்கள் யாருமே அப்படிப்பட்டவர்கள் இல்லை என்று புரிந்தது.

ஆக, தவறுக்கு நானே முழுப் பொறுப்பு.

இப்போது நான் சுபாவுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். திட்டம் வகுத்தேன்.

முதலில் குறிப்பிட்ட சம்பவத்திற்கு முன்னாலேயே நாலைந்து 'தொலைத்தல்' சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அப்போதெல்லாம் அது பெரிய விஷயம் இல்லை என்று என்னைப் போலவே கருதிய மனைவி கடையிலிருந்து புதுப் பொருட்களை வாங்கிக் கொடுத்திருக்கிறாள். ஆனால் 'தொலைத்தல்' எண்ணிக்கை அதிகமான போது அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. 'இப்படிப் பொறுப்பற்று இருக்கிறானே' என்ற ஆதங்கத்தில் அவனைத் திட்டித் தீர்த்திருக்கிறாள். அதிகபட்ச தண்டனையாக என்னிடம் புகார் செய்வதாகவும் சொல்லியிருக்கிறாள்.

மனைவியைப் பொறுத்தவரை அவள் நடந்து கொண்ட விதம், மகனுடைய அலட்சியப்போக்கு கண்டு 'ரியாக்ட்' செய்த விதம், எல்லாம் சரிதான். ஆனால் அதைப் பக்குவமாகச் செய்திருக்க வேண்டுமோ? அல்லது நான்தான் அவனுடைய புகாரைக் கேட்டவுடன் கொதித்தெழாமல் அமைதியாக செவிமடுத்திருக்க வேண்டுமோ?

இறுதியில் தவறு என்னுடையதுதான் என்பது தெளிவாகியது. திருத்தமும் தேவைப்பட்டது.

மனைவியிடம் முதலில் அன்று நான் நடந்து கொண்ட முறைக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டேன். பிறகு, அது போன்ற சந்தர்ப்பங்களில் சுபாவுக்கு முன்னால்





பாரீஸ் பிஸ்கட்டுகள்

"வாழ்க்கை சுவையாக இருக்கவேண்டும்"
இதைச் சொல்லப் பல வழிகள் உண்டு...



வாழும் வாழ்வில் சுவை இருக்கவேண்டும். மனத்துக்கினிய மணம் இருக்கவேண்டும். அதற்கு பாரீஸ் காட்டும் வழி: ☐ சாறுள்ள பைனாப்பிள் கிரீம் ☐ சாறு செறிந்த ஆரஞ்சு கிரீம் ☐ கெட்டியான சாக்கலேட் கிரீம் ☐ புத்துணர்ச்சி தரும் கார்டமம் கிளாஸிக் ☐ சத்து நிறைந்த குளுக்கோஸ் ☐ உடல்நலத்திற்கு மில்க் பிஸ்கட்டுகள் ☐ எந்நேரத்திற்கும் ஏற்ற மாரி வாழ்வில் சுவை கூட்ட இவை எல்லாம் சேர்ந்து சிறந்த சுவையை அள்ளித் தருகின்றன.

பாரீஸ் – அனைவரும் விரும்பும் தரமான பிஸ்கட்டுகள், மிட்டாய்கள்.

Artig/PCL/515

FRESH & CRISP BISCUITS

PARRYS



புதிய
ஹை-ஃபோம்
ஸ்ப்பர் பிஜ்
கிளீனிங் பவுடர்
அதிக பலன்கள்
...குறைந்த செலவில்.
■ அதிக துலக்கும் சக்தி.
■ அதிக சிக்கனம்.
■ விலை குறைவு.
■ வீணாகுதல் குறைவு.
NEW HI-FOAM
SUPER BIZ
multipurpose cleaning powder
NET WT. 2.5 kg
Godrej
CLARION/B/GS/88/202 TAM-R



YACO SAMRAT ©
TEN WICK STOVE
SAMRAT
யாகோ சம்ராட்
பத்து திரி ஸ்டோவ்
மிகச் சிறந்தது கிடைக்கும் பொழுது மற்றதை ஏன் வாங்க வேண்டும்?
யாகோ சம்ராட்டை கூர்ந்து நோக்குங்கள். நேர்த்தியான ஃபினிஷ் மற்றும் சிறந்த செயல்திறன் கொண்டதாகும்.
விற்பனைக்கு விடுப்போர்: கபாசி எண்டர்பிரைசஸ்,
43-I, ஆர்.எஸ். நிம்கர் மார்க், பம்பாய்-400 008.
தமிழ்நாடு மற்றும் கேரளாவிற்கான விநியோகஸ்தர்கள்:
மெஸ்ஸர்ஸ் அனஸ்வரா மார்கெட்டிங் ஏஜென்ஸீஸ்,
LAYOUT STORY/RMW/06/TM

என்னிடம் அவளைப் பற்றியே புகார் செய்வதை விட தனிமையில் விவரம் தெரிவித்திருக்கலாம் என்று ஆலோசனை சொன்னேன். கூடவே இனி வரும் 'தொலைத்தல்' சந்தர்ப்பங்களில், மறுபடி அதே பொருளை நான் மறுபடி வாங்கிக் கொடுக்க எவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கவேண்டியிருக்கிறது என்பதை சுபாவிடம் வலியுறுத்திச் சொல்லச் சொன்னேன.

பல நாட்கள் நான் வேலை நிமித்தமாக அலுவலகத்திலிருந்து தாமதமாக வரும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளச் சொன்னேன். 'இத்தனை நேரம் அப்பா ஆபீஸ்ல எவ்வளவு கஷ்டப்படறாரோ, ஹூம், உனக்குப் பென்சிலும் ரப்பரும் திரும்பத் திரும்ப வாங்கிக் கொடுக்கத்தான் அவர் எவ்வளவு ஓடாகத் தேய வேண்டியிருக்கிறது!' என்று தானாகவே, சுபாவின் காதில் விழும்படி வருத்தப்பட்டுக் கொண்டாள். அதோடு, பொறுப்பற்ற முறையில், அலட்சியமாக அவள் நடந்து கொள்வது மனத்தில் எவ்வளவு வருத்தத்தைத் தோற்றுவிக்கிறது என்பதையும் மெல்ல உணர்த்தினாள்.

புது நோட்டு வாங்கித் தர வேண்டிய நேரத்தில் சுபாவையும் கடைக்கு அழைத்துச் சென்றேன். கடைக்காரரிடமிருந்து நோட்டை வாங்கிக் கொண்டு, சட்டை, பேண்ட் பைகளிலிருந்து சில்லறையைத் தேடித் தேடி சேகரித்து எடுத்துக் கொடுத்தேன். "என்ன சார், மூணே கால் ரூபாயை இப்படித் தேடறீங்க?" என்று கடைக்காரர் கிண்டல் பண்ணினார்.

"மாசக் கடைசிப்பா. புதுப் புது செலவுகளா வருது. என்ன பண்றது? எப்படியாவது சரிகட்டத்தானே வேணும்?" என்று பெருமூச்சு விட்டேன். அவரிடமிருந்து நோட்டை வாங்கி சுபாவிடம் கொடுத்தேன். அதை வாங்கிய தயக்கத்தில் தன் தவறை அவள் புரிந்து கொண்டாள்.

தொடர்ந்த நாட்களில் சுபாவின் அலட்சியம் கொஞ்சம், கொஞ்சமாக மறைந்தது.

அவ்வப்போது, "அன்னிக்கு வாங்கிக் கொடுத்தேனே, அந்த ரப்பரா இது? குட். அப்பாவின் கஷ்டம் உனக்குப் புரிஞ்சிருக்கே. ஸ்மார்ட் கர்ல்" என்று அவள் தனியாக இருக்கும் போது அவளைப் பாராட்டினேன். அதுவும் உதவியது.

இப்போதும் அவள் ஏதாவது ஒரிரு பொருட்களை விட்டு விட்டுத்தான் வருகிறாள் — தொலைப்பதில்லை. ஆமாம்; முந்தின நாள் விட்டு விட்டு வந்து, "சாரிப்பா. நாளைக்கு எப்படியாவது தேடிப் பார்த்து எடுத்திண்டு வந்திடறேன்" என்று சொல்லுமளவுக்கு அவள் பொறுப்பை உணர்ந்திருக்கிறாள். அது மட்டுமின்றி மறு நாள், கவனப்பிசகாக வகுப்புக்குள்ளேயே தவற விட்ட அப் பொருளை எடுத்து வந்து என் பாராட்டுக்களைப் பெறுகிறாள்.

மனைவி முகத்திலும் நிம்மதி.


— **பிரபுசங்கர்.**

கசப்புத் தாங்கவில்லை என்று சொல்லி சீண்டுவார் இன்றிப் போன ½ கிலோ கத்தரிக்காய் கறியை கொட்ட மனம் வரவில்லையே!

பட்டென்று தோன்றியதைச் செய்தேன். வாணலியை அடுப்பில் போட்டு 6 ஸ்பூன் எண்ணெய் விட்டு, 4 பச்சை மிளகாய், 4 தக்காளியை நறுக்கி வதக்கினேன். கத்தரிக்காயையும் போட்டு வதக்கி, காலையில் மிஞ்சிய ரசவண்டலையும் கொட்டி, சிறிது உப்பு இட்டு, 1 ஸ்பூன் கடலை மாவு கரைத்து ஊற்றி, கருவேப்பிலையைக் கிள்ளிப் போட்டு, இறக்கும் போது, 1 ஸ்பூன் கறிப் பொடியைத் தூவி இறக்கினேன். (கறிப் பொடி! கடலைப் பருப்பு, மி. வற்றல், தனியா வறுத்து இடித்தது)

காலையில் சீண்டுவார் இன்றிக் கிடந்த கறியோ, புதிய கொத்சு வடிவத்தில் மாறியதும், இட்லியோடு சேர்ந்து பறந்ததை பார்த்ததும் வேடிக்கையாகவும், சந்தோஷமாகவும் இருந்தது எனக்கு. பொருள்கள் வேஸ்ட் ஆகாமல் இப்படி ஒரு யுக்தியைக் கையாண்டால் நல்லதுதானே!

— கமலா.



நவராத்திரி...

மலரும் நினைவுகள்

ஏறக்குறைய அறுபது ஆண்டுகளாக நவராத்திரி பண்டிகையைக் கொண்டாடி (கொலு வைத்து வரும்) திருமதி. கோமளவல்லி ஸ்ரீனிவாசன் அவர்களைச் சந்தித்து உரையாடிய போது தன்னுடைய இளமைக் கால நினைவுகளை நம்முடன் பகிர்ந்து கொண்டார்.

"அந்தக் காலத்திலே இதுபோன்ற பண்டிகை பருவங்கள்தான் எங்களுக்கு உறவினர்களோடும், நண்பர்களோடும் ஒண்ணா சேர்ந்து சந்தோஷமாகப் பொழுதைக் கழிக்க கிடைத்த நேரம். அத்தோடு நன்றாக, விதம்விதமாக அலங்காரம் செய்து கொள்ளவும் கிடைத்த நேரம் பண்டிகை காலங்கள்தான். இப்போது போல அப்போதெல்லாம் எப்போதும் 'மேக்—அப்' போட்டுக் கொள்ளவும் முடியாது — அதற்கு நேரமும் கிடையாது.

மூச்சு விடக் கூட நேரமில்லாமல் ஓயாமல் வீட்டு வேலை இருந்த அந்த நாட்களில் இதற்கெல்லாம் நேரம் ஏது? இப்போது வீட்டு வேலைகளைச் செய்யத்தான் எவ்வளவு மிஷின்கள்?! (அரைக்கவும், இடிக்கவும், தோய்க்கவும், தேய்க்கவும், பெருக்கவும்) வசதியிருந்தால் அனுபவிக்க எவ்வளவோ வழிகள்? இப்போது போல நினைத்தபோதெல்லாம் துணியெடுக்க அப்போதெல்லாம் முடியாது. பண்டிகைக் காலங்கள்தான் நாங்கள் புதுத்துணிமணிகள் எடுக்கும் நேரம். எனவேதான் இந்த மாதிரி பண்டிகைகளை அதுவும் நவராத்திரியை (10 நாட்களும் அலங்காரம் பண்ணிக் கொண்டு வெளியே போக முடியுமே!) ரொம்பவும் ஆவலுடன் எதிர்பார்ப்போம்.

நவராத்திரியில் முதல் மூன்று நாட்களும் அம்மனை வழிபடுவோம். 'அம்மனை அழைத்தல்'ன்னு சொல்லி அலங்காரம் செய்து, ஸ்தோத்திரம் சொல்லி, நைவேத்தியம் வைத்து தூபதீபம் காட்டுவோம். பிறகு மூன்று நாட்கள் துர்கை பூஜையும், கடைசி மூன்று நாட்களும் லக்ஷ்மி சரஸ்வதி பூஜையும், அலங்காரமும் செய்வோம். பத்து நாட்களும் அம்பாளை விதவிதமாக அலங்காரம் செய்வதுடன் பலவிதமாக நைவேத்தியங்களும் வைப்போம். 10வது நாளான விஜய தசமியையும் ஒரு பண்டிகை போலவே கொண்டாடி, நைவேத்தியம் தூபதீபம் வைத்துத்தான் கொலுவை எடுப்போம். 'வித்தை'கள் கற்க ஆரம்பிக்க உகந்த நாள் அது. பாட்டு, வாத்தியம், நடனம் என எது கற்க நினைத்தாலும் அன்றுதான் ஆரம்பிப்போம். சிறிய குழந்தைகள் வீட்டிலிருந்தால்



அவர்களையும் அன்றுதான் பள்ளியில் சேர்ப்போம். இந்தக் காலம் போல எப்போது வேண்டுமானாலும் பள்ளியில் சேர்க்கும் வழக்கம் அப்போது இல்லை.

நான் சின்னக் குழந்தையாக இருந்த போது என்னுடைய அம்மா எனக்குத் தினம் ஒரு 'வேஷம்' போட்டு ஊரை அழைக்க அனுப்புவார். எனக்குக் கல்யாணமாகி குழந்தைகள் பிறந்த பின்பு என் குழந்தைகளுக்கு நானும் பலவித வேஷங்கள் போட்டு அனுப்புவேன். அந்தக் காலத்தில் பெண் குழந்தைகள் இல்லை என்றாலே மிகவும் குறைபடுவோம். இப்போது போல பெண் குழந்தைகளை நாங்கள் வெறுத்ததே கிடையாது. (எத்தனை பெண் குழந்தைகள் பிறந்தாலும்). பெண் குழந்தைகள் இருந்தால் தான் வீடும் லக்ஷ்மிகரமாகயிருக்கும் என்ற எண்ணம் எங்களுக்கு நிறைய உண்டு. இப்போது – இந்தக் காலத்திலே வேஷங்கள் போட்டுக் கொள்ள எந்தக் குழந்தை ரெடி? அப்படியே போட்டுக் கொண்டாலும் யார் வீடு வீடாகப் போய் அழைப்பர்? நினைத்த போதெல்லாம் உறவினர்களையும் நண்பர்களையும் பார்க்க முடிவதனால் நவராத்திரிக்கு எனத் தனியாக விசேஷம் எதுவுமில்லையே. கெட்–டுகதர், பார்ட்டி என இருப்பதால் நவராத்திரி போன்ற பண்டிகைகளில் 'த்ரில்' இல்லாமல் போய் விட்டது. எல்லோருமே சம்பாதிக்க வேண்டிய காலம் இது. இந்த அவசர யுகத்தில் அழைப்பிதழ்கள் (உள்ளூரிலிருந்தாலுமே) தபாலில் வருவதில் ஆச்சரியமேயில்லை.

அந்தக் காலத்தில் பெரிய பெரிய அண்டாக்களில்தான் சுண்டல் செய்து வருவோர்க்கெல்லாம் கொடுப்போம். பத்து நாட்களும் வருவோர்க்குத் தேங்காயுடன் தான் வெற்றிலை பாக்கு கொடுப்போம். இப்போதெல்லாம் கடைசி மூன்று நாட்கள் தான் வெற்றிலை பாக்கு பழம் கொடுப்பது என ஆகி விட்டது. தேங்காய் கொடுப்பது எங்கோ சில இடங்களில் அதுவும் சிலருக்குத்தான். அப்போதைய விலைவாசி வேறு. இப்போதைய நிலை வேறு. அதையும்தானே எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது? இந்த நிலையில் இதுவே அதிகம்தான். அப்போது நாங்கள் நவராத்திரியில் இரண்டு வேளையும் குளித்து (இந்தத் தண்ணீர்ப் பஞ்ச காலத்தில் இது சாத்தியமாகுமா?!) மடியாகப் பூஜை செய்வோம். பூஜை செய்ய எனத் தனியாக யாரும் வைத்துக் கொள்வது கிடையாது. ஒருசிலர் அப்போதும் சாஸ்திரிகளை வைத்துப் பூஜை செய்வர். ஆனால், இப்போது சாஸ்திரிகளை வைத்துப் பூஜை செய்வோரின் எண்ணிக்கை மிகவும் கூடி விட்டது.

இது போலப் பத்து நாட்களும் மன ஒருமைப்பாட்டுடன் நாமே உட்கார்ந்து பூஜை செய்வதனால் மனக்கஷ்டம், தீராத




நோய்கள், வறுமை போன்றவை தீர்ந்து சுபிட்சம் பெருகும் என்பது எங்கள் நம்பிக்கை. அது வீண் போனதும் இல்லை. அப்போது சுபிட்சம் நிறைந்துதான் இருந்தது. இந்த அவசர காலத்தில், ஓடும் வேகமான வாழ்க்கையினிடையே இந்த அளவாவது குழந்தைகள் செய்கிறார்களே என்ற நிறைவு ஏற்படுகிறது. சிலர் கொலு வைத்தால் ஆகி வரவில்லை என்பார்கள். நான் கல்யாணமாகி வந்த போது என் மாமியார் வீட்டிலும் இதே போலத்தான் சொன்னார்கள். ஒருமுறை நவராத்திரியின் போது தவறி கலசம் கீழே விழுந்து சிதறியதாம்; அந்தப் பண்டிகை முடியு முன்பே என்னுடைய நாத்தனார் (11 வயதுப் பெண்) திடீரென இறந்து விட்டாள் என்று கொலுவையே நிறுத்தி விட்டதாகச் சொன்னார்கள். நானும் கொலுப் பண்டிகையின் போது என் பிறந்த வீடு சென்று கொண்டாடுவேன். என் குழந்தைகள் வளர்ந்த பின்பு நானே 'கொலு' வைக்கவும் ஆரம்பித்து விட்டேன். எனக்கு எந்தவிதத் தடங்கலும் இல்லை. நவராத்திரியின் நடுவில் என் நாத்தனார் நினைவாக ஒரு குழந்தைக்குத் துணிமணிகள் வாங்கித் தருகிறேன். இது கொடுத்த பின்புதான் வீட்டுக் குழந்தைகளுக்குக் கூட துணிமணிகள் வாங்குவேன். என் குழந்தைகளும் தொடர்ந்து கொலு வைக்கிறார்கள். எல்லோருமே நன்றாகயிருக்கிறார்கள்.

நம் பழக்கங்களை மறக்காமல் நம் குழந்தைகள் தொடர்ந்து செய்ய வேண்டும் என்பதுதான் என் ஆசை.

— 'தேஜி'

முத்து வாங்கலாமா?




பண்டிகைகள் என்று வந்துவிட்டாலே பட்டுப்புடைவையும், நகைகளும்தான் அமர்க்களப்படும். அதுவும் நவராத்திரி போன்ற நேரங்களில் விதவிதமாகத் தங்களை அலங்கரித்துக் கொண்டு மற்றவர்களுக்குக் கண்காட்சியாக ஆசைதான்.

தங்கம், வைரம் இவற்றிற்கு அப்புறம் முத்து நகை ஆசைப்படுபவர்கள் உண்டு. ஆனால் முத்து நகை போட்டுக் கொள்வதே ஓர் அழகு. உடம்பிற்கும் அதன் குளுமை நல்லது. இயற்கையாகப் பிறந்த முத்து உடலுக்கும் கெடுதல் செய்வதில்லை. விலையும் மற்றவற்றின் அளவிற்கு ஆவதில்லை. பண்டிகை நேரத்தில் முத்தைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்து கொள்ளலாமே!

முத்து என்றாலே 'ஹைதராபாத்'தான் நினைவுக்கு வரும். 'ஹைதராபாத்திற்குப் போகிறவர்களில் பெரும்பாலானோர் முத்து வாங்கிக் கொண்டு வந்து இங்கு நகை செய்து போட்டுக் கொள்கிறார்கள். இந்த ஹைதராபாத்தில் பிரபலமான 'ஜகதாம்பா முத்துக்' கடை அண்மையில் சென்னை மாண்டியத் ரோடில் ஒரு கடை திறந்திருக்கிறார்கள். அதன் உரிமையாளர் திருமதி வீணா மல்ஹோத்ரா இந்தத் துறையில் அனுபவம் வாய்ந்தவர். அவர் முத்துச் சிரிப்போடு நிறையச் செய்திகள் கூறினார் —

"முதலில் முத்து எப்படி விளைகிறது எனப் பார்க்கலாம். இப்படிச் சொன்னவுடனே தூத்துக்குடியிலே முத்துக் குளிப்பது தான் நிறையப் பேருக்கு நினைவுக்கு வரும். ஆனால் அப்படியெல்லாம் இப்





போது யாரும் செய்வதில்லை. முத்தை உற்பத்தி செய்கிறார்கள். எப்படி?

முத்து இரண்டு வகையாக விளைகிறது. ஒன்று, கடலில் சிப்பியினுள் மழைத் துளியோ, வேறு ஏதேனும் ஒரு பொருளோ செல்லும் போது விளைவது. சிப்பியினுள் அந்நியப் பொருள் நுழைந்தவுடன், அந்த உறுத்தல் காரணமாகச் சிப்பி ஒரு விதத் திரவத்தைச் சுரக்கிறது. அது அந்த உள்ளே நுழைந்த பொருளைச் சுற்றிப் படலமாகப் படிகிறது. இப்படி வளர்ந்து கொண்டே போகும் படலம்தான் முத்தாக உருவெடுக்கிறது. இப்படித் தானாக விளையும் முத்து 'இயற்கை முத்து' எனப்படுகிறது.

ஆனால் கடலில் இருக்கின்ற ஒவ்வொரு சிப்பியிலும் அந்நியப் பொருள் நுழையாதே! ஆயிரக்கணக்கான சிப்பிகளை வெளியே எடுத்து உடைத்துப் பார்த்தால் சில முத்துக்களே தேறும். இது இன்றைக்கு முத்து வாங்குவோரின் தேவையைப் பூர்த்தி செய்யாதே! இதற்காக ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 'மிக்கிமோடா' என்பவர் ஒரு வழி கண்டு பிடித்தார்.

உயிருள்ள சிப்பிகளை வளர்ப்பது. அதனுள் லேசாகத் திறந்து ஒரு சிறிய பொருளைப் போட்டு, மீண்டும் தண்ணீரிலேயே போட்டு விடுவது. ஒரு குறிப்பிட்ட காலம் கழித்து உடைத்துப் பார்த்தால் அதனுள் முத்து கிடைக்கும். இது நூற்றுக்கு நூறு வெற்றியாக அமைந்ததால் இப்படி நீர் நிலைகளில் முத்துப் பண்ணைகளை உண்டாக்கிக் கோடீசுவரர் ஆனார். இப்படி உருவாக்கப்படுவது 'கல்சர்ட் பர்ள்' எனப் பட்டது.


இயற்கை முத்தில் எந்த அந்நியப் பொருள் நுழைகிறதோ அதே 'ஷேப்'பில்தான் முத்து இருக்கும். ஆனால் நாம் உண்டாக்கும் முத்தில் நமக்கு எந்த வகை வடிவம் தேவைப் படுகிறதோ, அந்த வடிவப் பொருளை உள்ளே செலுத்தினால் போதும், அதே வடிவ முத்தைப் பெறலாம்!''

''வேறு வகையிலும் முத்து விளையுமா?''

''ஓ... யானையின் தந்தத்திலும், பாம்பிடமும், மூங்கிலிலும் விளையும். இவையெல்லாம் ரொம்ப அதிசயமானவை. விலையும் மிக அதிகம்.''

''முத்து என்றாலே 'டல்'லான வெண்மை கலர் என்பதுதான் நினைவுக்கு வரும். ஆனால் கறுப்பு முத்து என்றெல்லாம் சொல்கிறார்களே...''

''நல்ல 'பனீர்' என்ற வெண்மைக் கலரில் கூட முத்து விளையும். பாதி வெண்மை, பிங்க், கறுப்பு நிறங்களில் கூட முத்து விளையும். கறுப்பு முத்து மிகவும் விலை மதிப்பானது. 'பசரா பேர்ல்ஸ்' என்பது பசராவில் இருந்து வருவது. இது மிகவும் 'டல்'லாக



இருக்கும். நன்முத்தின் மேற்புறம் மிக மென்மையாக இருக்கும்... மிகவும் மென்மையாக இருக்கின்ற முத்துக்களை வாங்குங்கள். நல்லது..."

"முத்துக்களை வாங்கும் போது எப்படி வாங்கலாம்? என்னென்ன கவனிக்க வேண்டும்..."

"முத்துக்கள் பொதுவாக நூறு ரூபாயிலிருந்து இருபதாயிரம் வரை இருக்கிறது.

ஓரளவு பெரிய அளவில், உருண்டை வடிவத்தில், ஆழமான வண்ணத்துடன், சுத்தமான தோற்றத்தில் இருக்கின்ற முத்துக்கள் நல்லது.

வெண்மை, பிங்க் வண்ண முத்துக்கள் நல்லது. நீலம், கிரீம் வண்ண முத்துக்கள் இதற்கு அடுத்த நிலையில்தான் வரும்.

முத்து வாங்கும் போது இயற்கை ஒளியில் அது எப்படி இருக்கிறது எனப் பாருங்கள்.

முன்பே சொன்னது போல் நன்முத்துக்கள் வாயில் போட்டால் மணலைப் போல இருக்கும்..."

"சரி, முத்து மாலை வாங்கி விட்டோம். அதை எப்படிப் பாதுகாப்பது...?"

"இங்கே ஒரு விஷயம். தமிழ்நாட்டுப் பெண்கள் மாலையாக இல்லாமல், 'லூஸாக' முத்துக்களை வாங்குவதையே விரும்புகிறார்கள். அதுவும் 'ஹைதராபாத் முத்துக்கள்' ரொம்பப் பிரசித்தம். உண்மையில் ஹைதராபாத்தில் முத்துக்கள் விளைவதில்லை. ஜப்பானில் இருந்துதான் முத்துக்களை வரவழைக்கிறார்கள். முத்து மிக மென்மையான ஒரு பொருள். அதிலே துளையிடுவது என்பது மிக மிக நுட்பமான வேலை. இதை ஹைதராபாத் கைவினைஞர்களே மிகச் சிறப்பாகச் செய்கிறார்கள். பம்பாயில் எல்லாம் முயற்சி செய்து தோல்வியடைந்து விட்டார்கள். எனவேதான் அந்த நுண்ணிய வேலைப்பாட்டிற்காக 'ஹைதராபாத் முத்துக்கள்' எனப் பெயர் பெற்றது.

முத்துக்களை வாங்கும் பெண்கள் அதைத் தங்கத்திலோ, வெள்ளியிலோ பதிக்கவே கூடாது. காலப்போக்கில், தங்கம் முத்தைத் தின்றுவிடும். தங்கத்தில் பாதிக்கப்பட்ட முத்து மூன்று வருடம் கழித்துப் பார்த்தால் அளவில் சிறியதாகிவிடும். பட்டுக் கயிறில் கோர்த்து அணிந்து கொள்வதே சிறந்தது. அதிலும் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை கயிற்றை மாற்ற வேண்டும். எங்களுடைய கடையில் இதை இலவசமாகச் செய்து தருகிறோம்.

* அதேபோல காற்றுப் புக முடியாத டப்பாவிலோ, லாக்கரிலோ முத்துக்களை வைக்கவே கூடாது. நல்ல காற்றோட்டமுள்ள வகையில்தான் வைக்க வேண்டும்.

* வெயில், வறண்ட காற்று முத்துக்களுக்கு ஆகவே ஆகாது.

* வாசனைத் திரவியங்கள், அழகு சாதனப் பொருட்களும் முத்துக்களுக்குக் கெடுதலையே விளைவிக்கும்.


வானளாவி தெளிவான
காட்சியைப் பெற்றுத்தரும்.
Fuji -2000
சூப்பர் கெய்ன் டி.வி. சிக்னல் பூஸ்டர்.
வானளாவி பெற்ற காட்சியை வோல்டேஜ்
மாற்றத்திலிருந்து பாதுகாத்திடும்.
Fuji -300
ஆட்டோமேட்டிக்
எலக்ட்ரானிக்
வோல்டேஜ் ஸ்டெபிலைசர்
TV & VCR
ELECTRONIC VOLTAGE STABILISER
வி.சி.ஆர். மற்றும் ஸ்டீரியோ டேப் ரெக்கார்டர்களையும்
வோல்டேஜ் மாற்றத்திலிருந்து பாதுகாத்திடும்.
தமிழ்நாடு விநியோகஸ்தர்கள்:
வோல்ட் மேன் எலக்ட்ரானிக்ஸ்,
4வது தெரு, ஹார்வி நகர், மதுரை - 16. போன்: 31750 / 37032
Shree

* மிக மென்மையான துணியால் முத்துக்களைத்துடைத்துப்பாதுகாத்தாலேபோதும்.

* அதற்கு வண்ணமேற்றவோ, பாலிஷ் போடவோ முனைந்தால் முத்தின் தரத்தைப் பாதிக்கவே செய்யும்..."

"இவ்வளவு உயர்வாக இதைப் பாதுகாக்க வேண்டும் என்கிறீர்களே... ஆனால் நம் பக்கத்து மாமியார்கள் தங்கத்தை, வைரத்தைக் கேட்பது போல 'முத்து மாலை செட்'வை' என்று சொல்வதில்லையே..."

வீணா சிரிக்கிறார். "இருக்கலாம். ஆனால் முத்துமாலை அணிந்த பெண்ணின் அழகு தனி அழகு. தங்கம், வைரத்திற்கு ஈடானதும் கூட. தங்கத்தைப் போல இதுவும் ஒரு சொத்துதான். இதன் மதிப்பும் எத்தனை வருடங்களானாலும் குறைவதில்லை..."

"முத்தைத் தங்கத்தில் பதிக்கக் கூடாது என்கிறீர்கள். ஆனால் நிறைய தங்கத்தில் பதித்த முத்துதானே வைத்திருக்கிறீர்கள்...?"

"என்ன செய்வது? பெண்கள் இதைத் தான் விரும்புகிறார்கள். தவிரவும் தங்கத்தில் பதித்தமுத்து இல்லாமல் தங்கமுத்துவே எங்களிடம் இருக்கிறது...!"

"தங்கமுத்துவா...?"

"ஆமாம். நல்ல அரக்கை உருண்டை வடிவில் செய்து அதன் மேல் இருபத்திரண்டு கேரட் தங்கத்தை மெல்லிய தகடாக வார்த்து விடுவோம். இதன் நடுவில் துளையிட்டு விடுவோம். இது முத்தின் அளவு இருக்கும். இது ஒன்று பத்து ரூபாய்தான. முத்தையும் இதையும் கலந்து கோத்தால் மிக அழகாக இருக்கும்..." என அந்த வகையிலுள்ள அழகிய ஆபரணங்களைக் காட்டுகிறார்!

"கடைசியாக, ஒரு முத்தான மறக்க முடியாத நிகழ்ச்சியைச் சொல்லுங்களேன்..." என்றேன்.

"ஒரு தடவை ஒரு பெண் ஒரு முத்து ஆரத்தைக் கொண்டு வந்தார். அந்த முத்துக்கள் மிகவும் 'டல்'லாக அழுக்காக இருக்கின்றன. அதையெல்லாம் தூக்கிப் போட்டு விட்டு நல்ல முத்துக்களைப் பதித்துத் தரச் சொன்னார். மாலையைச் சோதித்துப் பார்த்தால் அவை மிகவுயர்ந்த பசரா முத்துக்கள்! இருபதாயிரத்திற்கும் மேலே மதிப்புடையவை. அதை அவரிடம் சொன்னவுடன் அசந்து போய் விட்டார். ஒரு வார்த்தை பேசாமல் மாலையை வாங்கிக் கொண்டு போனார்...."

முத்தில் இத்தனை சத்தா? என்றால், "ஆமாம். எதுகை மோனைக்காக அல்ல, உண்மையாகவே முத்துக்கள் மருந்துக்குக் கூடப் பயன்படும். ஆயுர்வேத, யுனானி வைத்தியங்களில் முத்தைப் பயன்படுத்துகிறார்கள்..." என்று ஒரு போடு போட்டார் வீணா மல்ஹோத்ரா.

— **பவித்ரா.**

அட்டை வண்ணப்படம், படங்கள்:
யோகா.

நாளானால், போட்டுக் கொள்ள வாங்கி வைத்திருக்கும் சுண்ணாம்புக் கட்டியாக இறுகிப் போகும். அதில் சிறிது தேங்காய்த் தண்ணீர் விட்டு வைத்தால் இறுகிப் போகாமல் எப்பொழுதும் இளகிய பதத்திலேயே உபயோகிக்க ஏதுவாக இருக்கும்.

— சந்திரா.





டிபனுக்கு எதுவும் இல்லையென்றாலும் வெறும் மைதா மாவு, கைவசம் இருக்கிறதா? உப்பு, பச்சை மிளகாய், இஞ்சி நறுக்கிப் போட்டு உப்பும் சிறிது தயிரும் விட்டுத் தளரக் கரைத்துக் கொண்டு சின்னக் கரண்டியில் எடுத்து விட்டு எண்ணெயில் பொரித்தெடுத்தால் வெள்ளையப்பம் போன்ற ருசியுடனிருக்கும்.

— சந்திரா.

தொட்டிகளில் ரோஜா



தொட்டிகளில் வளர்க்கப்படும் செடிகள் வீட்டிற்கு அழகைத் தருவதோடு மனதிற்கு நிறைவையும் மகிழ்ச்சியையும் தருகின்றன. தொட்டிகளில் பலநிற ரோஜாக்களை வளர்க்கலாம். தொட்டிகளில் வளர்க்கப்படும் ரோஜாக்களை அவ்வப்போது இடம் மாற்றி நாம் விருப்பப்படும் இடங்களில் வைத்துக்கொள்ளலாம்.


தொட்டிகளைத் தேர்வு செய்யும் முறை:

மண் மற்றும் சிமெண்ட் தொட்டிகள் பல அளவுகளில் கிடைக்கின்றன. சிறிது செம் மண்ணை நீரில் குழைத்துத் தொட்டிகளின் வெளிப்புறம் சிறு துணியின் மூலம் பூசினால் பார்க்க அழகாக இருக்கும். 12 - 14 அங்குலம் அளவுள்ள தொட்டிகள் போதுமானது.

தொட்டிகளை நிரப்பும் முறை:

தொட்டிகளின் அடிப்புறம் நீர் இறங்குவதற்காக வைக்கப்பட்டுள்ள துளைகளை சிறு ஓடுகள் கொண்டு மூடுவது நல்லது. இவ்வாறு செய்வதால் தொட்டியில் உள்ள மண் தண்ணீரோடு இறங்கி துளையை அடைத்துவிடாமல் இருக்கும்.

மண் + மணல் 3 பங்கு, எரு அல்லது சாணம் 1 பங்கு சாம்பல் 1 பங்கு எடுத்துக் கொண்டு நன்றாகக் கலந்து கொள்ள வேண்டும். இத்துடன் பி. எச். சி. 10% தூள் சுமார் 10 கிராம் அளவு (நாம் எறும்பு மருந்தாக பயன்படுத்துவது) கலந்து தொட்டிகளில் நிரப்ப வேண்டும். ரோஜா செடியை வேர்பாகம் சேதம் அடையாமல் எடுத்துத் தொட்டியின்



பாவாடை நாடா, மற்றும் குழந்தைகளின் ஜட்டிகளுக்கு எலாஸ்டிக் மாற்ற வேண்டுமாயின் — பழைய நாடா, எலாஸ்டிக் இவற்றின் ஏதாவது ஒரு முனையில் புதியதை இணைத்து விட்டு, பின் பழையதை உருவும் போது — ஒரே கல்லில் இரண்டு மாங்காய்! ஆஹா!

— பத்மா குமார்.

நடுவில் நட்டு தண்ணீர் ஊற்ற வேண்டும். தொட்டிகளை வராண்டாக்களில் வைக்கலாம். அதிகப்படியான வெயிலோ அல்லது நிழலோ கூடாது.

அதிகம் நிழல் உள்ள இடங்களில் வளரும் செடிகள் நன்கு கிளைத்து வளராது. கிளைகள் மெல்லியதாக உயரமாக வளரும். அவ்வாறு உள்ள தொட்டிகளை சிறிது நேரம் காலை வெயிலில் வைக்க வேண்டும்.



தண்ணீர் ஊற்றும் முறை:

செடி விரைவாக வளர்ந்து நிறைய பூக்க வேண்டும் என்று நினைத்து அதிகப்படியாக தண்ணீர் ஊற்றக் கூடாது. தொட்டிகளில் நீர் எப்பொழுதும் தேங்கி இருக்கக் கூடாது. அதிகப்படியான நீரினால் இலைகள் மஞ்சள் நிறமாக மாறும்.

கவாத்து செய்யும் முறை:

ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் கிளைகளை வெட்டிவிட வேண்டும். தொட்டிகளில் அதிகப்படியாகக் கண்டபடி வளர்ந்துள்ள கிளைகளையும், நோய் மற்றும் பூச்சி தாக்கிய கிளைகளையும், காய்ந்த கிளைகளையும் வெட்ட வேண்டும். வெட்டும் போது சாய்வான கோணத்தில் வெட்ட வேண்டும். வெட்டியவுடன் முனையில் சிறிதளவு பைடலான் பவுடரை நீரில் குழைத்து பூச வேண்டும். அல்லது சாணத்தை சிறு உருண்டையாய் மேல் பகுதியில் தொப்பி போல் வைக்க வேண்டும்.

கிளைகளை வெட்டியதும் தொட்டியின் மேல்புறம் 3 அங்குலம் அளவிற்கு மண்ணை எடுத்து விட்டு நன்றாக மக்கிய எருவுடன் ஒரு சிட்டிகை அமோனியம் சல்பேட் உரத்தைக் கலந்து நிரப்பி நீர் ஊற்ற வேண்டும். இவ்வாறு செய்வதால் செடி நன்கு கிளைத்து வளர்ந்து நிறைய பூக்கும்.

கோடை காலங்களில் தொட்டிகளில் காய்ந்த இலை, தழைகளைக் கொண்டு மண் பரப்பை மூட வேண்டும். மழை காலத்தில் மக்கிய இலைத் தழைகளை இலேசாகக் கொத்திவிட்டுக் கலந்து கொள்ளலாம்.


நோய் மற்றும் பூச்சிகள்:

அதிகம் நிழல் உள்ள இடங்களில் வளர்க்கப்படும் செடிகளை மற்றும் பூச்சி தாக்கிய கிளைகளை உடனுக்குடன் வெட்டி எரிந்து விட வேண்டும்.

ரோஜாவைத் தாக்கும் பூச்சிகளில் ஸ்கேல்ஸ் முக்கியமானதாகும். இது ப்ரவுன் கலரில் இருக்கும். செடிகளின் தண்டு மற்றும் கிளைகளில் அடைபோல் அப்பி காணப்படும். இதற்குப் பஞ்சினை மண்ணெண்ணெய் அல்லது பெட்ரோலில் நனைத்து அழுத்தி துடைக்க வேண்டும். தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று நாட்கள் செய்தால் பூச்சிகள் இறந்து விடும்.

ப்ளாட்டுகளில் வசிப்பது அதிகமாகி விட்ட நிலையில், அந்தச் சிறிய இடத்தில் ஒரு ரோஜாச் செடி எத்தனை அழகைத் தரும்!

— எஸ். மலர்விழி.



ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 30/-; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 70/-; விமானத் தபால் ரூ. 150/-.

நவராத்திரி நாயகி!

மகாசக்தி அன்னை ஒன்பது நாளும் ஒன்பது வடிவங்கள் எடுக்கிறாள். முதல் மூன்று நாட்கள் துர்கா; அடுத்த மூன்று நாட்கள் லக்ஷ்மி; கடைசி மூன்று நாட்கள் சரஸ்வதி. மூன்று தேவியரையும் துதிக்கக் கீழே மந்திரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தந்த மூன்று நாட்களிலும் அந்தந்த மந்த்ரங்களைத் துதித்து நாம் மேலும் சக்தி பெறுவோம்: —

காத்யாயினீய வித்மஹே:
கன்யகுமாரி தீமஹே:
தன்னோ துர்க்கி ப்ரசோதயாத்.

நாராயணாய வித்மஹே:
விஷ்ணு பத்னீச தீமஹே:
தன்னோ லக்ஷ்மீ ப்ரசோதயாத்.

வாக்தேவ்யேச வித்மஹே:
வ்ருஞ்சிபத்னீச தீமஹே:
தன்னோ வாணி ப்ரசோதயாத்.

இங்கும், வரும் பக்கங்களிலும் உள்ள வண்ண, கறுப்பு வெள்ளைப் படங்கள்,

நவராத்திரி ஒன்பது நாட்களிலும் அருள்மிகு கற்பகாம்பாளின் (மயிலை) ஒன்பது வகை அலங்காரத் தோற்றங்கள்: —

1. அன்ன வாகனம்.



துர்கா நவராத்திரி

திருமத்தின் வடிவான தருமரும், திருமாலின் அவதாரமான ஸ்ரீராமரும், தங்கள் வெற்றிக்கு நவராத்திரியை அனுஷ்டித்தனர். தனது மாங்கல்யம் குறையாமல் இருக்க சாவித்திரி இதைக் கடைப்பிடித்தாள். புராண புருஷர்களும் இதிகாச மணிகளும் மேன்மைப் பெற விளக்கேற்றி வைத்தது நவராத்திரி விரதமே!

உபாசகர்களும் எளிய மக்களும் நவராத்திரி விரதத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். உபாசர்கள் தங்கள் தங்கள் குருமுகமாகக் கோட்படி பொது வழியையும் புனித நெறியையும் காட்டுவோம்.

அம்பிகையை வழிபட மாதங்களில் தையும், ஆடியும் மிகச் சிறந்தது. வாரங்களில் செவ்வாய், வெள்ளி உகந்தன. திதிகளிலே அஷ்டமியும், சதுர்தசியும், பௌர்ணமியும் மிக்க மேன்மையானவைகள். நக்ஷத்திரத்தில் உத்தர நக்ஷத்திரம் அம்பிகைக்கு ஏற்றது. ஒவ்வொரு நாளும் வரும் இரவுக் காலம் அம்பிகை பூஜைக்கே உரியது. இரவில் செய்யப்படும் எல்லாவிதமான பூஜைகளும் அன்னையைத்தான் சாரும்.

முன் நாட்களில் நவராத்திரி பூஜை — துர்க்கா பூஜை என்றே வழங்கப்பட்டு வந்தது. இந்தப் பூஜையில் ஸ்ரீவித்யா

• தஞ்சை பெரிய கோவில் பிராகாரத்தில் உள்ள ஞானசரஸ்வதி சேடியருடன்.



மந்திரங்களும், உபதேச மந்திரங்களும் ஜெபம் செய்யப் பெற்று, உரு ஏற்றப் பெற்று வலுவாக்கிக் கொண்டார்கள்.

இராவணனுடைய வலிமை, அவன் தவத்தினால் பெற்ற வரங்கள் இவைகளை உணர்ந்த ஸ்ரீராமன், அவனை வெல்லும் வழியைச் சிந்தித்து இருந்தான். லோபா முத்திரையின் கணவரும் சித்தர்களில் மூத்தவரும், உருவத்தால் குறுகி, மந்திரத் திறனாலும், அறிவுத் தெளிவாலும் உயர்ந்த அகத்தியர் இராமரின் சிந்தனைக்கு முடிவு கட்டினார்.

அதாவது — ஸ்ரீராமனுக்கு இராவணனை சம்ஹாரம் செய்யும் பூரண வலிமையைக் கொடுக்கும் ''ஸ்ரீ பஞ்சதசாக்ஷரி'' என்ற வித்யா மகா மந்திரத்தை வலது காதிலே உபதேசித்தார். அதிலிருந்து ஸ்ரீராமன், தேவி

வடிவையும் பூஜை செய்கிறோம்.

பத்தாவது நாளில் விஜயதசமி என்று கொண்டாடுகிறோம். இந்த விஜயதசமி எப்படி வந்தது?

பஞ்சபாண்டவர்கள் துரியோதனாதியரிடம் தோற்றதால் நாட்டை இழந்து வாழும் நிலை ஏற்பட்டது. அவர்கள் காட்டில் மறைந்து வாழ்ந்த காலத்தில், தங்கள் ஆயுதங்களை ஓர் பெரிய வன்னி மரத்தின் பொந்தினுள் ஒளித்து வைத்திருந்தார்கள். அவர்களின் அஞ்ஞாதவாச பன்னிரெண்டு ஆண்டுக் காலத்தில் வன்னி மரம்தான் அவர்கள் ஆயுதங்களின் பாதுகாப்புப் பெட்டகம் ஆயிற்று.

அவர்கள் மறைந்து இருந்து வாழும் போது, மற்றவர்களால் தெரிந்து கொள்ளாமல் இருப்பதற்கும் அக் காலத்தில் தங்கள்



* மஹிஷாசுர மர்த்தினி — மஹாபலிபுரம்.

பக்தனாக மாறிப் புரட்டாசி மாதம் சுக்ல பக்ஷ பிரதமை முதல் நவமி முடிய ஒளியான ஒன்பது நாட்களிலும் ஸ்ரீதேவியைப் பூஜித்தான்.

ஸ்ரீராமன் அன்னையை இந்த ஒன்பது நாளும் இரவில் நியம நிஷ்டையுடன் பூஜை செய்தது முதல் இது சிறந்த நவராத்திரியாக ஒளிர்விட்டது. இராமனும் அன்னையை வழிபட்டு தசக்ரீவனை சம்ஹாரம் செய்தான். ஸ்ரீகண்ணபிரானும் கூட பிருந்தாவனத்தில் இவ்விதமே நவராத்திரி பூஜை செய்து அன்னையின் அருளைப் பெற்றார்.

வழக்கத்தில் முதல் மூன்று நாட்களும் தமோகுண நிறம் கொண்ட துர்க்கா தேவியையும், சதுர்த்தி முதல் மூன்று நாட்களும், ரஜோ குண நிறங்கொண்ட திருமகள் வடிவையும், சப்தமி முதல் மூன்று நாட்கள் சத்வ குணமயமான வெண்ணிற சரஸ்வதி

துன்பங்கள் தங்களைத் தாக்காமலும் இருக்க என்ன வழி என்று தேடினார்கள். வனத்தில் தவம் செய்யும் பெரும் முனிவர்களை அண்டி வணங்கினார்கள். முனிவர்கள் மன்னர்களுக்கு ஸ்ரீதுர்க்காதேவியின் புகலிடத்தைக் காட்டினார்கள்.

துன்பங்களில் இருந்து காப்பவளும், துன்பங்களை விடுவிப்பவளும் துர்க்கையே! துர்க்கா தேவியை அண்டியவர்களுக்குத் துன்பத்தின் சாயல் கூடத் தொடராது. தாரித்ரியம், துக்கம், பயம் இவைகளைப் போக்கி உலகுக்கு உபகாரம் செய்பவளே துர்க்கை. இதை அறிந்த பாண்டவர்கள் தருமரை முதலாகக் கொண்டு தேவியை வழிபட்டார்கள்.



2. காமதேனு வாகனம்



3. சரஸ்வதி

மகரிஷிகளால் உபதேசிக்கப்பட்ட "ஸ்ரீ துர்க்கா நக்ஷத்ர மாலிகா துதி" என்ற இருபத்தேழு ஸ்லோகங்களைக் கொண்ட துதியால் நாள்தோறும் துதித்தார்கள். இதனால் தேவியின் திருவருள் கிட்டியது. அசுவினி முதல் ரேவதி முடிய உள்ள இருபத்தேழு நக்ஷத்திர அதிதேவதைகளும், நக்ஷத்திரங்களும் இவர்களுக்கு ஆசி கூறி நன்மைகளை வழங்க எத்தனமாய் நின்றன.

அக்ஞாத வாசம் முடிந்ததும் வன்னி மரப் பொந்தில் இருந்து தங்கள் ஆயுதங்களை



* நவராத்திரி அலங்காரத்தில் மைசூர் சாமுண்டீஸ்வரி அன்னை.

எடுத்து அம்மரத்தடியில் வைத்துப் பூஜித்தார்கள். வனதுர்க்கையாகவும், 'எல்லாச் சங்கடங்களையும் சங்கரிப்பவளாயும், தீமைகளை அடக்கி ஒடுக்கி நன்மைக்கு வெற்றி தருபவளாயும் விளங்கும் தேவியை ஒன்பது நாட்கள் வழிபட்டார்கள். தசமியில் ஆயுதங்களை எடுத்துக் கொண்டார்கள்.

விஜயம் தரும் தசமி-இது என்பதாலும், விஜயனால் மிகவும் பக்தியுடன் பூஜிக்கப் பெற்றது என்பதாலும் இது "விஜயதசமி" என்ற பெயரைப் பெற்றது. இதை விஜய நவராத்திரி என்றும், வன்னி நவராத்திரி என்றும், வனதுர்க்கா நவராத்திரி என்றும் அழைப்பது வழக்கம்.

இவைகளைப் பற்றி எல்லாம் விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் "தேவி மகாத்மியமும், மார்க்கண்டேய புராணமும், தேவி பாகவதமும், அருணாசல மான்மியமும், லலிதம்" முதலிய நூல்களும் பேசுகின்றன.

நவராத்திரியில் அமாவாசையன்று பூஜையை அங்குரார்ப்பணம் செய்ய வேண்டும். அல்லது பிரதமை தினத்தன்று காலையில் விக்னேஸ்வர பூஜையைத் துவங்கிக் கொள்வதும் உண்டு. பிரதமை முதல் ஒன்பது நாட்களும் காலையும் இரவும் தேவியைப் பூஜிக்க வேண்டும். ஹோமங்களைக் காலையிலும், அர்ச்சனை வழிபாடுகளை இரவிலும் செய்வது வழி வழி வழக்கம்.

ஒன்பது நாட்களும் "வபனம்" (முடி நீக்குதல்) ஆகாது; மருந்துண்ணல் கூடாது. பொய் நீக்கிய வாழ்வும் அன்னை புகழ் பேசும் நாவும் கொண்டு விளங்க வேண்டும். நவராத்திரியில் ஒன்பது நாட்களும் முறையே சைல புத்திரி, பிரும்மச்சாரிணி, சந்திர காண்டா, கூஷ்மாண்டா, ஸ்கந்த மாதா, காத்யாயனி, காலராத்ரி, மகா கௌரி, சித்திதா என்ற நவதுர்க்காவாக, நவ நாட்களிலும் ஒளிர் விடுகிறாள். இதனால்தான் கன்யா பூஜையில் அந்தந்த நாளுக்குரிய தேவியாக பெண் குழந்தைகளை வரித்து பூஜை செய்யப் பெறுகின்றது.

நவராத்திரி ஒன்பது நாட்களும் பகலில் சிறு உணவோ அல்லது ஏற்ற உணவோ கொண்டு, இரவில் பட்டினி இருத்தல் வேண்டும். ஒருசிலர் பகலெல்லாம் நோன்பு இருந்து. இரவில் அன்னையின் வழிபாடு நிறைந்த பின்னர் சிற்றுணவு கொள்வதும் உண்டு. இதுவும் ஏற்றதே! இந்த ஒன்பது நாட்களிலும் பானகமும், தேனும் நிவேதிப்பது மிகவும் அவசியம். இக் காலத்தில் வீட்டிற்கு வரும் எல்லா சுவாசினிகளையும் — ஜன்ம விரோதியாக இருந்தாலும் அன்னையாகவே பாவித்து அவர்களுக்குரிய மரியாதைகளைச் செய்தல் வேண்டும்.

முதல் மூன்று நாட்கள் துர்க்கா அஷ்டோத்ரம், சகஸ்ர நாமமும், அதற்கு அடுத்த மூன்று நாள் லக்ஷ்மி அஷ்டோத்ரம், சகஸ்ர நாமமும், அதற்கு அடுத்த மூன்று நாளில் சரஸ்வதி அஷ்டோத்ரம், சகஸ்ரநாமமும் ஜெபிப்பதும் அருச்சனை செய்வதும் சிறப்பு.

உபாசகர்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஜெபம் செய்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு வலுப்பெறுகிறார்கள். தேவி மகாத்மிய பாராயணத்தை ஏழு பகுதிகளா

கப் பிரித்தோ அல்லது முழுவதுமாகவோ இந்த நாட்களில் படிப்பவர்கள், தங்கள் குலத்தின் பாவ மூட்டைகளை எரிக்கிறார்கள். எவன் ஒருவன் இந்தத் தேவி மகாத்மியம் படிக்கப்படும் இடத்தில் அமர்ந்து கேட்கிறானோ அவன் தனது பஞ்ச இந்திரியங்களினால் செய்த பாவங்களில் இருந்து விடுபடுகிறான். பணக் கவலையும், மனக் கவலையும், குலக் கவலையும் நன்கு தீர ''தேவி மகாத்மியம்'' ஒன்றுதான் சிறந்த வழி.

வாழ்க்கையின் பாதை தெரியாமல் தத்தளிக்கும் போது இந்தத் தேவி மகாத்மியத்தை நவமியில் ஒரு தடவை படித்தால் அல்லது படிக்கச் சொல்லிக் கேட்டால் அல்லது கேட்பவனின் வாய் மூலம் சொல்லிக் கேட்டாலும் கூட அவனுக்கு நல்ல வழி கிடைக்கிறது.

நவராத்திரியில் முதல் மூன்று நாட்களில் எலுமிச்சம் பழச் சாதம், எள்ளுச் சாதம், தயிர்ச் சாதம் இவைகளே சிறப்புடையன. அடுத்த மூன்றில் சர்க்கரை அன்னம், பால் சாதம், கற்கண்டு அன்னம் கனிவுடையன. அடுத்த மூன்றில் வெண்பொங்கல், தேங்காய்ச் சாதம், பரல் சாதம் பலன் தருவன. முதல் மூன்று நாட்களில் செம்மை நிற, மஞ்சள் நிற, நீலவண்ண மலர்கள் சிறப்புடையன. அடுத்த மூன்று நாளில் செண்பகப் பூ, வில்வதளம், செந்தாமரை மலர், ரோஜா, கதம்பம் இவைகள் நன்மை தருவன. அடுத்த மூன்று நாட்களில் மல்லிகை, முல்லை, நீலசம்பங்கி, நந்தியாவர்த்தம், வெண் தாமரை, துளசி இவைகள் பலன் தருவன.

— 'சன்மிஷ்டை'

செய்து பாருங்களேன்!

கமலா

பயத்தம் புட்டு:

நவராத்திரி வெள்ளிக்கிழமை வந்து விட்டால் புட்டு செய்யப் பல சகோதரிகள் படும் பாடு, கடைசியில் புட்டு, புட்டாகக் (சரியான பதத்தில்) கிடைப்பது அரிதாகி விடுகிறது. இதோ எளிய வகையில் பயத்தம் புட்டைச் செய்யலாமே!

தேவையான பொருட்கள்:

பயத்தம் பருப்பு — கால் கிலோ,
வெல்லம் — 300 கிராம்,
தே. மூடி — 1,
முந்திரிப் பருப்பு — 8,
ஏலக்காய் — 6,
நெய் — 150 கிராம்.

செய்முறை:

பருப்பை கால் அல்லது அரை மணி நேரம் ஊற வைத்து, கல்நீக்கி, கொரகொர வென்று மிக்ஸியில் அரைக்கவும். எண்ணெய் தடவிய தட்டில் சமமாகப் பரப்பி 10 நிமிடம் ஆவியில் வேக விடவும். சிறிது ஆறியதும் உதிர்க்கவும்.

வாணலியில் நெய் வைத்து, முந்திரியை உடைத்துப் போட்டுப் பொரித்து, உதிர்த்த மாவை (வெந்தது) கொட்டிக் கிளறவும். பொல, பொலவென்று உதிரியாய் ஆனதும், தேங்காய்த் துருவல் சேர்த்து 5 நிமிடம் உதிர்த்துக் கிளறவும்.

வேறொரு வாணலியில் வெல்லத்தைப் பாகு காய்ச்சி (தக்காளிப் பழ பதம் பாகு) இறக்கி, உதிர்த்த புட்டைக் கொட்டிக் கிளறி ஏலப்பொடி சேர்க்கவும். சிறிது ஆறியதும் புட்டு உதிரியாய் ஆகி விடும். பூப்போல இருக்கும். வாசனையாயும், ருசியாயும் இருக்கும் இந்தப் புட்டு செய்வது எளிது. புதியதாயும் இருக்கும். தைரியமாய்ச் சகோதரிகள் இப்புட்டு செய்ய முயலலாம். (கெட்டுவிடுமோ என்ற கவலை இல்லாமல்).

காரட் கண்டல்:

பயத்தம் பருப்புச் கண்டல் செய்யும் போது கால் கிலோ பயத்தம் பருப்புக்கு கால் கிலோ காரட் சேர்த்துச் கண்டல் செய்யலாம். வெந்த பயத்தம் பருப்பை வதக்கும் போது காரட் சீவியில் கால் கிலோ காரட்டைச் சீவி, கண்டிக் கொண்டிருக்கும் பயத்தம் பருப்பில் கொட்டி, 2 நிமிடம் சேர்த்து வதக்கி, தேங்காய் துருவிக்கொட்டிக்கிளறி இறக்கவும். பார்க்க அழகாய் இருக்கும். இந்தச் கண்டல் சுவையாகவும் இருக்கும். புதுமையாகவும் இருக்குமே!




4. நாகம் (வாகனம்)




5. ரிஷபம் (வாகனம்)

தட்டு துலக்குவதின் நவீன முறைகளை யாரிடம் கேட்பது, எப்படி கேட்பது? இதுதானே உங்கள் பிரச்சினை?

தட்டு துலக்க எளிய வழி ஏதேனும் உண்டா?
ஆம். உண்டு. இதோ பாருங்களேன் — **புதிய "விம் டிஷ்வாஷ் லிக்விட்"**டை வைத்து எவ்வளவு பாத்திரங்களை 3 எளிய வழிகளில் துலக்கலாமென்று.



தினசரி துலக்க அளவு
ஒரு கிண்ண நீரில், ஒரு **தேக்கரண்டி** "லிக்விட் க்ளீனரை" கலக்குங்கள். ஸ்பாஞ்சி/ஸ்க்ரப்பரை அதில் நனைத்து தட்டுக்களை துலக்கி அலசுங்கள்.



நிறையத்தட்டுக்கள் துலக்க அளவு
ஒரு பக்கெட் அல்லது பெரிய டப்பா நீரில் (வெதுவெதுப்பான நீர் நல்லது) **இரண்டு** தேக்கரண்டி "லிக்விட் க்ளீனரை" கலக்கவும். இந்தக் கரைசலில், பாத்திரங்களை நனைத்து வையுங்கள். சிறிது நேரத்திருப்பின், ஸ்பாஞ்சி/ஸ்க்ரப்பரை வைத்து துலக்கி அலசுங்கள்.



குறைவான தட்டுக்கள் துலக்க அளவு
ஒன்று அல்லது இரண்டு தட்டுக்களை மட்டும் துலக்க வேண்டியிருந்தால், **ஒன்றிரண்டு சொட்டு** "லிக்விட் க்ளீனரை" அவற்றின் மீது விட்டு ஸ்பாஞ்சி/ஸ்க்ரப்பரை வைத்து துலக்கி அலசுங்கள்.



இது சிக்கனம்தானா?
மற்ற "லிக்விட் க்ளீனர்"களை விட, விம் டிஷ்வாஷ் லிக்விட், **அதிக துலக்கும் சக்தி** வாய்ந்தது. ஆய்வு அறிக்கைகளின் படி, **ஒரே ஒரு லிட்டரில், 10,000 த்திற்கும் அதிகமான தட்டுக்கள்** "பளீர்" என மின்னிடும் வண்ணம் துலக்கப்பட்டிருக்கின்றன.

வேலைக்காரர்கள் வீணாக்கி விடுவார்களோ?
விம் "டிஷ்வாஷ் லிக்விட்" "**கான்சன்ட்ரேட்டட்**" ஆனது. எனவே, நீங்கள் ஒரே ஒரு தேக்கரண்டி "லிக்விட் க்ளீனரை" வேலைக்காரரிடம் கொடுத்து அதைப்போல 10 மடங்கு நீரில் கரைக்கச் சொல்லுங்கள்.




நம்பினால் நம்புங்கள், தினசரி துலக்கத்திற்கு இதுவே போதும்! ஒரு கரண்டி கான்சன்ட்ரேட்டட் விம் லிக்விட்டையோ அல்லது லிக்விட் கரைந்த நீரையோ உங்கள் வேலைக்காரரிடம் நீங்கள் தரலாம் — இதுவே இதன் அனுகூலம்.




இது எளிதாக துலக்கி அலசுகிறதா?
விம் டிஷ்வாஷ் லிக்விட் கரைந்து எளிதாக துலக்குகிறது. எந்தக் கறையும் தேங்க விடாமல். எனவே சிறிதளவு நீரிலேயே, பெருமளவு தட்டுக்களை நீங்கள் துலக்கலாம். **தண்ணீர் தட்டுப்பாடுள்ள பகுதிகளில் இது ஒரு நல்வரமாகும்!**


இது அனைத்து வித தட்டுக்களையும் துலக்குகிறதா?
விம் டிஷ்வாஷ் லிக்விட், விலை உயர்ந்த தட்டுக்கள் முதல் கனமான சமையல் பாத்திரங்கள் வரை. **அனைத்து வகைகளையும் துலக்க** வசதியானது. எனினும், துலக்கும் முறை வேறுபட்டது.



விலை உயர்ந்த தட்டுக்கள்
பீங்கான் வகைகள், கண்ணாடிப் பாத்திரங்கள், பீங்கான் மட்பாண்டங்கள், மெலாமைன், தெர்மோவேர், நான்-ஸ்டிக்வேர், எவர்சில்வர் சாமான்கள், கத்திகள் போன்ற விலை உயர்ந்த பாத்திரங்களை துலக்க, விம் டிஷ்வாஷ் நனைத்த ஸ்பாஞ்சை பயன்படுத்துங்கள். இதன் உயர் செயல்திறம், கீறல்கள் இல்லாமல் அவற்றை மின்ன வைக்கிறது.



கனமான சமையல் பாத்திரங்கள்
பிரஷர் குக்கர், வாணலி, பொரிக்கும் சட்டி, பால்பாத்திரம் போன்ற கனமான சமையல் பாத்திரங்களை விம் டிஷ்வாஷ் நனைத்த ஸ்க்ரப்பரை வைத்து துலக்கி அலசுங்கள். ஸ்க்ரப்பரின் தீவிரத் துலக்கல், பிசுக்கு, நீக்குவதுகளை அகற்றி பாத்திரங்களை மிளிரச் செய்கிறது.




விம்

டிஷ்வாஷ் லிக்விட்

விம் டிஷ்வாஷ் லிக்விட் பற்றி மேலும் நீங்கள் விபரமறிய, இம்முகவரிக்கு எழுதுங்கள்:

விமலா சுஜாதா, விம் டிஷ்வாஷ் அட்வைசரி சர்வீஸ், தபால் பை எண். 409, பம்பாய்-400 020.




பலப்பல பாத்திரங்களுக்கு ஒரே ஒரு தேக்கரண்டி

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

LINTAS VL 18 2114 TM

குழந்தை விருந்தாளிகள்



பெரியவர்களே விருந்தினராகப் போய் ஒருவர் வீட்டில் தங்க யோசிக்க வேண்டிய சூழ்நிலை தற்போது இருக்கும் போது குழந்தை விருந்தாளிகளா? என்கிறீர்களா?

நாம் குழந்தைகளாக இருந்தபோது பண்டிகை தினங்களும், கோடை விடுமுறையும், பிறந்த நாட்களும் ஏன்? சமயத்தில் பெரியவர்களின் திதியும் (திவச தினம்) எப்போது வரும் என்றும் அத்தை, மாமா, சித்தி, சித்தப்பா போன்ற உறவினர்களையும் நம் வயதொத்த அவர்கள் குழந்தைகளையும் எப்போது பார்க்கலாம் என்றும் ஆவல் நம்மிடையே காணப்பட்டது.

வீட்டில் பெண்கள் பலர் இருக்கும் போது குழந்தைகளை விருந்தாளிகள் என்ற கண்ணோட்டத்தில் பார்க்காமல் நம் சொந்தக் குழந்தைகள் போல உபசரிப்பர். ''விளையாட்டைத் தவிர வேறொன்றும் அறியேன் பராபரமே'' என்று விளையாடுவதே நம் சந்தோஷமாக இருந்ததால் நம் விடுமுறை நாட்களை எவ்வளவு சந்தோஷமாய் எதிர் பார்த்தோம்?

இன்றைய நிலைதான் என்ன? கூட்டுக் குடும்பங்கள் நலிந்து விட்டன. கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதால் விடுமுறை கிடைப்பதே கஷ்டம். பெரிய உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு வேண்டுமானால் விடுமுறையும் எல். டி. சி. பணமும் கிடைக்கலாம். தம் இரண்டு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு நெருங்கிய உறவினர் வீட்டுக்கோ, அல்லது ஹோட்டலில் தங்கி புதுப்புது ஊர்களைப் பார்க்கவோ செல்லலாம்.

மேற்குறிப்பிட்ட வசதியில்லாத வேலையிலிருப்பவர்களுக்கு விடுமுறையில் குழந்தைகளைத் திருப்தி படுத்துவது சிரமமே ஆகும். அதற்காக நாலு பேரைப் பார்க்க ஆசைப்படும் குழந்தைகளைக் கட்டிப் போட முடியுமா?

சில வீடுகளில் குழந்தைகளை அத்தை, மாமா வீடுகளில் விடுமுறைக்காக தங்க அனுப்பலாமென்றால் அக் குழந்தைகளுக்கு வால் ஒன்று முளைக்காத குறைதான். தங்களாலேயே சமாளிக்க முடியாத குழந்தைகளை உறவினர் வீட்டில் விட்டு வைத்து



இருக்கும் கொஞ்சம் மானத்தையும் இழக்க வேண்டாமே என்று ஒதுங்கியிருக்க வேண்டியிருக்கிறது.

ஒரு புதிய சூழ்நிலையில் அவர்களைச் சொந்தக்கார குழந்தைகளுடன் பழக விடும் போது மனம் சந்தோஷப்படுவது மட்டுமல்லாமல் ஒருவர்க்கொருவர் பழகித் தெரிந்து கொள்ள எவ்வளவு நல்ல விஷயங்கள் கிடைக்கின்றன? நல்ல பழக்கங்கள் உருவாகின்றன. பெற்றோர் சொன்னால் கேட்காத குழந்தைகள் கூட மாமாவும், அத்தையும் சொல்வதை வேதவாக்காக எடுத்துக் கொள்வர்.

விடுமுறையை நல்ல 'மூடில்' கழித்தால் பள்ளி திறந்ததும் அவர்கள் சந்தோஷமாய்த் தம் நடைமுறை வாழ்க்கைக்குத் திரும்ப சுலபமாக இருக்கும்.

அதற்கு நாம் செய்ய வேண்டியது சிறு முயற்சியே!

சிறுவயது முதலே காலை எழுந்தவுடன், தானே பல்துலக்கி, தானே குளித்துத் துணிகளை மாற்றிக் கொள்ள, ஷூ பாலிஷ் போட, முக்கியமாக சாப்பிடக் கூப்பிட்டவுடன் உடனே வந்து தடார் என்று உட்கார்ந்து விடாமல் தன் தட்டையும் ஒரு டம்ளர் தண்ணீரையும் வைத்துக் கொண்டு உட்கார, சாப்பிட்டதும் தட்டை அலம்பி வைக்க, காப்பி குடித்ததும் டம்ளரை அலம்பி வைக்க இப்படிச் சிறுசிறு வேலைகளைக் குழந்தைகளுக்குப் பழக்க வேண்டும். (ஆண் பெண் பேதமின்றி.)

பாத்திரங்கள் தேய்த்ததும் நாறு எண்ணுவதற்குள் மேடை மேல் கொண்டு அழகாக அடுக்கச் சொல்லுங்கள், விளையாட்டாய் குழந்தைகள் செய்வார்கள்.

முக்கியமாக 'காரம்', 'செஸ்', 'வீடியோ கேம்ஸ்' எது விளையாடினாலும் விளையாட வேண்டாமெனத் தடுக்காதீர்கள். விடுமுறை விளையாடத்தானே? ஆனால் எங்கிருந்து எடுத்தார்களோ அங்கேயே விளையாட்டுச் சாமான்களை வைத்து தான் ஆக வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருங்கள்.






தம் துணிமணிகளைப் பார்த்து எடுத்து வைத்துக் கொள்ளத் தெரிய வேண்டும். தம் டவலை உபயோகப்படுத்திய பின் பிழிந்து (அல்லது) பிழிந்து தரச் சொல்லி உலர்த்தி வைத்துக் கொள்ளத் தெரிய வேண்டும்.

சாப்பாட்டு மேஜைமேல் சாப்பிட்டு முடித்தபின் பாத்திரங்களை ஒழித்ததும் அதைக் கொண்டு போய் தேய்க்கப் போடப் பழக்கலாம்.

இப்போதுதான் 'பிரிட்ஜ்' இல்லாத வீடுகளே இல்லை. அதில் பாட்டிலில் நீர் நிரப்ப பெரியவர்களே அலுத்துக் கொள்ளும்படி ஆகிறது. எத்தனை முறை நிரப்பி வைத்தாலும் குழந்தைகள் ஐஸ் வாட்டர் குடிப்பதில் உள்ள ஆர்வத்தில் பாட்டிலைக் காலியாக்கி வைத்துவிட்டு ஓடிவிடுவர். பிறகு, நமக்கோ, விருந்தினருக்கோ, பார்த்தால் குளிர்ந்த நீர் நிச்சயம் இருக்காது. அவசரத்தில் ஐஸ் கட்டிகளும் எடுக்க வராது. தண்ணீர் குடித்தவுடனே ' பாட்டிலைத் தவறாமல் நிரப்பி வைக்கும் பழக்கத்தைக் கண்டிப்பாகப் பழக்க வேண்டும்.

எந்தக் குழந்தையும் முதலில் கேட்காது தான், ஐந்து வயதுக்கு மேல் ஆகும் குழந்தைகளுக்கு நாம் 'ஐஸ்' வைத்து, தட்டிக்கொடுத்து சிறு வேலைகளைத் தாமே செய்து கொள்ளப் பழக்கினால் நமக்கு மட்டுமல்ல, அவர்கள் எதிர்காலத்திற்கும் நல்லது.

இப்படிச் சிறுசிறு வேலை செய்து பழக்கப்படுத்தப்பட்ட குழந்தைகள் விருந்தாளிகளாகப் போனால், யோசித்துப் பாருங்கள், போகுமிடத்தில் தம் வேலைகளையும்



6. ராஜராஜேஸ்வரி



7. மஹிஷாசுரமர்த்தினி

கவனித்துக் கொண்டு பெரியவர்களுக்கும் உதவி செய்து நல்ல பெயரைத் தட்டிக் கொண்டு வருவார்கள்.

என் குழந்தை நான் போட்டால்தான் சாப்பிடும். நான் செய்தால்தான் சரியாக வரும் என்று பெருமையடையும் தாயார்கள் அந்தக் குழந்தையின் முன்னேற்றத்துக்குத் தடையாகத்தான் இருப்பார்கள். இவர்கள் வளர்ந்து பெரியவர்களாகும் போது எல்லா வேலைக்கும் மனைவி கையை எதிர்பார்க்க வேண்டிய நிலையிலே இருப்பார்கள்.

மணமான புதிதில் காதலும், இடமும், தெம்பும் இருக்கும் போது கணவன் 'பிரஷ்ஷில் பேஸ்ட்' கூட வைத்துக் கொடுத்து குளிக்க சோப் எடுத்து வைத்து, "நான் சோப் வைக்காவிட்டால் சோப்பில்லாமலேயே குளித்துவிட்டு வந்து விடுவார் என் கணவர்" என்று பெருமைப் படும் பெண்கள் பிற்பாடு தள்ளாமை வந்து கணவரைக் கவனிக்க முடியாமல் இயலாமையால் அவரை கரித்துக் கொட்டுவானேன்!

தம் வானரக் குழந்தைகளோடு வந்த விருந்தாளிக் குழந்தைகளையும் கவனிக்க வேண்டியிருக்கிறதே என்று தம் விதியை நொந்து கொள்ளாமல் உறவினர் இருக்கக் கண்டிப்பாக நம் குழந்தைகளைச் சிறுசிறு வேலைகளுக்குப் பழக்க வேண்டும். பெரியவர்களுடன் கூடக் கூட வேலை செய்ய பழக்க வேண்டும்.

இக்காலக் குழந்தைகள் கதை புத்தகங்கள்; காமிக்ஸ், நாவல் படிப்பது சகஜமாகிவிட்டது. ஃபாஷனாகவும் ஆகிவருகிறது. "எம்புள்ள புஸ்தகத்தை எடுத்தா சாப்பிடறப்ப கூட கீழே வைக்க மாட்டான்" இது ஒரு தற்காலத் தாயின் பெருமை. இதில் பெருமை என்ன இருக்கிறது? நாளை இதே 'தொட்டில் பழக்கம்', மனைவி தட்டில் எதைப் போட்டாலும் பேப்பர் படித்துக் கொண்டு சாப்பிட்டு அவளிடம் திட்டு வாங்கிக் கட்டிக் கொள்ளும் நிலைதான். சாப்பிடும் நேரம் பல விஷயங்கள் பேசப் படும், விவாதிக்கப்படும் நேரமாக இருக்க வேண்டும். அப்போதுதான் எதிர் காலத்தில் அவன் மனைவியுடன் பேசும் நேரமாக அதை மாற்றுவான். அவர்கள் இல்லறம் சிறக்கும்.

— பானுமதி இராமச்சந்திரன்.

திடீர் பேப்பர் ரோஸ்டு

தேவையான பொருட்கள்:

பச்சரிசி — 2 ஆழாக்கு,
கோதுமை — 1 ஆழாக்கு,
க. பருப்பு — ½ ஆழாக்கு,
உ. பருப்பு — ½ ஆழாக்கு,
து. பருப்பு — ½ ஆழாக்கு.

செய்முறை:

இவைகளைக் கலந்து மெஷினில் நைஸாக அரைக்கவும். தோசை தேவைப்பட்ட போது கறிவேப்பிலை, கொத்து மல்லி, ப. மிளகாய் மூன்றையும் பொடிப் பொடியாக நறுக்கித் தேவைப்பட்ட உப்பு சேர்த்து மாவுடன் தண்ணீரில் கரைத்துக் கொள்ளவும். வெங்காயம் சேர்ப்பதானால் சிறிது சிறிதாக நறுக்கி எண்ணெயில் வதக்கிக் கரைத்த மாவில் கலந்து — தோசைக்கல் காய்ந்ததும் சுற்றி மாவை ஊற்றி எண்ணெய் ஒரு ஸ்பூன் ஊற்றித் திருப்பிப் போட்டு எடுக்கவும். மாவைக் கல்லில் ஊற்றித் தேய்க்கக் கூடாது. மாவைக் கெட்டியாகவும் கரைக்கக் கூடாது. இதே மாவை பஜ்ஜி (அ) பக்கோடா செய்யவும் உபயோகிக்கலாம்.

— ஜி. புஷ்பா.



உபயம்: அருள்மிகு கற்பகாம்பாள் கோயில் (மயிலை). தொகுப்பு: மாலதி சந்திரசேகரன்.

8. மீனாக்ஷி



9. கம்பாநதி (லிங்க ஆலிங்கனம்)



குழந்தைகளுக்குப் படித்துப் படித்து சொல்லியாகி விட்டது. ''சரிம்மா,'' என்று தலையை ஆட்டுகிறார்கள். நாளைக்கு அவர்கள் முன் மானத்தை வாங்காமல் இருக்க வேண்டுமே என்று கவலைப் பட்டாள் ஜெயம்.

''நீ ஏன் அனாவசியமா அலட்டிக்கறே? வரப் போறது யாரு? எங்க அம்மா அப்பா தானே? தாத்தா பாட்டிகிட்டே எப்படி நடத்துக்கணும்னு மிலிடிரி டிரெயினிங் குடுக்கணுமா என்ன?''

ராமச்சந்திரன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

இப்போது சிரிப்பாகத்தான் இருக்கும். சமயம் வரும் போது பார்க்கணுமே, இவருடைய உக்ர தாண்டவத்தை... என்று நினைத்துக் கொண்டாள் ஜெயம்.

ஆனால் அவரைச் சொல்லியும் குற்றமில்லை. குழந்தைகள் செய்யும் விஷமம், அடம் அப்படிப்பட்டது. பொழுது விடிந்

''கொஞ்ச நேரம் டயர் ஓட்டறேம்மா. சாயந்திரம் படிக்கிறேன்'' என்பான். எவ்வளவு கண்டிப்பாக இருந்தாலும், அவர்கள் நினைத்ததைத் தான் செய்வார்கள். சாயந்திரம் ஆனே கண்ணில் பட மாட்டான். பிளேகிரௌண்டில் போய்த்தான் தேடி அழைத்து வர வேண்டும்.

'இரவு டி.வி.யில் நல்ல நாடகம்மா' என்பான் பெரியவன். சாம பேத தான தண்டம் ஒன்றும் பலிக்கவில்லை, இவர்களிடம். கத்திக் கத்திப் பெற்றவர்கள் ஓய்ந்து போனதுதான் மிச்சம்.

க்ஷேத்ராடனம் போகும் வழியில் விசிட் அடிக்க வரும் மாமனார் மாமியாரிடம் இந்தக் குழந்தைகள் நல்ல பெயர் வாங்கித் தருவார்களா? ''குழந்தை வளர்த்திருக்கிற அழகைப் பாரேன்!'' என்று குத்திக் காட்ட மாட்டார்களா?

மறுநாள் விடிந்தது. பெரியவர்கள் வந்து இறங்கினார்கள்.

பட்டால்தான் தெரியும்

ராஜி ரகுநாதன்

தது முதல் பன்னிரண்டு வயது குமாருக்கும், ஒன்பது வயது முரளிக்கும் ஆரம்பிக்கும் யுத்தம் இரவு வரை ஓயாது.

ஒருவன் உட்கார்ந்த இடத்தில்தான் இன்னொருவன் உட்கார வேண்டும். அவன் நின்ற இடத்தில் தான் இவன் நிற்க வேண்டும். அப்படி ஒரு போட்டி, சண்டை.

''ஏண்டா இப்படிச் சண்டை போட்டு என் பிராணனை வாங்கறீங்க? சனியன்களா... நீங்கள் உருப்பட மாட்டீங்க.''

எந்தச் சமாதானமும் பலிக்காமல் ஜெயம் உபயோகிக்கும் சரளமான சாபம் இது. கையாலாகாத சாபம்.

பாடம் படிக்கச் சொன்னால், பெரியவன் பேனா ரிப்பேர் பண்ண ஆரம்பித்து விடுவான். இங்க் பேனாவில் தினமும் இங்க் போடுவான். பால் பாயிண்ட் பேனாவைத் தினமும் நாலு தடவையாவது திறந்து, ரீபிள் தீர்ந்து விட்டதா என்று பார்ப்பான். படிப்பு முடிந்த மாதிரிதான். எழுந்து விடுவான்.

சின்னவனோ... சொல்லவே வேண்டாம். காலையில் படிக்கச் சொன்னால்,

வானரங்கள் பழையபடி ஆரம்பித்து விட்டன.

வந்ததும் வராததுமாகத் தாத்தாவின் பிளாஸ்கை உடைத்தான் சின்னவன். வேண்டுமென்று உடைக்கவில்லை என்பது நிச்சயம். அது என்னவோ எதைப் பார்த்தாலும் அதைத் திருகி, குடைந்து, உண்டு இல்லை என்று பண்ணி விடுகிறார்கள் குழந்தைகள். ராம! ராமா!

எவ்வளவுதான் ஜாடை காட்டினாலும் புரிந்து கொள்ளாமல் அவர்களின் சூட்கேஸை ஆராய்கிறான் பெரியவன்.

பல்லைக் கடித்துப் பொறுத்துக் கொண்டான், ஜெயம். ராமச் சந்திரனால் அப்படி இருக்க முடியவில்லை.

சுள்சுள்ளென்று குழந்தைகள் இருவர் முதுகிலும் அடி வைத்தான். தரதரவென்று இழுத்து வந்து ஜெயத்திடம் விட்டான்.

''போனாப் போறதுடா... அடிக்காதடா!'' என்று தடுத்த பெற்றோரைப் பொருட்படுத்தவில்லை.

''உருப்படாத குழந்தைகள்... உருப்படாத

குழந்தைகள் பிராணனை வாங்கறதுகள். எவ்வளவு சொன்னாலும் புரிய மாட்டேங்கறது.. பீடைகள்.. நாளைக்குக் கல்யாணமாகி, இதே மாதிரி ரெண்டு குழந்தைகள் பொறந்து, படுத்தினால்... அப்பத்தான் புத்தி வரும் போல இருக்கு!''

உறுமினான் ராமச்சந்திரன்.

அப்பாவும், அம்மாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அதில் ஆயிரம் அர்த்தங்கள்.

''சரிதாண்டா... போடா. குழந்தைகள்... என்ன பண்றது?''

அம்மா சிரித்துக் கொண்டே சின்னவனை அருகில் அழைத்து அணைத்துக் கொண்டார்.



அப்பா பெரியவனைக் கூப்பிட்டு பிஸ்கெட் பாக்கெட்டையும், கலர்ப் பென்சில் பாக்ஸூம் தருகிறார்.

அப்பா தொண்டையைச் செருமிக் கொண்டு சோபாவில் உட்கார்ந்து கொண்டார். பிள்ளையை அருகில் அமர்த்திக் கொண்டார்.

"இதோ பாருடா.. ராமா! நான் இப்ப இங்க பார்த்தது அப்படியே முப்பது வருஷத்துக்கு முன்னாடி பார்த்ததோட ரீ—ப்ளே தான். என்ன... நான் சொல்றது?" என்று கேட்டு அர்த்தத்தோடு நிறுத்தினார்.

அம்மாதான் சிரித்துக் கொண்டே தொடர்ந்தார். "என்னடா? ஒண்ணும் தெரியாத மாதிரி பார்க்கறே? சின்ன வயசில் நீ செய்யாத விஷமமா? அடிக்காத லூட்டியா? உன் தங்கையோடு போடாத சண்டையா? எல்லாம் மறந்தே போயிடுத்தா? எஸ்.எஸ்.எல்.ஸி. படிக்கும் போது கூட படிப்பில் கவனம் இல்லாம, அடுத்த வீட்டு மாமி ரேடியோல சினிமாப் பாட்டு வைப்பதை கவனமாக் கேட்டுப்பியே. நான் கூட இதற்காக அவளுடன் சண்டை போட்டிருக்கிறேன். எங்களை நீ படுத்தாத பாட்டையா உன் பிள்ளைகள் படுத்தறான்கள்?"

அம்மா பழைய நினைவுகளில் ஆழ்ந்து உணர்ச்சியோடு பேசும் போதுதான் ராமசந்திரனுக்கு உண்மை உறைக்கிறது.

மாமியார் சொல்லச் சொல்ல, தான் கூட தன் தாய் ஏதாவது வேலை செய்யச் சொன்னால் எதிர்த்துப் பேசியதும், தன் தம்பியோடு எட்டிக்குப் போட்டி சண்டை போட்



டதும்... நினைவுக்கு வருகிறது ஜெயத்திற்கு. தலையைக் குனிந்து கொள்கிறாள்.

நால்வரையும் பழைய நினைவுகளின் ஆழம் தாக்குகிறது.

அடுத்த அறையில் குழந்தைகள் இருவரும் தாத்தா கொடுத்த கலர்ப் பென்சிலை ஒரு வழி பார்ப்பதில் ஈடுபட்டிருந்தார்கள்.

''சரி. போனது போகட்டும். அப்ப எங்களோட அறிவுரையை ஏற்கற வயசு உங்களுக்கும் இல்லை.

எங்களுக்கும் பொறுமை இல்லை. எங்களால முடியாம போன போது; இப்ப நீ சபிச்சா மாதிரியே வயிறு பத்தி.. நானும் சபிச்சிருக்கேன். உங்க அம்மாவும் சபிச்சிருக்கா. ஒருவேளை அதோட பலன்தான் நீ அனுபவிக்கிறாயோன்னு இப்பத் தோணறது.

அப்ப நீங்களும் நாங்களும் இருந்த அதே நிலைமையில இப்ப உன் குழந்தைகளும் நீங்களும் இருக்கீங்க. ஆனால் எங்களுக்கு இப்ப அனுபவம் கூடியிருக்கு. உங்களுக்கும் பக்குவம் வந்திருக்கு. அதனால நான் சொல்றதைக் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ'' என்றார் அப்பா.

''என்ன?''

என்பது போல் பிள்ளையும் மருமகளும் பெரியவரை ஏறிட்டுப் பார்க்கிறார்கள்.

அப்பா தொடர்ந்தார்.

''இதோ பாரும்மா ஜெயா! உன் பிள்ளைகள் விஷமம் பண்றாங்களே... அடம் பிடிக்கறாங்களேன்னு கவலைப்படாதே. அதுக்காகத் தவிக்கவும் வேண்டாம். கொதிக்கவும் வேண்டாம். சாபம் கொடுக்கவும் வேண்டாம். எல்லாம் உன் புருஷன் பண்ணின பால லீலைகள்தாம். உன் புருஷனைச் சின்ன வயசுல பார்க்கறாப் போல நினைச்சுக்கோயேன். கோபம் மறந்து போய் சிரிப்பு வந்துடும். நீயும்தாண்டா.. ராமா! நாங்களும் உன்னைச் சபிச்சோம், 'பட்டாத்தான் தெரியும்'னு. ஒருவேளை அதுதான் பலிச்சுடுத்தோன்னு இப்ப திக்குதிக்குங்கறது. நீயாவது அந்தத் தப்பைப் பண்ணாதே. இது ஒரு தொடர்கதையாக வேண்டாம். நயமாச் சொல்லிப் பாரு. பிஞ்சுகளைப் போட்டுக் கரிச்சு கொட்டாதீங்க! புரியாத வயசு. தானாச் சரியாப் போயிடும். இப்ப நீயே இல்லையா? காலேஜில் சேர்ந்த பின் நல்லா படிச்சு முன்னுக்கு வரலையா? எல்லாம் வேளை வரணும். என்ன நான் சொல்றது?''

மனைவியைப் பார்த்துக் கேட்கிறார் அப்பா. முதியவர்கள் இருவரும் கலகலவென்று சிரிக்கிறார்கள். அந்தச் சிரிப்பு இளம் தம்பதிகளையும் தொற்றிக் கொள்கிறது. அவர்கள் மனத்தில் ஒரு தீர்மானமும் ஏறுகிறது.

''சரி.. சாப்பிட வாங்க! நாழியாறது.'' என்கிறாள் ஜெயம், சிரிப்பினூடே.

அண்டை அயலாருடன் சமைத்த பண்டங்கள், தின்பண்டங்கள் முதலியவைகளை ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கிக் கொள்ளும்படி, சில சமயங்களில் சந்தர்ப்பங்கள் நேருகின்றன.

ஒருநாள் என் கணவரும் நானும், தீபாவளி வாழ்த்துக்கள் தெரிவிக்க எங்கள் குடும்ப நண்பர் ஒருவரின் வீட்டிற்குப் போயிருந்தோம். அதே சமயம் அக்கம்பக்கத்து வீட்டில் இருக்கும் பெண் ஒருத்தி. ஒரு தட்டு நிறைய தீபாவளி பட்சணங்களை வைத்து,





மூடாமல், திறந்தபடியே கொண்டு வந்து கொடுத்துவிட்டு, தீபாவ்ளி வாழ்த்துக்களையும் கூறிவிட்டுச் சென்றுவிட்டாள். எங்களுடைய நண்பரின் மனைவியும் புன்னகையுடன் அதை ஏற்றுக் கொண்டாள். அந்தப் பெண் சென்ற பிறகு எங்களிடம், 'பட்சணங்கள் அப்படியே திறந்தபடியே கொண்டு வருகிறாள், சின்ன தட்டு அல்லது கர்சீப்பையாவது போட்டு மூடிக் கொண்டு வரக் கூடாதா?' என அலுத்துக் கொண்டாள்.

ஆம், அவள் சொன்னது முற்றிலும் உண்மைதான். உடனேயே, இரண்டு வருடங்களுக்கு முன்பு நடந்த சம்பவம் ஒன்று என் நினைவிற்கு வந்தது.

அப்பொழுது நாங்கள் குடியிருந்த இடத்திலிருந்து நான்கு வீடுகள் தள்ளி, நண்பர் ஒருவர் குடும்பத்துடன் வசித்து வந்தார். அந்த வருடம் எங்கள் வீட்டில் பண்டிகைகள் எதுவும் கொண்டாடக் கூடாது என்று இருந்ததால், பொங்கலன்று, சர்க்கரைப் பொங்கல்கூட்டுகளை எங்கள் வீட்டிற்கு அனுப்புவதாக, அந்த நண்பர் சொல்லி இருந்தார். அதனால் அன்று காலை முதல் நாங்கள் சர்க்கரைப் பொங்கல் முதலியவைகளை எதிர்பார்த்து, வராததால், நாங்கள் சுமார் 12 மணி அளவில் சாப்பாடு சாப்பிட்டுத் தூங்கியும் விட்டோம். பின்பு மாலை 4 மணி அளவில், அவர்கள் எல்லோரும் சாப்பிட்டு முடிந்த பிறகு வெதுவெதுப்பான பொங்கலும் ஆறிப் போன கூட்டுகளும் வந்து சேர்ந்தன. அதைப் பார்த்தவுடன் எனக்கு ஒரே எரிச்சலாக வந்தது. அதையே குறித்த நேரத்தில் சூடாக, புதிதாக இருக்கும் பொழுதே அனுப்பியிருந்தால், அதன் மணம் சுவையே தனிதான்.

இவைகளை எல்லாம் நினைத்துப் பார்க்கும் பொழுதுதான் எனக்கு ஒன்று புரிய

கொடுத்து

வந்தது. எந்தச் சிறிய வேலை, விஷயமானாலும் கூட எல்லாவற்றிற்குமே சில நியதிகள், கட்டுப்பாடுகள், பழக்க வழக்கங்கள் என்பது இருக்கத்தான் இருக்கின்றன. ஆனால் பெரும்பாலோர், இவைகளை ஏனோ அவ்வளவாக மதிப்பதில்லை. அதனாலேயே, சில சமயங்களில் நல்ல நண்பர், தோழிகளாக இருப்பவர்கள் கூட அல்ப காரணத்தினால் ஒருவருக்கொருவர் பிடிக்காமல் போய் விடுவதும் உண்டு. அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் சுமூகமாக நல்ல நண்பர்கள், தோழிகளாக இருக்க வேண்டுமே தவிர, சில அல்ப காரணத்திற்காக அவர்களை இழந்து விடக் கூடாது. சமைத்த பண்டம் போன்றவைகளைப் பரிமாற்றம் செய்து கொள்வதால், நம்முடைய தோழமை, உறவுகள் வலுப்பட வேண்டுமே தவிர, அல்ப காரணத்திற்காக அதை இழந்துவிடக் கூடாது. அதனால் சில முக்கியமான விதிகளை நாம் நினைவில் வைத்துக் கொண்டு, கடைப்பிடித்தோமானால், அண்டை அயலாருடன் நம் உறவு அவ்வளவு இனிமையாக இருக்கும் என்பதை நாமே உணரலாம்.

1. எந்தப் பண்டம் எடுத்துச் சென்றாலும், எப்பொழுதும் மூடியவாறே எடுத்துச் செல்ல வேண்டும். நம்முடைய ப்ரெண்ட் தானே, கிட்டத்தில்தானே வீடு இருக்கிறது என்று நினைக்கக் கூடாது. முக்கியமாகப் பண்டிகை அல்லது விசேஷ நாட்களாக இருந்தால், பண்டங்களை அழகான, புதிய ட்ரே அல்லது தட்டுகளில் வைத்து, அதன் மேல் அழகான தட்டோ அல்லது டிசைன்கள் போட்ட கர்ச்சீப், நாப்கின் போட்டு மூடி எடுத்துப் போவது நல்லது. அல்லது மூடி போட்ட சம்புடம், டப்பாவிலும் போட்டு அனுப்பலாம்.

2. ஒரு நாளும் மிஞ்சிப் போன, அல்லது மிஞ்சிப் போய் விட்டதே என்பதற்காகப் பண்டங்களை அனுப்பக் கூடாது. சமைத்த பண்டம், உணவுகளைக் கொடுத்து அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் முன்பாகவே இருந்தால், அவர்களுக்காகக் கொஞ்சம் அதிகப்படியாகவே தயாரித்து, சூடாக, புதியதாக இருக்கும் பொழுதே அனுப்புதல் நல்லது. நம் வீட்டில் எல்லாரும் சாப்பிட்டு

நம் பண்டங்களைப் பிறருக்கு அனுப்புவதாக இருந்தால் மேலே கூறியவைகளை எல்லாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் பிறரிடமிருந்து நமக்குப் பண்டங்கள் வரும்பொழுதும், அதேபோல் சில விதிமுறைகளை நாமும் கடைப்பிடிக்கத்தானே வேண்டும். என்ன என்று கேட்கிறீர்களா?

1. பண்டங்களை வைத்துக் கொடுத்து அனுப்பிய பாத்திரத்தை உடனேயே திருப்பிக் கொடுக்க வேண்டுமானால், அதை உடனேயே கழுவிச் சுத்தம் செய்து, ஈரம் போக நன்றாகத் துடைத்துக் கொடுக்க வேண்டும். ஆனால் சில வீட்டுப் பழக்க வழக்கங்களின்படி, நமக்கு வந்த பாத்திரத்தை காலியாகத் திருப்பி அனுப்பக் கூடாது என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள். அதுமாதிரி நினைப்பதில் தவறு எதுவுமில்லை. ஆனால் கைவசம் தயாராக ஏதாவது இருந்தால்தானே, போட்டு அனுப்ப முடியும். எதுவும் இல்லையேல், மந்திர வித்தையா செய்ய முடியும்! அப்பேர்ப்பட்ட

வாங்கும்போது...

முடித்த பிறகு கொடுத்து அனுப்புவது, அவ்வளவு விரும்பத்தக்க செயலாகாது.

3. பாயஸம் போன்ற நீர்த்தப் பண்டங்களைப் பாத்திரத்தில் போட்டுக் கொடுக்கும் பொழுது, கரண்டியால் வழியாமல் எடுத்துப் போட வேண்டும். பாத்திரம் முழுவதும் தாறுமாறாக வழிந்து, ஓடி, பரவிக் கிடக்கும் படியாகக் கொடுக்கக் கூடாது. பாத்திரத்தின் வெளிப்புறம் துடைத்துப் பார்த்தாலே சுத்தமாகவும் வசீகரமாகவும் இருக்க வேண்டும்.

4. சமைத்த பண்டங்களை, எப்பொழுதும் நாமே நேரில் சென்று கொடுத்து வருவது மிகவும் சிறந்த முறையாகும். சில சமயங்களில் நம் உடல்நிலை சரியில்லாமல் இருக்கலாம், அல்லது வேறு ஏதாவது காரணமாக இருக்கலாம். அதுபோன்ற சந்தர்ப்பங்களில் நம் வீட்டுக் குழந்தைகளோ அல்லது இரு வீட்டாருக்கும் தெரிந்த குழந்தைகள் மூலமாகவோ கொடுத்து அனுப்புவதில் தவறு எதுவுமில்லை.

சமயங்களில், பாத்திரத்தைக் காலியாகத் திருப்பி அனுப்புவதில் தவறு ஒன்றுமில்லை.

2. பாத்திரங்களை உடனேயே திருப்பி அனுப்பவேண்டியகட்டாயம்எதுவும்இல்லாவிடில், மெதுவாகவே திருப்பி அனுப்பலாம். அப்பொழுது பாத்திரத்தைக் காலியாக அனுப்பாமல், ஏதாவது போட்டு நிரப்பித் தான் அனுப்ப வேண்டும். நிதானமாக, ஏதாவது தயாரித்து அனுப்புவதற்கு நமக்கு நிறைய டயம் இருக்குமே. நம்முடைய தோழியின் வீட்டிலும் மனம் நிறைந்து நம்மை வாழ்த்துவார்கள் அல்லவா!

3. நாம் திருப்பிக் கொடுக்கும் பொழுதும், எப்பொழுதும் நாமே நேரில் சென்று கொடுப்பதுதான் சிறந்தது. பதிலாக அவர்கள் வீட்டுக் குழந்தையைக் கூப்பிட்டுக் கொடுத்தனுப்புவது சரியில்லை. சில சமயங்களில் அந்தத் தோழியே இடையில் நம் வீட்டிற்கு வரும்படியாகவும் நேரலாம். அப்பொழுது அவள் கையிலேயே அந்தப் பாத்தி

ரத்தை, ஒரு நாளும் திருப்பிக் கொடுத்து அனுப்பாதீர்கள். இது சிறந்த முறையும் இல்லை. மரியாதையும் இல்லை.

4. அதிக தாமதம் செய்யாமல், கூடிய விரைவிலேயே பாத்திரங்களைத் திருப்பி அனுப்புவது நல்ல பழக்கமாகும். அந்தப் பாத்திரம் அவர்கள் வீட்டில் வேலைக்குத் தேவைப்படலாம். நம்முடைய அன்றாட வேலை மும்முரத்தில், அந்தப் பாத்தி ரத்தைத் திருப்பி அனுப்ப வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல், நாம் மறந்தும் போக லாம். அல்லது அவைகள் நம் வீட்டிலேயே அஜாக்கிரதையினால் விழுந்து, நசுங்கி உடைய நேரிடலாம்.

5. பிறர் வீட்டுப் பாத்திரங்களை, நம் வீட்டு வேலைக்காக ஒரு நாளும் எடுத்து உபயோகிக்கக் கூடாது. நீங்கள் உபயோகிக் கும் பொழுது, தற்செயலாக வர நேர்ந்த உங்கள் தோழி அதைப் பார்த்துவிட்டால், அவள் உங்களைப் பற்றி என்ன நினைப் பாள்? உங்கள் மனமும் அவமானத்தால் எவ்வளவு சங்கடப்படும்!

6. பாத்திரங்களைத் திருப்பிக் கொடுக் கும் பொழுது மறக்காமல், 'தாங்க்யூ, வெரி மச்' என்று கூறி, 'பட்சணம் ரொம்பப் பிர மாதம், உனக்குத்தான் இவ்வளவு ஜோராக எல்லாம் செய்ய வருகிறது' என்கிற மாதிரி எல்லாம் புகழ்ந்தீர்களானால், உங்கள் தோழி அடுத்த முறை தயாரிக்கும் பொழுது, மறக்காமல் மறுபடியும் உங்களுக்குக் கொடுத்து அனுப்புவாள்!

இந்தச் சின்னச் சின்ன புகழ் உரைக ளுக்கு, மலையான வேலைகளையும் செய் யும் சக்தி உண்டு என்பதை மறந்துவிட வேண்டாம்.

— திருமதி ஜானகி சுந்தரம்.

நீங்கள் மிகவும் விரும்பி அணிந்திடும்

பட்டுச் சேலைகள்

20%

தள்ளுபடியுடன் வாங்கிட வாரீர்!



- தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை,
  350, பாந்தியன் சாலை,
  எழும்பூர், சென்னை-8.
- பட்டு மாளிகை,
  57, தேரடி, சேலம்-1.
- பவளம்,
  147, நேத்தாஜி சாலை,
  ஈரோடு-1.
- தாமரை பட்டு மாளிகை,
  314, 315, ராஜா தெரு,
  கோயம்புத்தூர்-1.
- அமுதசுரபி,
  12, 14, தேரடி கடைத்தெரு,
  திருச்சி-2.
- பட்டு மாளிகை,
  59-59-ஏ, வடக்கு ரதவீதி,
  திருநெல்வேலி டவுன்-6.
- ரேஷம் தாரா,
  சபீனா பிளாசா, முதல் மாடி,
  84, 85, இன்பேன்டரி சாலை,
  பெங்களூர்.
- குஷ்பூ,
  16, 17, புது மார்கெட்,
  திலக் சாலை, அபிட்ஸ்,
  ஐதராபாத்-1.

பட்டு இரகங்கள் கோ-ஆப்டெக்ஸின் இதர விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

DIPR/1455/MS/90/ET

HOPE

• உடையாதது
• பாலியூரித்தீன் ஃபோம்மினால் நன்றாக இன்சுலேஷன் செய்யப்பட்டுள்ளது.
• உயர்ந்த தரம்
• பணத்திற்கு முழு மதிப்பு
• நவீன தொழில் நுட்பம்
• சுகாதாரமானது
• பராமரிப்பது எளிது
• நீண்ட நேரம் வெப்பம்/தண்மை பாதுகாக்கக் கூடியது.
• கண்ணாடி ரீபில் கிடையாது

முழுவதும் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலினால் செய்யப்பட்ட ஜக்குகள்

உட்புறமும் வெளிப்புறமும்
சேலம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்



தயாரிப்பாளர்கள்
ஹோப் (இந்தியா)
8, வாசு தெரு கீழ்ப்பாக்கம்
சென்னை - 600 010
தொலைபேசி: 665470

Licencee
STEEL AUTHORITY OF INDIA LIMITED

பல்வேறு கொள்ளளவுகளில் கிடைக்கின்றன.

இன்ஸ்டிடியூஷனல் மற்றும் வியாபார விபரங்கள் வரவேற்கப்படுகின்றன.

Adwise/2319/90

பெண்களுக்கான மன்—ஏஜ் உடைகள்

மாடர்ன் ஸ்கர்ட்டுகள், குர்த்தா போன்றவை தைக்கும் முறைகள்.

விலை ரூ. 13.00

உங்கள் ஜாதகத்தில் நாகதோஷமும் பரிகாரங்களும்

விலை ரூ. 6.50

உப்பின் கதை

உப்பு பற்றிய அனைத்துச் செய்திகளும்
விலை ரூ. 10.50


தபெ. எண். 1447, 4, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை — 17.)

பி. ஆர். சோப்ராவின் மஹாபாரதம்

பாகம் — 1	விலை ரூ. 40.00
பாகம் — 2	விலை ரூ. 48.00
பாகம் — 3	விலை ரூ. 56.00

தமிழாக்கம் — வெங்கட். ம. வி. யில் வெளியான மஹாபாரதத்தின் கதை வசனங்கள்.

(டி. எஸ். வி. ஹரி, ஏ — 4, ஆனந்த்ஸ், 97, டாக்டர் ரங்காச்சாரி ரோடு, மயிலாப்பூர், சென்னை — 4.)



உலகப் புகழ் பெற்ற துப்பறியும் நிபுணர்களும் சுவையான வழக்குகளும்

விலை ரூ. 15.00

(நான்கும் தொகுப்பு: — மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு)

நடிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்

புருவம், நாசியில் இருந்து நடிப்பின் பல்வேறு பயிற்சிகள். ஆசிரியர் நாட்யா சார்யா ஸ்ரீ எஸ். பாலசந்திர ராஜு.

விலை ரூ. 12.00

(ஐந்தும் — மணிமேகலைப் பிரசுரம்,

அன்னையின் பெயர்கள் ஆயிரம்

ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்தின் தமிழாக்கம்— கே. சந்தானராமன்.

விலை ரூ. 7.00

(கே. சந்தானராமன், 3, ஆடம் தெரு, மயிலாப்பூர், சென்னை — 4.)

நெஞ்சம் மறப்பதில்லை

க. சந்திரசேகரின் கவிதைத் தொகுப்பு
விலை ரூ. 12.00

(கவிதாலயா, 33, எல். ஐ. சி. நகர், ஓமலூர் சாலை, சேலம் — 636 004.)

கும்பகர்ணன் உறங்கவில்லை

கம்பரின் காவிய நயத்தைத் தருபவர்

எஸ். ரகுவீரன்.

விலை ரூ. 18.00

(சிட்டுக்குருவி பதிப்பகம், மறைமலை நகர் — 603 209.)

மாயச் சுவர்

சிறுவர்களுக்காக வாண்டுமாமாவின் சுவையான பதினோரு சிறுகதைகள்.

விலை ரூ. 10.00

வெங்காயம் வெள்ளைப்பூண்டு மருத்துவம்

ஆசிரியர் சம்பந்தம்.

விலை ரூ. 7.00

பிள்ளையாரே, பிள்ளையாரே!

சிறுவர் பாடல்கள். தொகுப்பு: எஸ். விஜயலட்சுமி.

விலை ரூ. 10.00

நினைத்ததும் நடந்ததும்

பொன் பரமகுரு எழுதிய சிறுகதைத் தொகுப்பு. உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவை.

விலை ரூ. 15.00

காவியத் தாயின் இளைய மகன்

கண்ணதாசனின் பாடல்களை ஆராய்பவர் பி. சி. கணேசன்.

விலை ரூ. 12.00

(ஆறும் — வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை — 17.)

பள்ளிக்கூடம் செல்வோம்

குழந்தைப் பாடல்கள் — ஆசிரியர் கவிமணி.

விலை ரூ. 7.00

(தாமரை நூலகம், 7, என். ஜி. ஓ. காலனி, சென்னை — 26.)

ஜே. கிருஷ்ணமூர்த்தியின் சில நினைவுகள்

படிக்கப் படிக்கச் சிந்தனையின் ஆழத்தில் மனத்தை ஆராய வைக்கும் நூல். ஆசிரியர் மானோஸ்.

விலை ரூ. 9.00

(ட்வென்ட்டி ஃபர்ஸ்ட் சென்சுரி ஃபாக்ஸ், 88, வொய்ட் பீடல் தெரு, திருச்சி — 8.)

சிவபரத்துவ மாட்சிமை அல்லது தக்ஷ காண்டம்


பதினெட்டு புராணங்களில் ஒன்றான ஸ்காந்த புராணத்திலுள்ள தக்ஷ காண்டத்தின் தமிழ் வடிவம். ஆசிரியர் ஆங்கிரஸ சர்மா.

விலை ரூ. 15.00

(எ/5, டெலிபோஸ்ட் காலனி குறுக்குத் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை — 33.)

வித்யா சங்கர் ஸ்தபதியின் சிற்பமொழி

"எத்தனையோ ராத்திரிகள் வந்து போனாலும், ஒன்பது ராத்திரிக்குத் தனிச் சிறப்பு உண்டு. அதை நவராத்திரி என்பார்கள். ஆன்மீக விஷயத்தில் பக்தியில் பராசக்தியானவள் ஒன்பது இரவும் அவள் செய்த வித்தைகளைக் கூறிச் சிவனே என சிவனும் மல்லாந்து படுத்து விடுகிறான். பராசக்தியின் பாதம் சிவன் மீது படவும் அவனுடைய உக்ர கபாலத்தை இழுத்துக் கொண்டு சக்தியின் தத்துவத்தை உலகறியச் செய்தாள். 365 நாட்களில் பத்து நாட்கள் நீங்கலாக மற்ற 355 நாட்கள் சிற்பத் தொழிலாளருக்கு ஓய்வின்றி ஓயாது உழைத்த ஆயுதங்களுக்கு அதை உபயோகப்படுத்திய சிற்பிகளுக்கும் திருவிழா போன்றது நவராத்திரி. அக்காலத்தில் ஒவ்வொரு சாம்ராஜ்ய முறைப்படி கலாசாரத்தைத் தழுவிய கலைகள் சிற்ப உருவமாக்கப்படுகின்றன. அந்தந்த நாட்டுக் கலைகளையும் அந்தந்தச் சாம்ராஜ்யத்தின் கலைத் திறமைகளை அறியும் பொருட்டும் மன்னர்கள் அரண்மனைகளிலும் பிரபுக்கள் மாளிகைகளி



கூந்தல் வேர்களுக்குக் குறையாத சக்தி



- டாம்ப்கால் மூலிகைத் தைலம் உங்கள் கூந்தல் வேர்களுக்குக் கூடுதல் வலுவை ஊட்டுகிறது.
- நாரை-ஆலிவ் மற்றும் தேங்காய் எண்ணெய்க் கலவையில், மருதோன்றி, செம்பருத்தி, அவுரி மற்றும் பல மூலிகைகளின் அரிய சத்து சேர்த்தது டாம்ப்கால் கூந்தல் மூலிகைத் தைலம்.
- கூந்தல் வளர்ச்சிக்கு உறுதுணை நின்று கூந்தல் உதிர்வதை டாம்ப்கால் தடுத்து நிறுத்துகிறது.
- உங்கள் கண்களுக்கு குளிர்ச்சியை ஊட்டுகிறது டாம்ப்கால் மூலிகைக் கூந்தல் தைலம்......
- உங்கள் கூந்தலுக்குத் தேவைப்படும் வலுவுக்கும் வனப்புக்கும் டாம்ப்கால் கூந்தல் மூலிகைத் தைலம்.

டாம்ப்கால்

மூலிகைக்கூந்தல்தைலம்

தமிழக அரசு நிறுவனத் தயாரிப்பு

கூந்தல் நலத்திற்கும் வளத்திற்கும் இயற்கையின் கொடை டாம்ப்கால்.

DIPR/MS/90/LANCO/835

னும் கொலு அமைத்துப் பொதுமக்கள் பார்வைக்கும் அலங்கரித்து வைத்தார்கள். இந்தக் கலை நாட்டுக்கு நாடு பரவி விரிவு அடைகிறது. பத்தாம் நாள் விஜய தசமி தினம் கலைஞர்களைப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி மலர்மாலை சூட்டிச் சிறப்பக் கலைஞர்களை மகிழ்விப்பார்கள். இதுவே கலைத் தெய்வத்தின் மகிமையும் கலைஞர்களுடைய திறமையையும் போற்றக் காரணமாக இருக்கிறது.

இத்தனை கலைகளையும், 64 கலைகளையும் கோயில்கள் காத்துத் தருவதோடு, இந்திரால நாதங்களையும் எத்தனையோ விதமான வாத்தியக் கருவிகளையும் அன்று முதல் இன்று வரை வளர்த்துக் காப்பாற்றி நமக்கு அளித்துள்ளன நம் கோயில்கள். இவ்வாறு 6 சாஸ்திரங்களும், 96 தத்துவங்களும் நான்கு வேதங்களும் பேணிப் பாதுகாக்கப்பட்டு மனிதனும் காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியங்கள் என்கிற 6 இழி குணங்களை மாற்றி மனிதனை மனிதனாக வாழ வழிவகுத்துத் தந்துள்ளது ஆலயம் எனப்படும் கோயில்களே."

"ஓவியப் பேராசிரியர் வித்யா சங்கரின் அறிவார்ந்த சிற்ப ஆற்றலை வித்தியாசமான நூலாக்கித் தருபவர் தேனுகா.

விலை ரூ. 25.00

(மணிவாசகர் பதிப்பகம், 55, லிங்கி செட்டி தெரு, சென்னை – 1.)

கேசட்

நாச்சியார் திருமொழி

இசை – தேவா – பாடியவர்: வித்யா; தயாரிப்பு: ஜெயலட்சுமி.

விலை ரூ. 30.00

(ஜாஸ் ஆடியோ அண்ட் வீடியோ, சென்னை – 4.)

தலையணை வைத்துத் தூங்காதீர்கள்!

கடவுள் நம்மைப் படைக்கும் போதே இந்தக் குழந்தைகள் சொகுசாக, இயற்கையாகத் தூங்கட்டும் என்ற நல்ல எண்ணத்தில் நமது கைகளை பஞ்சுபோன்று மிருதுவாக அமைத்து இருக்கிறார் என்ற உண்மையை எண்ணிப்பாருங்கள்.

நாம் தான் இயற்கை எனும் கைகளை மறந்து தலையணை எனும் நச்சரவத்தினை துணையாகக் கொண்டு அல்லல்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம் என்ற உண்மையை உணருங்கள்.

சிரசுக்கு இயற்கையாக செல்ல வேண்டிய இரத்த ஓட்டம் தடைப்பட்டு விடுவதால் நாமும் நமது எதிர்காலத் தலைமுறைகளும் படும் அவஸ்தைகள் சொல்லில் அடங்காது.

அதனால் ஏற்படும் தீமைகள் கண் பார்வைக்குறைதல், குழந்தைகளுக்கு அறிவு வளர்ச்சிக் குறைவு, தலை சுற்றுதல், தலைவலி, பற்கள் உறுதியில்லாமை, மற்றும் சிரசுக்கு சம்பந்தப்பட்ட நோய்கள் அத்தனைக்கும் காரணம் இந்தத் தலையணை.

அது மாத்திரமல்ல, இந்தத் தலையணையினால் ஏற்படும் தீமைகள். சுவாசக் குழாயில் மடிப்பு ஏற்படுவதால் இயற்கையாக இருதயத்திற்குச் செல்ல வேண்டிய பிராண வாயு தடைபட்டு உள்ளிருக்கும் வால்வுகள் செயல்படாமல் நுரையீரல் சுருங்கி விடுகிறது. அதனால் நுரையீரலில் இருக்கும் ஆயிரக்கணக்கான துவாரங்களும் மறைக்கப்படுகிறது.

தலையணை இன்றியே நமது தாய்மார்கள் குழந்தைகளை வளர்த்துப் பாருங்கள். நான் சொல்லும் உண்மைகள் புலப்படும்.

— பி. அய்யாத்துரை.





பொன் குஞ்சுகள்

ராஜி

''வயசாயிருக்கே தவிர, விவேகமே இல்லையே? என்ன செய்வது?'' உஷா கணவனிடம் புலம்பினாள்.

கையிலிருந்த ஆங்கிலப் பத்திரிகையிலிருந்து கண்களைத் திருப்பாமலே புருவத்தை மட்டும் உயர்த்தி விசாரிக்கிறான் சங்கர்.

''நீ யாரைப் பத்தி சொல்றே? கொஞ்சம் புரியறாப் போலச் சொல்லேன்.''

கையினால் அவனுடைய புத்தகத்தைக் கீழே இறக்கிக் கொண்டு சொல்கிறாள்.

''அதான், சொன்னேனே...! அடுத்த வீட்டுக்கு ஒரு பாட்டி வந்திருக்காங்கன்னு...''

''ஓஹோ! அந்த ஸ்பான்ஜ் பொம்மை விஷயமா? சரியாப் போச்சு! நான் என்னமோ ஏதோன்னு பயந்தே போனேன்.''

புத்தகத்தை விடுவித்துக் கொண்டு மீண்டும் படிக்க ஆரம்பிக்கிறான்.

உஷாவுக்குக் கோபம் வருகிறது. 'அவ்வளவு அலட்சியமாகவா இருக்கிறது, உங்களுக்கு?' உட்மென்று உட்கார்ந்திருக்கிறாள்.

புத்தகத்தைத் தாழ்த்தி அவளைப் பார்த்து கிண்டலடிக்கிறான்.

''உனக்கு ஏன் இந்தக் கிழவிகளோடு சிநேகம்?''

அவளால் அவ்வளவு லைட்டாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. புதுசா வாங்கியிருக்கோம். அடுத்த மாசம் முதமுதலா கொலு வைக்கப் போறோம். இவ்வளவு சொல்லியும் அந்தப் பாட்டிக்குப் புரிய மாட்டேங்கிறதே!

உஷாவுக்கு விளங்கவில்லை. யாரிடம் போய்ச் சொல்வாள்? எப்படித் தீர்ப்பாள்?

விஷயம் இதுதான்.

பக்கத்து வீட்டு ராவ் தம்பதிகள் இருவரும் வேலை பார்ப்பவர்கள். ராவின் ஒரே பிள்ளை வெளியூர் ஹாஸ்டலில் தங்கி காலேஜில் படித்து வருகிறான். பத்து நாட்கள் முன் ஊரிலிருந்து வந்த ராவின் தாயார், தனியாகப் பொழுது போகாமல் வலிய வந்து உஷாவிடம் பேசிப் பழகி, இப்போது இருவரும் நட்பாகி விட்டார்கள். ராவின் மனைவியோடு அதிகம் பழக்கம் கிடையாது.

பாட்டிக்கு அறுபதுக்கு மேல் வயசிருக்கும். தலையெல்லாம் நல்ல நரை. சின்னதாக முடித்திருந்தாள். முகத்தில் கூட ஐந்தாறு நரை முடிகள்.

மருமகள் காலையிலேயே அரக்கப் பரக்க சமைத்துச் சாப்பிட்டு விட்டுப் போய் விடுவது பாட்டிக்குப் பாந்தமாய் இருப்பதில்லை. மெதுவாக எழுந்திருந்து, பல் தேய்த்து, குளித்து, பூஜை முடித்து, சமையலறைக்குச் சென்று பசியோடு பாத்திரங்களைத் திறந்து பார்த்தால்... ஆறிப் போன மீதிச் சாப்பாடு. ''ஹும்! இது என்ன சமையலோ? கண்றாவி!'' என்பாள்.

காம்பவுண்டுக்கருகிலிருந்து குரல் கொடுப்பாள். ''உஷா! அம்மா.. உஷா!''

இவளும் இந்தப் பக்கத்திலிருந்து பதில் குரல் கொடுப்பாள். இவள் வீட்டுக் கறியும் குழம்பும் கிண்ணங்களில் பரிமாறப்படும். மருமகள் வருவதற்குள் தவறாமல் கிண்ணங்களை அலம்பிக் கொடுத்து விடுவாள், பாட்டி.

பாட்டிக்குச் சாப்பாட்டில் நப்பாசை. தினமும் இவளைப் பார்க்கும்போதெல்லாம் என்ன சமையல்? என்ன டிபன்? என்று கேட்கத் தவற மாட்டாள். மத்தியானத்தில் தூங்கிய நேரம் போக, மீதி நேரம் வீட்டைப் பூட்டி விட்டு இங்கே வந்து விடுவாள்.

முதல் நாள் வந்தபோதே அந்தஸ்தை எடை போடுபவள் போல வீட்டை ஆராய்ச்சியாகப் பார்த்தாள். பாட்டிக்கு நல்ல கலைக் கண்கள். உஷாவின் கை வேலைத் திறனை மெச்சிக் கொண்டாள்.

இங்கேதான் வந்தது பிரச்னை. தான் எக்ஸிபிஷனிலிருந்து வாங்கி வந்த ஸ்பான்ஜ் பொம்மையைப் பெருமையாகப் பாட்டியிடம் காட்டினாள், உஷா.

''இந்தத் தடவை முதமுதலா நவராத்திரி கொலு வைக்கலாம்னு இருக்கேன். அதற்காக பொம்மை சேர்க்க ஆரம்பித்திருக்கிறேன்,'' என்றாள்.

பாட்டியின் கண்கள் அந்த பொம்மையில் லயித்து விட்டன. ஊரிலிருக்கும் தன் பெண் வயிற்றுப் பேத்தி நினைவுக்கு வந்து விட்டாள்.

''உஷா! இந்த பொம்மையை எனக்குக் கொடுத்து விடேன். என்ன விலையோ தந்து விடுகிறேன், நீ வேறு வாங்கிக் கொள்.''

பாட்டியின் கையிலிருந்து உடனே பொம்மையைப் பிடுங்காத குறையாக வாங்கி உள்ளே வைத்து விட்டாள் உஷா.

''இது எந்தக் கடையில் கிடைக்குமோ தெரியாதே. டவுனுக்குப் போகும் போது கிடைத்தால் உங்களுக்கு ஒன்று வாங்கி வருகிறேன்.''

''நான் அடுத்த வாரம் ஊருக்குத் திரும்ப வேண்டும். நீ ஒண்ணு செய்யேன், உஷா. வேறு வாங்கிக் கொள். என் பேத்தியைப் பற்றித்தான் சொல்லியிருக்கேனே. உன்னை மாதிரிதான் அவளும். ஆசை ஆசையா எல்லாம் செய்வா.''

''இருந்தாலும்.. பாட்டி, எனக்கு இதோட விலை தெரியாது.''

''அதற்கென்ன? இருபத்தஞ்சு ரூபா தரேன். பொம்மையைத் தா.''

''ஐயையோ அவ்வளவு விலை இருக்காது. ஆனாலும் விலை சரியாக நினைவில்லை. உங்களிடம் அதிகம் வாங்கிக் கொள்ள எனக்கும் கஷ்டமாயிருக்கும்.''

பாட்டியிடம் பலிக்கவில்லை.

''சரிதான் போ! நீ என் பெண் மாதிரி. ஒரு அஞ்சு பத்து உன்கிட்டே என் காசு இருந்தா ஒண்ணும் ஆயிடாது.''

அன்று பாட்டியை எப்படியோ சமாளித்து வீட்டுக்கு அனுப்புவதற்குள் பெரும்பாடாகி விட்டது, உஷாவுக்கு.

நாளை எப்படியும் பாட்டியைச் சந்திக்கத் தானே வேண்டும்?

மறுநாள்.

கணவனை அலுவலகத்துக்கு அனுப்பிய பின், வேலைகளில் லயித்திருந்த உஷாவுக்கு பாட்டியை எப்படிச் சமாளிப்பது என்பது இன்னும் புரிபடவில்லை.

''டிங்... டாங்..''

காலிங்பெல் கூப்பிட்டது.

கதவைத் திறந்த உஷா திடுக்கிட்டாள்.

''அடடே! அம்மா...! வாம்மா, அப்பா வரலையா?''

''இல்லேடியம்மா. நான் மட்டும்தான் கிளம்பி வந்தேன். உன் மன்னிக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு. அவள் வீட்டிலேர்ந்து ஃபோன் வந்தது. அதுதான் நான் மட்டும் போய்ப் பார்த்து விட்டு வரலாம்னு கிளம்பி வந்தேன். இரண்டு நாளில் லீவு எடுத்துக்



கொண்டு உன் அண்ணாவும் அப்பாவும் போய் வருவார்கள். போகும் வழியில் உன்னையும் பார்த்துப் போகலாமென்று வந்தேன்.''

நான்கு மணி நேரம் பஸ்ஸில் வந்தது தாங்கவில்லை, அம்மாவுக்கு.

சோர்ந்து போயிருந்தாள்.

''மாப்பிள்ளை மத்தியானம் சாப்பிட வருவாரில்லையா? அவரையும் பார்த்து விட்டு, மூணு மணி பஸ்ஸுக்குக் கிளம்பினாத்தான் சரியாயிருக்கும்.''

''இந்தா... பையை உள்ளே வை.''

அம்மா புஸ்புஸ்ஸென்று மூச்சு விட்டுக் கொண்டு காலை நீட்டி உட்கார்ந்தாள். காலைப் பிடித்து விட்டுக் கொண்டாள்.

பெட்டியைத் திறந்து ஒரு கோலப் புத்தகத்தை ஆசையாக எடுத்து உஷாவிடம் கொடுத்தாள்.

அதை வாங்கிப் பார்த்த உஷா வியக்கிறாள்.

''உனக்குக் கோலம்னா பைத்தியமாச் சேன்னு வாங்கிண்டு வந்தேன். உன் மன்னிக்கு இதிலெல்லாம் ஆர்வமே கிடையாதுடி. ஆனால் எதிர் வீட்டில் ஒரு பெண் இருக்கிறது. உன்னை மாதிரியேதான், எல்லாத்துலயும். தினுசு தினுசா பட்சணம் பண்றதும், புதுசு புதுசா கை வேலை பண்றதுமா, அதைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு உன் ஞாபகம்தான் வரும். அவதான் இந்தக் கோலப் புத்தகம் அவ வீட்டுக்காரர் மதுரை போன போது வாங்கிண்டு வந்தார்ன்னு காமிச்சாள். அடுத்த தடவை போகும் போது உனக்கும் ஒண்ணு வாங்கிண்டு வரச் சொல்லலாம்னுதான் இருந்தேன். ஆனால் திடீர்னு கிளம்ப வேண்டி வந்துடுத்து.

சரிதான்னு... வெட்கத்தை விட்டு அவகிட்டே கேட்டுட்டேன். 'இந்த புக்கை என் பெண்ணுக்குக் கொடு. நீ வேறே வாங்கிக்கோ'ன்னு. உன் அண்ணாவுக்குத் தெரிஞ்சா வைவான். ஆனா, அந்தப் பொண்ணு கொஞ்சம் கூட யோசிக்காம உள்ளே போய் டக்குனு கொண்டு வந்து கொடுத்துட்டாள். நான் கூட அவகிட்டே சொன்னேன். 'என் பெண் கூட உன்னை மாதிரிதாண்டின்னு.' இன்னும் காசு கூட கொடுக்கலைடி, உஷா. புத்தகம் நல்லாயிருக்காடி?''

குழந்தை போல் கேட்டு, இவள் முகத்தைப் பார்க்கும் தாயைப் பார்க்கையில் நெஞ்சு கரைந்தது. கண்ணீர் வந்தது. அடுத்த வீட்டு மாமியார் நினைவுக்கு வந்தாள்.

''சரி... வாம்மா! இந்தக் காப்பியைக் குடிச்சுட்டு குளி. அதுக்குள்ள கூடா ஏதாவது பண்ணிடறேன்.''

சமையலறையில் புகுந்த உஷா, பக்கத்து வீட்டுப் பாட்டிக்குப் பிடித்த மணத்தக்காளி வற்றல் குழம்பும், உருளைக் கிழங்கு கறியும் செய்கிறாள்.

''இதென்னடி சமையல் இப்ப போய். ஏதோ இருக்கறதை போடக் கூடாதா?'' குளித்து விட்டு புடைவையைச் சுற்றிக் கொண்டு வந்த அம்மா கேட்கிறாள்.

''இருக்கட்டும்மா! இதோ ஒரு நிமிஷம் இரு. வந்துடறேன்.''

அம்மா உள்ளே போய் புடவை கட்டிக் கொண்டு வருவதற்குள் பெட்டியிலிருந்த ஸ்பான்ஜ் பொம்மையையும், கிண்ணங்களில் பதார்த்தங்களையும் எடுத்துக் கொண்டு, பக்கத்து வீட்டுக்குச் சென்றாள், உஷா.

தட்டை செய்யும் பொழுது மைதாவிற்குப் பதிலாகக் கோதுமை மாவை ஆவியில் வேகவைத்துச் செய்தால் அதிக ருசியுடன் இருக்கும்.


— விஜயா.





சப்பாத்தியின் மேல் சர்க்கரை, ஏலம் கலந்த தேங்காய்ப்பாலை ஊற்றி ஐந்து நிமிடம் கழித்துச் சாப்பிடக் கொடுங்கள். குழந்தைகள் விரும்பிச் சாப்பிடுவர்.

— விஜயா.






Situations/WPC/131/90


'கொலு'

அந்த 10 நாட்கள்....

பக்திப் பரவசமாய், மகிழ்ச்சியின் பிறப்பிடமாய் உங்கள் இல்லங்களில் "சாரதா"வின் கொலுப்படிகள், அமைக்க மிக மிக எளிதானது.



நவராத்திரி நாட்களில்...



சாதாரண நாட்களில்...

11ம் நாள் முதல்

அழகிய புத்தக அலமாரியாய், பாத்திர அலமாரியாய், பல சாகுு (Shelf)களாய் இப்படிப் பலப்பல...... அவரவர் விருப்பத்திற்கேற்ப மாற்றியமைக்கச் சிறந்தது

வீடுகளுக்குத் தேவையான அலமாரிகள், சோபா செட்டுகள், கட்டில்கள், மற்றும் மேஜை, நாற்காலிகள் மற்றும் அலுவலகம் தொழிற்சாலைகளுக்குத் தேவையான Executive Chairs & Tables, Typist Chairs, Draftsman Table, Filing Cabinets, Cash Coffers, Cash Boxes இப்படியாக "சாரதா"வின் பணி தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

சாரதா ஏஜென்ஸீஸ்

781, அண்ணா சாலை, (ஆர்ட்ஸ் காலேஜ் அருகில்)
சென்னை-600 002, தொலைபேசி: 833427.
284, அண்ணா சாலை, (தேனாம் பேட்டை சிக்னல் அருகில்)
சென்னை-600 018, தொலைபேசி: 459015.
193, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, (ஜம்மி பில்டிங்ஸ் எதிரில்)
சென்னை-600 004, தொலைபேசி: 71835.

மண்பொம்மை ஏன் கொலுவிலே?



நவராத்திரி — பொம்மைகளை அலங்கரித்துப் படிகளில் அழகாக அடுக்கி சண்டி ஷப்த ஷதி (தேவி மகாத்மியம்) படித்து மாலையில் பெண்டிருக்குத் தாம்பூலம், தேங்காய் வைத்துக் கொடுப்பது. இது எல்லோருக்கும் தெரிந்த, வழி முறையாகக் கடைபிடித்து வரும் விஷயம். இத்தகைய வழிபாட்டு முறை ஒவ்வொன்றிற்கும் நமது வேதங்களிலும், புராணங்களிலும் அடிப்படையான சான்றுகள் ஆதாரங்கள் இருக்கின்றன என்கிறார் திருமதி பிரேமா பாண்டுரங்கன். சென்னை *பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற இவர், அம்பிகையைப் ப்ரதானமாக வைத்துக் கொண்டாடும் இம்முறை வேத காலத்தில் ஏற்பட்டு, புராண கதாபாத்திரங்களினால் பூஜிக்கப்பட்டு காலத்திற்கேற்ற சில சேர்க்கையோடு தற்போதுள்ள நிலையினை அடைந்துள்ளது என்கிறார்.

முதலில் நம் மனத்தில் எழுவது மண்ணால் செய்த பொம்மைகளை வைத்துப் பூஜிக்கின்றோமே இந்த ஷரத் ருது காலத்தில், அது ஏன்? பதினெட்டு புராணங்களில் ஒன்றான மார்கண்டேய புராணத்தில் சொல்லப்படுகின்ற ஒரு சம்பவம் இதற்கு மூலக்கதையாகிறது.

தன் எதிரிகளை வெற்றி கொள்வதற்காக மகாராஜா சுரதா, தன் வியாபாரி சமதியுடன் குரு சுமதாவின் ஆலோசனை கேட்கிறார். குரு கூறியபடி பரிசுத்தமான ஆற்று மணலைக் கொண்டு காளி ரூபத்தைச் செய்கிறான். அதை ஆவாகனம் பண்ணி, உண்ணா நோன்பிருந்து, மனதாலும் மெய்யாலும் வேண்டுகின்றான். அம்பிகை அவனுக்கு ப்ரத்யக்ஷமாகி அவன் வேண்டுதலை பூர்த்தி செய்து அரக்கர்களையும், புகைவர்களையும் அழித்துப் பின் ஒரு புது யுகத்தினையே உண்டு பண்ணுகிறாள். இதுவே நவராத்திரியின் ஆரம்பகாலமாக இருக்கலாம்.

மேலும் அம்பிகையே தனது தேவி புராணத்தில் "ஷரத்காலே ம்ருதய பூஜா" என்று ஷரத்ருது பருவத்தில் ஐம்பூதங்களில் ஒன்றான மண்ணால், ஆன ஒன்றினால் (பொம்மையினால்) என்னைப் பூஜித்தால் நான் உனக்கு சகல சுகங்களையும் சௌபாக்கியங்களையும் அளிப்பேன் என்கிறாள்.

அண்ட சராசரங்கள் அனைத்தையும் தன்னுள்ளே அடக்கியுள்ள அந்த அம்பிகையே பல ரூபமாக பல சக்தியாக வெளிபடுகின்றாள் என்பதை உணர்த்தும் வண்ணம், உலகாண்ட நாயகியை முதலிலும், பின் அத்தொழிலில் அவளுக்கு உதவுகின்ற அவளின் மற்ற ஸ்வரூபங்களாக இருக்கின்ற பிற தெய்வ வடிவங்களையும் வைத்து வழிபடுகின்றோம்.

உலகிலுள்ள எல்லா உயிர்களுமே கடவுளுக்குச் சமமானவையே எனக் கூறத்தான், மீனிலிருந்து மனிதன் வரை எல்லாவற்றையும் பொம்மைகளாக வைத்து வழிபடுகிறோம்.

இப்போது நவீன காலத்திற்கேற்ப துப்பாக்கிகளும், கம்ப்யூட்டர்களும் கொலுவில் இடம் பெற்றுள்ளன. இவைகளும் சக்தியின் வடிவங்கள்தானே?

— ஜோதி.

6

"நவராத்திரி வந்தாலும் வர்றது. வீட்டில இருக்கிற ஆம்பளைகள் எங்கே போறதுன்னே தெரியலை. என்னடி உன்னோட ரோதனை..." சாயங்காலம் கோர்ட்டிலிருந்து வரும்போதே எரிந்து விழுந்தார் ராஜகோபால்.

இப்ப என்ன சொல்லிட்டேன்னு இப்படிக் கோபம். சாயங்காலம் கொலு பார்க்க எல்லாரும் வருவா. எப்பவும் போல உங்க ஏழுரை கட்டை ஸ்ருதியில் பேசாம' மெள்ளப் பேசுங்கன்னுதுக்கா இப்படிக் கோபம்..." 'காப்பி'யை மேசை மேல் வைத்தவாறே சிரித்தாள் கோமளம்.

"என்ன பண்ணச் சொல்றே? இந்தக் கட்சிக்காரானோட ஒரு நாள் நீ பேசிப் பாரு. அப்பத் தெரியும் என் அவஸ்தை. பேசினதையே பேசிண்டு, என் கேஸ் இன்னிக்கு வந்திருமா, லிஸ்ட்லே ஏறியாச்சா, ஜட்ஜ் வருவாரான்னு என்னை இல்லே போட்டுத் தொளைக்கிறான்..."

"நீங்களும் உங்கக் கட்சிக்காராளாம்..." சிரித்த கோமளத்தை காப்பியைக் குடித்தவாறே நிமிர்ந்து பார்த்தார் ராஜகோபால்.


அந்த மயிலாப்பூர் அம்மனே இங்கு வந்து விட்டது போல! அவர் என்ன கத்தினாலும் அவளுக்குக் கோபம் வராது. ஏதோ அடம் பிடிக்கும் குழந்தையைத் தட்டிச் சமாதானப் படுத்துவது போல சிரித்து விட்டுப் போய் விடுவாள். பல சமயம் அவருக்குச் சந்தேகம் வந்து விடும் இவள் மனைவியா, அம்மாவா?


ஆஸ்திக்கு ஒரு பிள்ளையும், ஆசைக்கு ஒரு பெண்ணையும் பெற்றுக் கொண்டதோடு நிறுத்தி விட்டாள். எப்போதும் முதல் கவனிப்பு கணவருக்குத்தான். வளர்ந்து விட்ட பிள்ளையே கூட கேலி பண்ணுவான். அதற்கும் ஒரு சிரிப்புதான் அவளிடம். பெண்ணை அருமையாக வளர்த்துப் பதினாறு வயதானவுடனே திருச்சியில் இருக்கும் அண்ணா பிள்ளைக்கே கொடுத்து விட்டாள். பிள்ளையும் வக்கீலுக்குப் படிக்கிறான். அப்பா படித்துச் சேர்த்துள்ள அலமாரி, அலமாரியான புத்தகங்களும், வளர்த்து விட்டுள்ள கட்சிக்காரர்கள் வட்டமும் பின்னே யாருக்கு? பிள்ளைவாக எவ்வளவு தூரம் இவர்களை மேய்ப்பான்.

"என்ன, அப்படியே உட்கார்ந்தாச்சு.. காப்பிக்குத்தான் மடி, ஆசாரம் இல்லை. இப்பவாவது அந்த டர்பனை கழட்டிட்டு

மௌன கர்வம்







கை, கால் அலம்பக் கூடாதா...? எழுந்திருங்க...'' டபரா டம்ளரை எடுத்துக் கொண்டே நகர்ந்தாள் கோமளம்.

வக்கீல் டர்பனைக் கழற்றி மேஜை மேல் வைத்தவர், கோட்டையும் கழற்றி அகவாசப் படுத்திக் கொண்டார். 'அப்பாடா' என்று துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டே வீட்டினுள் நுழைந்தார்.

கூடத்தில் கோமளத்தின் சிரத்தையால் கொலு மின்னியது. அவள் செய்யும் காரியமே தனி. பதினோரு படிக்கட்டில் மேலே லட்சுமி, சரஸ்வதி ஆரம்பித்து கீழே பார்க் வரை அவளுடைய கைவண்ணம்தான். முத்துச் சுடராக எரியும் வெள்ளி விளக்கு. வெற்றிலை, பாக்கு, பழம் வருவோருக்குக் காத்திருந்தது.

கோலம் போட மாவுடன் வந்த சாந்தா அவரைப் பார்த்துத் தயங்கினாள்.

''நீ பாட்டுக்கு உன் வேலையைப் பாரும்மா. இன்னும் அரை மணிதான் இங்கே நடமாட முடியும். அப்புறம்

மஞ்சுளா ரமேஷ்

கசகசன்னு ஊர்ல இருக்கிற மாதிரியெல்லாம் இங்கே ஆஜர்...''

மௌனமாக சிரித்தாள் சாந்தா.

அவர் கை கால் அலம்பிக் கொண்டு கூடத்தின் சோபாவில் வந்து அமர்ந்த போது சாந்தா கொலுவின் முன் தண்ணீர் தெளித்து கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

'பாவம் இந்தப் பெண்...' மனசுக்குள் 'ச்சொ' கொட்டினார் ராஜகோபால்.

''ஏம்மா, ஒரே ஆத்துல இருக்கோம்னு பேரு. உன்னைப் பாக்கறதே கஷ்டமா இருக்கு. உன் பிள்ளை ஸ்கூலுக்குப் போறானா?''

பட்டுப் புடவை தலைப்பில் கையைத் துடைத்துக் கொண்டே வெளியே வந்த கோமளம், ''உங்களைச் சொல்லிக்கிறேனே. அவ என்னண்டைதான் என்ன பேசறா...? எப்பப் பாரு ஏதாச்சும் வேலையை இழுத்துப் போட்டுண்டு செய்துகண்டே இருக்கா. ஆமா மாமா கேட்கறாரே, சொல்லேன் ஸ்ரீதர் என்ன பண்றான்?''

கோலம் முடித்து இரண்டு விரல் மாவு வெண்மை காட்ட கொலுவோரமாக நின்றாள் சாந்தா.

''படிக்கறான் மாமா. நாலாங் கிளாஸ்லே இவன்தான் ஃபர்ஸ்ட்டாம். என்னென்னவோ சொல்றான். என்ன தெரியறது எனக்கு?'' என்றாள் தலைகுனிந்தபடி.

''உன் பையனோ இல்லியோ.. நல்லா தான் படிப்பான். ஆமா, வர்சு இன்னும் காலேஜ்லேயிருந்து வரல்லியா...'' என்று மனைவியின் புறம் திரும்பினார்:

''கொலு வச்சுட்டதாலே அவனுக்கு நியூசென்ஸா இருக்காம். அதனால சாயங்காலம் கிளப்பே கதின்னு பாட்மிண்டன் அது இதுன்னு கிளம்பிடறான்...''

சாந்தா மெதுவாக நகர்ந்து சமையலறையை நோக்கி நடந்தாள்.

''உன் பொண்ணுஎன்ன கதை...வெள்ளிக்கிழமை திருச்சியிலேர்ந்து வர்றாளோ இல்லியோ...''

''கலாதானே... இன்னிக்கே ராத்திரிக்குள்ளே வந்துடுவா. லெட்டர்தான் வந்திருக்கே...''

பெண்கள் இரவில் உறங்கும் போது பெரிய தலையணை வைத்துக் கொள்ளக் கூடாது. அப்படி வைத்துக் கொண்டால் கழுத்து தடித்து அவலட்சணமாகி விடும். சிறிய மென்மையான தலையணைகளையே உபயோகிக்க வேண்டும்.

— வலங்கை ஜி. ராஜப்ரியா.

அவர்களின் உரையாடல் மெல்ல தேய்ந்தது. சமையல் கட்டிற்குள் நுழைந்த சாந்தா கண்டல் பாத்திரத்தை எடுத்து வைத்துக் கொண்டாள். பொட்டலம் பொட்டலமாக நூறாவது கட்டியாகணும். இந்த ஸ்ரீதர் எங்கே போனான்... புழக்கடை தோய்க்கற கல்லில் உட்கார்ந்து படிக்கிறானோ?

''ஸ்ரீதரா....''

அதிராமல் குரல் கொடுத்தாள்.

''என்னம்மா...'' பின்னாலிருந்து குரல் வந்தது.

''என்னடா பண்றே...''

''படிக்கறேன்மா. நாளைக்குப் பரீட்சை யாச்சேம்மா...''

''இங்கே பொட்டலம் கொஞ்சம் பண்ணிட்டு அப்புறம் படிடா...''

அடுத்த நிமிடம் ஸ்ரீதர் உள்ளே வந்தான். எளிய டிராயர், சட்டையில் குட்டி சங்கரனின் உருவம் அதே போல நெற்றியிலே ஒரு கருணை முடி விழுந்து இருந்தது. அம்மாவின் பக்கத்தில் வந்து அமர்ந்தவன் புத்தகத்தை வைத்து விட்டு பரபரவென்று நியூஸ் பேப்பரைக் கிழித்துக் கரண்டி கரண்டியாகச் சுண்டலைப் போட்டு மடித்தான்.

அவன் வேலை செய்யும் அழகையே பார்த்துக் கொண்டு இருந்தாள் சாந்தா. பாலைவனத்தில் ஒரு சோலை இவன். சாந்தாவின் கஷ்டமெல்லாம் உணர்ந்தவன். அவளால் முடியாமல் உதவிக்கு அழைக்கும் போதெல்லாம் வருவான். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் ராஜகோபால், ''வாசல்ல யாரு பார்றா...'' என்றால் ஓடுவான். கோமளத்திற்கு வெற்றிலை, பாக்கு ஸ்ரீதர் வாங்கி வந்தால்தான் பிடிக்கும். வாசுவோடு சமயத்தில் டென்னிஸ் கோர்ட்டில் 'கம்பெனி' கொடுப்பான்.

'கற்பகாம்பிகே, எனக்கு நீ கொடுத்த பாக்கியம்!' அவன் மெல்லிய தோளை மெதுவாகத் தொட்டாள் சாந்தா.

''என்னம்மா...?'' புன்னகையோடு நிமிர்ந்தான் ஸ்ரீதர்.

''ஒண்ணுமில்லேடா... பரீட்சைன்னு சொன்னியே.. போய்ப் படி. நான் கட்டிடறேன்.''

''பரவால்லேம்மா. நீ சுண்டலுக்கு வேக வைக்கிறப்பவே நெனச்சேன், நானே வரணும்னுதான். படிக்கிற இன்ட்ரஸ்ட்ல மறந்துட்டேன்மா. ஸாரிம்மா...''

''போடா...'' செல்லமாகத் தலையில் குட்டினாள். ''போப்பா. அப்ப ஒரு மாதிரி இருந்தது. இப்பத் தேவலை. நீ போய்ப் படி.''

தயங்கியவன், ''நான் ரூம்ல படிக்கறேன்மா...'' என்று சமையலறையை ஒட்டியிருந்த அறையினுள் நுழைந்தான். ஆரம்பத்தில் அது சுண்டான் முண்டான் சாமான் போடும் இடமாக இருந்தது. சாந்தாவின்

கடுமையான உழைப்பும், நேர்மையான நடத்தையும் அவனை நம்பிக்கைக்குரியவளாக ஆக்கிய போது அங்கேயே அறையும் கொடுத்தாள் கோமளம்.

கண்டல் பொட்டலங்களை மடித்துக் கூடையில் அடுக்க ஆரம்பித்தாள் சாந்தா. பத்து வருடங்கள் என்னமாக ஓடி விட்டன? கடைசியில் அவள் பிறவி எடுத்தது இதற்காகவா? தெரியவில்லை.

எப்போதும் கணவனை நினைவுபடுத்தும் மகனைப் பார்க்கும்போதெல்லாம் வயிற்றில் முட்டியது. எங்கே போயிருப்பார்.. திரும்ப வந்திருப்பாரா? என்னைத் தேடியிருப்பாரா? 'என் மகன் எங்கே?' ன்று கேட்டிருப்பாரா?

பல நாட்கள் தோன்றும். "மாமி... கொஞ்சம் சைதாப்பேட்டை வரை போயிட்டு வரேன்' என்று அனுமதி கேட்டுக்கொண்டு போனால் என்ன ...? மாமிக்கு இவளின் கதையெல்லாம் தெரியும். வந்த மூன்றாம் நாள் இவள் கதையைக் கேட்டு அழுது விட்டதில் கண்ணும், மூக்கும் கோவைப் பழமாகச் சிவந்து விட்டது.

"இப்படிக்கூட மனுஷா இருப்பாளோடி.. நீ எங்கேயும் போக வேண்டாம். இங்கேயே இருந்துடு..." என்றாள்.

அவள் அன்பைக் காட்டினாலும் சாந்தா ஒரு எல்லைக் கோட்டினுள்ளேயே இருந்தாள். கைக் குழந்தை கொஞ்சம் விவரம் தெரிந்த குழந்தையாக ஆகும் வரை படாத பாடுபட்டாள். அழும் குழந்தையை எடுக்க முடியாமல் மணக்க மணக்க ரசத்திற்குத் தாளித்துக் கொட்டின நாட்கள் எத்தனையோ? கோமளமே வந்து கடிந்து கொண்ட பிறகுதான் சாப்பிடுவாள். படாத பாடுபட்டு அந்த வீட்டினுள் தானும் ஒரு அங்கமாகிப் போனாள்.

ஆனாலும் ஸ்ரீதரனுக்கும் தனக்கும் விதித்தது என்ன ...? அவர் என்ன ஆனார்...? கண்ணில் முகிழ்த்த நீர் கன்னத்தில் வழிந்தது.

"சாந்தா... பொட்டலம் ஆயிடுத்தா கொண்டா. எல்லாரும் வந்திண்டிருக்கா. வாங்கோ... வாங்கோ..." கூடத்திலிருந்து கோமளத்தின் குரல் கேட்டது.

பரபரவென்று கண்ணைத் துடைத்துக் கொண்ட சாந்தா ஒரு தட்டில், கண்டல் பொட்டலங்களை அடுக்கிக் கொண்டு கூடத்திற்கு விரைந்தாள்.

"ஒரு பாட்டுப் பாடுங்களேன்..." கோமளம் கேட்டுக் கொண்டு இருந்தாள். நண்டும் சிண்டுமாய்க் கூடம் நிறைந்து விட்டிருந்தது. இரண்டு வயதான பெண்மணிகள் ஒரு பக்கம்.பக்கத்து வீட்டு லலிதா சாந்தாவைப் பார்த்துப் புன்னகைத்தாள். பதிலுக்குச் சிரித்த சாந்தா ஓர் ஓரமாக நின்று கொண்டாள்.

"அலை பாயுதே கண்ணா..." வயதான

உமியில் பச்சைக் கலர் இங்க் தெளித்துப் பிசிறி மணல் மேல் பரப்பினால் புல் வளர்ந்துள்ளது போலவே இருக்கும்.

விசாலம் மாமி பாடியது வேடிக்கையாக இருந்தது. கோமளம் சிரித்துக் கொண்டே தலையாட்டிக் கொண்டிருந்தாள். ஒரு குழந்தை தன் ராக்கொடி சுட்டியை அடுத்த பெண்ணிற்குக் காட்டிக் கொண்டிருந்தது. லலிதாவின் பிடியிலிருந்து நகர்ந்த அவளுடைய பையன் கொலுவை ஆராய ஆரம்பித்தான். எந்த நேரம் எந்த பொம்மையை உடைப்பானோ? லலிதா, "ச்...ஸ்... வாடா இங்கே..." என அவன் சட்டையைப் பிடித்து இழுத்தாள். மேலும் இரண்டு பேர் நுழைந்து கொண்டிருந்தார்கள்.

சாந்தா பம்பரமாக இயங்கிக் கொண்டு இருந்தாள். தட்டுக்களில் வெற்றிலை, பாக்கு, பழம், கண்டல் என வைத்து, வைத்துக் கோமளத்திடம் கொடுத்துக் கொண்டு' இருந்தாள். நடுநடுவே இரவுச் சமையலையும் கவனித்துக் கொண்டாள். 'விளக்குக்கு எண்ணெய் விடு, ஸ்டோர் ரூம் லேர்ந்து தேங்காய் எடுத்து வா, ஸ்ரீதரை அனுப்பிக் கொஞ்சம் வெத்தலை வாங்கிண்டு வா' என்பதற்கெல்லாம் ஓடிக் கொண்டு இருந்தாள். இடையிடையே வாசல் அறையிலிருந்து இராஜகோபாலனின் கட்டளைக் குரல் வேறு. குடிக்கத் தண்ணீர், பேனாவில் தீர்ந்து போன மைநிரப்ப என ஸ்ரீதரன் அலைந்தான்.

எல்லா அமர்க்களமும் ஆகி நிமிர்ந்த போது மணி ஒன்பதாகி விட்டது.

பூ வாசனையும், இறைந்திருந்த கண்டலும், விரிந்து கிடந்த ஜமுக்காளமும் ஓய்வெடுத்துக் கொண்டன. 'அப்பாடா, இன்னிப் பாடு ஆச்சு. ஆமா, இந்தப் பொண்ணு கலா இன்னும் வந்து சேரலையே...? ஒன்பதேகால் ஆறதே..." எனக் களைத்துப் போய் உட்கார்ந்து விட்டாள் கோமளம்.

"சாந்தா, மாமாக்குச் சாதம் போட்டுர்றீ, என்னால ஒண்ணும் முடியலே..."

"நான் பார்த்துக்கறேன் மாமி. நீங்க உட்காருங்க. கால் குடையறதா, நீலகிரித் தைலம் தேய்ச்சு விடட்டா...?"

"அதே கையோட அவருக்கும் சாதம் போட்டா, கத்துவாரே. அவருக்குச் சாதம் போட்டுட்டு வா..."

ஒன்பதரைக்கு வாசல் கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே வந்த ராஜகோபால் கூடத்தில் அமர்ந்து கொண்டார்.

"என்னடீ படுத்துண்டுட்டே...?"

"என்னாலே முடியலே... சாந்தா சாதம் போடுவா..."

"சர்தான் போ. பண்றதெல்லாம் அவ. முடியாம போறது உனக்கு..."

இப் பெண்மணி
அறிந்தது,
நீங்கள்
அறியாதது,
அது என்ன ?



இவர் புதிய லக்மே ஹேர் டை உபயோகிக்கிறார்.
எவராலும் இதை அறியவே முடியாது.

சாதாரண கேசச் சாயங்கள் (ஹேர்-டைகள்) கேசத்திற்கு செயற்கை வண்ணத் தோற்றத்தை வழங்குவதுடன் வறண்டு பளபளப்பின்றி வைக்கோலை போல் திகழச் செய்கின்றன. அதனால் உங்கள் கேசச் சாயம் பூசியுள்ள விஷயம் எல்லோருக்கும் வெட்ட வெளிச்சமாகிவிடும். புதிய லக்மே ஹேர்டை விஷயத்தில் அப்படி நடப்பதில்லை.

காரணம், புதிய லக்மே ஹேர்டை தோற்றத்திலும், உணர்விலும் முற்றும் இயற்கையாக உங்கள் கேசத்தை விளங்கச் செய்கிறது.

கேசத்திற்கு 100% இயற்கை வண்ணமூட்டுகிறது.

முதலாவதாக, புதிய லக்மே ஹேர்டை [illegible] தோற்றமளிக்கும் சாயங்களை வழங்குகிறது.

தவிர, லக்மே ஹேர்டை மட்டுமே 3 சாயங்களின் அணிவகுப்பிலே வருகிறது—நேச்சுரல் ப்ளாக், சிச ப்ளாக் மற்றும் சிச ப்ரௌன். உங்கள் கேசத்துடன் இணையும் இயற்கையான வண்ணச் சாயலைத் தேர்ந்தெடுக்க முடியும்.

லக்மே ஹேர்டையுடன் மட்டுமே ஒரு ஹேர் ஸாஃப்டனிங் கண்டிஷனர் தனி ஸாஷேயில் வருகிறது. இது கேசத்திற்கு ஊட்டமளிக்கிறது. கேசத்திற்கு இயற்கையான மென்மையும், பட்டுத்தன்மையும் வழங்குகிறது.

இப்போது புரிந்ததல்லவா? வாங்குங்கள் உங்களுக்கென ஒரு பேக் புதிய லக்மே ஹேர்டை.



எவராலும் இதை அறியவே முடியாது.

Enterprise/LL/266 A/TM

''வயசாகல்லியோ...? இந்தப் பொண்ணைக் காணோமே...?''

''ஏன் பொலம்பறே? நாளன்னிக்குத் தானே வெள்ளிக்கிழமை? வந்துடுவா...''

கடச்கட இலையில் விழுந்த சாதமும், கூட்டும்தேவாம்ருதமாகஇனித்தது. வாசலில் 'காலிங்பெல்' ஒலித்தது.

''யாருன்னு பாரு... வாசுவா...?''

''இல்லையேடி... அவன் பெல்லை அடிச்சுண்டு நிக்கறானா...?''

உள்ளிருந்து வந்த ஸ்ரீதர் கூடத்தைத் தாண்டி வாசல் அழிக்கதவிற்குப் போனான்.

''அட, கலாக்கா. வாங்கோ... வாங்கோ'' உற்சாகமான ஸ்ரீதரனின் குரல் கேட்டது. கூடவே யாரோ ஒருவனும் வருவது தெரிந்தது.

படுத்திருந்த கோமளம் உற்சாகமாக எழுந்து கொண்டாள். ''வாமா... நீதான் காணமே காணமேன்னு தவிச்சுண்டிருந்தேன்.''

''பஸ் லேட்டும்மா...'' என்றபடி உள்ளே வந்த கலா, ''பெட்டியெல்லாம் ஸ்ரீதரன் கிட்டே கொடுத்துடுங்கோ...'' என்றாள், பின்னால் திரும்பி. ரேழியில் நின்றிருந்தவனின் முகம் சரியாகத் தெரியவில்லை. அங்கேயே தயங்கி நின்றான்.

''யாருமா அது?''

''மாமனார்ட்டே புரோகிதம் கத்துக்கறான். நாலு வருஷமா இருக்கான். உன் மாப்பிள்ளை கதைதான் தெரியுமே. இன்ஜினியர் பேப்பரை எடுத்துண்டுட்டார்னா, கட்டிடத்தை வரையறாரோ, அதை என்னத்தான் பண்ணுவாரோ போ... இவனைத் துணைக்கு அழைச்சுண்டு போன்னுட்டார்...'' என்று சலித்தபடி அம்மாவிடம் சாய்ந்து கொண்டாள்.

கோமளம் ஆசையோடு மகளைத் தடவிக் கொடுத்தாள். ''உடம்பெல்லாம் பார்த்துக்கறியா...? டாக்டரண்டை போறியா?''

''ம்...'' வைரக் கம்மல் மின்னத் தலையசைத்த மகளைப் பார்த்தாள். ஆறு மாத வயிறு நன்றாகத் தெரிந்தது. முகம் அழகிட்டிருந்தது. பெண் குழந்தையாக இருக்குமோ? இருக்கட்டுமே... சமர்த்து தலைச்சன் பெண் பெத்துக்கட்டுமே...

''என்னம்மா...?''

''ஒண்ணுமில்லேடி... போய் கைகால் அலம்பிண்டு வா... ஒரு வாய் சாதம் சாப்பிடுவே...''

சாந்தா ராஜகோபால் பக்கத்திலேயே கலாவிற்கும் இலை போட்டாள். உள்ளே போய்ப் புடைவையை மாற்றிக் கொண்டு கைகால் அலம்பிக் கொண்டு வந்த கலா அப்பாவின் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.

''என்னம்மா, மாப்பிள்ளை எல்லோரும் சௌக்கியம்தானே...?''

''இருக்கார்ப்பா... 'அண்ணா எங்கே...?''

''வருவான் ஊரைச் சுத்திட்டு...''

''ஏம்பா...?'' என்று சிரித்தாள் கலா. ''ஏய், எப்ப வந்தே...?'' உற்சாகத்துடன் அதே சமயத்தில் உள்ளே வந்தான் வாசு. அவனுக்கும் இலை போட்டாள் சாந்தா.

குடும்பம் முழுக்கக் கூடியவுடன் கலகலப்புத்தான். எல்லோரும் சாப்பிட்டு முடித்து, ஸ்ரீதருக்குச் சாப்பாடு போட்டாள். மாமிக்குப் பாதித் தூக்கம். சோபாவிலேயே சாய்ந்து இருந்தாள்.

''மாமி, கலாவோட ஒருத்தர் வந்தாரே... அவர் சாப்பிடுவாரான்னு கேட்கட்டுமா?''

''அட, இந்தப் பொண்ணைப் பாரேன், இவ பாட்டுக்கு மறந்துட்டுப் போய்ப் படுத்துண்டுட்டாளே... போ... அந்தப் பிள்ளையாண்டானைக் கேளு...''

ரேழி இருட்டில் மூலையில் அமர்ந்து இருந்தவன், வெளியே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சாப்பிட வர்றீங்களா...?''

திரும்பியவன் இவளைப் பார்த்தான். 'சடக்'கென்று எழுந்து கொண்டான்.

''இப்படியே உக்காருங்க. இலை போடறேன்...'' என ஹாலின் முன்புறத்தைக் காட்டினாள். தலையில் குடுமியும், பஞ்சகச்சமும், காலர் இல்லாத கதர் ஜிப்பாவுமாய் இப்போது உருவம் தெரிந்தது.

''கை கால் அலம்ப ஜலம் வேணும்...''

''இருங்க... கொண்டு வர்றேன்...''

''என்னத்துக்கமா... பாத்ரூம்ல போய் அலம்பிக்கட்டுமேமா...'' சோபாவில் இருந்து கோமளத்தின் குரல் கேட்டது. சாந்தா ஒதுங்கிக் கொண்டாள்.

விளக்கினடியில் வந்து பாத்ரூமை நோக்கி நகர்ந்தவனை இப்போது நன்றாக வெளிச்சத்தில் பார்க்க முடிந்தது. இவன்...

உள்ளே போனவன் ஐந்து நிமிடங்களில் தலைகுனிந்தவாறேவந்துஹாலின்மூலையில் போய் அமர்ந்தான். சாந்தா மௌனமாகச் சாதம் போட்டாள்.

''அவர் சாப்பிட்டப்புறம் ரேழியிலே படுத்துக்கச் சொல்லடி... எனக்கும் தூக்கம் வர்றது...'' கோமளமும் உள்ளே போய் விட்டாள். கொலு பொம்மைகளும், சிறிய விளக்கும் மட்டுமே...


சாதமும், மோரும் கொண்டு வந்த சாந்தா அவற்றை அவனருகே வைத்துவிட்டு உட்கார்ந்து விட்டாள். ஓய்வு ஒழிச்சலில்லாமல் உழைக்கும் அந்த மெல்லிய தேகம் குலுங்கியது.

''மணி...!''


சலனமில்லாமல் அக்காவை நிமிர்ந்து பார்த்தான் மணி.

''எனக்கு யாருமே இல்லேன்னு சொல்லித்தான் கலாவோட வீட்ல சேர்ந்தேன். அவள் எதிரே என்னோடே பேசாதே...'' என்றான்.


(தொடரும்)



ஷாரனின் வயதை கண்டுபிடிப்பது கடினம் !



sharon Thermply



ஷாரன் தர்ம்பிளை

வயதைக் கணக்கிட இயலாத அழகுள்ள இந்தியாவிலேயே சிறந்த ஒரு பிளேவுட்...

...இதன் சிறப்பிற்குக் காரணம் அகில உலக செய்முறை!

புரட்சிகரமான ''தர்ம்பிரஸ்'' செய்முறை!

ஷாரன் தர்ம்பிளை என்னும் பிளேவுட், இந்தியாவில் தயாரிக்கப்படும் மற்ற பிளேவுட்டுகளைவிட மிகச் சிறந்தது!

...அதை தயாரிக்கும் அதிநவீன செய்முறையே இதற்குக் காரணம்!

- 250 பி.எஸ்.ஐ. அழுத்தத்தில் 150° செ. வெப்பத்தில் ஷாரன் தர்ம்பிளை ''பிளாட்டன்'' களால் அழுத்தப்படுகிறது... இப்பிளாட்டன்களை இயக்குவது வெறும் நீராவியல்ல. எண்ணை! இதனால் ஒவ்வொரு பிளேவுட்டும் அடிக்கு அடி சீராக, சமமாக, பழுதின்றி தோற்றமளிக்கிறது.
- மற்ற பிசின்களைவிடச் சிறந்த ''பீனல் ஃபார்மால்டிஹைட் சின்தெடிக் ரெஸின்'' என்ற, ஒரு பிசினை உபயோகிப்பதால் ஷாரன் தர்ம்பிளை 70 ஆண்டுகளுக்கும் மேல் உறுதியாய் நீடிக்கவல்லதாகிறது!

இதன் முடிவு: கரையான், கொதிநீர், பழமை ஆகியவற்றை எதிர்க்கும் சக்தி பல மடங்கு அதிகரிக்கிறது!

ஷாரன் தர்ம்பிளை பல ரகங்களிலும் அளவுகளிலும் உங்கள் விருப்பத்திற்கேற்ற வாறும் கிடைக்கும்!

ஷாரன் நிர்வாகத்தினர் தயாரிக்கும் சில மலிவான பிளேவுட்டுகளும் கிடைக்கின்றன... ஷாரனின் டைமண்டு, கோல்டு, சில்வர் அல்லது லெஜண்ட் என்று கேட்டு வாங்குங்கள்!

ஷாரன் வினியர்ஸ் (பிரைவேட்) லிமிடெட்
93, போயஸ் கார்டன், சென்னை - 600 086
தொலைபேசி: 451141, 453620, 456218
டெலெக்ஸ் : 041-7582 SVPL IN
கிராம்ஸ் : SHARONPLY

ஷாரன் தருவது பிற்காலத்திற்கேற்ற பொலிவு!
இனி மரச்சாமான்களுக்கு ஏது அழிவு!

Adfest SV 211 90 TAM

Mis. ஸ்ரீ கிருஷ்ணு எண்டர்பிரைசஸ், 18, தேவராஜ முதலி தெரு, சென்னை-600 003. போன் : 560252, ;3845. சேலம் : M/s. ஸ்ரீ சக்தி ஏஜன்சீஸ், 7, ஏ.வி. ஐயர் தெரு, ஷேவாபேட்டை, சேலம்-636 002. போன் : 1550. மதுரை : M/s. மேக்லா எம்.எஸ்.பி. ராஜா, 281-A, குட் ஷெட் தெரு, மதுரை-625 001. போன் : 3888. திருச்சி : M/s. ஸ்ரீ கணேஷ் பிளேவுட் ஏஜன்சீஸ், 4, மதுரை சாலை, தபால் பெட்டி எண்.581, ருச்சி-628 008. போன் : 28114. பெங்களூர் : M/s. அலாம் டிம்பர் ஏஜன்ஸி, ஆர்.ஆர். பில்டிங், மது மாடி, பி.வி.கே. அய்யங்கார் சாலை, பெங்களூர்-560 053. போன் : 77470. ஹைதராபாத் : M/s. கிருஷ்ணு ளேவுட்ஸ், 5/3/1064, ஜவஹர்லால் நேரு சாலை, (ராஜ் கமல் பார் அருகில்) ஹைதராபாத்-500 001. போன்: 56411, 43934.

நவராத்திரி தோரணங்கள்

தேவையான பொருட்கள்:

அலுமினியம் தகடு மிகவும் மெல்லிதானது — ½ மீட்டர்.
மெல்லிய கம்பி
காலியான பால் பாயிண்ட் பென் ரீபில்.

செய்முறை:


முதலில் உங்களுக்கு விருப்பமான வடிவத்தை பேப்பரில் கத்தரித்துக் கொண்டு அதில் மயில், யானை, விளக்கு அல்லது தெய்வப் படங்கள் போன்ற ஏதாவது ஒன்றை வரைந்து கொள்ளுங்கள். சிறிய படங்களிலிருந்தும் 'ட்ரேஸ்' செய்து கொள்ளலாம்.



பிறகு மெல்லிய அலுமினியத் தகடில், வரைந்து வைத்துள்ள பேப்பரின் அளவை வைத்து, அதே அளவில் கத்தரித்துக் கொண்டு கார்பன் பேப்பரின் உதவியால் படத்தை வரைந்து கொள்ளவும். உங்கள் வீட்டு வாசலின் அகலத்திற்கு எத்தனை தகடுகள் தேவையோ அவைகள் அனைத்தையும் இதே போல் செய்து கொள்ளவும்.

பிறகு காலியான பேனா ரீஃபில் கொண்டு படத்திலுள்ள கோடுகளைச் சற்று அழுத்தமாக வரையவும். முன் பக்கம் திருப்பிப் பார்த்தால் வரைந்த கோடுகள் மேடாகக் காணப்படும். விருப்பமானால் இதில் வர்ணமும் பூசிக் கொள்ளலாம். இதே போல் மாவிலை வடிவத்திலும் செய்யலாம்.

பிறகு படத்தில் காட்டியுள்ளபடி தகட்டில் கோட்டிற்கு மேல் உள்ள பாகத்தை கம்பி நுழைக்கும் அளவிற்குச் சுருட்டி விடவும். பிறகு ஒவ்வொன்றாகக் கம்பிக்குள் நுழைத்து கோர்த்து உங்கள் வரவேற்பறையின் நுழைவாயிலை அழகுபடுத்துங்கள்.

சற்று பொறுமையும் கலையார்வமும் உள்ளவர்கள் மற்றொரு முறையிலும் செய்யலாம். வரவேற்பறையின் வாயிலை அளந்து கொண்டு அதை விட 1'' அதிகமாக சேர்த்துக் கொள்ளவும். அதாவது 30+1=31 என்று வைத்துக் கொண்டு இந்த அளவில் வெல்வெட் துணியில் அல்லது சிவப்பு, பச்சை, நீலம் போன்ற அழுத்தமான கலரில் நல்ல கெட்டியான துணியில் 5'' உயரம் இருக்கும்படியாகக் கத்தரித்துக் கொள்ளவும். கடையில் மெல்லிய கான்வாஸ் துணி என்று கேட்டால் கிடைக்கும். அதை வாங்கிக் கத்தரித்து வைத்துள்ள வெல்வெட் துணி



யின் அளவிலேயே கத்தரித்துக் கொண்டு நான்கு பக்கங்களையும் ½" அகலத்தில் மடித்துக் கொண்டு ஒட்டி விடவும். பிறகு மேலே கூறியபடி கத்தரித்து வைத்துள்ள தகடுகளை ஒவ்வொன்றாக ஒட்டிவிடவும். கீழ் பாகத்தில் டேபின் விரிப்பிற்கு சுற்றிலும் வைக்கும் லேஸ் வைத்து தைத்து விடவும். அல்லது சம்கிகளையும் ஒவ்வொன்றாகக் கோர்க்கலாம். பிறகு ஆணியில் மாட்டுவதற்காக இரண்டு ஓரங்களிலும் மெல்லிய ஒயர் கொண்டு தைத்து விடவும். நன்றாக இறுக்கமாக இருக்கும்படி வைத்துக் கட்டவும். இப்பொழுது பாருங்களேன். உங்கள் வீட்டு வரவேற்பறை மேலும் அழகு கூடியுள்ளது என்பதை நீங்களே ஒப்புக் கொள்வீரகள்.

— பத்மினி ராகவேந்திரன்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் நாட்டாமை சுப்ரமணி — எஸ். எஸ். மணியம் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வீட்டிற்குக் கும்பிடும் சேலைக்காரி தெய்வத்தை வருடம் தோறும் ஒரு நாள் செவ்வாய்க் கிழமையன்று விழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

கொட்டு மேளம், பம்பை முழங்க வழிபாட்டுப் பூசாரியாக நெசவாளர் சுப்பு 200 தேங்காய்களை உடைத்து, பூ, பழம் படைத்துத் துவக்குகிறார்.

நாச்சியார் என்பவரும் பத்திரகாளி என்ற இரண்டு பெண்மணிகளும் திருவரங்கம், இருளாயி என்ற இரண்டு சேலைக்காரி தெய்வத்தை வரவழைத்து சாமி ஆடுகிறார்கள். பலர் தங்களின் குறைகள் தீரவும், வறுமை, நோய் நொடி தீரவும் குறி கேட்கின்றனர். கேட்டவர்களுக்கெல்லாம் விபூதி பூசி, அருள் தருகின்றனர்.

இரவு பனிரெண்டு மணிக்கு அருளாடி நாச்சியாரும், பத்திரகாளியும் கோயிலில் தக..தகவென்று எரியும் நெருப்பில் இரும்புச் சட்டியில், கொதிக்கும் நெய்யில் மிதக்கும் அப்பத்தை வெறும் கையால் வாரி எடுத்துக் கூடையில் வைக்கும் அதிசயம் அதிகாலை நாலு மணி வரை நடைபெறுகிறது.

மூன்று படி அரிசியை ஆட்டுரலில் ஆட்டுவதும், தேங்காய் — வெல்லம் சேர்த்த அப்பம் சுடுவது, இந்தக் கோயிலில் உருவங்களோ, விக்கிரகங்களோ இல்லை என்பதும் அதிசயம்.

— வள்ளி மயில்மணியம்.

கொதிக்கும் நெய்யில் மிதக்கும் அப்பத்தை வெறுங் கையால் வாரி எடுத்த பெண்கள்!





குழந்தைகள் மலர்

மலரம்மாவோட பண்டிகைக்கால வாழ்த்துக்கள்! வரிசையா எல்லா சந்தோஷமான நாட்களும் வரப் போகின்றன இல்லையா? முக்கியமா தீபாவளி வரப் போகுதே?

அதுக்கும் முன்னால் நவராத்திரி. வீட்டில் அம்மா, அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை எல்லோருக்கும் வேலை இருக்கும். அழகா கொலுபடி வச்சு நவராத்திரி கொண்டாடுவோம் இல்லையா?

நாம் நல்லாப் படிக்க, வாழ்க்கையில் பெரியவர்களாக ஆக என்ன தேவை? சக்தி! அந்தச் சக்திக்கான சிறப்பான நாட்கள்தான் இந்த நவராத்திரி. இன்னும் இதில் எத்தனையோ சிறப்புக்கள் இருக்கு. அம்மாகிட்டே இதையெல்லாம் நீங்க கேட்டுத் தெரிஞ்சுக்கணும்.

அப்புறம் தேவியை வேண்டிக்குங்க, நாங்க புகழ், பொருள், எல்லாச் சிறப்பும் அடையணும்னு.

இப்போ நான்கு சகோதரிகள் அவங்க வீட்டு அனுபவங்களைச் சொல்றாங்க —

நகைச்சுவை

நவராத்திரி...

மீனா :

"எங்கள் வீட்டில் நவராத்திரி கொலு பிரமாதமாக வைப்போம். எங்கள் கொலுவின் 'அட்ராக்ஷனே' எங்களிடம் இருந்த இரண்டு பெரிய மளிகைக் கடைக்காரர்களின் பொம்மைகளே. கொலு பார்க்க வருபவர் அனைவரையும் இந்த 'குண்டு' பொம்மைகள் கவர்ந்து



விடும். பெரிய தொந்தியோடு குண்டு மளிகைக் கடைக்காரர் உட்கார்ந்து இருக்க அந்தப் பொம்மையின் முன்னால் சின்னச் சின்ன தட்டுக்களில் கடலைப் பருப்பு, துவரம் பருப்பு போன்ற மளிகை சாமான்களை வைத்துப் பார்ப்பதற்கு 'மளிகைக் கடை' போலவே செய்து விடுவோம்.

ஒரு சமயம் நவராத்திரி நேரத்தில் அதில் ஆண் பொம்மை விழுந்து உடைந்து விட்டது. நான் ரொம்ப அழுது விட்டேன். நவராத்திரி நேரத்தில் கலகலப்பு இல்லாமல் சோர்வாக இருந்தேன். அடுத்த வீட்டு குண்டு மாமா அதைத் தெரிந்து கொண்டு என்னிடம் வந்து,

''மீனா, இதுக்குப் போய் கவலைப் படாதே. நான் இருக்கேன்... அந்த மளிகைக் கடைக்காரர் பொம்மைக்குப் பதிலா சட்டை போட்டுக்காமல் நான் வந்து கொலுவில் உட்கார்ந்துடறேன்'' என்றார். எனக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்துவிட்டது. அதன் பின் கலகலப்பாகி விட்டேன்.''

பிரசன்னா:

''சென்ற வருடம் எங்கள் வீட்டில் அழகாகப் படிக்கட்டுகள் வைத்து, விதவிதமான பொம்மைகள் வைத்தோம். எங்கள் வீட்டுக் கொலுவைப் பார்க்க எங்கள் தெருவில் உள்ள அனைவரையும் அழைத்திருந்தோம். எதிர் வீட்டு அலமேலு மாமி, சற்று கண் பார்வைக் குறைவு உள்ளவர். அவர் கொலு பார்க்க வந்தார். பொம்மைகளின் அழகைப் பாராட்டிய அலமேலு மாமி, ''அடியே... பிரசன்னா, இந்தச் சுண்டெலி பொம்மை ரொம்ப அழகா இருக்கே'' என்றபடியே அதைத்தொட்டுப் பார்த்தார். உண்மையிலேயே அது உயிருள்ள சுண்டெலி என்பதால், கொலு நடுவே வந்து வெளியே



போகத் திண்டாடிய நேரத்தில் அலமேலு மாமி தொட்டதும் அவர் கை மீது ஏறித் தாவி ஓட, மாமி பெரிதாக அலற, பார்த்துக் கொண்டிருந்த நாங்கள் சிரித்து விட்டோம்.''



சுதர்:

''இரண்டு வருடங்களுக்கு முன்னால் எங்கள் வீட்டில் நவராத்திரி கொலு வைத்த போது நடந்த நகைச்சுவை சம்பவம் இது. கொலுவிற்கு வருபவர்களுக்குக் கொடுக்கச் சுவையான சுண்டல் செய்து பாத்திரத்தில் அம்மா வைத்திருந்தார். நான் விளையாட்டாக ஒரு பாட்டிலில் இருந்தமிளகாய்ப்பொடியைஎடுத்துச் சுண்டலில் கலந்து விட்டேன். முதன் முதலாகக் கொலு பார்க்க வந்த


லக்ஷ்மி அளிக்கும்
உங்கள் அழகான
தோற்றத்திற்கு ஏற்ற மாற்றம்
1910 – 1990
80
LAKSHMI MILLS
வாழ்விலே ஒரு புதிய தோற்றம். மகிழ்ச்சியான ஒரு மாற்றம்.
நாள்முழுவதும் உங்கள் எழிலுக்கு அழகூட்டும், மனமகிழ்வூட்டும்,
கச்சிதமாக பொருந்தும், லக்ஷ்மியின் 50%- 50% பாலியெஸ்டர், பருத்தி,
100% பாலியெஸ்டர் பிளவுஸ் துணிகள்.
கவர்ச்சியான வண்ணங்கள்.
நாகரீக மங்கையரின் விருப்பம்.
இதோ ஒரு
மாற்றம்
லக்ஷ்மி நிறுவனத்தாரிடமிருந்து
லக்ஷ்மி மில்ஸ்
கோயமுத்தூர்.

DDA/LM/003

மாமி கொலு பாட்டுப் பாட ஆரம்பித்தார். அவர் கர்நாடக இசை தெரிந்தவர் என்பதால் கீர்த்தனைகளை ஆலாபனை செய்துகொண்டிருந்தார். என் அம்மா சுண்டலைக் கொடுத்ததும் பாட்டை நிறுத்திவிட்டு இரண்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டார். 'ஆ ஆ' என்று மிளகாய்ப் பொடி காரத்தில் அவர் கத்த, மாமி பாடும் பாட்டு என்று அருகில் இருந்தவர்கள் நினைத்தனர். எனக்கோ சிரிப்புத் தாங்கவில்லை. பிறகு விஷயம் தெரிந்ததும் என்னை எல்லோரும் திட்டித் தீர்த்து விட்டார்கள். விளையாட்டு வினை ஆகும் என்பதை உணர்ந்து கொண்டு இப்போதெல்லாம் பிறரைத் துன்புறுத்தாத விளையாட்டுக்களை மட்டுமே விளையாடுகிறேன்.''



வித்யா :

''சில வருடங்களுக்கு முன்பு நிறையப் பொம்மைகளை வைத்தும், மின்விளக்கு அலங்காரங்கள் செய்தும் கஷ்டப்பட்டு 'நவராத்திரி கொலு' வைத்தோம். தெருவில் உள்ள எல்லா வீட்டுப் பெண்களும் எங்கள் அழைப்பை மதித்து வந்து கொலுவைப் பார்த்தனர். எங்கள் வீட்டு மாடியில் குடி இருந்த பெண்மணி மட்டும் வராதது எங்களுக்கு மனக் குறையாக இருந்தது. நான் பல தடவை அழைத்தும் அவர் வரவில்லை. நவராத்திரி எட்டாவது நாள் அன்று எப்படியாவது மாடி வீட்டுப் பெண்ணை வரவழைக்க அக்கம்பக்கத்துச் சிறுவர்களுடன் 'ஆலோசனை' நடத்தினேன். அதன்படி நான்கைந்து சிறுவர்கள் முகமூடி அணிந்து போய் 'கொலு பார்க்கக் கீழே போங்கள்' என்று அந்தப் பெண்ணைத் தமாஷாக மிரட்டலாம் என்று முடிவு செய்தோம். அன்று மாலையில் அந்தச் சிறுவர்கள் மாடிக்குத் தடதடவென்று போனதும் பயந்து போன அந்தப் பெண் 'திருடன், திருடன்' என்று கத்த, அவர் தம்பிகள் மூவரும் சிறுவர்களை அடிக்க, அவர்கள் 'அய்யோ' என்று அலற, ஒரே ரகளையாகி விட்டது. அந்தப் பெண்ணின் நெருங்கிய உறவினர் உடல்நலம் சரியின்றி இருந்ததால் 'மூடு' அவுட்டாகி இருந்ததாக அந்தப் பெண் பிறகு விளக்கினார். எனக்காக அடிபட்ட சிறுவர்களைப் பார்த்து வருத்தமாக இருந்தது.

பேட்டி: விஜயா கண்ணன்.


பொம்மைகள் சொல்லும் பாடம்!

சின்னச் சின்ன பொம்மைகள்
சிங்காரப் பொம்மைகள்
அலங்கார மாய்ப் படியிலே
அமர்ந்திருக்கும் பொம்மைகள்.

இந்து என்றும் முஸ்லிம் என்றும்
கிறித்துவர், புத்தர், ஜைனர் என்றும்
மாக்கள் என்றும், மரங்கள் என்றும்
மாயை காட்டும் பொம்மைகள்.

எங்கள் வீட்டுக் கொலுப்படிகளில்
ஏற்றத் தாழ்வு இருந்தாலும்,
மனத்தால் ஒன்று கூடியே
மகிழ வைக்கும் பொம்மைகள்.

— எம். சி. ஆர்த்தி.





விடுமுறையில் சுவையான சம்பவம் நடந்த சகோதர, சகோதரிகள் எழுதியிருக்காங்க. அதைப் படிக்கலாமா? —

நான் வெளியூர் போன போது...

முதுமலை 'டிராவலர்ஸ் பங்களா வில்' இரவு தங்கினோம். கடுமையான குளிர்! சூடான சப்பாத்தியுடன் மணமான குருமா! வெளியே தெள்ளிய தங்க நிலா உலா வர தூண்டியது!

அறையை விட்டு பால்கனிக்கு வந்தால் —வெளியே மந்தையாகப் புள்ளி மான்களும் கலைமான்களும் திரிந்து கொண்டிருந்தன.

அவர்கள் கூட்டம் மிரண்டு கலையாமல் இருக்க, எங்கள் கூட்டம் 'ஷ்... ஷ்...' என்று பதுங்கி அமைதி காத்தது. சற்று நேரத்தில் ஒரு ரூம் பாய் வந்து, "அது வழக்கமா இங்கே மேயும் மான்கள்தான். கிட்டப் போனாலும் பயமில்லாமல் நிற்கும். ஆனா — நீங்க பயப்பட வேண்டியது தனியா வர்ற ஒத்த யானைக்குத்தான்" என்றார்.

சூரியன் கிளம்பும் நேரம் நாங்களும் கிளம்பி விட்டோம். அரசு சுற்றுலா வேனில் இடம் கிடைக்கலே. அப்படியும், வன விலங்குகளைப் பார்க்க எங்கள் காரிலேயே கிளம்பினோம்.

மிருகங்கள் பல காணும் இச்சையில், கண்கள் பரபரத்தன.

திடுமென, ஒரு வளைவில் சங்கர் மாமா, "அமைதி! யாரும் சத்தம் போடாதீங்க. டிரைவர் வண்டியை நிறுத்தப்பா..." என்று பதற்றமாய்ச் சொன்னார்.

முன்னால — ஒரு ஒற்றை யானை. வாலை ஆட்டிக்கிட்டு! கார்ல எல்லாருக்கும் தி...க் வேர்த்துருச்சி. மனசு படக்... படக்...

சங்கர் மாமா காரை விட்டு இறங்கி, பின்னால வந்த வண்டிகளிடமும் விவரம் சொல்லி நிறுத்தி வைத்தார். க்யூ வளர, அரை மணி நின்றோம்.

திடீரென்று "பீம், பீம்" என்று ஹார்ன் அதிர, ஆர்ப்பாட்டமாய் வன அதிகாரிகள் வண்டி, நிற்கும் எல்லா வண்டிகளையும் 'ஓவர் டேக்' செய்து வந்தது. அதிகாரி, தலையை நீட்டி எல்லோரையும் ஆச்சரியமாய்ப் பார்த்தார். "முன்னேறுங்கள்" என்று ஜாடை காட்டிக் கையை வீசிக் கொண்டே சென்று விட்டார்.,

அதிகாரி போகும் தைரியத்தில், நாங்களும் தொடர்ந்தோம். அட! அந்த ஒற்றை யானை — எங்களுக்கு முதுகையும் வாலையுமே காட்டி நின்ற யானை — மதயானை என்று நாங்கள் எண்ணிய அது — வன அதிகாரிகள் பழக்கி வைத்திருந்து, சங்கிலியால் மரத்தில் பிணைக்கப்பட்டு நின்று கொண்டிருந்தது.

சங்கர் மாமா முகத்தில் வழிந்த அசட்டுக் களையைப் பார்க்க வேண்டுமே! ஆனாலும் அந்த அரை மணி த்ரில் — 'ரிமார்க்கபிள்'

— சி. வி. கிஷோர்குமார்.

நான் எங்கள் சொந்தக் கிராமத்திற்குச் சென்றிருந்த போது கையெழுத்துப் போடத் தெரியாத பலருக்குக் கையெழுத்துப் போடவும், தமிழ்நாட்டிலுள்ள முக்கியமான ஊர்களின் பெயர்கள், அருகிலுள்ள கிராமங்களின் பெயர்கள் இவற்றை எழுத்துக் கூட்டி வாசிக்கவும் கற்றுக் கொடுத்தேன்.

ஆறு வயதாகியும், பள்ளிக்கனுப்பாத குழந்தையின் பெற்றோரிடம் நிலையைக் கூறிப் பள்ளிக்கனுப்ப ஆவன செய்தேன்.

— **எஸ். முருகன்.**

விடுமுறையில் எங்கள் வீட்டு எதிரில் உள்ள விளையாட்டு மைதானத்தைத்தூய்மை செய்தார்கள். அதிலிருந்து அகற்றிய நல்ல உரம் வாய்ந்த மண்ணை வாளியில் போட்டு மேல் மாடியில் நான்கு மீட்டர் நீளத்திலும், மூன்று மீட்டர் உயரத்திலும் மொட்டை மாடியில் சுவரின் ஓரமாகக் கொட்டிச் செங்கற்களை அடுக்கினேன். பின்பு அந்த மண்ணில் இருந்த சிறு கற்களையும், குச்சிகளையும் அகற்றினேன். பின்னர் மண்ணைக் கிளறித் தனியாவைத் தூவினேன். ஒரு புறத்தில் தக்காளிப் பழத்தைப் பிழிந்து அதன் மேல் மணலைத் தூவிக் காலையிலும் மாலையிலும் மறக்காமல் சென்று மொட்டை மாடியில் தண்ணீரை ஊற்றி வந்தேன். நாங்கள் சில நாட்களாகக் கொத்துமல்லியை மொட்டை மாடியிலிருந்தே பறித்துக் கொள்கிறோம். இதுவரை ஏழு தக்காளிப் பழங்கள் பழுத்துள்ளன. இதனால் எனக்கு மகிழ்ச்சியும் வீட்டில் பாராட்டும் கிடைத்தது. விடுமுறையும் பயனுள்ளபடி கழிந்தது.

— **ஜோஸ்பின்.**


போன மாதம் 'அப்பா ரொம்ப பிஸி'ங்கற படம் வரையச் சொன்னோம். நிறைய பேர் அப்பா வீட்டு வேலை செய்யறதாவும், அம்மா சுகமாக உட்கார்ந்து இருப்பது போலவும் படம் போட்டு அனுப்பினாங்க. இது ரொம்பத் தப்பு. நம்ப வீட்டிலே நாம அந்த மாதிரியாப் பார்க்கிறோம்? அம்மாவுக்கு அப்பா வீட்டு வேலைகளில் உதவறது கேலி பண்ற விஷயம் இல்லை. அம்மா எவ்வளவு வேலை பண்றாங்க! அப்பா மட்டும் இல்லாமல் நாம் எல்லோரும் நம்மால முடிஞ்ச உதவியைச் செய்யணும். அதை விட்டுட்டு இது ஏதோ கிண்டல் செய்யற விஷயமா எடுத்துக்கக் கூடாது.

மூன்று படங்கள் மட்டும் தேர்வு செய்து போட்டு இருக்கோம்.

சரி, இப்போ அடுத்த மாதம் என்ன தலைப்பில் படம் வரையப் போறீங்க?

நான்! — இந்தத் தலைப்பில்!

• கே. ரேகா




"அப்பா ரொம்ப பிஸியாக உலகத்தை எழுப்பிக் கொண்டிருக்கிறார். நாமும் இரை தேடப் போலாம் வா."

— ஆர். ராமகிருஷ்ணன், மதுரை—3.



• ம. கே. சுந்தரபாண்டியன்



இன்றே கதை கேட்கும் காலம். ஆனால் வேகமாக வளரும் இவளின் வருங்காலத்திற்கு நீங்கள் தயாரா?

இன்றே துவங்குங்கள், வருங்காலத்தை வளமாக்கும் நிதி ஸ்ரீராம் ஸ்ரீநிதி.

நேற்றுத்தான் போலிருக்கிறது. உங்கள் செல்லக் குழந்தை அ...அம்மா என்று படிக்கத் தொடங்கினாள். இன்றே திடுமென்று பள்ளிக்குச் செல்ல தொடங்கிவிட்டாள்! அட்மிஷன் செலவு, பள்ளிக்கட்டணம், சீருடை, என்று செலவுகள் பல. அன்புச் செல்வத்தின் கல்விச் செல்வமல்லவா?

''அம்மா, நான் ஒரு டாக்டராக வேண்டும்'' என்று அவள் சொல்லும் நாள், வெகு தொலைவில் இல்லை. முன்னைவிட செலவுகள் அதிகம். கல்லூரிக் கட்டணம், ஹாஸ்டல், உடை... என்று செலவுகள் பல. நினைக்கவே வியக்க வைக்கிறது. அன்றையத் தேவையை நிவர்த்தி செய்ய இன்றே தயாராகுங்கள், அவளின் வருங்காலத்தை வளமாக்கும் ஒரே நிதி — ஸ்ரீராம் ஸ்ரீநிதி.



வளரும் செல்வத்தின் வருங்காலச் செல்வம்.





* ''இந்தத் தியாகம் விற்பனைக்கு அல்ல,'' அமரர் வீரவாஞ்சி. பொன்னம்மாள் கட்டுரையைப் படித்ததும் என் போன்ற எத்தனையோ செங்கோட்டை (வாஞ்சியூர்) மங்கையர் மலர் வாசகர்களையெல்லாம் கண்கலங்கச் செய்திருக்கும் என்பதை எப்படித்தான் தாங்கிக் கொள்வது? நன்றி!

சென்னை, எஸ். ஆர். ஹரிஹரன்.

மின்சார சிக்கனம்

* டி.வி. இருக்கும் வீட்டிலெல்லாம் ஸ்டபிலைசர் இருக்கும். மிக்ஸி, கிரைண்டர், ஃபான் போன்றவற்றை ஸ்டபிலைசர் மூலமாக உபயோகித்தால்; வோல்டேஜ் சீராக வரும். இதனால் மிக்ஸி, கிரைண்டர், ஃபான் ஆகியவை நன்றாக இயங்குவதுடன், அவைவேலை செய்யத் தேவையான மின்சாரம் தேவையான அளவே ஆகும். லோ வோல்டேஜினால் ஏற்படும் அதிக மின்சாரம் செலவு ஆகாது. அனுபவத்தில் இந்தச் சிக்கனம் கணிசமாகத் தெரியும்.

புகழூர், கே. ஸ்ரீநிவாஸன்.

* நன்றி! நன்றி! நன்றி! டி.வி. பற்றிய ஆலோசனைகளுக்கு; இன்று எங்கள் டி.வி. நன்றாகத் தெரிவதற்கு ம. மலர் ஆலோசனைகள் உதவின.

மகாநோன்புச் சாவடி, ஆர். தனலட்சுமி.

* மலரம்மா.. மலரம்மா இந்த மலரில் விடுமுறை அனுபவம் கட்டுரை மிக ஜோரம்மா...!

குத்தாலம், அபிதா சேது.

* எடுப்பான தோற்றம் என்ற தலைப்பில் பல விஞ்ஞானப்பூர்வமான விளக்கங்களை கூறியிருப்பதை வரவேற்கின்றோம்.

குட்டி பத்மினி கண்களையும் சிறுநீரகத்தையும் தானமாக எழுதி வைத்திருப்பதை, படித்த போது ஆச்சரியப்பட்டு போனேன். சினிமா நடிகர்களுக்கும் நல்ல இதயம் உண்டு என்பதற்கு இதுவே நல்ல முன் உதாரணம்.

திருச்சி — 2, ஆற்காடு எழிலன்.

* பெற்றிருக்கிறோமா பெண் விடுதலை? கட்டுரை ஆக்கப்பூர்வமானது. மீனா கிருஷ்ணசாமியும், மகாலட்சுமி பாரதியும் சொல்லிய கருத்துக்கள் சிறப்பானது. முதுமை அடைந்தாலும், முல்லை அரும்பு போன்று வார்த்தைகள் வலம் வந்த விதம் நன்று.

கங்கை கொண்டான், ஸ்ரீமதி. கங்கா தேவி.

எங்கள் ஊருக்குப் பெருமை



* வீரவாஞ்சியின் மனைவி பொன்னம்மாவின் கதையும், அவருடைய தியாகமும், அவரது கடைசி ஆசை நிறைவேறிய விதமும்... இப்படி ஒரு நல்ல கட்டுரை தயாரித்து பலருக்குத் தெரியப்படுத்திய உங்கள் மலருக்கு நன்றி.

பாண்டிச்சேரி — 1, ஆர். சுபா. விஜய்.

* 'எதையாவது பெரிதாக சாதிக்க வேண்டும்' என்று விரும்பும் குட்டி பத்மினியின் பேட்டி அருமை. தன்னுடைய கண்கள் மற்றும் சிறுநீரகம் இவற்றைத் தானமாக அளிக்க முன்வந்திருப்பதையும், வயதானவர்களுக்காக நிலையம் ஒன்றைக் கட்ட வேண்டும் என்று அவர் விரும்புவதையும் படிக்கும் போது, அவர் பெயரால்தான் குட்டி பத்மினி, மனதால் 'உயர்ந்த' பத்மினி எனப் பாராட்டத் தோன்றுகிறது.

தஞ்சாவூர், மா. அதிராமவிஜயன்.

* ''சின்ன மீனைப் போட்டுப் பெரிய மீனைப் பிடிக்கும் மோசடி ஏஜென்சியின்ரின் ஏமாற்று வேலைகளைப் பற்றிப் புரியும் படி விளக்கியிருந்தார் திருமதி. லலிதா கல்யாணராமன். இதைப் படித்த அனைவரும் 'உஷாராகியிருப்பார்கள்..!''

வலங்கைமான், ஜி. ராஜப்ரியா.

* 'மண்வழிப் பயணம்' குழந்தையை மாமியார் பொறுப்பில் விட்டுத் தவிக்கும் தாயின் மனநிலையை அருமையாகப் படம் பிடித்துக் காட்டியது. ஆனால் மறுநாளே வேலைக்காரியின் பொறுப்பின்மையால் தோழியின் குழந்தை பட்ட கஷ்டம் கேள்விப்பட்ட போதுதான் உறவின் அருமையை உணர முடிந்தது.

சென்னை — 45, ஏ. ஜஹ்பர் காதர்.

* ரேஷ்மி தன்யாவின் 'மீசை' சிறுகதை பிரமாதம். குழந்தைகளின் பிரச்னைகளை மனோரீதியாக வெளிப்படுத்தும் வகையில் இருந்தது. முக்கியமாக பலவித காரணங்களால் பெற்றோர்களை அடிக்கடி பிரிந்திருக்கும் குழந்தைகளின் மனநிலையை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

திருச்செந்தூர், கீதா கணேசன்.


ஏனெனில், உங்களுக்குத்
தெரியும்—ஆரோக்கியமா
கூந்தல்தான் அழகாய்
இருக்கும்... சுத்தம்தான்
கூந்தலின் உண்மையான
போஷாக்கு. சுத்தம்—இது
பாராசூட் தேங்காய்
எண்ணெயின் உயிர்நாடி.
ஏனெனில் பாராசூட்,
எண்ணெய் மட்டுமல்ல,
போஷாக்கும் ஆகும்.
தெளிவானது...
கண்ணாடிபோல. சுத்தத்தின்
நறுமணத்துடன்.... உங்கள்
கூந்தலுக்கு சிறப்பான
தயாரிப்பு... சுத்தத்தின்
பராமரிப்பு.
ஒவ்வொரு துளியின் சுத்தத்திலும்
உண்மை அழகு தெரிகிறது.
PARACHUTE
COCONUT
OIL
பாராசூட்
சுத்தமான தேங்காயெண்ணெய்
சுத்தத்தின் பிரதிபலிப்பிலே ஆரோக்கியமான
அழகான கூந்தல்
S PCO P 9 2517 TM

REGISTERED No. TN MS (S) 231
Registered as a Newspaper in Sri Lanka

